# மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

புலவர். இரா. இளங்குமரன்

# மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சார்பில் [illegible] மறைமலையடிகளார் அறக்கட்டளைச் சொற்பொழிவு)

புலவர். இரா. இளங்குமரன்
பாவாணர் ஆராய்ச்சி நூலகம்
மதுரை




உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. (அஞ்சல்) தரமணி, சென்னை 600113.

மறைமலையடிகளார் அறக்கட்டளைச்
சொற்பொழிவு—1 (15, 16-7-86)

Maraimalaiadikalar Endowment Lecture-1

Endowment Lectures Publication Number—14

---

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Maraimalaiyatikalar Tanit tamilkkolkai |
| Author | : | R. Ilankumaran<br>Pavanar Research Library<br>Thirunagar, Madurai-625 006 |
| Publisher | : | International Institute of Tamil Studies, T. T. T. I. Post, Taramani, Madras-600113. |
| Publication Number | : | 125 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 15-7-86 |
| Paper used | : | Tamilnadu 14.1 Kg. |
| Size of the book | : | 21 X 14 cms |
| Printing types used | : | 10 point |
| Number of copies | : | 1200 |
| Number of pages | : | XII + 144 |
| Price | ; | Rupees Fifteen |
| Printers | : | Jayasree Printers,<br>238, Pycrofts Road, Triplicane<br>Madras-5. |
| Binding | : | Card board |
| Artist | : | A. S. Veluchamy |
| Subject | : | Pure Tamil theory of Maraimalaiadikalar |


---

* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

தமிழன்பர்க்கு நல் விருந்தளிக்கும் இந்நூலாசிரியர் புலவர் திரு. இரா. இளங்குமரன் அவர்களைப் பாராட்டிப் போற்றி மகிழ்கிறேன்.

இந்நிறுவனப் பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கட்கு மிக்க நன்றியுடையோம்.

அறக்கட்டளைச் சொற்பொழிவு நூல்களைக் கவனமாகவும் பொறுப்பாகவும் பார்த்து, செவ்வையாக்கித் தருகின்ற பொறுப்பாளர் டாக்டர். ச. சிவகாமி அவர்கட்கு என் வாழ்த்துகள்.

இந்நூலினை உரிய காலத்தில் சிறப்புற அச்சிட்டுத் தந்துள்ள ஜெயஸ்ரீ அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி.

சென்னை
8—7—86

அன்பன்
ச. வே. சுப்பிரமணியன்

# பொழிவாளன் புகல்வு

தமிழுக்கு வாய்த்த அடைமொழிகளுள் முற்பட்டது செம்மை. [செந்தமிழ்] அடுத்து வந்த அடைமொழிகள் தண்மை வளமை, அருமை, மும்மை என்பன [தண்டமிழ், வண்டமிழ், அருந்தமிழ் முத்தமிழ்].

தனிமை என்னும் அடைமொழி [தனித்தமிழ்] மூன்று நூற்றாண்டுகளின் முன்னே ஏற்பட்டது. ஆனால், 'தனித்தமிழ்க் கொள்கை' இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் தோன்றியது.

தனித்தமிழ்க் கருத்து, மறைமலையடிகளுக்குத் தமிழ்த் தொல்பழநூற் பயிற்சியால் இயல்பாக வாய்த்தது. அதனைக் கொள்கையாக்கி இயக்கமாக்கி வளர்க்கச் செய்தது, பலரும் செய்த மொழிக்கலப்பும், மொழிச் சிதைப்புமாம்!

அடிகளாரின் தனித் தமிழ்க் கொள்கை, பிறமொழி வெறுப்பின் மேல் வந்ததன்று. தம் மொழிக் காவல்மேல் வந்தது. "அவரவர் செய்யையும் வீட்டையும் நாட்டையும் காப்பதற்குப், பிறர் செய் வீடு நாடு இவற்றின் மேல் வெறுப்பிருக்க வேண்டும் என்பது, முறையல்லா முறையாய்வின் வழிப்பட்டதாம்.

அடிகளார்க்குப் பிறமொழிமேல் வெறுப்போ எரிவோ உண்டாயின், ஆங்கிலமும் ஆரியமும் கற்றிரார். அவற்றை அடியாகக் கொண்டு தமிழாக்கப் பணியில் தலைப்பட்டிரார். அடிகளாரைக் குறுகிய வட்டத்துள் சேர்த்துக், கொள்கையழிப்புக்குக் கையடை செய்பவர்களே, இக்குறுக்கு வழியில் குறை கண்டு கூறுபவர்!

அடிகளார், பிறர்நோக்கும் பொது நோக்கினும் தனியுயர் சிறப்பு நோக்கர். நீரிடை எதிரிட்டேறும் மீன்பாய்த்துள் அனையர்! ஆகலின், மொழித்துறையில் தலைப்பட்டுச் சீரியசீர் திருத்தம் செய்தார். சிவனியத் துறையில் ஆட்பட்டுப் பழந்தமிழ்க் கொள்கையே சைவசமயம்', 'சாதி வேற்றுமையும் போலிச் சைவமும்'' 'தமிழர் சமயம்' ஆகிய நூல்களை இயற்றினார்.

அடிகள் செய்ந்நேர்த்தியர்; எந்த ஒன்றையும் தூய்மையும் கலைமணமும் கமழச் செய்தலில் தனித்தன்மையர்; தணியா வேட்கையர்; எழுதும் எழுத்தையும் ஓவியமாக்கி எழில் காண்

பவர்; நூல்களை அட்டையிட்டுத் தூசி தட்டி வைப்பதிலும், மண்ணெண்ணெய் விளக்கினைத் துடைத்துத் திரிதட்டி வைப்பதிலும்கூடக் கலைவளம் காண்பவர். ஏன்? எட்டு வைத்து நடப்பதிலும் எழில் காண விரும்பியவர்! அவர்தம் இயற்கை நாட்டச் செய்ந்நேர்த்தி, தனித்தமிழ் நேர்த்திக்கு அடிப்படை மூலமும் ஆக்கமுமாய் அமைந்தமை புதுமையன்றாம்.

அடிகளார் தோன்றியதால் தமிழ் தூய்மை பெற்றது. கசடுகளும் கல்படங்களும் களையப்பட்டன. தனித்தமிழில் நூலியற்றல் கூடும் என்பது நிலைநாட்டப்பட்டு விட்டது. கைகொல்லும் கலப்பு முட்காட்டைத் தனியொருவராக நின்று களைந்தெறிந்து, அவ்விடத்தே பயன்மரப் பதியனிட்டுப் பரிந்து காத்தவர் அடிகளாரே!

அடிகளாரால் தோற்றுவிக்கப்பட்ட தனித்தமிழ்க் கொள்கை பின்னே பாவாணர் காலத்தில் இயக்கமாக வளரலாயிற்று! உலகத் தமிழ்க் கழகத்தின் உள்ளமும், உயிர்ப்பும் தனித்தமிழாகவே அமைந்தன. அதன் நிலைப்பெருந் தலைவராகவே அடிகளார் கொள்ளப்பட்டார்.

அடிகளார்க்கு எதிரிடைகள் வலுவாக அன்றும் இருந்தன. இன்றும் இல்லை என்பது இல்லை! ஆனாலும், அஞ்சா அடலேறாம் தொண்டர்களைத் தன்னகத் துடைமையால், படிப்படியே வளர்முகமாகவேயுள்ளது தனித்தமிழ் இயக்கம்.

'தனித்தமிழ்ப் பற்றர்' என்பவர் தம் வெளிப்படைச் சான்று என்ன? பெயரே அது! அதனைத்; தனித் தமிழாக்கி வழிகாட்டியவர் அடிகளார்! கொள்கை நிறுவுநரே , கொள்கையராக இல்லாக்கால், கொள்கை என்பதுதான் என்னாம்?

'சுவாமி வேதாசலமாக' இருந்தவர், 'மறைமலையடிக'ளாராகப் பெயர் கொண்டார். அவர் நடாத்திய 'ஞானசாகரம்' 'அறிவுக் கடல்' ஆகியது. அவர்தம் 'சன்மார்க்க சங்கம்' 'பொது நிலைக் கழக'மாயிற்று! நாற்றங்காலிலே அமைந்த பயிரூட்டம் தானே, நடவு நிலத்தில் நன்கு வளரத் துணையாம்! நாற்றங்காலிலேயே நன்கனம் தேராப்பயிர், நடவு நிலத்தில் எப்படி நலங்கொழிக்கும்?

தனித்தமிழ்க் கொள்கை என்னும் பயன்பயிர், அடிகளார் வளமனைச் சூழலிலும் வாழ்ச் சூழலிலும் ஊன்றி நிமிர்ந்து உயர்பயன் தருவதாயிற்று! அப்பயன் வித்தே, பன்னூறாய்ப் பல்லாயிரமாய்ப் பரவலாயிற்று!

அடிகளார் 'கற்றவர் அறியாக் கற்றறி மேன்மை'யர். அவர் கொள்கை கற்றவருள் சிலரை ஆட்கொண்டது. அதன் வழியே கற்கும் இளைஞரை வயப்படுத்திற்று. அதன் விளைவு, ஓர் ஆர்வ மிக்க எழுச்சியாய், இயக்கமாய், மூச்சாய், பேச்சாய், பேராய், பெருமையாய்க் கிளர்ந்தன.

'இலட்சுமணன்' 'இலக்குவனார்' ஆனார்; 'தேவநேசக் கவிவாணர்', 'தேவநேயப்பாவாணர்' ஆனார்; 'லோகிதாசன்' 'உலக ஊழியரானார்; 'நாராயணசாமி' 'நெடுஞ்செழிய'னா கவும், 'இராமையா' 'அன்பழகனா'கவும், 'சோம சுந்தரம்' 'மதியழகனா'கவும், 'சின்னராஜா' 'சிற்றர'சாகவும், 'பால சுந்தரம்' 'இளவழகனா'கவும், 'பெரியகருப்பன்' 'தமிழண்ண லாகவும்', 'துரைராஜ்' 'முடியரச'னாகவும், 'சாத்தையா' 'தமிழ்க் குடிமக'னாகவும், 'பிச்சை' 'இளவர'சாகவும் தாமே விரும்பிப் பெயர் மாற்றம் செய்து பிறங்கலாயினர்.

1985இல், தமிழ்ப் பேராளியர் பட்டியல் ஒன்று தொகுக்க விரும்பினேன். செந்தமிழ்ச் செல்வி மாதிகை வழியாக அறிக்கை விடுத்தேன். அவ்வறிக்கை கண்ட அளவில் முப்பதின்மர் விளக்கம் விடுத்தனர். அவற்றை வகுப்பிட்டுக் கண்ட வகையால் அறியவரும் செய்திவருமாறு:

க] தம்பெயரின் முழுமையோ ஒருபகுதியோ பிறமொழி வழிப்பட்டது எனின், அப்பிறமொழிச் சொல்லின் தமிழ்ப் பொரு ளுக்குத் தக்க சொல்லை அமைத்துக் கொண்டவர் ஒன்பதின்மர்

[அகர வரிசையில்; திருவாளர்கள்]

| | | |
|---|---|---|
| இரத்தினவேலு | — | மணிவேலன் |
| இராமாநந்தம் | — | எழில்மகிழ்நன் |
| கருணாநிதி | — | அருட்குவை |
| கிருஷ்ணன் | — | இளங்குமரன் |
| சாமிநாதன் | — | இறையரசன். சி. |
| சாமிநாதன் | — | இறையரசன். பா. |
| சோசப்ராஜ் | — | வளனரசு |
| நடராசன் | — | நடவரசன் |
| பெரியசாமி | — | பெருந்தேவன் |

2] தம்பெயரில் பிறமொழியெழுத்துவரின் அவ்வெழுத்தை மட்டும் தமிழியலுக்கு ஏற்றவாறு மாற்றிக் கொண்டவர் இருவர்.

| | | |
|---|---|---|
| கிருஷ்ணமூர்த்தி | — | கிருட்டிணமூர்த்தி |
| மாதேஸ் | — | மாதவன் |

ரு] தம் பெயர் தமிழாகவே இருப்பினும் பெயர் அழகாகவும் மன நிறைவாகவும் இருத்தல் வேண்டிப் பெயர் மாற்றம் செய்து கொண்டவர் மூவர்.

| | | |
|---|---|---|
| ஏழுமலை | — | முகிலன் |
| கருப்பண்ணன் | — | தமிழ்மணி |
| செல்லமுத்து | — | தரளம் |

சு] தம்பெயர் வேற்று மொழியில் அமைந்திருப்பின், அதன் பொருள் பெயர்ப்பு விரும்பாராய்த் தனித் தமிழ்ச் சொல்லைத் தாம் விரும்பிய வண்ணம் அமைத்துக் கொண்டவர் பதினைவர்.

| | | |
|---|---|---|
| அப்துல் காதர் | — | தேவநேயச் சித்திரன் |
| இராச ரத்தினம் | — | இளந்திரையன் |
| இராமகிருட்டிணன் | — | முத்துவண்ணன் |
| இராமையா | — | முகிலன் |
| ஈசுவரமூர்த்தி | — | தமிழ்வேந்தன் |
| ஐயாலு | — | நல்லான் |
| கணேசன் | — | மணிவண்ணன் |
| கிருட்டிணன் | — | புகழேந்தி |
| கோவிந்தசாமி | — | குறளன்பன் |
| சரோசினி | — | தமிழ்ப்பாவை |
| சாந்தி | — | முல்லை |
| சிவலிங்கம் | — | கன்னல் |
| ஞான சேகரன் | — | கலைச் செழியன் |
| தியாகராசன் | — | தமிழிறையன் |
| முத்துச்சாமி | — | மணிமாறன் |

ரு] தம் பெயர்ச் செறிவும் ஊர்ச் செறிவும் கருதித் தம் பெயர் தமிழாக இருந்தும் மாற்றிக் கொண்டவர் ஒருவர்.

| | | |
|---|---|---|
| தரங்கை | — | பன்னீர்ச் செல்வன் |

இவர்கள் தம் பெயர்மாற்றிக் கொண்டதற்குக் காட்டும் காரணம்என்ன? முப்பதின்மரும் ஒருமித்துக் கூறுவது 'தனித் தமிழாக இருக்க வேண்டும்' என்பதே.

மறைமலையடிகள் நூல்கள், பாவாணர் நூல்கள், உலகத் தமிழ்க் கழகம் என மும்மைக் காரணம் மொழியினும் மூலம் தனித்தமிழ் என்பதே.

பெயர் மாற்றம் செய்து கொண்டவர் அனைவரும் தமிழ்ப் பட்டந் தாங்கியர் அல்லர்; தமிழ்ப்பணி புரிபவர் அல்லர்; ஆனால், தமிழ்ப்பற்றர்; தமிழ்க் காதலர்.

இவருள் பொறியர் உளர்; புலவர் உளர்; பொறியியக்குநர் உளர்; உந்து ஓட்டுநர் உளர்; அலுவலக எழுத்தர் உளர்; வரைவர் உளர்; கண்காணிப்பாளர் உளர்; ஆடவர் உளர்; மகளிர் உளர்; சிவனிய மாலிய மகமதிய கிறித்தவ-சமயஞ் சார்ந்தனர் உளர்!

மூன்றாம் வகுப்பு முடித்த அளவில் படிப்பை விடுத்தவர் முதல், மூன்று நான்கு ஐந்தெனப் பட்டந்தாங்கியரும் உளர்; தொடக்கப்பள்ளி ஆசிரியர் முதல் பல்கலைக்கழகப் பணியர்களும் உளர். ஏன்? எந்நிலையர் ஆயினும் எத்தொழிலர் ஆயினும் அவர்க்கெல்லாம் தமிழ் பொதுச் சொத்து! அவர்கள் பேணும் கடப்பாடுடையர்-இஃது அடிப்படை முதல்!

இவர்கள் செய்து கொண்ட பெயர்மாற்றம் இவர்கள் அளவில் அமையுமோ? இவர்தம் மக்களுக்கு இவர்கள் இடும் பெயர் தனித்தமிழாகவே அமைந்துவிடும் அன்றோ? இவர்கள் இல்லப் பெயரும் தமிழ்த்தாங்கும் அன்றோ?

அன்னை நிலையம், குறிஞ்சி, செல்வம், தங்கமணியகம், தமிழ்ச் செல்வம், தமிழில்லம், நட்பகம், பனிமலர் இல்லம், மலரகம் என்பன இவர்கள் இல்லங்களின் தமிழ்மணம்!

கடந்த எழுபான் ஆண்டுகளாகப் பல்லாயிரம் பேர்கள் தம் பெயரைத் தமிழாக மாற்றிக் கொண்டிருந்தும், அறிக்கை வழியே கைக்குக் கிடைத்தவை மட்டுமே இவ்வாய்வுப் பொருளாக மேற் கொள்ளப்பட்டது. மேலும் இப்பட்டியை விரித்துத் தொகுத்து ஆய்வு மேற்கொளளப்படுமானால் தனித்தமிழ் இயக்கப்பணியின் அளவீடு உண்மையாக அறியவரும்.

'தனித்தமிழ் எழுத்தாளர் அகர முதலி' என்னும் பெயரிய சுவடி ஒன்று புதுவைத் தனித்தமிழ்க் கழகத்தால் வெளியிடப் பட்டுள்ளது. தனித்தமிழ்த் தாளிகைகள் [வந்தவை, வருகின் றவை] ஆய்வுப் பொருளில் பேரிடம் பெறுவன. தனித்தமிழில் நூல் செய்வார் மட்டுமல்லர், அவ்வாய்ப்பின்றிக் கட்டுரை யளவில் நிற்பாரும், பாட்டளவில் நிற்பாரும் உளர். இவற்றுக்கு மேலாகத் தனித்தமிழ் அமைப்புகள் ஆங்காங்குப் பணிசெய் கின்றன! இவையெல்லாம் ஆய்வுப் பொருள்களே!

ஒரே ஒரு குறை தமிழர்க்குத் தொடக்க நாள் முதலே அமைந்து தொடர்ந்து வருவது, ஒன்றுபட்டுச் செயலாற்றாமை; வேற்றுமையுள் ஒற்றுமை காணமாட்டாமை; தனித்தமிழ்க் கொள்கையை விடுத்துத், ''தனித்தனிமனிதரைத் தலைமேல் தூக்கி வெறிகொண்டாடல்!'' [திரு. வி. க]

''பனிமலைக் கொடுமுடியின் உயரம், நீல ஆற்றின் நீளம் அமைதிவாரியின் ஆழம் ஆகியவை ஒருங்கே அமைந்தவர் மறை மலையடிகளார்'' என்றவர் பாவாணர்; அப்பாவாணரோ திரவிட மொழிகள், மேலையாரிய மொழிகள், கீழையாரிய மொழிகள் என ஐம்பத்தெட்டு மொழிகளைச் சுட்டி வேர்ச் சொல் காட்டியவர். [தமிழ் வரலாறு, முகப்பு] இவர்கள் கொள்கைகள் இவையென வழிவழியாக வருவார் அறிந்து கொண்டு போற்றுதற்கென அமைந்தது உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன அறக் கட்டளைகள்!

வினையால் வினையாக்கிக் கொள்ளும் விழுப்பம் நிறைந்த இயக்குநர் அறிவர் திருவாளர் ச. வே. சுப்பிரமணியனார் என்னை 'மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை'யை நினைவு கூர வாய்ப்பருளியமைக்கும், அப்பொழிவை நிலைவைப்பாகத் தமிழுலகுக்கு வழங்குவதற்கும் நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

தமிழ்த் தொண்டன்,
இரா. இளங்குமரன்
17.5 86

தமிழ்ச் செல்வம்,
பாவாணர் ஆராய்ச்சி நூலகம்,
திருநகர், மதுரை—6.
625006.

# உள்ளுறை

பக்கம்

1. கரையும் காவலும் 1

கட்டளை-நூல்-நூற்செம்மை-கலப்பும் களையும்

2. புனைவும் புகுத்தலும் 5

தொல்காப்பியர் – பாண்டியன் மாகீர்த்தி–அரில்தபத் தெரிதல் - சீர்த்தி - புனைவின்வறுமை-ஒட்டுப் புனைவு– வேள்வியும் யாகமும் - காலஆய்வு - சிலம்பாறு - நோக்கின் நோக்கு-சங்கத்தார் சால்பு

3. அடையும் நடையும் 11

செந்தமிழ்-தொல்காப்பியச் செம்மை–தண்டமிழ்-வண்டமிழ் தென்றமிழ்-ஆளுடைய பிள்ளையார் அருளிய அடைகள்-பிற வகை அடைகள் - தனித்தமிழ்.

4. இன்மையும் உண்மையும் 17

இலது என்றலின் உளது - ஈசான தேசிகர் - இலக்கணக் கொத்து-ஐந்தெழுத்து-இன்மையின் உண்மை-வஞ்சினமும் வண்டமிழும்.

5. கட்டும் காவலும் 21

காவல் வகை-காவல்நூல் - கலந்த வடசொல் - சங்க நூலில் காவல் திறம்-அறிதுயில் - பின்னோர் காவல்-மொழி யாக்கப் பெயர்ப்பு-கம்பர் திறம் - வில்லியார் - அருணகிரி யார் - குமரகுருபரர்-காளமேகர்-வீரமாமுனிவர் - உமறுப் புலவர்-வள்ளலார்-மறைமலையார் பேறு.

6. காவலரும் கரையுடைப்பும் 32

இலக்கணர்-முள்மரம் - முதற்குற்றம் - நேமிநாதம் - வீர சோழியம் - நன்னூல் - பிரயோக விவேகம் - இலக்கண விளக்கம் - தொன்னூல் - முத்து வீரியம்.

7. உரையும் உரைநடையும் 37

பாட்டும் உரையும் - உரைப்பாட்டு - உரையிடையிட்ட பாட்டு - தொன்மை - நூலாசிரியரும் உரையாசிரியரும் - உரையாசிரியர் - சேனாவரையர் - தென்சொல் வடசொல் பாரத வெண்பா - மணிப்ரவாளம் – நாலாயிரப் பனுவல் - சிவஞான முனிவர் - பரிதியார் - பெயர்மாற்றம் - பல சமயப் புகவு-

**8. ஆள்வும் வாழ்வும்** 49

*மன்னர் சிறப்பு - பாண்டியர்-பிறர் ஆட்சி - ஆங்கிலர் ஆட்சி கல்வி நிலை-கோயில் மொழி-இசைத் தமிழ் - தமிழிசை நூல்கள்.*

**9. தூண்டலும் துலங்கலும்** 55

*அறிஞர் கால்டுவெல்-கால்டுவெலார் கருத்துரை - பேராசிரியர் பெ. சுந்தரனார் - சூளை சோம சுந்தர நாயகர்-பரிதிமாற் கலைஞர் - செல்வக் கேசவராயர் - மதுரைத் தமிழ்ச் சங்கம் - பாரதியார் - திருவிடர் கழகம் - சுப்பிரமணிய சிவா.*

**10 ஆய்வும் தோய்வும்** 79

*அகத்தூண்டல் - அடிகளார் கல்வி - ஆசிரியர் ஊட்டிய விழிப்பு-ஆசிரியர் கால நிலை - தடைவிடை - விருப்பும் மறுப்பும் - ஆய்வு நூல்கள் - ஆய்வுக் கட்டுரைகள்.*

**11. தந்தையும் மகளும்** 87

*நீலாம்பிகையார் - நீலாம்பிகையார் கல்வி - தனித்தமிழ்த் தோற்றம்-இயக்கம்-பதிப்பும் திருத்தமும் - நீலாம்பிகையார் தமிழ்ப் பணி - வடசொற்றமிழகரவரிசை - தனித்தமிழ்க் கட்டுரைகள்.*

**12. கொள்கையும் கோட்பாடும்** 97

*கொள்கை அடைவு - கொள்கை விளக்கம் - எழுத்தை உன்னிக்க - பிறவிப்பயன் - கடைப்பிடி - நீர்க் கலப்பும் மொழிக் கலப்பும்-மொழியும் ஆறும் - மொழிகள் கலக்கும் நிலை-விழிப்புறுத்தம் - தமிழியலைக் கெடுத்தல் - நீரில் கொட்டி நிலத்தை அகழ்தல் - கல்லாரும் கற்றாரும் - மாறுதல் கொள்கை மறுப்பு - அழிவும் ஆக்கமும் - மாறான மாறுதல் - குறுவட்டமும் பெருவட்டமும் - திரிப்பும் பிரிப்பும்-தமிழொலித்தகவு - வளர்ச்சியா? தளர்ச்சியா?*

**13. சொல்லும் செயலும்** 110

*முந்நிலைத் தூயர்-ஒரு நிலை அரிமா - அறிஞர் மதிப்பீடு-சொல்லாய்வு - சொல்லாய்வுத் தூண்டல் - ஒரு பொருள் பன்மொழி-மலை-கடல்-காடு-விளை நிலம் - சொல்லாய்வுக் கூறுகள் - படைப்பாக்கப் பகுப்பு-நோயில்லா நீண்ட வாழ்க்கை - சொல் வகை-முடிநிலை.*

**14. குறையும் நிறையும்** 120

*கொள்கை வழிபாடு - தனித்தமிழ்ப்போர்க்களம்-சன்மார்க்கம் - ஒரு குறை - ஓர் எதிராட்டு - முன்னுக்குப் பின் முரண் - ஒரு நிறை - அடிகளார் வழிஞர்-நிறைவுரை.*

**இணைப்பு** 134

**சொல்லடைவு** 143

**துணைநூற்பட்டியல்** 144

# 1. கரையும் காவலும்

## கட்டளை

1. 1 ஆறு குளம் கால்வாய் முதலியவற்றுக்குக் கரையுண்டு. கரை இல்லையேல் நீர்ப்பெருக்கால் பயிரும் அழியும்; நிலமும் அழியும்; நீரும் பயன்படாமல் ஒழியும். அதனால் தான் அளவளாவுதல் இல்லாதவன் வாழ்க்கையைக் கரை யில்லாத குளத்தில் நீர் நிறைதலுக்கு ஒப்பிட்டார் திருவள்ளுவர்.*

1. 2 நீரை ஒழுங்குபடுத்திக் காப்பதற்கு மட்டுமோ கரை வேண்டும்? மொழியை ஒழுங்குபடுத்திக் காப்பதற்கும் கரை வேண்டும்; மொழிக்குக் கரையாக விளங்குவது இலக்கண மாகும்.

2. 1 செங்கல் அமைப்பதற்குக் 'கட்டளை' யுண்மை எவரும் அறிந்ததே! பொன்னின் மாற்று அறிதற்கும் 'கட்டளை' யுண்மை தெளிவானதே! இவற்றைப் போல் மொழியின் செம்மை காப்பதற்கும் கட்டளை வேண்டும் அல்லவோ! அக் கட்டளை இலக்கணமாம்.

## நூல்

3. 1 'நூல்' என்பது, முன்பு இலக்கணத்தையே குறித்தது. இலக்கண நூல் என்பது பிற்கால வழக்கம். 'நூற்பா' என இக்காலத்து எப்பாவை வழங்குகின்றோம் இலக் கணம் கூறும் பாவே, நூற்பா எனப்படுதல் வெளிப்படை.

3. 2 'நூல்' என்னும் பெயருடன் ஒரு நூல் திகழ்ந்தமையை இறையனார் அகப்பொருள் உரை, சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை, நன்னூல் மயிலை நாதர் உரை ஆகியவை தெளிவாக்குகின்றன.

---

* ''அளவளா வில்லாதான் வாழக்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று'' திருக். 523

3. 3 ''இடுகுறியாற் பெயர் பெற்றன, ''நிகண்டு, நூல், கலைக் கோட்டுத் தண்டு'' என்று இறையனார் அகப் பொருள் உரையும், மயிலை நாதர் உரையும் சொல் கின்றன.[1]

3.4 ''ஆயிரம்நரம்பிற்று ஆதியாழ் ஆகும்'' எனத் தொடங்கும் நூற்பாவொன்றைத் தம் உரைப்பாயிரத்தில் காட்டி ''என நூலுள்ளுங் கூறினார்''[2] என்று அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். அவரே அரங்கேற்று காதையில் ''ஆடிட முக்கோல்'' என்னும் நூற்பாவை மேற்கோள்காட்டி ''நூலிற் கூறின முறை என்க''[3] என்று எழுதுகின்றார்.

3.5 இனி, ''நூல்போறலின் நூல்என்ப''[4]என இலக்கண உரையா சிரியர்கள் விளக்கிக்கூறுவனவும், நன்னூல், சின்னூல், தொன் னூல் என இலக்கண நூற்பெயர்கள் வழங்குவனவும்'நூல்,' இலக்கணமே என்பதை வலியுறுத்துவனவாம்.

3. 6 நூல் மங்கலப் பொருளாகவும்,[5] வழிபடு பொருளாகவும்[6] அறிவு நிலைப் பொருளாகவும்[7] தமிழகத்தில் நெடுவழக்கில் உள்ளது. ஒழுங்கு படுத்துதல் அல்லது செம்மைப் படுத் துதல் என்பதே நூலின் தலையாய பயன்பாடு என்பதைத் தமிழுலகும் ஏனை உலகும் நன்கறியும்.

4. 1 வளைந்த மரத்தை ஒழுங்குபடுத்தி அறுக்க 'ஏற்று நூல்' அடிக்கும் வழக்கம் உண்டன்றோ![8]

4. 2 ஒழுங்கற்ற பெரிய கல்லை ஒழுங்குற உடைக்க 'நூல் அடிக்கும் வழக்கம் உண்டன்றோ!

4. 3 மனை நிலம் கோலுவார் நூலடிப்பது, தானே முதற்பணி!

4. 4 சுவர் எழுப்பும் போது நூலின் பயன்பாடு இவ்வளவு அவ்வளவா? ஒவ்வொரு செங்கல் வரிசை வைக்கும் போதும் நூல்தானே நேராக்கும் நேர்மைப் பணி புரிகின்றது!

4. 5 சுவர்க் கனத்தை ஒழுங்குறுத்தத் தொங்க விடும் குண்டு, 'நூற்குண்டு' தானே!

இவையெல்லாம் நூலின் ஒழுங்குறுத்தலாம் செம்மைச் சீர்மையை விளக்கும் சான்றுகள்.

---

1. இறை. 1 மயிலை 48.
2. உரைப்பாயிரம்.
3. அரங். 130.
4. இறை. 1.
5. மங்கல அணியாம் நூல்
6. கலைமகள் விழா
7. நூலகம்
8. நன். 25.

## நூற் செம்மை

5. 1 நூலுக்குரிய, 'இலக்கணம்,' 'செம்மை' என்னும் இரு பொருள்களின் வழியே நமக்குக் கிடைத்துள்ள தொன்முது நூலாம் தொல் காப்பியத்தை நோக்குவோம்.

''வடவேங்கடம் தென் குமரி
ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்''[9]

எனத் தமிழ் வழங்கிய எல்லை கூறியது தொல்காப்பியம்.

5. 2 ''வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்''[10]

என இருவகை வழக்குகளையும் இயம்பியது தொல்காப்பியம்.

5. 3 ''எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி''[11]

என இலக்கணப் பகுப்பை இசைத்தது தொல்காப்பியம்.

5. 4 ''செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத்து''[12]

என நூல் செய்தக்க நுண்முறையை நுவன்றது தொல் காப்பியம்.

5. 5 ''அரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி''[13]

என அரங்கேற்றத் தணிக்கை முறையை அறைந்தது தொல் காப்பியம்.

5. 6 ''எழுத்தெனப்படுவ
அகர முதல னகர இறுவாய்
முப்பஃ தென்ப''[14]

என எழுத்தின் தொடக்கம் ஈறு எண்ணிக்கை ஆகியவற்றை அறுதியிட்டுரைத்தது தொல்காப்பியம்.

5. 7 ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே''[15]

எனச் சொல்லமைதி சுட்டியது தொல்காப்பியம்.

5. 8 ''மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா''[16]

எனச் சொற்பொருள் காண்பார் ஆழ்ந்து செல்ல வேண்டும் அருமையை உரைத்தது தொல்காப்பியம்.

---

9. தொல். பாயிரம்
10. தொல். பாயிரம்
11. தொல். பாயிரம்
12. தொல். பாயிரம்
13. தொல். பாயிரம்
14. நூற்பா. 1.
15. ,, 640.
16. நூற்பா. 877

5.9 ''இயற்சொல் திரிசொல் திசைச் சொல் வடசொலென்
றனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே''[17]

எனச் செய்யுட் சொல் இவையெனச் செப்பியது தொல்காப்பியம்.

5.10 ''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே [18]

எனப் பிற மொழிச் சொல் புகுதலுக்கு இறுதியிடம் தந்ததுடன் அச் சொல்லைத் தமிழியல் மாறாத்தகவுடன் ஆள வேண்டும் என ஆற்றுப் படுத்தியது தொல்காப்பியம்.

5.11 ''மாற்றருஞ் சிறப்பின் மரபு'' [19]
எனவும்,

''மரபு நிலை திரிதல் செய்யுட் கில்லை'' [20]
எனவும்,

''மரபுநிலை திரியின் பிறிதுபிறி தாகும்''[21]
எனவும்,

''மரபுநிலை திரியா மாட்சியவாகி'' [22]

எனவும் பிறவாறும் மரபுநிலை போற்றுதலைத் திட்டவட்டமாகத் தெளிவுறுத்தியது தொல்காப்பியம்.

5.12 இவையெல்லாம் மொழிச்செப்பம் கருதிய செய்திகளாம். ஆனால் இவ்வரம்புகளும் கட்டுப்பாடுகளும் படிப்படியே காலந்தொறும் எத்துணை அலைக் கழிவுகளுக்கு ஆட்பட்டுள்ளன என்பதையும், ஆட்பட்டு வருகின்றன என்பதையும் ஆய்தல் தனித் தமிழ் கொள்கை ஆய்வுக்கு வேண்டத்தக்கதாம்.

## கலப்பும் களையும்

6.1 கலப்படம், கள்ளக் கடத்தல் முதலானவை மிகும் பொழுது அவற்றைத் தடுக்கச் சட்டங்கள் தோன்றுவதும், அச் சட்டங்கள் கவடு கிளைகளாக விரிவுறுவதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதும் நாட்டின் நடைமுறையாக உண்மை கண்கூடு! கலப்படத் தடுப்புச் சட்டம், கலப்படம் செய்வாரை இல்லாக் காலத்து இல்லை என்பதும், அக் கலப்படமும் அருகிக் கண்டும் காணாமலும் இருக்கும் போதும்

17. நூற்பா 880
18. ,, 884
19. ,, 1500
20. ,, 1590
21. ,, 1591
22. ,, 1593

அதனைப் பொருட்டாக எண்ணாமல் விடுதல் பொது நிலை என்பதும் உலகியல் காட்சியே. ஆதலால், வரன் முறையற்ற வகையில் பயிரையே அழிக்கும் களையென மொழிக் கலப் படம் ஏற்பட்ட கால நிலையிலேயே, காலத்தின் கட்டாயத் தேவையாகக் கிளர்ந்ததே தனித்தமிழ்க் கொள்கை என்பது தெளிவான செய்தியாம்.

# 2. புனைவும் புகுத்தலும்

## தொல்காப்பியர்

1. 1 தொல்காப்பியப் பாயிரம் நூலாசிரியன் பெயரை,

"தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி"

எனத் தெளிவாக உரைக்கின்றது. அதற்கு விளக்கம் வரையும் உரையாசிரியர் இளம்பூரணர் "தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றியெனவே, ஆக்கியோன் பெயரும் நூற் பெயரும் பெறப்பட்டன" என்று அமைகிறார்.

## பாண்டியன் மாகீர்த்தி

2. 1 இளம்பூரணருக்குப் பின் வந்த உரைகாரரான நச்சினார்க் கினியர் 'அரில்தபத் தெரிந்து' என வரும் பாயிரத் தொடர்க்குப் பெருவிளக்கம் புரிகின்றார்.

"பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் யாண்டு வீற்றிருந்தானாதலின், அவனும் அவன் அவையி லுள்ளோரும் அறிவுமிக் கிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கெல்லாங் குற்றந்தீர விடை கூறலின் 'அரில் தப' என்றார்.

## அரில்தபத் தெரிதல்

2. 2 "அகத்தியனார், அதங்கோட்டாசிரியரை நோக்கி 'நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க' என்று கூறுத லானும், தொல்காப்பியனாரும் பல்காலுஞ் சென்று 'யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்' என்று கூறுத லானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங் கூறிவிடுவல் எனக் கருதி அவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடை கூறுதலின் 'அரில்தபத் தெரிந்து' என்றார்.

2. 3 "அவர்கேளன்மின் என்றற்குக் காரணம் என்னை எனின், தேவரெல்லாரும் கூடியாம்சேர இருத்தலின் மேருத்தாழ்ந்து

தென்திசை உயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டு இருத்தற்குரியரென்று அவரை வேண்டிக் கொள்ள, அவரும் தென்திசைக்கண் போதுகின்றவர் கங்கையாருழைச் சென்று, காவிரியாரை வாங்கிக் கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக் கொண்டு, புலத்தியனாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபா முத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப் பெயர்ந்து, துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினென் கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின் கண் இருந்து, இராவணனைக் கந்தருவத்தாற்பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி, 'நீ சென்று குமரியாரைக் கொண்டு வருக' எனக் கூற, அவரும் 'எம்பெருமாட்டியை எங்ஙனங் கொண்டு வருவல் என்றார்க்கு, 'முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகல நின்று கொண்டு வருக'என, அவரும் அங்ஙனம் கொண்டு வருவழி, வையை நீர் கடுகிக் குமரியாரை ஈர்த்துக் கொண்டு போகத், தொல்காப்பியனார் கட்டளையிறந்து சென்று ஓர்வெதிர்ங்கோலை முறித்து நீட்ட அதுபற்றியேறினார்; அது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையும், தொல்காப்பியனாரையும் 'சுவர்க்கம் புகாப்பிர்' எனச் சபித்தார்; யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையால் 'எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பிர்' என அவர் அகத்தியனாரைச் சபித்தார். அதனான் அவர் வெகுண்டாராதலின் அவன் செய்த நூலைக் கேளற்க என்றார் என்க'' என்பது நச்சினார்க்கினியர் விளக்கம்.

'அரில் தபத் தெரிதல்' என்பதன் விளக்கமாக வந்துள்ள இப்பகுதியில் உள்ள கதையின் அரில்களை (குற்றங் குறைகளை) ஆராய்ந்தால் தனிச் சுவடியாம்.

**சீர்த்தி**

3. 1 பாண்டியன் பெயர் மாகீர்த்தியாம்! வரலாறு காணா ஒரு புனைவுப் பெயர் இது! 'சீர்த்தி மிகுபுகழ்'* என்பது, தொல்காப்பியம். சீர்த்தி, கீர்த்தியாயது மிகப் பிற்பட்டது. ஆனால் முற்பட்ட பாண்டியன் பெயரிலேயே 'கீர்த்தி'

*. தொல். 796.

சேர்க்கப்பட்டது. அவன் வீற்றிருந்த காலம் இருபத்து நாலாயிரம் யாண்டாம்.'

## புனைவின் வலுமை

3. 2 தலைச் சங்கம் நடாத்திய பாண்டியர் "காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத் தொன்பதின்மர் என்றும், அக்காலம், "நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்று யாண்டு" என்றும் இறையனார் களவியல் கூறும்[1] பாண்டியன் மாகீர்த்தி என்பானே, இருபத்து நாலாயிரம் யாண்டுகள் ஆண்டான் எனின் இப்புனைவின் வெறுமையை அறிந்து கொள்க.

3. 3 பனம்பாரனார் பாயிரத்தில் சுட்டாத யமதக்கினியார், திரண தூமாக்கினியார், அகத்தியனார், புலத்தியனார், உலோபாமுத்திரையார் இவரெல்லாம் புகுந்த விந்தை என்ன?

3. 4 முந்து நூல் கண்டு மொழிந்த இலக்கண நூலாசான் பெயரே 'திரணதூமாக்கினி' என்று இறுக்கிக் கட்டிவிட்டால் பின்னவரைப் பற்றிக் கூறவேண்டுவதென்ன என அவிழ்க்க முடியாத முடிபோட்டு விட்டால் போகிறதெனச் செய்த வேலை இவ்வேலை! இத்தகு வேலைகள் தாமே 'ஆராய்ச்சித் தொகுதி'க்கு[2] அரும்பொருளாகப் பெரிதும் விளங்குவதாயின!

## ஒட்டுப்புனைவு

4. 1 இல்லாப் புனைவு இஃதெனின், ஒட்டுப் புனைவு ஒன்றும் காணத் தக்கதாம்:

பண்டைப் பாண்டி வேந்தருள் ஒருவன் முதுகுடுமிப் பெருவழுதி என்பான். அவனைக் காரிகிழார், நெட்டிமையார், நெடும் பல்லியத்தனார் என்னும் சங்கச் சான்றோர்கள் பாடியுள்ளர். அவர்கள் பாடல்களில் "குடுமி" (புறம்: 6,9) "குடுமிக்கோமான்" (புறம்: 64) "பல்சாலை முதுகுடுமி" (மதுரைக் காஞ்சி: 759) என்றே வழங்கியுள்ளனர். புறநானூற்றுப் பழைய உரையாசிரியரும் 'குடுமி' 'முதுகுடுமி' என்றே வழங்குகின்றார். ஆனால், புறநானூற்றுப் பாடினோர் பாட்டப்பட்டோர் குறிப்பில்மட்டும் 'பாண்டியன்

---

1. நூற்பா. 1.
2. பேராசிரியர் மு. இராகவர்.

பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி' எனப் பெய ருள்ளது. நச்சினார்க்கினியர், "பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி" என்கிறார்.[3] சேனாவரையர் "பெருந்தோட் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி"[4] என ஓர் எடுத்துக்காட்டுக் காட்டுகிறார். வேள்விக்குடிச் செப் பேட்டில் "பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியாதிராசன்" என்னும் குறிப்புளது.[5]

4. 2 பண்டைப் பாண்டி வேந்தன் பெயரிலும், அவனைப் பாடிய சங்கச் சான்றோர் வாக்கிலும் வாராமல், நூலைத் தொகுத்தோரும், உரைகண்டோருள் சிலரும், பிற்பட்ட செப்பேட்டாரும் 'யாகம்' என்பதைச் சேர்த்து விட்டனர் என்பதற்காக, அவ்வேந்தன் காலத்திலேயே 'யாகம்' செய்யப் பட்டது என்றும், வடமொழிப் பெயர் வைத்துக் கொண் டான் என்றும் சொல்வது ஆய்வு நெறியன்றாம்.

## வேள்வியும் யாகமும்

4. 3 கொடுக்கப்பட்ட ஊரின் பெயரே 'வேள்விக்குடி' என்று செப்பேட்டில் இருப்பதும், 'வேள்விச் சாலை' என்ற ஆட்சி சிலம்பில் இருப்பதும்,[6] சிலம்பு, மேகலை, சிந்தாமணி, பெருங் கதை, சூளாமணி ஆகிய பின்னூல்களிலும்' யாகம், என்னும் சொல் இடம் பெறாது இருப்பதும் நோக்க, வல்லாண்மை யால் செறித்து வைத்த சொல்லாட்சியே 'யாகம்' என்பது வெளிப்படும். இத்தகைய தொன்றே 'இராச சூய யாகம் வேட்ட பெருநற்கிள்ளி' என்பான் பெயரிலுள்ள இராச சூய யாகமுமாம்! அவனைப் பற்றிய பாடல்களுள் எந்த ஒன்றிலும் 'இராச சூய யாகம்' என்னும் வடசொற்கள் மூன்றனுள் ஒன்று தானும் இடம் பெற்றிலது என்பதை ஆய்வார் அறிவர். இனி வேள்வியும் யாகமும் ஒன்றல்ல; அவ்வாறு வேள்வியை யாகமாகச் சொல்லியது அறமாகாது என்பதை ஆய்தற்குரிய இடம் ஈதன்று ஆகலின் இவ்வளவில் அமைவாம்.

4. 4 மூலநூலில் ஒருவரைப்பற்றிய குறிப்புக்குச் சான்று இல்லா திருந்தும், தொகுத்தவர், உரை கண்டவர், பின்னோர் ஆகியோர் குறிப்புகளை ஏற்று, அவர்மேல் சுமத்துதல்

---

3. மதுரைக். 759.
4. இளவியாக்கம். 26.
5. பாண்டியர் செப்பேடுகள் பத்து.
6. சிலப். 30: 170

முறைமையன்று என்பது போலவே இன்னொரு முறை கேடுண்மையும் எண்ணத் தக்கதாம்.

## கால ஆய்வு

5.1 புலவர்களைப் பற்றி எத்தனை எத்தனையோ புனை கதைகள் வழங்குகின்றன. அப்புனை கதைக்கு ஆட்பட்டவர்களுள் திருவள்ளுவரும் தப்பிவிட முடியவில்லை. அவர், தம் அருமைத் துணைவியார் பிரிந்த நாளில்,

''அடிசிற் கினியாளை அன்புடை யாளைப்
படிசொற் பழிநாணு வாளை-அடிவருடிப்
பின்தூங்கி முன்னுணரும் பேதையை யான் பிரிந்தால்
என்தூங்கும் என்கண் இரா''

எனப் பாடினாராம்.[7] இதில் 'தூங்குதல்' என்னும் சொல் 'உறங்குதல்' பொருளில் வந்துளது. இப்பொருளில் இச்சொல் ஆளப்பட்டிருத்தலால் திருவள்ளுவர் காலம் மிகப் பிற்பட்டது என ஆய்வது தகவாமா?

5.2 ''அடிசிற் கினியாளை'' என்னும் பாடல் திருவள்ளுவர் பாடியது என்பதற்குள்ள உறுதியென்ன? திருக்குறளில் எங்கேனும் தூங்குதல் உறங்குதற் பொருளில் வந்துளதா?

''உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''[8]

எனவும்,

''தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை''[9]

எனவும் இருசொற்களையும் பயன்படுத்தியுள்ள முறை எவ்வளவு தெளிவுடையது! இருந்தும், பிற்காலத்தொருவர் புனைந்த பாடலைக் கொண்டு வள்ளுவரையும் பிற்காலத்திற்கு இழுப்பது, இழுப்பவர் இழுக்கேயன்றி வேறென்ன சொல்ல முடியும்?

## சிலம்பாறு

6.1 மதுரைக்கு அணித்தாக இருப்பது அழகர்மலை; அது சோலைமலை, திருமாலிருஞ் சோலைமலை, பழமுதிர்

---

7. தனிப்பாடல் திரட்டு.
8. திருக். 339.
9. ,, 672.

சோலைமலை என்றெல்லாம் வழங்கப்படுவது. பாடு புகழ் மிக்கது என்பது, நாடறிந்த செய்தி! அம்மலையில் ஓர் ஆறு உண்டு. அதன் பெயர் 'நூபுரகங்கை' என வழங்கப்படுகின்றது, ''நூபுரகங்கைக்குப் போகும் வழி'' என வழிகாட்டிகளும் உள்ளன. அழகர் மலையில் நூபுர கங்கை அமைந்த வகையென்ன?

6. 2 சிலம்பிலே, ''நிலம்பக வீழ்ந்த சிலம்பாற்றகன்றலை''[10] என வருகின்றது. ''சிலம்பாறு என்றது, ஓராறு'' என்றார் அருஞ்சொல்லுரைகாரர். ''சிலம்பாறு - அவ்வியாற்றின் பெயர்'' என்றார் அடியார்க்கு நல்லார். அவர்கள் காலம் வரை சிலம்பாறு, சிலம்பாறாகவே இருந்தது. பின்னர்ச் சிலம்பு நூபுரமாகவும், ஆறு கங்கையாகவும் மாற்றப்பட்டு 'நூபுர கங்கையாயிற்று' என்பது விளங்குகின்றது. பின்னர்ச் சிலம்புப் பதிப்பில் ''சிலம்பாற்றினை நூபுர கங்கை'' என்பர் என அடிக்குறிப்பும் இடம்பெற்றது.

6. 3 திவாகரர் காலத்தில் 'நூபுரம்' பாத கிண்கிணியைக் குறித்ததை அறிகிறோம். அவர் மகனார் பிங்கலர் காலத்தில் கிண்கிணியையும் சிலம்பையும் 'நூபுரம்' குறித்ததென அறிகிறோம்.

> ''பரிபுரம் நூபுரம் பரியகம் என்ன
> வருபவை பாத கிண்கிணி மணியே''[11]

என்பது திவாகரம்.

> ''பரிபுர நூபுரம் பாதகிண் கிணியே''[12]
> ''அரிதளை ஞெகிழி நூபுரஞ் சிலம்பே''[13]

என்பவை பிங்கலம்.

சிலம்பாறு நூபுரகங்கையாக மாற்றப்பட்டதால் இந்நாளில் உள்ள நூபுர கங்கையின் தமிழ்ப் பெயர்ப்பே, 'பண்டைச் சிலம்பாறு' என ஒருவர் ஆய்ந்தால், ''ஏழாம் பேரன் ஏழாம் பூட்டனுக்கு முன்னோன்'' என ஆகிவிடாதா? ஆக்கிவிடமாட்டார்களா?

## நோக்கின் நோக்கு

6. 4 இவற்றைத் தொடக்கத்திலே எண்ணுதல் ஒரு நோக்குக் கருதியாம். மிகப் பழங்காலத்தில் வடமொழிச் சொற்கள்

10. சிலம்பு. 11: 108
11. செயற்கை வடிவப் பெயர்.
12. நூற்பா. 1182
13. ,, 1184

புகுதற்குத் தடையுண்டாக்கியும், ஒரு கால் புகுமாயின் அதற்கு முறையுண்டாக்கியும் வைத்தமையால் சங்கச் சான்றோர் நாளில் தமிழ் செந்தமிழாகவே விளங்கியது என்பதும் பின்னர்த் தம் மொழிவல்லாண்மையால் உரையாளரும் பிறர்பிறரும் வேண்டுமாற்றானெல்லாம் வடமொழிச் சொற்களை வலிந்து புகுத்தினர் என்பதும் விளக்கமாம். இலக்கணரும் இடந்தந்தனர் என்பதும் கருதக் கூடியதாம்.

### சங்கத்தார் சால்பு

7. 1 சென்னைப் பல்கலைக் கழகத்தில் 7-11-1927 முதல் 21-12-27 வரையில் உள்ள காலத்தில் பத்து நாள்கள் தென்மொழிக் கலைச்செல்வர் பெரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதர் 'சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்' என்னும் தலைப்பில் பொழியும்போது ''இவர்கள் (சங்ககாலப் புலவர்கள்) பாடல்களில் ஆணி, கலவம், கோவலர், மேதை, தசம், திசை, பலம், மணி, வாதி முதலிய சில வட சொற்களே காணப்படுவதால், இவர்கள் காலத்தில் வடசொற்கள் பெரும் பாலும் தமிழ் மொழியில் கலக்கவில்லை என்று சொல்லலாம்''[14] என்றார்.

7. 2 தொல்காப்பியர் கட்டிய கரையை உடைக்காமல் கருத்தாகக் காத்தவர்கள் சங்கச் சான்றோர்கள் என்பது இக்குறிப்பால் வெளிப்படும். பின்வந்தோர் அவ்வாறு பேணுதல் ஒழிந்ததுடன், பேணிக்காத்தவர் வைப்புகளிலும் இடையிடை கலந்துவைப்பதையும் கடனாகக் கொண்டிருந்தனர் என்பது முற்படக் குறித்த சான்றுகளால் புலப்படும் என்க.

# 3. அடையும் நடையும்

### செந்தமிழ்

1. 1 தமிழ் என்பதற்கு முதன் முதலாக வாய்த்த அடைமொழி 'செம்மை' என்பதே. அச்செம்மையடை தொல்காப்பியத்திலும், அதன் பாயிரத்திலுமாக மூன்றிடங்களில் இடம் பெற்றுளது.

''செந்தமிழ் நிலத்து''[1]

என்றும்,

---

14. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் பக். 92
1. தொல். 881.

''செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்''[2]

என்றும்,

''செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்''[3]

என்றும் ஆளப்பட்டுள்ளன.

1. 2 தமிழ் என்னும் மொழிப் பெயராலேயே நாட்டின் பெயர் வந்தது என்பதையும் இம் முச்சான்றுகளும் முட்டறத் தெளிவித்தல் அறியத் தக்கதாம். மொழியால் பெயர் பெற்ற நாடு, அம்மொழியைச் செம்மையுறக் காத்தற்குக் கடப்பாடுடையது என்பது உட்கிடை விளக்கமாம்.

1. 3 செம்மை என்பது பலபொருள் ஒருசொல், அழகு, ஒற்றுமை, சிவப்பு, செவ்வை, தூய்மை, நேர்மை, பெருமை, மனக்கோட்டமின்மை முதலாய செம் பொருள்களையே தருவது செம்மை.

1. 4 செங்கதிர், செங்கரும்பு, செங்கோல். செந்தண்மை, செந்தாமரை, செந்திறம், செந்தீ, செந்நீர், செப்பம், செம்பாதி, செம்பொருள், செம்மல், செம்மாப்பு, செய்யாள், செவ்வேள், செவ்வை என்பவை செம்மையால் சீர்த்தி மிக்கவையாம். எதிரிடையையும் இணையையும் வென்று ஏற்றங் கொண்டவையாம். இச்செம்மையடை தமிழுக்கு முதற்கண் வாய்த்தமை, அதன் செந்நடையையும் செவ்விதின் விளக்குவதாம்.

1. 5 செம்மையடை முற்பட வாய்த்ததன் முறைமை இயல் நெறிப்பட்டதாம். எதிரிடையும் முரணும் பிற்படத் தோன்று மேயன்றி முற்படத் தோன்றா. ஒழுக்கம் இழுக்கம்; நல்லது அல்லது; பொறுமை பொறாமை; வரவு செலவு; அன்பு வன்பு என்பவற்றை நோக்கின் இவ்வுண்மை புலப்படும். ''செங்கோல் கொடுங்கோல்'' என்பவை மிக வெளிப்பட விளக்கும்.

1. 6 தமிழ் செந்தமிழாய்த் திகழ்தற்குப் பாடுபட்டோர் ஓரிடத்தார் அல்லர்; ஒருகாலத்தார் அல்லர்; ஒருவர் இருவர் அல்லர்; மொழிப்பேரறிஞர்களின் ஒட்டுமொத்த அறிவுக் கொடையே மொழியும் அதன் செவ்விய தன்மையுமாம்.

## தொல்காப்பியச் செம்மை

2. 1 ஆசிரியர் தொல்காப்பியனார் ஒருவரின் அறிவுக் கொடையோ தொல்காப்பியம்? முந்தையோர் திறங்களை

---

2. ,, ௨௮௩    3. ,, பாயிரம்.

யும் நிகழ்கால அறிவர் திறங்களையும் உலகியல் கொடை வளத்தையும் ஒருங்கே பயன்படுத்திக் கொண்டல்லவோ தமிழ்கூறு நல்லுலகுக்குத் தம் படையலை வழங்கியுள்ளார்.

2. 2 தொல்காப்பிய எழுத்ததிகார முதலியலாம், நூன்மரபில் 33 நூற்பாக்கள் உள. அவற்றுள் 'என்ப' என்பதை மூன்றிடத்தும் (1, 3, 4) 'என்மனார் புலவர்' என்பதை ஈரிடத்தும் (6, 33), 'மொழிப' என்பதை நான்கிடத்தும் (8, 9, 11, 33) நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே என்பதை ஓரிடத்தும் (7) அவர் வழங்கியுள்ளமை நூல்வரு முறையை நுவல்வதேயாம்.

## தண்டமிழ்

2. 3 "இனிச் சங்கச் சான்றோர் தமிழுக்குப் புதியதோர் அடைதந்து வழங்கினர். அது 'தண்மை' என்பதாம். தண்டமிழ் எனப் பதிற்றுப்பத்தும் (63) பரிபாடலும் (9) புறமும் (35, 51, 198) வழங்கின.

2. 4 பயில்வார் உள்ளத்தைக் குளிரச் செய்தலால் தமிழ் 'தண்டமிழ்' ஆகியது. மொழி உள்ளங்குளிரச் செய்யுமோ? அன்னைமொழி குளிரச் செய்யாமல், வேறெம் மொழி குளிரச் செய்யும்? மொழியன்னையின் இளங்குழந்தைகள் அல்லரோ, அவ்வன்னை மொழிக்குரிய மாந்தர்கள் அனைவரும். தமிழ்த் தென்றல் திரு. வி. க. கூறுகிறார்:[4]

2. 5 தொல்லை நோய்க்கு மருந்துண்டோ? மருத்துவர் என்ன விடையிறுப்பாரோ அறிகிலேன். எனக்கொரு மருந்து துணை செய்து வருகிறது. அஃதென்னை? அஃது எனது தாய்மொழி; அமிழ்தினும் இனிய தாய்மொழி. என்போன்றோர்க் கென்று கலைகள் தோன்றினவோ என்று யான் அடிக்கடி நினைப்பதும் உண்டு.

2. 6 தொல்காப்பியனார், நக்கீரர், நல்லந்துவனார், திருவள்ளுவர், இளங்கோ, சாத்தனார், திருத்தக்கதேவர், மாணிக்க வாசகர், நம்மாழ்வார், சேக்கிழார், கம்பர், பரஞ்சோதியார் முதலிய தமிழ் மருத்துவர் யான்நூல் எழுதும் சிற்றறையிலும் வீற்றிருக்கின்றனர். அவர் முன்னே தொல்லை அணுகி எங்ஙனம் நோய் செய்யும்?

'அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்'

---

4. தமிழ். பக். 40.

"மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

இப்பாக்களின் சொல்லிலும் பொருளிலும் இரண்டுங் கலந்த ஒருமையிலும் ஒன்றித் திளைக்கும் மனம் எந்நிலை எய்தும்? அம்மனத்தைத் தொல்லைநோய் உறுத்துங் கொல்?[5]

3. 1 ''வாழ்வியலில் உள்ளத்தை வெதுப்பும் கேள்விகள் உண்டு; காட்சிகள் உண்டு; செயல்கள் உண்டு; ஆனால் வெய்யவையும் தண்ணியவாய் உளங்குளிரச் செய்யும் இயல்பு இலக்கியத்திற்கே உண்டு. ஆகலின் இலக்கணக் கட்டுக் கோப்பால் செந்தமிழ் ஆகிய தமிழ், இலக்கிய நயத்தால் தண்டமிழாகக் காட்சி வழங்கியது.

3.2 ''இலக்கியப்படைப்பாளிகள் யார்? இலக்கியப் பெருநுகர்வாளிகள் அல்லரோ! 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பியாய்த்' திகழ்பவர் இலக்கியக் காதலர் அல்லரோ! உணர்வாளர் தாமே, உணர்வோவியம் படைத்து உவகை யுறுத்துவர்! அவ்வகையால்தான் சங்கப்பாடல்களில் தமிழ், 'தண்டமிழ்' ஆகியது.

### வண்டமிழ்

3. 3 ''இனி, இளங்கோவடிகளார் காலம், தமிழின் பொற் காலம்! கலைமணம் கமழ்ந்த கவின்காலம்! மொழி, பயன் கலையாய்த் திகழ்ந்ததுடன் கவின் கலையாகவும் பெருக் கெடுத்த பெருமைமிகு காலம்! அவர்க்கு முன்னிருந்த கலை வல்லார் திறமெல்லாம் தட்டியெழுப்ப, அவர் கலைமா மணியாகத் திகழ்ந்த காலம். ஆகலின் தமிழ் புகழ்மிக்க அடைமொழிகள் சிலபெறுவதாயிறறு. அவை, 'வண்டமிழ்' (23:63) 'தென்றமிழ்' (27:5) 'அருந்தமிழ்' (27:189) என்பன வாம். 'முத்தமிழ்' என்பதும் சிலம்பு சொல்வதே. (நூற்சிறப்புப்பாயிரம்)

3. 4 "வளஞ்செறிந்தமையால் வண்டமிழ்; அருமையும் நயமும் அமைந்தமையால் அருந்தமிழ்; ஆனால், தென்றமிழ் என்பதன் பொருள் யாது?

---

5. திருக்குறள் விரிவுரை அணிந்துரை.

4. 1 ''வடநாட்டில் வழங்கிய மொழி வடமொழி; இது திசை பற்றித் தென்னாட்டவரால் வழங்கப் பெற்றதே யன்றி அம் மொழிக்குரியாரால் வைத்துக் கொள்ளப் பெற்ற பெயரன்றாம். தென்மொழி என்பதும், தென்றமிழ் என்பதும் தமிழரால் வழங்கப்படுவதேயன்றி வடநாட்ட வரால் வழங்கப் பெற்றது இல்லையாம். ஆதலால் 'தென் என்பது திசைப்பெயர் அன்று என முடிவு செய்யலாம். 'தென்றமிழ்' என்பதுபோல் வடதமிழ் என ஒன்று இல்லையே! தெற்குத்தெரு, வடக்குத்தெரு, தென்மலை என வருபவைதாமே திசைப்பெயர்! எனின், 'தென் என்பதன் பொருள் என்ன?

## தென்றமிழ்

4. 2 ''அழகு, வண்டு, தேன், இசை முதலிய பலபொருள்களை யுடையது தென் என்னும் சொல். இவற்றுள் வண் டொன்றும் நீங்க மற்றைப் பொருளெல்லாம் தமிழுக்குத் தகவாக அமைதல் கண்டு கொள்க. இவற்றுள் தேன் என்னும் இனிமைப் பொருட்டதாகக் கொள்ளல் தமிழ் என்பதற்கு அமைந்த பொருளுடன் உரிமை பூண்டதாம்.

5. 1 ''இளங்கோவடிகளார் காலத்திற்குப் பின்னர் 'ஆளுடைய பிள்ளையார்' தமிழ்ஞான சம்பந்தராகவே திகழ்ந்தார். அவர் பாடிய தேவாரத் திருப்பாடல்கள், 'தமிழ்கெழு விரகினன் தமிழ் செய் மாலை' யாகத் திகழ்ந்தது. அவர் பாடிய தேவாரத் திருப்பத்துகளின் இறுதியில் வரும் கடைகாப்புப் பாடல்களில் தமிழ் கொஞ்சிக் கொஞ்சிப் பாராட்டப் பெறு கின்றது. அத்துணை அடைமொழிகள் அமையத் தமிழைப் பாராட்டினோர் அரியர், தமிழியக்கம் கண்ட பாவேந்த தமிழ்க் காதல், தமிழ்ஞான சம்பந்தர் கடைகாப்பில் முருகி நின்றமை அவ்வடை மொழிகளாலே அறியக் கூடும்.

## ஆளுடைய பிள்ளையார் அருளிய அடைகள்

5. 2 ''முந்தையோர் தமிழுக்கு வழங்கிய அடைமொழிகளை முன்னரே கண்டுளோம். அவற்றையன்றியும் அவற்றைத் தழுவியும் ஞானசம்பந்தர் பதிகங்களில் வரும் அடை மொழி களின் அடைவு:

ஆரா அருந்தமிழ், இசைமலிதமிழ், இன்புறுந்தமிழ், இன்றமிழ், உருவாகும் ஒண்டமிழ், உரையார் தமிழ், ஏரினார் தமிழ், ஒண்டமிழ், ஒளிர்பூந்தமிழ், கலைமலி தமிழ்,

கலைவல தமிழ், குலமார் தமிழ்; குற்றமில் செந்தமிழ், குன்றாத் தமிழ், சங்கமலி செந்தமிழ், சந்தநிறை தண்டமிழ், சந்தமார் தமிழ், சந்தமார்ந் தழகாய தண்டமிழ், சந்த மாலைத் தமிழ், சந்தமின்றமிழ், சந்துலாந்தமிழ், சீர்மிகுத்த தமிழ், சீரின்மலி செந்தமிழ், செந்தண்டமிழ், செறிவண் டமிழ், சொல்லார் தமிழ், ஞாலமிக்க தண்டமிழ், ஞானத் தமிழ், தகைமலி தண்டமிழ், தவமல்கு தமிழ், தன்னார்வம் செய்தமிழ், திருநெறிய தமிழ், தூங்கில் தமிழ், தேனேரார் தமிழ், நல்லவாய வின்றமிழ், நலங்கொள் தமிழ், நற்றமிழ், நிகரில்லன தமிழ், படமலி தமிழ், பண்ணிய தமிழ், பண் ணாருந் தமிழ், பந்தமார் தமிழ், பரவார் தமிழ், பரவிய தமிழ், பலமிகு தமிழ், பாரினார் தமிழ், புகழ் நின்ற தமிழ், பேரியல் இன்றமிழ், மருவிய தமிழ், மறையிலங்கு தமிழ், மறைவளரும் தமிழ், முடிவிலின்றமிழ், முத்தமிழ், வளமார் தமிழ், விலையுடையருந்தமிழ் என்பன.

5. 3 ''இவ்வடைமொழிகளால் தமிழுக்கு இயல்பாய் அமைந்த அருமை, இசைமை, இளமை, இனிமை, எழின்மை, ஒளிமை, கலைமை, சீர்மை, செம்மை, செறிமை, தகைமை, தண்மை நன்மை, நெறிமை, புகழ்மை, மறைமை, மும்மை, மென்மை, வலிமை, வளமை, முதலியவையெல்லாம் அடைவே அறிந்து கொள்ளலாம்.

6. 1 ''ஆளுடைய பிள்ளையார் தேவாரத்தின் கடைக்காப்பு களில்இத்துணை அடைமொழிகள் உண்டு என்றால், பிறர் பாடல்களில் தமிழின் தகவு பாடப்படவில்லையோ?''

''தன்னேரில்லாத தமிழ்'' என்ற ஊற்றம் எத்துணை எத்துணை உணர்வாளர் உள்ளங்களிலெல்லாம் தோய்ந்து பெருக்கெடுத்திருக்கிறது! ''இருந்தமிழே உன்னால் இருந் தேன்; இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண் டேன்'' என்றாரும் இருந்தனரே! அவர் தமிழ்க் குழந் தையை எப்படிக் கொஞ்சுகிறார்! குலாவுகிறார்! அரவணைக்கிறார்! ''என்றுமுள தென்றமிழ்'' என்று இசைத்த கம்பர் தமிழ்க் காதலுக்கு அளவும் உண்டோ? மேலோட்டமாகக் கண்டாலும் எத்தனை எத்தனை அடை மொழிகளைப் புலமையாளர் வழங்கியுள்ளனர்.

6. 2 ''ஏழிசை இன்றமிழ், ஒண்டீந்தமிழ், சீர் மன்னு செந் தமிழ், செஞ்சொற்றமிழ், ஞாலமளந்த மேன்மைத் தமிழ், தண்ணார் தமிழ், தீந்தமிழ், துய்ய தமிழ், தூய தமிழ், தெய்வத் தமிழ், தென்னன் தமிழ், தேக்குறு தமிழ், தேமரு

தமிழ், நல்லிசைத் தமிழ், பண்ணியல் தமிழ், பண்பட்ட செந்தமிழ், பழுத்த செந்தமிழ், பூந்தமிழ், பொய்யாத் தமிழ், மூவாத் தமிழ், மேன்மைத் தமிழ், வியன் தமிழ் இன்னன இன்னன!''[6]

### தனித்தமிழ்

7. 1 தமிழ் குறித்த அடைகள் எனச் சுட்டியவற்றுள் 'தனித் தமிழ்' என ஒன்று இல்லையே என வினாவுதல் எழுவது இயற்கை. 'தனித் தமிழ்' என ஒன்று இல்லை என்றவரே 'தனித் தமிழ்' என்னும் ஓர் அடையும் நடையும் அருளினார்! அடுத்துவரும் 'இன்மையும் உண்மையும்' அதனை விளக்கும்.

# 4. இன்மையும் உண்மையும்

### இலது என்றலின் உளது

1. 1 ''இல்லதற்கு இல்லை பெயர்'' என்பது பழமொழி. 'ஆன்மா' என ஒன்று 'இல்லை' என்பார் உரையைக் கொண்டே 'உண்டு' எனத் தெளிவுறுத்தினார் மெய்கண்டார்.

1. 2 ''உளது, இலது என்றலின்'' என்பது மெய்கண்டார் வாக்கு.[1] இஃது (ஆன்மா) 'இலது என்றலின் உளது' என்பது பொருள் முறைச் சொன்னடை.

1. 3 'பாழ்' என வான் வெளியைக் குறிக்கின்றனர்.[2] வெளியாக இருத்தல் உண்மையால் தானே அதற்கொரு பெயர் வைத்தனர்? அவ்வாறே 'உயிர்' என ஒரு பொருள் உண்மையாக இருக்கும் போது அதனை 'இல்லை' என்று எப்படிச் சொல்லலாம்?

1. 4 இல்லை என்று ஒன்று சொல்லுமானால், அதனைச் சொன்னது எதுவோ, அதுவே உயிர் தானே! இல்லை என்று சொன்னதே உயிர் உள்ளது என்பதனை விளக்குகின்றது அன்றோ! இவ்வாறு உயிர் இல்லை என்பாரைக் கொண்டே உயிர் உண்மையை விளக்கினார் மெய்கண்டார். இவ்வாறே, 'தனித் தமிழ் என ஒன்று இல்லை' என்ற ஒருவரே 'தனித்தமிழ்' என்னும் பெயரைத் தந்தவராவார்.

### ஈசான தேசிகர்

2. 1 இலக்கண விளக்க நூலாசிரியராகிய வைத்திய நாத தேசிகரால் ''தொல்காப்பிய முதலிய நூல்களை எழுத்

6. தமிழ்—பக். 41—44.
1. சிவஞான 3. 2. பரிபா 3:77

தெள்ளணிப் படித்த சுவாமி நாத மூர்த்தி'' எனப் பாராட்டப் பட்ட சாமிநாத தேசிகரே அவர். ஈசான தேசிகர் என்பாரும் அவரே. இலக்கணக் கொத்து முதலிய நூல்களை இயற்றிய சாமிநாத தேசிகரா 'தனித்தமிழ் என ஒன்று இல்லை என்றார்' என ஐயுறுவர்.

2.2 ''சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை சங்கப் பாட்டு கொங்குவேண்மாக்கதை முதலியவற்றை நூலாகக் கருதாதவர் அவர். பத்துப்பாட்டு எட்டுத் தொகை பதினெண் கீழ்க் கணக்கு முதலிய இலக்கியங்களை ஒரு பொருளாக எண்ணிக் கற்பவர் வாணாளை வீணாளாகக் கழிப்பவராகக் கூறியவர் அவர். அன்றியும், ''பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழு மீன்கள் அப்பாலை விரும்பாது வேறு பல வற்றை விரும்புதல் போல அவரதியற்கை யென்க'' என உவமையால் தம் எரிவைக் காட்டியவர். இம்முதற் கோண லார் முற்றுங் கோணலார் ஆகாமல் என் செய்வார்?

## இலக்கணக் கொத்து

2.3 அவர் கூறும் பாயிரத்தின் ஒருபகுதி[3]:

வடமொழி இலக்கணம் சிலவகுத் தறிந்து
தொல்காப் பியத்தினும் தொல்காப் பியத்தினும்
அருகிக் கிடந்ததைப் பெருக உரைத்தனன்
வேறுவிதி நவமாய் விளம்பிலன் என்க;
தொல்காப் பியந்திரு வள்ளுவ ராதிநூல்
வடமொழி நியாயம் வந்தன சிலவே
தமிழின் நியாயம் தந்தன பலவால்
தமிழ் விதி வல்லராய் வடமொழி விதிசில
அறிந்தவர்க் கேயிந் நூலாம் என்க;
வட நூல் வழிகல வாதே தமிழைத்
தனியே நீர்தராத் தன்மை என்னெனின்
இலக்கணம் இலக்கியம் ஏது நிமித்தம்
சாத்திரம் சூத்திரம் தந்திர வுத்தி
பகுதி விகுதி பதமே பதார்த்தம்
ஆதி அந்தம் அகார மகாரம்
உதாரணம் மாத்திரை உவமை உருவகம்
விகற்பம் சந்தி விதியலங்காரம்
காலம் இலேசம் காரகம் ஞாபகம்
விசேடணம் விசேடியம் விகாரமதி காரம்
குணம் குணி யாதியாம் சொற்கோளன்றியும்
பிறிதின் இயைபின்மை நீக்குதல் பிறிதின்

3. இலக்கணக் கொத்து.

இசையபு நீக்குதல் என்னும் இலக்கணம்
முதலாப் பலவா மொழிபெயர் தனவும்
கொண்டனர் பண்டையர் உண்டோ இன்றோ
அன்றியும் தமிழ் நூற் களவிலை அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?
அன்றியும் ஐந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவே நாணுவர் அறிவுடை யோரே!
ஆகையால், யானும் அதுவே; அறிக.
வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக''

பாயிரம் இதன்மேலும் பதினெழு அடிகள் தொடர்கின்றது!

## ஐந்தெழுத்து

2. 4 ''தமிழ் நூற்கு அளவிலை; அவற்றுள், ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?'' என்று கூறுகின்றவர் மெய்யான தமிழுணர்வில் கூறிய தமிழ்ப் புலமையாளராக இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்?

2. 5 ''ஒன்றே யாயினும் தனித்தமிழ் படைப்பேன்'' எனப் படைக்கும் வீறு கொண்டிருப்பார்! ஆனால் தொல்காப்பியத்தை எழுத்தெண்ணிப் படித்தவர் எனப் பாராட்டுப் பெற்ற அவர், அப்படிப்பையெல்லாம் ஆழப்புதைத்து முள் வேலியால் மூடிவைத்து,

2. 6 ''ஐந்தெழுத்தாலொரு பாடை''
என்று எள்ளுகிறாரே! ''அகர முதல னகர இறுவாய் முப்பஃதென்ப''[4] என்னும் முதல் நூற்பாதானும் அவர்கட்கு முகங் காட்டாது போயிற்றோ! ''ஐந்தெழுத்தாலொரு மொழி'' என்று கூறவும் மாட்டாமல் ''பாடை'' கட்டுபவர், அவ்வெழுத் தெண்ணிக்கைச் சிறுமைக்காக அறிவுடையோர் நாணுவராம்; அவரும் அதற்காக நாணுகின்றாராம்! இவர் நாணி நிற்கும் நகையாட்டை நாம் அறிந்து கொள்ள வேண்டுமாம்!

2. 7 எப்படி ஐந்தெழுத்தால் ஒரு பாடை என அறுதியிட்டார்? வடமொழியில் இல்லாமல் தமிழில் மட்டுமே இருக்கும் எழுத்துகள் ற, ன, ழ, எ, ஒ என்பன.[5] இவ்வெழுத்துகளும் இவற்றின் வகைகளுமே வடமொழியில் இல்லாமையால் இவ்வெழுத்துகளையுடைய ஒரு மொழியை மொழியென்று சொல்லவே அறிவுடையர் நாணுவராம்? இவ்வெண்ணிக்கை

4. தொல். 1. 5. நன். 150

போடுகின்ற அழகே இவரைத் தெளிவாக இனம் காட்டுகின்றதே!

3. 1 ஆங்கிலத்தில் இருபத்தாறு எழுத்துகள் உள்ளன. அவற்றுள் G, J, Q, S, X, Z என்னும் ஆறு எழுத்துகளின் ஒலிகளே தமிழில் இல்லை. அதனைக் கொண்டு "ஆறெழுத்தால் ஒரு மொழி" என்று எவரேனும் கூறினால், அவர் மனநிலை, அறிவுநிலை என்பவை ஆராய்ச்சிக் குரியவை என்று சிறிதறிவினரும் சொல்லாமல் இருப்பரோ?

3. 2 தமிழ் மொழியில் இல்லாத எழுத்துகளே வடமொழி என ஒருவர் எண்ணினால், அது எவ்வாறு தவறாகுமோ அவ்வாறே வடமொழியில் இல்லாத எழுத்துகளே தமிழ் எழுத்துகள் என எண்ணுவதும் தவறாம். ஆனால், ஈசான தேசிகர் "வடநூலைவிட்டுத் தனியேதமிழ் நூல் நடவாதது நியமமே" என உரைநடையாக எழுதி அப்படி ஒருவேளை நடக்கத் தொடங்கினாலும் நடக்க விடுவேனா பார் என்று மடக்குவதற்கு வரிந்து கட்டிக் கொண்டிருக்கும் வல்லாளர் அல்லரோ! விட்டு வைப்பாரா?

### இன்மையின் உண்மை

3. 3 ஒருவியப்பு என்ன வென்றால், "ஒன்றே யாயினும் 'தனித்தமிழ்' உண்டோ?" என்னும் வினாவிலே அமைந்த 'தனித் தமிழ்' என்னும் தொடரே கொள்கைப் பெயராக இயக்கப் பெயராக அமைந்ததாம்.

4. 1 சில வேளைகளில் எதிரிடையாகச் சொல்லப்படும் சொல்லே நேரிடையாகச் சொல்லப்படும் சொல்லினும் பயனாக்கி விடுவது உண்டு. அவ்வகையில் அமைந்ததே ஈசான தேசிகரின் சொல்லாம்.

### வஞ்சினமும் வண்டமிழும்

4. 2 பகை வேந்தர்கள் இளையவன் இவனென உளையக் கூறிய"[6] சிறு சொல் தானே, பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனைத் தூண்டி, "அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசமொடொருங்கு" அகப்படுத்த ஏவியது!

4. 3 பகைவர் பழிப்புரை கேட்ட அளவில் நிகழ்ந்ததே, பாண்டியன் படையெடுப்பு! அவ்வாறோ, ஈசான தேசிகர் எள்ளலுக்கு மறுப்பு நிகழ்ந்தது எனின், அவர் ஒருவரைப் பழித்திருந்தால் அவர் சினந்தும் சீறியும் எழுந்திருப்பார்!

6. புறம். 72.

தேசிகர் எள்ளியதோ தமிழர்தம் பொதுப்பொருள்! பொதுப் பொருளைப் பற்றிப் பழிப்புரை எத்துணைவரினும் ''எவருக்கு வந்ததோ? எமக்கென்ன!'' என்று சொல்வதே இன்றைத் தமிழர் தம் நிலையாகவும் இருப்பதை நோக்க 'வடமொழியே தெய்வமொழி' என்று முழுதாகத் தமிழரும் ஏற்றுக் கொண்டிருந்த அற்றை நாளில், எவரே விழிப்புறு வார்? எதிர்த்தெழுவார்? உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே'[7] என்பதன்றோ தெளிவுரை!

4. 4 ஆயின் ஏறத்தாழ இருநூற்றைம்பது ஆண்டுகளின் பின்னே தோற்றிய தனித்தமிழ்க் கருத்து ஈசான தேசிகரின் எதிர்மறைத் தூண்டலால்தான் ஏற்பட்டது என்பதற்குச் சான்றுண்டா எனவினவலாம்! அவரினும் விஞ்சிய நிலையில் தூண்டியவர் உளர். அவர்தம் தூண்டலே மறைமலை யடிகளைக் கிளர்ந்தெழச் செய்தது. அதனை முறையே காண்டல் வேண்டும். ஆயின், 'தனித்தமிழ்' என்னும் சொல் லாட்சியை வழங்கியவர் ஈசான தேசிகரே என்பது வெளிப்படை.

# 5. கட்டும் காவலும்

## காவல் வகை

1. 1 கட்டும் காவலும், ஒன்றில் ஒன்று சிறப்பன; ஒன்றில் ஒன்று இன்றியமையாதன: கட்டு- அரண்; காவல்-காவற் படை; ஒன்று இருந்து ஒன்று இல்லாக்கால் நிரம்பாது என்க.

1. 2 கரையும் காவலும், இயற்கை நெறிப்பட்டவை. கட்டும் காவலும், செயற்கைச் செம்மை வழிப்பட்டவை.

1. 3 கரையும் கட்டும் இயற்கை யரணும் செயற்கை அரணும் போன்றவை. முன்னது மொழியின் இயற்கையமைதி சார்ந்தது; பின்னது அவ்வியற்கையமைதியைப் போற்றிக் காக்கும் வகையான் அறிவறிந்த பெருமக்களால் மதி நுட்பத் தோடு அமைக்கப் பெற்றது.

2.1 தொல்காப்பியர் மொழிச் செம்மையாம் தூய்மை கருதி அந்நாளில் கலந்த வடமொழி நோக்கி, அம்மொழிச் சொற்கள் கலக்குமானால் தமிழியல்புக்கு ஏற்பக் கலக்க

---

7. தொல். 876.

வேண்டும் என்று அறுதியிட்டுக் கூறினார்[1] அதை அவரும் மெய்ப்பித்தார். அவர் வழி வந்தவர்களும் கடைப்பிடியாகக் கொண்டனர்.

**காவல் நூல்**

2. 2 தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 483 நூற்பாக்களில் 991 அடிகளால் இயல்கின்றது. இதனுள் ஒருசொல் தானும் வடசொல் இல்லை.

2. 3 சொல்லதிகாரம் 463 நூற்பாக்களில் 1056 அடிகளால் இயல்கின்றது. இதனுள்ளும் வடசொல் ஒன்றுதானும் இல்லை.

2. 4 பொருளதிகாரம் 664 நூற்பாக்களில் 1967 அடிகளால் இயல்கின்றது. இப் பொருளதிகாரத்துள் வடசொற்கள் உண்டு. அவைதாம் எத்தனை?

**கலந்த வடசொல்**

2. 5 கரகம் (1570), காண்டிகை (1603), ஞாபகம் (1610) சாதி (1563), சூத்திரம் (1425) மூதானந்தம் (1025) வைசிகன் (1578) என்பனவே. இவற்றுள்ளும் மூதானந்தம் இருபிறப்பியாம். மூது, தமிழ்; ஆனந்தம், வடமொழி.

2. 6 இவ்வடமொழிச் சொற்களில் பெரும்பாலனவும் இடம் பெற்றுள்ள இடம் மரபியல். அவ்வியலிலேதான், இடைச் செருகல், கடைச் செருகல், உருத்திரித்தல் இடம் பெயர்த்தல் இன்னவெல்லாம் இயைந்து, 'எழுதியவன் ஏட்டைக் கெடுத்தான்; படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்னும் பழமொழிக்குத் தோற்று களம் ஏற்பட்டது என்க

**சங்க நூலில் காவல் திறம்**

3. 1 சங்கச் சான்றோர் இயற்றிய நூல்களில் கலியும் பரிபாட்டும் வடசொற்கள் நிரம்பியவை என்றும், வடமொழித் தொன்மக் குறிப்புகள் (புராணக் குறிப்புகள்) நிரம்பியவை என்றும் சொல்லப்படுகின்றன. இஃதுண்மையாயினும் அவர்கள் கட்டுமீறாக் கடப்பாட்டை ஏற்றுக், காவல் திறம் பூண்டமையும் அறியவராமல் இல்லை.

3. 2 'கிரௌஞ்சம்' என்றும் 'கௌஞ்சம்' என்றும் சொல்லப்படுவதொரு மலை. அம் மலையை முருகன் கைவேல் துளைத்தது என்பது தொன்மச் செய்தி.

1. தொல். 884.

3. 3 'கிரௌஞ்சம்' என்னும் சொல் வடமொழிச் சொல் எனினும், தமிழ் எழுத்தால் எழுதக் கூடியதே. எழுத்தைக் கலக்க வேண்டிய கட்டாயம் இல்லை. இருந்தும், அம்மலையின் பெயரை அவ்வாறே கூறாமல் ''குருகொடு பெயர் பெற்ற மால்வரை'' என்கிறது பரிபாடல்.[2]

3. 4 இதற்கு உரைவரையும் பரிமேலழகர் ''ஈண்டுக் குரு கென்றது அன்றிலை. அதற்கு வடமொழிப் பெயர் அதுவாதலின், 'குருகொடு பெயர் பெற்ற மால்வரை' என்றார்'' என்கிறார்.

3. 5 இன்னொரு பாடலில், இதே மலையைப் ''புள்ளொடு பெயரிய பொருப்பு'' என்கிறார். 'புள் - அன்றில்' என்கிறது உரை.[3]

இப்பரிபாடலின் ஆட்சியில் தோய்ந்தமையால் பிறர் பிறரும் 'குருகு பெயர்க் குன்றம்' என்றே வழங்கினர்.[4]

3. 6 இதே பரிபாடலில் 'சமாதி' என்னும் வடசொல் இடம் பெற வேண்டிய இடம். இச் சொல்லை எழுதுவதால் தமிழ் மரபு கெடுதல் இல்லை. எனினும், இப்படியே வழங்காராய் இதன் பொருள் விளங்க 'நொசிப்பு' என ஆள்கிறார் ஆசிரியர்[5] இதற்கு உரைகூறும் பரிமேலழகர் ''மனத்தினை ஒன்றாக்கி நுண்ணிதாகக் காண்டலாதலிற் சமாதி, 'நொசிப்பு' எனப்பட்டது என்கிறார்.

## அறிதுயில்

3. 7 'யோக நித்திரை' என்பதொரு வடசொற்றொடர். இதனை 'யோகஉறக்கம்' என வடமொழியும் தமிழும் கலந்த தொடராகச் சொல்வதும் உண்டு. இத்தொடரை இவ்விருவகைகளுள் எவ்வகையாகக் கூறினும் தமிழின் எழுத்தியல் கேடு இல்லை; எழுத்தொடு புணர்ந்த சொல்லாகவே இருக்கும். எனினும் இத்தொடரைப் பரிபாடல் 'அறிதுயில்' என அருமையாகச் சொல்கின்றது.[6] யோக உறக்கமாதலால் 'அறிதுயில்' எனப்பட்டது என்கின்றது இதன் உரை.

3. 8 'யோக நித்திரை' 'அறிதுயில்' என ஆளப்பெற்றிருந்தும் வில்லியார், ''சந்திரன் ஒடுங்கி நிற்பத் தபனனே சரிக்கு

2. பரிபா. 5:9
3. ,, 21:9
4. சிலப். 24: 10, 12
மணிமே. 5; 13
5. பரிபா. 5:37
6. பரிபா. 13:29

மாறு, பந்தனையிலாதான் யோகத், துயில்வரப்பள்ளி கொண்டான்'' என்றார்.[7]

3. 9 மறைமலை யடிகளார் ''யோக நித்திரை அல்லது அறிதுயில்'' என ஒரு நூல் இயற்றியது தமிழறிஞர் அறிந்ததே. அதில், ''யோக நித்திரை என்னுஞ் சொற்கள் வடமொழிக்கு உரியவை. இந்தச் சொற்களினால் திருமால் செய்தருளும் துயில், அறிவொடு கூடிய தென்பது தெளிவாக விளங்காவிடினும், இவற்றிற்கு நேராக வழங்கும் 'அறிதுயில்' என்னுஞ் செந்தமிழ்ச் சொற்கள், அத்தூக்கம் நிகழ்வது என்பதனைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன; பழைய தமிழ்ப் புலவரும் அரவணைப் பள்ளியில் அறிதுயில் அமர்ந்த என்று பாடியிருக்கின்றனர். ஆகவே யோக நித்திரை என்னும் வடசொற்களைக் காட்டினும், அறிதுயில் என்னும் தமிழ்ச் சொற்கள் பொருள் விளங்கக் காட்டினும், அவ்வடசொற்கள் மிகுதியும் வழக்கத்தில் வந்து விட்டமை யால் அவற்றையே இவ்வரிய பொருளுக்குத் தலைப் பெயராக வைக்கலாயிற்று. அங்ஙனம் அவற்றைத் தலைப் பெயராக வைக்க நேர்ந்தாலும், இஃது இனிது விளங்கு தற்காக 'அறிதுயில்' என்னுந்தமிழ்ச் சொற்களையே இதன்கண் அடிக்கடி எடுத்து ஆளுவேம்'![8] என்று எழுதியுள்ளமை அறியத்தக்கதாம்.

## பின்னோர் காவல்

4. 1 நாள்கள் கோள்கள் ஆகியவற்றின்பெயர்கள் தமிழிலேயே இருந்தமையும், பின்னர் வடமொழிப் புகவால் தம் தமிழ்ப் பெயரை இழந்தமையும் பழஞ் சான்றுகளால் அறிய முடிகின்றது.

4. 2 'ஆடியல் அழற் குட்டம்' என்னும் புறநானூற்றிலும்,[9] விரிகதிர்மதியம்'' என்னும் பரிபாடலிலும்,[10] சிலப்பதிகாரக் கட்டுரை காதையிலும் இதற்குச் சான்றுகள் பலவுள. 'மேடம்' ஆடு எனவும் 'கார்த்திகை' அழற்குட்டம் எனவும், 'அனுடம்' முடப்பனை எனவும், 'புனர் பூசம்' 'குளம்' எனவும் அவற்றின் பொருள் விளங்க அமைந்திருந்தமை அறிய வருகின்றது.''[11] 'நக்ஷத்திரம்' 'நட்சத்திரம்' என இக்காலத் தில் இருவகையாக எழுதப்படுவது, புறநானூற்று உரை

7. வில்லி. வாசுதேவ. 8.
8. அறிதுயில் பக். 2-3.
9. பாடல் 229.
10. ,, 11.
11. ௸

க்காரரால் 'நக்கத்திரம்' என எழுதப்பட்டுள்ளமை அறியத் தக்கதாம்.[12]

## மொழியாக்கப் பெயர்ப்பு

5. 1 இனி வாசுதேவன், சங்கருடன், பிரத்யும்நன், அநிருத்தல், பிரமன் முதலிய வடமொழிப் பெயர்கள் முறையே செங்கட்காரி, கருங்கண்வெள்ளை, பொன்கட்பச்சை பைங்கண்மால், வாய்மொழிமகன் எனவழங்கப் பெற்றமை மொழிநலம் காத்தலில் முந்தையோர் காட்டிய உறுதியை வெளிப்படுத்துவனவாம்.[13]

5. 2 திருதராட்டிரனையும் துரியோதனனையும் கூறும் கலித்தொகை ''வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற முகத்தவன் மக்களுள் முதியவன்'' என்கின்றது.[14] மேலும் துரியோதனனை, ''நூற்றுவர்' தலைவன்'' என்றும்,[15] இராவணனை ''ஐயிருதலையின் அரக்கர் கோமான்'' என்றும்,[16] பலதேவனை ''கொடுமிடல் நாஞ்சிலான்'' என்றும்,[17] வீமனை ''வளிமகன், [18] என்றும் குறிக்கின்றது. மேலும், ''இகன்மிகு நேமியான்''[19] ''ஞாலமூன்றடித்தாய முதல்வன்''[20] ''பாலன்ன மேனியான்''[21] ''படைத்தான்''[22] மல்லரை மறஞ்சாய்த்தான்''[23] எனவும் கலித்தொகை பெருக வழங்குகின்றது.

## கம்பர் திறம்

6. 1 வேற்றுமொழிச் சொற்களை இவ்வாறு தமிழ்ப்படுத்தி வழங்கும் வழக்கம் கம்பர் காலமளவும் கூடத் தொடர்ந்தது. விசுவகன்மாவைக் 'கடவுட்டச்சன்'[24] என்கிறார்; இரணியனைப் 'பொற்கணான்'[25] என்கிறார்; ஏமகூடத்தைப் 'பொற்கூடம்'[26] எனவும், பீதாம்பரத்தைப் 'பொற்கலை'[27] எனவும் வழங்குகிறார்.

6. 2 கோசிகன், கோசலை, கோதமன் என்னும் தமிழ் வழக்குகள், கௌசிகன், கௌசலா (கௌசல்யா)

---

12. பாடல். 229.
13. பரிபா. 3.
14. கலி. 25.
15. கலி. 52
16. ,, 38
17. ,, 36
18. ,, 52
19. ,, 119
20. ,, 124
21. ,, 124
22. ,, 129.
23. ,, 134.
24. சுந். 1181.
25. சுந். 458.
26. உயுத். 2679.
27. ஆரணி. 246

கௌதமன் என்னும் வடமொழிப் பெயர்க்கு ஆக்கிக் கொண்டவையாம். தசரதனைத் 'தயரதன்' எனவும், தசமுகனைத் 'தயமுகன்' எனவும் வழங்கவும் ஏலிற்று.

6. 3 ஜடாயு, ஜனகன் ஜானகி, விபூஷணன் வஸிஸ்டர் முதலாய பெயர்கள் சடாயு,[28] சனகன்,[29] சனகி,[30] வீடணன்,[31] வசிட்டன்[32] எனத் தமிழ் நெறி தவறாமல் ஆக்கிப் போற்றிக் கொள்ளப் பட்டன.

6. 4 ய, ர, ல, என்னும் எழுத்துகள் சொல்லின் முதல் வாராமை தமிழ்நெறி. அந்நெறியை அழுத்தமாகக் கடைப் பிடித்த கம்பர் யுத்தகாண்டம் என்பதை 'உயுத்த காண்டம்' என்றே வழங்கினார்.

''ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்
லவ்விற் கிம்முதல் இரண்டும் யவ்விற்
கிய்யும் மொழிமுத லாகிமுன் வருமே''

என்னும் நூற்பாவின் படி[33] யகர முதன் மொழிக்கு இகரமே முதலாம் என்றதை விரித்து உகரமும் முதலாமெனக் கொண்டார். (எ-டு) யக்கன் — இயக்கன் } இகரம்
யமன் — இயமன்
யுத்தம் — உயுத்தம் — உகரம்.

6. 5 ரவ்விற்கு அ, இ, உ என்னும் முக்குறிலை முற்கொண்டு வழங்கினார்:

(எ-டு) ரம்பா — அரம்பை[34] } அ
ரம்யம் — அரமியம்[35]
ரணம் — இரணம்[36] } இ
ராமன் — இராமன்[37]
ரோதனம் — உரோதனம்[38] } உ
ரோமபதன் — உரோமபதன்[39]

6. 6 லவ்விற்கு இ, உ என்னும் இருகுறிலையும் முற்கொண்டு வைத்தார்:

(எ-டு) லக்ஷ்மணன் — இலக்குவன்[40] } இ
லங்கா — இலங்கை[41]

28. ஆரணி. 206.
29. பால. 1202.
30. அயோத். 40.
31. பால. 256.
32. சுந். 381.
33. நன். 148.
34. பால. 487.
35. சுந். 1056.
36. உயுக். 1818.
37. பால. 299.
38. உயுத். 3145.
39. பால. 215.
40. பால. 301.
41. ஆரண். 603.

லோகம் — உலோகம்[42] } உ
லோபம் — உலோபம்[43] }

## வில்லியார்

7. 1 கம்பருக்குப் பின்னர் வந்து வடமொழிச்சொற்களைப் பெருவாரியாகச் செறித்துப் பாடியவர் வில்லிபுத்தூரார். அவர் தாமும் 'கிருஷ்ணனை'க் 'கண்ணன்' எனப் பெயர்த்ததுடன் 'கிருஷ்ணன் தூது' எனக்கூறு மிடத்தும் கிருட்டிணன் தூது' என வடமொழி எழுத்துச் சேர்க்காமலேதான் கூறினார். ஆட்பெயர் ஊர்ப்பெயர் முதலியவற்றிலும் தமிழியல் தழுவியே நின்றார். சொற் கலப்புக்கு ஆட்பட்ட அவரும் எழுத்துக் கலப்புச் செய்திலர் என்க!

(எ-டு) நகுஷன் — நகுடன்[44]
ஹஸ்தினாபுரி — அத்தினாபுரி[45]

8. 1 அவரினும் மிகுதியாக வடசொற்களைப் பெய்து பாடியவர் அருணகிரியார். ஈடும் எடுப்புமற்ற வண்ணங்களைப்பாடி அவ்வண்ணக் களஞ்சியமாகவே திகழ்ந்த அவர் தாமும் வ ட மொ ழி எழுத்துகளைச் செறித்தாரல்லர். பதிப்பாசிரியர் செயல்களாலேயே வடமொழியெழுத்துகள் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது.

## அருணகிரியார்

8. 2. பட்சி, பூசித, பூசண பூசை, சோதி, ராச, கசானன் என்பனவே ஏடு பெயர்த்து எழுதினோரால் பக்ஷி,[46] பூஜித,[47] பூஷண,[48] பூஜை,[49] ஜோதி,[50] ராஜ,[51] கஜானன்[52] என மாற்றுருக் கொண்டிருக்க வேண்டும்.

8. 3. தமிழ் மரபுக்கு விலக்காக உக்ரம்,[53] சம்ப்ரமம்,[54] சம்ப்ரதாயம,[55] இந்த்ரலோகம்[56] என்னும் நடையை ஆள்கின்றார். இவை உக்கிரம், சம்பிரமம், சம்பிரதாயம், இந்திரலோகம்

42. உயுத். 2909.
43. பால. 450.
44. ஆதி. குரு. 14.
45. ஷை 29
46. திருப். 3.
47. ,, 45.
48. ,, 56.
49. ,, 11.
50. திருப். 101.
51. ,, 101
52. ,, 18
53. ,, 3.
54. ,, 4
55. ,, 12
56. ,, 12

என எழுத்து நடைபெறுவதே தமிழியல்பாம் என்பது வெளிப்பட்டை.

8. 4 இனி, மொழி முதலாக மெய் நிற்றல் தமிழ் வழக்கில்லை உயிர்மெய் நிற்றல் உண்டேயன்றித் தனிமெய் நிற்றல் இல்லை. ஆனால், அருணகிரியார் வாக்கில், க்ரவுஞ்சம்,[57] ம்ருகதம்,[58] ப்ரபை,[59] ப்ரம்மரம்[60] என்பவை இடம் பெற்றுள.

8. 5 கிரௌஞ்சம் என்று எழுத்தியல் போற்றிக் கூறவும் விரும்பாமல், 'குருகுபெயர்க் குன்றம், என்ற பண்டை நிலையையும், கிரௌஞ்சம் என்றும் கூறாமல் 'க்ரவுஞ்சம்' எனக் கூறிய பிற்றை நிலையையும் எண்ணிப் பார்த்தல் மொழியியலில் நேர்ந்த 'கடுஞ்சறுக்கல்' நன்கு தெளிவாகும். கிரவுஞ்சம், மிருகதம், பிரபை, பிரமரம் என இவற்றை வழங்கின் தமிழாக்கம் இன்றேனும், தமிழொலியாக்கமேனும் அமைந்திருக்கும். அருணகிரியார் எடுத்துக்கொண்ட வண்ணப்பாடல் அமைப்புடன், அவர்க்குத்தனித்தமிழிலேயே பாடவேண்டும் என்னும் எண்ணம் அரும்பாமையும் கரணியங்களாம். ஏனெனில், அப்படி அவர்க்கு அரும்பியிருப்பின், அவரால் படைக்கமுடியாத அமைப்பு ஒன்று இருக்க முடியாது என்பதை அவர்தம் பாடல்களே காட்டுகின்றன,

## குமரகுருபரர்

9. 1 அருணகிரியார்க்குப் பின்னே வந்தவர்களுள், ஆளுடைய பிள்ளையார் போலத் தமிழைக் கொஞ்சிக் கொஞ்சிப் பாடியவர் குமர குருபர அடிகளார். மூச்சுக் காற்றுடன் முத்தமிழும் பிறந்தது என்றும் கூறவிரும்பாமல் முத்தமிழொடும் மூச்சுக் காற்றுப் பிறந்தது என்பவர். இதனைத், ''தென்னந் தமிழின் உடன்பிறந்த சிறுகால்''[61] என்பதால் கூறுவார். அவர்கட்கு முன்னர் எவரும் கூறாத வகையிலும், பின்னர்ப் பாடுவார் தேடியெடுத்துப் போற்றிக் கொள்ளும் வகையிலும்,

''முதற்சங்கத்
தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியும்
தண்டேன் நறையும் வடித்தெடுத்த
சாரங் கனிந்தூற் றிருந்தபசுந் தமிழ்''[62]

எனப் பாடியவர். அவர் காலத்தில் உருதுச் சொற்கள் கலந்தன. அச்சொற் கலப்பு அவர் பாடல்களில் அரிதாக இடம் பெறலாயிற்று.

---

57. ,, 12
58. ,, 148
59. ,, 26
60. ,, 151
61. குமர. பிர. 24.
62. ஷை. 393.

"குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு
குமரனைமுத்துக் குமரனைப் போற்றுதும்"[63]

என்றும்,

"கட்களி றுதவு கபாய்மிசைப் போர்த்தவள்"[64]

"கம்பக் கரடக் களிற்றின் கபாய் அணிந்த"[65]

என்றும்.

"கொற்கைத் துறையிற் றுறைவாணர்
குளிக்குஞ் சலாபக் குவான்முத்தும்"[66]

என்றும் சலாம், கபாய், சலாபம் என்னும் சொற்களைப் பயன்படுத்தினார். முறையே வணக்கம், சட்டை, முத்துக் குளித்தல் என்னும் பொருள்தரும் இச்சொற்கள் வேற்றுச் சொற்களே எனினும் தமிழியற்படியே அவரால் ஆளப் பெற்றனவாம். எனினும் வடமொழியுடன் பிறமொழி புகுதலுக்கும் இவ்வாட்சி சான்றாயிற்றாம்.

## காளமேகர்

10. 1 "ஏமிரா வோரி என்பாள் எந்துண்டி வஸ்தி என்பாள்"[67] எனவரும் தனிப்பாடலும்,

"மைடியர் பிரதரே எங்கள் மதருக்குக் கூந்தல் நீளம்
ஐடிலா யவளுந் தூங்க அறுத்ததை விற்று நானும்
ஸைடிலோர் லேடி யாகச் சட்காவில் ஏறிக் கொண்டே
ஒய்டான ரோட்டின் மீதில் உல்லாசமாகப்
போனேன்"[68]

என வரும் பிரதாப சந்திர விலாச நாடகப் பாட்டும் தமிழ் தன் "கட்டும்காவலும்" இழந்து கொண்டு இறங்கிவந்த தற்குச் சான்றுகளாம்.

11. 1 அதே பொழுதில் ஆங்கிலம் முதலிய மேனாட்டு மொழி வல்லார் செய்த தமிழ்த்தொண்டு கருதத் தக்கதாம்.

## வீரமாமுனிவர்

'கான்ஸ்டான்சியுஸ் ஜோசப் பெஸ்கி' என்னும் பெயருடன் தமிழகம் வந்தவர் வடமொழிப் புலமை பெற்ற காலையில் தைரிய நாதராகவும், தமிழ்ப் புலமை பெற்ற நிலையில் வீரமாமுனிவராகவும் திகழ்ந்தமையே அவர்தம் மொழியியல் தகைமையை வெளிப்படுத்தும்.

---

63. ,, 6.
64. ,, 12.
65. ,, 505.
66. ,, 48.
67. காளமேகர் பாடல்.
68. இராமசாமிராசு பாடல்-

'ஜோசப்பு' என்னும் பெயரை 'யோசேப்பு' என்றும் 'சூஸை' என்றும் வழங்குவார் வழங்க, பொருள் நுட்பம் தெரிவிக்கு முகத்தானும் தமிழியல் காக்கும் தகவானும் ''வளன்'' எனக் கண்டவர் தமிழ் வீரமாமுனிவர்.[69]

11. 2 பிலிஸ்தியர், டேவிட் முதலாய பெயர்களைப் பிலித்தையர்,[70] தாவிதன்[71] முதலியவாக மாற்றி வழிகாட்டியவரும் அம்முனிவரேயாவர். பன்மொழிப் புலமை வாய்ந்த அவர், தமிழின் நீர்மை தவறா வகையில் செய்துள்ள பணிகள் தமிழர் தலைதாழ்ந்து வணங்கிப் போற்றத்தக்கவையாம். 1680-1747 என்னும் கால நிலையில் வாழ்ந்த அவர் தமிழ் நெடுங்கணக்கில் வாராத எந்தவோர் எழுத்தையும் 3615 பாடல்களால் இயற்றப்பட்ட தேம்பாவணி நூல் முதலிய பாடல் நூல்களில் சேர்த்துப் பாடினார் அல்லர் என்பது மொழிநலம் கருதுவார் கருதத் தக்க செய்தியாம்.

## உமறுப் புலவர்

12. 1 இனி, உமறுப் புலவர் இயற்றிய சீறாப் புராணம் தமிழ் மண்ணின் தகவோடு வெளிப்பட்ட நூலே. காவிய நயம் கனிந்து ஊற்றெடுப்பதாக அமைந்தது. எனினும் அதில் வரும் சிறப்புப் பெயர்கள், சமய ஆட்சிச் சொற்கள் வேற்று மணம் உடையவையாகலின் அவற்றைத் தமிழ் மணமாக்கப் புலவர் படும்பாடு தெளிவாகவே புலப்படுகின்றது. இசுமாயில்,[72] கருபா,[73] அகுமது[74] என்பவை எடுத்துக்காட்டாம். எனினும் றஜபு,[75] கஸ்தூரி,[76] ஜமுறத்துல் உஸ்தா,[77] ஷைத்தான்,[78] ஜிபுறயீல்,[79] இறஹ்மத்து[80] என்பவற்றை அப்படியே அமைத்து விடுகிறார்.

## வள்ளலார்

13. 1 தனித்தமிழ்த் தோற்றத்திற்கு நேர் தூண்டலாக அமைந்தது வள்ளலார் பாடல். அவர் பாடிய பாடல்களுள் ஒன்று திருவடிப் புகழ்ச்சி. அது, இருநூற்றிருபத்துநான்கு சீர்க் கழிநெடிலடியாசிரியத்தான் அமைந்தது.

---

69. தேம்பா. பாலமாட். 66.
70. ,, வளன் 9.
71. ,, 18.
72. நபியவ 34.
73. ,, 69.
74. ,, 86.
75. ,, 16.
76. ,, 88.
77. ,, 90.
78. ,, 96.
79. ,, 98.
80. ,, 102.

பரசிவம் சின்மயம் பூரணம் சிவபோக
பாக்கியம் பரம நிதியம்
பரசுகம் தன்மயம் சச்சிதா னந்தமெய்ப்
பரம ஏகாந்த நிலையம்
பரமஞானம் பரம சத்துவ மகத்துவம்
பரம கைவல்ய நிமலம்
பரம தத்துவ நிரதிசய நிட்களம் பூத
பௌதிகா தார நிபுணம்

இது திருவடிப் புகழ்ச்சியின் முதலடி ஒன்றின் அரைக்கால் அடி. இதுவே பாடல் தொடக்கம்.

எண்ணுறிற் பாலில்நறு நெய்யொடு சருக்கரை
இசைந்தென இனிக்கும் பதம்
ஏற்ற முக்கனி பாகுகன்னல் கற்கண்டு
தேனென்ன மதுரிக் கும்பதம்
எங்கள்பதம் எங்கள்பதம் என்று சமயத்தேவர்
இசைவழக் கிடுநற்பதம்
ஈறிலாப்பதம் எலாந்தரு திருப் பதம் அழிவில்
இன்புதவு கின்ற பதமே.

இது திருவடிப் புகழ்ச்சியின் ஈற்றடி ஒன்றின் அரைக்கால் அடி. இதுவே பாடல் முடிநிலை.

13. 2 ஒருவர் பாடிய ஒருபாட்டின் முற்பகுதியும் பிற்பகுதியும் எப்படி அமைந்துள? ஏன் இப்படி அமைந்துள்ளன? நூற்று இருபத்தெட்டு அடிகளையுடைய இப்பாடலில் முதல் முப்பத் திரண்டு அடிகள் வடமொழிச் சொற்கள் நிரம்பியன. இடையில் உள்ள அறுபத்து நான்கு அடிகள் வடசொற்களும் தமிழ்ச் சொற்களும் கலந்தமைந்தன. இறுதியில் உள்ள முப்பத்திரண்டு அடிகளோ தென்தமிழ்ச் சொற்கள் நிரம்பி, தமிழில் தனி இனிமை பயப்பன.[81]

13. 3 அடிகளாரால் வடமொழிச் சொல்லாலேயே பாடல் இயற்ற முடியும்! வடமொழிச் சொல்லும் தமிழ்மொழிச் சொல்லும் கலந்து பாடல் இயற்றவும் முடியும்! வட மொழியை விலக்கித் தனித் தமிழிலேயே பாடவும் முடியும். என்பதை விளக்கும் சான்று இது!

13. 4 அடிகளார் உள்ளம், தமிழிலேயே பாடுதல் என்னும் குறிப்பொடும் ஊன்றியிருக்குமெனின், மறைமலையடிகள்

81 முதல் திருமுறை, பாயிரம். 14. ஆ. பா. பதிப்பு.

தனித்தமிழ்க் கொள்கையின் தோற்றுநராக அமையாராய்த் தொண்டராக அமைந்திருக்க நேர்ந்திருக்கும்! அவர்க்கு அத் தலைமை வாய்ந்திருக்க, மற்றவர்களால் தட்டிப் பறித்துக் கொள்ள வாய்த்திருக்காதன்றோ!

# 6. காவலரும் கரையுடைப்பும்

## இலக்கணர்

1. 1 மொழிக்குக் கரையாவது இலக்கணம் என அறிந்தோம். அவ்வாறானால் இலக்கணரே மொழிக் காவலர் என்பது தெளிவு. மொழிக் காவலராம் இலக்கணரே மொழிச் சிதைவுக்கு வழிவகுத்துத் தருவது எத்தகையது? கரை காவலுக்கு இருந்தவரே, கரையை உடைத்து விட்டவராதற்கு ஒப்பாகக் கூறக் கூடியவராம்.

1. 2 சிற்றுடைப்பு பேருடைப்பாகத், தானே ஆகிவிடுமே! பிறகு அவ்வுடைப்பைச் சீர் செய்வது எப்படி? ஏற்பட்ட அழிவுகளை ஈடு செய்வது எப்படி? சிறிய தீமைக்கோ அழிவுக்கோ இடம் தருவது முதற்கண் எளிதாகவும் பொருட்டாக எண்ணக் கூடாததாகவும் இருக்கலாம்! ஆனால் பின் விளைவு?

## முள்மரம்

1. 3 முளைக்கும் போதே முள்மரத்தைக்கிள்ளி எறிந்து விடு! இல்லையானால் கோடரி கொண்டு வெட்டுபவன் கையையும் ஒரு பார்வை பார்க்கும்[1] என்று வள்ளுவர் உரைத்தது எவ்வளவு கருத்துடையது! தனி மனித வாழ்வுக்குரிய அக் கட்டளை மொழிவாழ்வுக்கும் போற்றிக் கொள்ளத் தக்கதேயன்றோ!

## முதற்குற்றம்

1. 4 வடமொழி எழுத்து தமிழ் மரபுப்படிதான் உள்ளே புகலாம் என்று தொல்காப்பியர் வழிவகுத்து வைத்ததே குற்றம் என்று குறிப்பார் மொழி ஞாயிறு பாவாணர். அவ்வாறாகவும், அத்தொல்காப்பியர் விலக்குத் தந்த அவ்வளவைப் பற்றிக்கொண்டு, ஊசியின் காதில் ஒட்டகத்தை நுழைப்பதுபோல் நுழைத்து விட்டனர் பிற்கால இலக்கணியர்.

---

1. திருக், 879.

1. 5 'ஈசானதேசிகர் ஐந்தெழுத்தாலொரு பாடை' என்று கூறி னார் என்றால் அவரை அவ்வாறு கூறவைத்தவர்களும் இருப்பார்கள் அல்லரோ! அவர்களே அவர்க்கு முந்தை இலக்கணர்கள்.

### நேமிநாதம்

2. 1 நேமிநாதம் குணவீரபண்டிதரால் இயற்றப்பட்டது. அதில் வடமொழி தமிழில் ஆகும் வகை இரண்டு வெண்பாக்களால் சொல்லப்படுகின்றன[2] அருக சமயத்தார் ஆருகதர் ஆதற்கும், தசரதன் மகன் தாசரதி ஆதற்கும் சிவனடியார் சைவர் ஆதற்கும், புத்த சமயத்தார் பௌத்தராதற்கும் இருடிகளால் ஆக்கப்பட்டது ஆரிடம் ஆதற்கும், நரனும் இந்திரனும் நரேந்திரன் ஆதற்கும், குலம் உத்துங்கன் என்பவைகூடிக் குலோத்துங்கன் ஆதற்கும் விதிகாட்டுகின்றார்.

2. 2 மேலும் அசஞ்சலன், அநுபமன், அநகன், அநுசிதம் முதலியவற்றுக்கும் விதிவகுக்கின்றார்.

### வீரசோழியம்

3. 1 இனி வீரசோழியம் என்பதொரு நூல் ஐந்திலக்கணங் களையும் கொண்டது. பொன் பற்றிக் காவலர் புத்தமித்திரன் என்பவரால் இயற்றப்பட்டது.

3. 2 இந்நூலின் படலப் பெயர்களைக் கண்ட அளவானே இந்நூலின் நோக்கும் உட்கிடையும் நன்கு புலப்படும்.

சந்திப் படலம், உபகாரப் படலம்' தத்திதப் படலம், தாதுப் படலம், கிரியா பதப் படலம். அலங்காரப் படலம் என்பவை பெயராலேயே, இது வட மொழிக்காக வடமொழி யில் செய்திருக்க வேண்டிய இலக்கணம் என்பதை விளக்கும் அல்லவோ!

3. 3. தமிழும் வேண்டுமே! அதனால், வேற்றுமைப் படலம், தொகைப் படலம், பொருட் படலம், யாப்புப் படலம், என்பனவும் இடம் பெற்றுள.

3. 4 ''இரண்டாம் அதிகாரமாகிய சொல்லதிகாரம் பெரிதும் வடமொழியின் சம்பந்தமுடையதாதலின் சென்னை பச்சை யப்பன் கல்லூரி உயர்கலாசாலை வடமொழிப் பண்டிதரும் என் அரிய நண்பருமாகிய நா. வேங்கட சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்கள்பால் மேற்படி அதிகாரத்திலுள்ள

---

2. வெண்பா. 10, 11.

வடமொழியின் சம்பந்தமான விஷயங்களில் சிலவற்றைக் கேட்டேன். அவர் அவற்றை விளக்கிக் கூறினார். ஆயினும், அதனால் அவ் விஷயங்கள் நன்கு விளங்காமையின் மேற்படி சாஸ்திரியார் அவர்களின் உதவியினால், பிரயோக விவேகத்தைப் படித்து அதன் துணையால் மேற்படி சொல்லதிகார விஷயக் குறிப்புரையை எழுதினேன்'' என வீர சோழியப் பதிப்பாசிரியர் கா. ரா. கோவிந்தராசர் வரையும் முகவுரைப் பகுதியாலேயே நூலியல் தெளிவாகும்.

3. 5 அவரே மேலும் குறிப்பிடுகிறார்; ''மற்ற நூல்களிற் கூறப்படாத வேறு சில புணர்ச்சி விதிகளும் இந்நூலிற் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று, இ, ஈ, ஐ, என்னும் உயிர்களுக்கு முன் நகரம் ஞகரமாகத் திரியும் என்பது. இதனை இந்நூலின் பதினைந்தாஞ் செய்யுளிற் காண்க'' என்பது அது.

திரியும் வகைக்கு (எ—டு)

கவி + நன்று = கவிஞன்று
தீ + நன்று = தீஞன்று
பனை + நன்று = பனைஞன்று

''நான்கொடு மூன்றொன்ப தாமுயி ரின்பின்பு நவ்வரு மேல் ஏன்ற ஞகாரம தாகும்'' என இலக்கணம் கூறப்படுகிறது.

**நன்னூல்**

4. 1 இனி நன்னூலைக் காணலாம். அந்நூலில் வடமொழிச் சிறப்பெழுத்து, தமிழ்ச் சிறப்பெழுத்து, இரண்டிற்கும் பொதுவெழுத்து, வடமொழிச் சொற்கள் தமிழில் வரும் வகை, தமிழுக்கு முதலாகாத எழுத்தை முதலாக உடைய வடமொழிச் சொற்கள் தமிழிற் புகுங்கால் இவற்றுக்கு முதலாக இட வேண்டிய தமிழ் எழுத்துகள், ஆகியவற்றை ஐந்து நூற்பாக்களில் கூறுகிறார்.[3]

4. 2. அவர்க்கு முன்னரே வீரசோழியம் வெளிப்பட்டிருந்தும் அவர்தம் வழியையே முழுமையும் பற்றிச் சொல்லாமல், பெரிதும் தொல்காப்பியம் தழுவியும், அரிதாக வழி நழுவியும் செல்லுகின்றார். இலக்கணப் பயிற்சிக்கு இனிய எளிய நூலாக அஃதிருப்பதால்தான் பலரும் பாராட்டும் சிறப்பும் பெற்றது.

---

3. நன் 146-150

4. 3 "முன்னூலொழியப் பின்னூல் பலவினுள் நன்னூலார் தமக்கென்னூலாரும் இணையோ வென்னும் துணிவே மன்னுக"[4] என்று இலக்கணக் கொத்துடையாரும் குறித்தாராம்.

5. 1 பிரயோக விவேக நூலோ தமிழ், வடமொழி என்னும் இரு மொழிகளுக்கும் இலக்கணம் ஒன்றே என்று உறுதிப் படுத்த வெளிப்பட்ட நூல். இந்நூலையியற்றிய சுப்பிரமணிய தீட்சிதர் காலம் 17-ஆம் நூற்றாண்டு.

6. 1. இக்காலத்தே எழுந்த இலக்கண நூல் 'இலக்கண விளக்கம்' என்பதாம். இது வைத்தியநாததேசிகரால் இயற்றப் பட்டது. தொல்காப்பியம் நன்னூல் முதலிய முன்னூல் களின் வழியே ஐந்திலக்கணமும் கூறியவர்.

6. 2 "பொது எழுத் தானும் சிறப்பெழுத் தானும்
ஈரெழுத் தானும் இயைவன வடசொல்"[5]

என நன்னூல்நூல் இலக்கணத்தையே காட்டியமைந்தவர். ஆனால் வடசொல்லைத் தனியே சுட்டுதற்கு, "இவ்வாரியச் சொல் ஒரு நிலத்திற்கேஉரித்தன்றிப்பதினெண் நிலத்திற்கும் விண்ணிற்கும் புவனாதிக்கும் பொதுவாய் வருதலின் திசைச் சொல்லுள் அடங்காமையான வேறு கூறினார்"[6] என்று கூறுவது அவர்தம் உள்கிடை புலப்படுத்துவதாம். இவ் விடத்தே, இவர்க்கு முன்னே வாழ்ந்த சேனாவரையர் "வடமொழியில் தமிழ்ச் சொற் புகாது" என்பதும், வீர சோழியப் பெருந் தேவனார், "தமிழ்ச் சொல்லிற்கு எல்லாம் வட நூலே தாயாகி நிகழ்கின்றமையின், அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்" என்பதும் எண்ணத் தக்கன.[7]

## தொன்னூல்

7. 1 தமிழுக்கு விழிப்பான அரும்பணிகள் செய்த வீரமாமுனிவரும், அவர்கால இலக்கணர் வழியிலேயே நின்றார்.

"சொல்லெனப் படுவதன் தொகுதிநான் கவற்றுள்
சநுக்கிரகம் சங்கதம் தேவர் மொழியே
அவப்பிரஞ் சனம் மொழி யாம்இழி சனர்க்கே
ஒவ்வொரு நாட்டிடை உரைப்பது பாகதம்

4. பாயிரம் 8. உரை.
5. இ. வி. 175.
6. இ. வி. 175 உரை.
7. வீரசோ. 60 உரை.

இதுமூ வகைத்தாய் வடமொழி திரிவன
தற்பவம் பிறவும் பொதுமை தற்சமம்
சிறந்த தொன்றற் குரியன தேசிகம் என்ப:[8]
'உறுப்புச் செய்யுளென் றுரைப்ப தற்பவச்
சிறப்புரை விரவிச் செப்பிய செய்யுளே.''[9]

எனவும் பிறவும்[10] தொன்னூல் கூறுவதாம். இந்நூற்பாக்களின் உரையில் வடமொழிச் சொல் தமிழில் புகுமாற்றை மிக விரிவாகவே கூறுகிறார் முனிவர்.

7, 2 'உறுப்புச் செய்யுள்' உரையில், ''தேசிகச் சொல்லொடு வடமொழியிற்றிரிந்த தற்பவச் சொல் ஒன்றிரண்டுங் கலந்து வந்த செய்யுள் கேட்போர்க்கின்பமாக வழங்கும் உறுப்புச் செய்யுள் எனப்படும்'' என்கிறார்.

## முத்துவீரியம்

8. 1 இனி இவரெல்லார்க்கும் 'இளையாராய்' 'முத்துவீரியர்' வடமொழிப் புணர்ச்சியை எழுத்ததிகார மொழியியலில் பதினோராம் நூற்பா தொடங்கி நாற்பத்தைந்தாம் நூற்பா முடிய ஓதுகின்றார்.

8. 2 எழுத்தியலில் தமிழ் எழுத்துகள் இவையெனக் கூறிய அவர், மொழியியல் தொடக்கத்தில்,

''சொன்ன எழுத்தில் சொல்வதே சொல்லாம்''

என்றார். பின்னர் அவரே அவ்வியலில் முக்காலுக்கு மேலும் வடமொழிப் புணர்ச்சியிலேயே ஆழ்ந்துவிட்டார்.

9. 1 கரையின் காவலராக இருக்க வேண்டியவர் எவரோ, அவரே கரையை உடைத்துவிட்டுக் கழனி அழிபாட்டுக்கு உதவியவராகிவிட்டார் எனலாம். ஒரு வேளை அவர்கள் பின் விளைவு இன்னதென அறியாமலே செய்தனர் எனின் அவர்கள் மேல் குறை கூறி என்ன பயன்? அறிந்து கொண்ட நாம் தீர்வு காணாமல் குறை கூறுவதே பெருங் குறையாம்.

---

8. தொன். வி. 191.
9. '' 192.
10. '' 86, 87.

# 7. உரையும் உரைநடையும்

## பாட்டும் உரையும்

1. 1 பாட்டைப் போலவே உரைநடையும் பழமையானதே. ஆனால், ஏட்டில் பாட்டை எழுதிப் போற்றியது போல் உரைநடையை எழுதிப் போற்றி வைக்கும் வழக்கம் இல்லாமல் இருந்தது. அதனால், நாம் நம் முன்னோர்களின் பாடல்களைப் பெற்றுக் கொண்ட அளவு, உரைநடையைப் பெற இயலாது போயிற்று.

1. 2 ஆசிரியர் தொல்காப்பியர் எழுவகை யாப்புகளைக் குறிப்பிடுகிறார். அவை, பாட்டு யாப்பு, உரையாப்பு, நூல் யாப்பு, வாய்மொழியாப்பு, பிசியாப்பு, அங்கத யாப்பு, முதுசொல் யாப்பு, என்பன. இவற்றை நோக்க அக்கால உரைநடை வகைகள் அறியவரும்.[1]

## உரைப்பாட்டு

2. 1 சிலப்பதிகாரத்தில் 'உரைப் பாட்டு மடை' உண்டு; உரைப் பாட்டு மடை 'உரைப் பாட்டு' எனவும் வழங்கும்.[2] 'உரைச் செய்யுளை இடையே மடுத்தல்' என அரும்பத வுரைக்காரரும் 'உரைப்பாட்டை நடுவேமடுத்தல்' என அடியார்க்கு நல்லாரும் உரைப் பாட்டு மடைக்குப் பொருளுரைப்பர்.[3]

2. 2 உரையாடலைப், பாடலின் இடையே புகுத்திப் பாடுதல் இவ்வுரைப்பாட்டுமடையாதல் வேண்டுமென அறிய முடிகின்றது.

"குடப்பால் உறையா குவிமிமில் ஏற்றின்
மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு"

என்பதும்[4]

"குருவியோப்பியும் கிளிகடிந்தும் குன்றத்துச்சென்று வைகி
அருவியாடியும் சுனைகுடைந்தும் அலவுற்று வருவேமுன்
மலை வேங்கை நறுநிழலின் வள்ளிபோல்வீர் மனநடுங்க

---

1. தொல். 1336.
2. சிலம்பு. பதிகம். 55-60 அடியார்க்.
   ,, 29. உரைப்பாட்டுமடை. அரும்.
3. ,, 12. 1:74
4. சிலப். 17:2

முலையிழந்து வந்துநின்றீர் யாவரோவென முனியாதே
மணமதுரையோ டரசுகேடுற வல்வினைவந்துருத்த
காலைக்
கணவனையங் கிழிந்து போந்த கடுவினையேன்
யானென்றாள்''

என்பதும்[5] இக் குறிப்பை வெளிப்படுத்துவனவாம்.

2. 3 இனிச் சிலப்பதிகாரத்திற்கு உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்னும் பெயருண்மையும் எண்ணத்தக்கதாம்.[6]

## தொன்மை

3. 1 தொன்மை என்பதை விளக்கும் பேராசிரியர் ''தொன்மை என்பது உரைவிரா அய்ப் பழமையாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது என்றவாறு. அவை, பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன என்றார்.[7]

## நூலாசிரியரும் உரையாசிரியரும்

3. 2. பழைய நூல்களைப் போற்றிக் காத்த கடமையில் உரை கண்ட பெருமக்களுக்குப் பெரும் பங்கு உண்டு. நூலாசிரியர்கள் போலவே உரையாசிரியர்களும் போற்றத் தக்கவர்களே என்பதில் இருகருத்து இல்லை. ஆனால், உரையாசிரியர்கள், நூலாசிரியர்கள் போல மொழி மரபு காக்கத் தவறி விட்டனர் என்று குறை சொல்வதற்கும் இடம் வைத்துவிட்டமை குறிப்பிடத்தக்கதாம்.

3. 3 நூலாசிரியர்களுக்கும் உரையாசிரியர்களுக்கும் கால இடைவெளியுண்மை உணரத் தக்கதே. பழையன கழிதலும் புதுவன புகுதலும் அறியக் கூடியதே. எனினும், மொழியின் அடிப்படையைத் தகர்க்கும் வகையிலும் அவர்கள் வழி காட்டியாகி விட்டமை வருத்தம் தருவதேயாகும்.

## உரையாசிரியர்

4. 1 உரையாசிரியர் எனின், இளம்பூரணரையே குறிக்கும் அளவுக்கு முதன்மையும் பெருமையும் வாய்ந்தவர். அவர் ''சிதைவெனப்படுபவை'' என்னும் நூற்பாவில் வரும் 'மிகை படக் கூறல்' என்பதற்கு, ''மிகைபடக் கூறலாவது அதிகாரப் பொருளன்றிப் பிறபொருளுங் கூறுதல். அஃதாவது தமிழிலக்கணம் சொல்லுவான் எடுத்துக் கொண்டான், வட மொழியிலக்கணமும் கூறல்''[8] என்று விளக்கம் வரைகின்றார்.

5. ,, 24:1
6. ,, பதிகம். 87
7. தொல். 1493
8. தொல். 1608

4. 2 முதல் உரையாசிரியர் இவ்வாறு வரம்புகோலியுரைத்தும் அவர் எந்நூலுக்கு உரைவரைந்தாரோ அந்நூலுக்கு உரை வரைந்த பின்னோரும் அதனைப் பின்பற்றினார் அல்லர் ஏனின் பிறரைக் கூறுவானேன்?

## சேனாவரையர்

5. 1 சேனாவரையர் 'வடநூல் கடலைநிலைகண்டுணர்ந்தவர்' என்று சிவஞான முனிவரால் பாராட்டப்படுபவர். அவர் தம் புலமைத் திறம், தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு இணையற்ற உரையைத் தந்தது! அன்றியும் தொல்காப் பியக் கருத்துகளை வடமொழிப் படுத்துதற்கும் துணை போயது.

5. 2 ''வினையின் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரின் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே''.[9]

என்னும் நூற்பாவுக்கு உரைவிரிக்கும் சேனாவரையர் ''மயங்கல் கூடா என்றது மயங்குதலைப் பொருந்தா என்ற வாறு. மயங்கல்கூடா தம் மரபினவே என்பனவற்றுள் ஒன்றனது ஆற்றலான் ஏனையதன் பொருளும் உணரப் படுதலின் ஒன்றே அமையுமெனின் சொல் இல் வழியது உய்த்துணர்வதென்க.

5. 3 தம் மரபினவே என்பதனைப் பிரித்து வேறொரு தொடராக்கிச் சொற்கண் மரபு பிறழா தம் மரபினவே என மரபு வழுக் காத்ததாக உரைக்க. இது 'யோகவிபாகம்' என்னும் நூற்புணர்ப்பு. முன் இரு பொருள்பட உரைப்பன வெல்லாம் இந்நூற்புணர்ப்பாகக் கொள்க'' என்கிறார்.

5. 4 யோகம் - கூட்டம்; விபாகம் - பிரிப்பு; யோகவிபாகம் - கூட்டிப் பிரித்தல். 'தந்திரஉத்தி' என்பதை 'நூற்புணர்ப்பு' எனத் தமிழால் சொல்லும் சேனாவரையர் 'கூட்டிப் பிரித்தல்' என்னாராய் 'யோகவிபாகம்' என்று கூறியது தொல்காப்பியம் அவ்வழிப்பட்டது என்பது காட்டவே யாம்! செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல்கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தது என்னும் பாயிரக் கருத்தினின்று விலகிச்செல்வதாம்.

5. 5 இவர்தம் உரையை ஆய்ந்த பேரறிஞர் தி. வை. சதா சிவனார், ''(சேனாவரையர்) வடமொழியும் தமிழும் நன்கு

---

9. தொல். சொல். 11.

பயின்றவர். இவ்விரு பெரிய மொழிகளும் இருவேறு தனி மொழிகள் என்பதை மறந்து வடநூல் முடிபுகளையும் கொள்கைகளையும் தமிழ் மொழிக்குரிய இலக்கணங்களில் புகுத்தி அவற்றிற்கு அமைதி கூறியவர். இவரது வடமொழிப் பயிற்சியொன்று பற்றியே இவர் உரையாசிரியர்களுள் சிறந்தவர் என்று இக்காலத்தாரால் பாராட்டப் பட்டு வருவது குறிப்பிடத் தக்கது'' என்கிறார்.[10]

## தென் சொல் வடசொல்

6. 1 குமரன், குமரி என்பவை தமிழ்ச்சொற்கள். இவற்றின் சொற்பொருளமைதியைப் பாவாணர் விளக்குகின்றார்.
கும் - கும்மல் = கும்பல், கூடுதல்.
கும்மலி = பருத்தவள்.

6. 2 கும் - கொம் - கொம்மை =
1. பருமை. (பெருங். உஞ்சைக். 40 : 210)
2. திரட்சி (சூடா)
3. இளமை (திவா)

கும் - குமர் = 1. திரண்ட இளைஞை, கன்னி
2. கன்னிமை குமரிருக்குஞ் சசிபோல்வாள் (குற்றா. தல. தருமசாமி. 47)
3. அழியாமை, ''குமருறப்பிணித்த'' (பாரத. இந்திரப். 32).

மணப்பருவத்தில் ஆணும் பெண்ணும் திரள்வது இயல்பு.
ஒ. நோ : விடை - விடலை = இளைஞன்.
விடலி = இளைஞை. விடை = இளஆண் விலங்கு. பறவையின் திரண்ட இளமை.
விடைத்தல் = பருத்தல்.

குமர் - குமரன் = இளைஞன், முருகன்
குமர் - குமரி = இளைஞை. கன்னியாகக் கருதப்பெறும் காளி.

6. 3 ஆரியர் வருகைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே குமரிக் கண்டமாகிய பழம்பாண்டி நாட்டில் குமரி (காளி) பாலை நிலத்தெய்வமும் வெற்றித் தெய்வமும் குரு (அம்மை) நோய்த் தெய்வமுமாயிருந்தாள். அவள் பெயரால் ஒருமலைத் தொடரும், ஒருபேராறும் இருந்தன.

6. 4 வடவர் குமர என்னும் வடிவத்தைக் குமார என்று நீட்டி அதற்கு மகன்மைப் பொருள் சேர்த்ததுடன், கு + மார

10. உரையாசிரியர்கள். பக். 40.

என்று சொற்சிதைத்து, எளிதாய் இறப்பவன் (easily dying) என்று பொருந்தாப்பொருட் காரணமுங் காட்டுவாராயினர்.

6. 5 இனி, உணாதி சூத்திரம், கம் (விரும்பு, காமி) என்பதை மூலமாகக் காட்டும்.

குமரன், குமரி என்னும் இரண்டும் தூய தென்சொற்களாதலின், மணமாகாத இளைஞன் பெயர்க்குமுன் குமரன் (Master) என்றும் மணமாகாத பெண்ணின் பெயர்க்குமுன் குமரி (Miss) என்றுமே அடை கொடுத்தல் வேண்டும். செல்வன், செல்வி என்பன மணமக்கள் பெயர்க்கே பொருத்தமானவை.

6. 6 மகன், மகள் என்று முறையே பொருள்தரும் குமார(ன்) குமாரீ, என்னும் வடிவுகளே வடசொற்கள்.

எளிதாயிறப்பது குழவிப் பருவத்திலும் கிழப்பருவத்திலுமாதலின்கட்டிளங்காளைப் பருவத்தைக் குறிக்கும் சொற்கு, அப்பொருட்காரணம் பொருந்தாது. காமுறுவதும் காளைப் பருவமே. ஆயின், கும் என்னும் சொற்கும் கம் என்னும் சொற்கும் தொடர்பில்லை. கம் என்பது காம் என்பதன் குறுக்கம். கு + மார என்னும் தவற்றுப் பிரிப்புச் சொற்களும் தென்சொற்றிரிபே. குள் - கு. மடி - மரி - ம்ரு - மார.[11]

'குமரி' என்னும் சொல்லைப் பற்றிச் சேனாவரையர் கூறுவது வருமாறு:

6. 7 "குமரி என்பது, வடமொழிச் சிதைவாய் வடமொழிப் பொருளே உணர்த்தலின் விரவுப் பெயர்"[12].

தொல்பழங் குமரி நாட்டுக் குமரிச் சொல்லே வடமொழிச் சிதைவு என்று கூறப்படுமானால் 'உலகம்' முதலிய சொற்களைவிட்டு வைப்பார்களா?[13]

## பாரத வெண்பா

7. 1 நச்சினார்க்கினியர் உரைபற்றி முன்னரே கண்டுள்ளோம். ஆகலின் அஃதமைக. பேராசிரியர் "தொன்மை" என்பது பற்றிக் கூறும்போது "தொன்மை என்பது உரைவிராஅய்ப் பழமையவாகிய கதைப் பொருளாகச் செய்யப்படுவது என்றவாறு, அவை,

---

11. வடமொழி வரலாறு. பக். 126-7.
12. தொல். சொல் 196.
13. ,, ,, 57.

பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன'' என்று கூறியதை அறிந்தோம்.[14]

7.2 தகடூர் யாத்திரை முற்றாகக் கிடைத்திலது. கிடைத்த அளவில் உரையெதுவும் அகப்பட்டிலது! புறத்திரட்டு நூலாலும், உரையாசிரியர்களின் மேற்கோள்களாலுமே பாடல்கள் கிடைத்துள. ஆனால் 'பாரத வெண்பா' என ஒரு நூலின் ஒரு பகுதி கிடைத்துளது. அது, உரைவிராய பாட்டாக அமைந்துளது! ஆசிரியர் பெயரும் பெருந்தேவனார் என்றே உள்ளது.ஆனால் பாட்டுக்கும் உரைநடைக்கும் உள்ள மொழிநடை வேறுபாடு ஒட்டாத ஒட்டாக உள்ளது; அதிலுள்ள ஒருபாட்டும் உரையும்:

''மாலென்ப தாம்பின்னை மால்வரையான் மால்விசும்பின்
மாலின் புயல்காத்த மால்வண்ணன்—மாலரவப்
பேரோத மேனியான் பேரோத நீர்கடைந்தான்
பேரோத மேனியான் பேர்''

இதுபாட்டு.

7.3 ''ஆதிவேதமும் மகாலோகமும் அண்டரண்டமும் அவனிதலமும் வேதவியாகரண முள்ளிட்ட நான்கு கலைகளும் நான்முகனொடும் தனது திருநாபிக் கமலத்தே பிறப்பித்த பதுமநாபன், விக்கிரமமாயன், சக்கரபாணி, தேவதேவன், நாராயணசுவாமி, ஸ்ரீபாதங்களை நமஸ்கரித்தோ மென்றவாறு''

இது பாட்டைத் தழுவிய உரை.[15]

7.4 பாடலின் போக்கென்ன? உரைநடையின் போக்கென்ன? மணற்சோற்றில் அரிசிதேடலென வடசொல்லூடே தென் சொல்லை அரிதின் முயன்று தேடும் படியாக அல்லவோ உள்ளது.

## மணிப்ரவாளம்

8.1 வடமொழியும் தென்மொழியும் கலந்த ஒரு கலவை நடைக்கு அதுவும் வடமொழி எழுத்தும் தென்மொழி எழுத்தும் கலந்து கை கோத்து நடையிடும் நடைக்கு-மணிப்பவழ நடை என ஓர் அழகுப் பெயர் சூட்டினர்! அதுவும் 'மணிப்பவழம்' இல்லை! ஏனெனின் இரண்டும் தமிழ்ச் சொல்லாயிற்றே! முகத்திலேயே குத்திவிடவேண்டாவா

14. ,, பொருள் 549. 15. பாரத வெண்பா. 1.

முத்திரையை? அதனால் 'மணிப்ரவாளம்' என்று பெயரிட்டனர். மணி—தமிழ்; ப்ரவாளம்-சமற்கிருதம்.

8. 2 திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்-செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங்கைக் கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.[16]

என்பது மூன்றாந் திருவந்தாதி முதற்பாட்டு, பேயாழ்வார் அருளியது. ஒருசொல் தானும் வேற்றுச் சொல் இல்லாது பொருள்மயக்கம் சிறிதும் செய்யாதது.

8. 3 இதற்குப்பெரியவாச்சான்பிள்ளை 'வ்யாக்யானம்' வருமாறு:
''த$_4$ர்மந்தன்னைக் கண்டேன். அவளிருக்கும் ஆஸநங் கண்டேன். இருவரும் சேர்ந்த சேர்த்தியாலே இளவெய்யில் கலந்தாற்போலே இருக்கிறபடி. அஸ்த$_2$ாநேப$_4$யசங்கை பண்ணி ''வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு, வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு'' என்கிறபடியே திருவாழியைக் கண்டேன். ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம் என்கிறபடியே கடல்போலே ஸ்ரமஹரமான வடிவை எனக்குக் காட்டினவன் பக்கலிலே. ப்ரபை$_4$க்கு ஆஸ்ரயங் கண்டேன். இருவருங் கலந்த கலவியாலே பிறந்த ஸமுத$_3$ாய சோபை கடலிலேயிறே பிராட்டியும்மற்றுமுள்ள ரத்நங்களுமெல்லாம் பிறப்பது அவன் காட்டக் கண்டவின்று. இவர்கள் புருஷகாரமாகக் கண்டவின்றென்னவுமாம்.

8. 4. இதற்கு அப்பிள்ளையுரை வருமாறு:

எனக்கு ஸ்வம்மாய் கடல்போல ஸ்ரமஹரமான வடிவையுடையவன் பக்கலிலே ஆழ்வார்கள் இருவரும் காட்டக் கண்டவின்று சுன்னையொழிந்தாரடங்கலும் தன்னைப்பற்றி லப்$_3$த$_4$ ஸ்வரூபராக வேண்டும்படி ப்ரத$_4$ானையான பெரிய பிராட்டியாரைக் கண்டேன். அவளும் தண்ணீர் தண்ணீரென்று மேல் விழும்படியிருப்பதாய், பொன்போலே ஸ்ப்ருஹணீயமாயிருக்கிற திருமேனியைக் கண்டேன். மரகதகிரி$_3$யிலே உதித்து ஒளிவிட்டுக் கிளருகிற ப$_3$ாலார்க்கனைப் போ$^3$லேஇருவருடைய ஒளியும் தன்னிலே விளங்காநின்றுள்ள அழகிய நிறத்தையும் கண்டேன். இச்சேர்த்திக்கு என் வருறதோ என்று அஸ்த$_2$ாநே ப$_4$யஸங்கை பண்ணி யுத்$_3$தே$_4$ாந்முக$_2$மாய், கண்டார்மேலே சீறிவிழா நிற்பதாய், ஸ்யாமள

16. நாலாயிரத். 2282.

-மான அவன் வடிவுக்குப் பகைத்தொடையாம்படி பொன் போன்ற நிறத்தை யுடைத்தான திருவாழியைக் கண்டேன். திருவாழியைப் போலே சீறிவிடுகையன்றிக்கே, எங்கே யெங்கே யென்று சுற்றும் முற்றும் சீறிப்பார்க்கிற ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தை வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படி அழகி தான திருக்கையிலே கண்டேன். இன்று நிர்ஹேதுக மாக என்னவுமாம். புரிசங்கு- ''கூனற்சங்கம்'' என்னுமா போல ஸேஷத்வத்தாலே எப்போதும் ப்ரஹ்வீபாவத்தை உடைத்தாயிருக்கு மென்னவுமாம்.

8. 5 நாலாயிரப்பனுவல் உரையாளர்கள் புலமை நலம், பட்டறிவு, ஆழ்ந்த இறையுணர்வு, இரு மொழி வல்லாண்மை இவற்றில் எட்டுணையும் ஐயுறவில்லை! அவர் தம் படைப்பு, மொழியாக்கம் செய்வதாக இல்லை என்பதே குறைபாடு! அவர்கள் இருமொழிச் சொற்களையும் எழுத்துகளையும் எழுதுதல் தகும் எனின், பன்மொழிப் புலமையுடையேம் என்பார் அவர் கற்றறிந்த மொழிச் சொற்களையும் எழுத்து களையும் பெய்து ஒன்றை எழுதினால் அந்நடை எப்படி இருக்கும்? அம்மொழியின் நிலை, ''மலடு கறந்து எய்த்தே'' நிலையையன்றி என்ன இருக்கும்? இற்றை மொழிக் கலப்பு, எழுத்துக் கலப்புகளுக்கு மூலவர் என்று, இத்தகு பெரும் புலமைப் பேராசிரியன்மார்கள் சுட்டிக்காட்டப்படவேண்டிய நிலைக்கு ஆட்பட்டிருக்க வேண்டியது இல்லையே! தடங் கரை அடைப்பது அரிதோ? உடைப்பது அரிதோ?

## நாலாயிரப்பனுவல்

9. 1 மயிலை 'மாதவதாஸன்' அவர்களால் 'ஆழ்வார்கள் திவ்விய சரித்திரம்' நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பதிப்பின் முகப்பிலே வரையப்பட்டுள்ளது. அதில், ''திவ்ய ஸூரி சரிதத்தை ப்ரமாணமாகக் காட்டி திவ்யப்ரபந்த வாக்கியங் களை ஆங்காங்கு நவரத்நங்கள் போலப் பதித்து, அழகான மணிப்ரவாள நடையில் அமைந்துள்ள பழைய நூல் ஸ்ரீ பின்பழகராம் பெருமாள் ஜீயர் அருளிய ஆறாயிரப்படி 'குருபரம்பராப்ரபாவம் ஆகும். இந்நூலை ஒட்டியே ஆழ் வார்களுடைய திவ்விய சரித்திரம் இங்கு எழுதப் பட்டுள்ளது. இந்நூலிற் கூறப்படாத விவரங்கள் இங்குக் குறிக்கப்படவில்லை.'' என்பது முன்னுரையின் ஒரு பகுதி. ஆழ்வார்கள் திருவவதாரம் செய்த காரணம் என்னும் பகுதி யின் முற்பகுதி வருமாறு:

9. 2 ஸ்ரீய: பதியாய், ஸ்ரீவைகுண்ட நிகேதனாய், ஸ்ரீ மத நந்தமுக நித்யஸூரி பரிஷந்நிஷேவ்ய மாணனாய், அவாப்த ஸர்வேஸ்வரன், நலமந்தமில்லதோர் நாடு, தெளிதாகிய சேண் ஸமஸ்த காமனாய், அகில மங்கள குண ஸ்வரூபனான் விசும்பு தெளிவிசும்பு திருநாடு என்று புகழப்படும் பரமபதத்திலே ஆநந்தை கார்ணவமான திருமாமணி மண்டபத்திலே சீரிய சிங்காசனத்திலே ஸர்வாபரண பூஷிதனாய், திவ்யாயுதங்களாலே திப்ய மாநனாய் உபயவிபூதி நிர்வாஹகநனாய் ஸ்ரீ, பூமி, நீளாதேவிகளோடே வீற்றிருந்து அநந்த கருட விஷ்வக்ஸேந ப்ரமுகரான நித்யஸூரிகளையும் அந்தமில் பேரின்பத்து அடியாரையும் ஆநந்திப்பித்துக் கொண்டிருக்க ஸம்ஸாரிகளும் நம்மையனுபவித்து மஹாஸம்பத்தைப் பெற்று வாழுகைக்கு ப்ராப்தியுண்டாயிருக்க அவர்கள் அதையிழந்து இறகொடிந்த பக்ஷிகள் போலேயிருக்கிற படியைக் கண்டு, பரமதயாளுவாய் பஃலுயிர்க்கும் ஆக்கை கொடுத்தளிக்க, ஸம்ஸாரிகள் மாயவன் தன்னை வணங்க வைத்த கரணமிவை என்பதையுணராமல், ஸமித்தைத் தறிக்கக் கொடுத்த கத்தியைக் கொண்டு பசுவின் வாலைத் தறிப்பாரைப் போல ஆக்கையின் வழியுழன்று விஷயப்ரவணராய்ப்பிறவியென்னும் பெருங்கடலிலே கரை காணாது தடுமாறுவதைக் கண்டு தொண்டே செய்தென்றுந் தொழுது வழியொழுகக் கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள்தானும் மற்றை நிலைகளும் அருள அவற்றின் படி செய்யாதே, கொல்வனமுதலா அல்லன முயலும் உயிர்களைக் குறும்பறுத்து ஆட்கொள்ளத் திருவுள்ளங் கொண்டு, தானே ராம கிருஷ்ணாத்யவதாரமாக அவதரித்துப் படாதனப்பட்டுத் திருத்தப் பார்த்தவிடத்திலும், பலபல நாழஞ்சொல்லிக் கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வைது, அதமமான கதிகளிலே விழுகிற படியைக் கண்டு, மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப்பிறவி பிறந்த தனியனாகையாலே, விஸஜாதீயரான நமக்கு இது ஸாத்யமன்றென்று பார்த்து, பார்வை வைத்து ம்ருகம் பிடிப்பாரைப் போலே, மநுஷ்ய ஸஜாதீயரான ஆழ்வார்களை இடுவித்து ஜகத்தைத் திருத்தியருள வேண்டுமென்று பார்த்தருளி, ஸ்ரீவத்ஸ கௌஸ்துப வைஜயந்தீ வநமாலைகளையும், ஸ்ரீ பூமி நீளைகளையும், ஸ்ரீபஞ்சாயு தாழ்வார்களையும், அநந்த கருட விஷ்வக் ஸேந ப்ரப்ருதிகளையும் பார்த்து, நீங்கள் போய் லீலா விபூதியிலே நாநா வர்ணங்களிலும் அவதரித்து அகிலாத் மோத்தாரணம் பண்ணுங்கோள்'' என்று நியமித்தருள அவர்களும் தமிழ் நாட்டிலே பலர்

வர்ணங்களிலே வந்தவதரிக்க, ஸர்வேஸ்வரனும் அவர்களுக்கு மயர்வற மதிநலமருளி அவர்கள் முகேந ஸர்வாதிகாரமான திவ்யப்ரபந்தனை ப்ரகாசிப்பித்தருளினான்''[17]

9. 3 இவ்வளவு விரிவான மேற்கோளைக் காட்ட நேர்ந்தது. இதனைச் சுருக்க அளவில் காட்ட முடியாதவாறு ஒரே ஒரு சொற்றொடராக இருப்பதாலேயாம்.

9. 4 மயிலைதாசனார் நாலாயிரப்பனுவலை மிக மிக அருமையாகப் பதிப்பித்தவர். 840 பக்க அளவுள்ள அந்நூலை உருபா 6 விலையிட்டுப் பரப்புதல் நோக்கு வாய்ந்தவர். அவ்வகைக்கு மணலி இலக்குமணர் அறக்கட்டளையைப் பயன்படுத்திக் கொண்டவர். 1950 இல் பதிப்பித்தவர். அவர், தமிழ் உணர்வு ஏற்பட்டுள்ள கால நிலையில் இருந்தும் தனித்தமிழ் இயக்கமென ஒன்று தோன்றி இயன்ற கடனாற்றிக் கொண்டு வருவது அறிந்தும், இந்நடையிலே வரைவராயின் 'மணிப்ரவாள' மூலவர்களையும் வழிஞர்களையும் எப்படிக் குறை கூற முடியும்! ஒருவேளை அந்நாளில் இத்தகு தோற்றங்கள் நிகழ்ந்திருக்குமாயின் அவர்களே கூட இக் 'கலவை' நடையை விடுத்துக் 'கவின்' நடையை மேற்கொண்டிருக்கவும் கூடுமே! கலவை நடையில் இருந்த மறைமலையார், தனித்தமிழ் நாட்டம் ஏற்பட்ட பின்னர் தம் பழநூலில் இருந்த கலவையைக் களைந்து தனித்தமிழ் பெய்து புதுப்பதிப்புக் கொண்டு வந்தாரே; அப்படியும் நிகழ்ந்திருக்கலாமே!

## சிவஞான முனிவர்

10. 1 'மயிலை தாஸர்' நடை நிற்கட்டும். சிவஞான முனிவரர் சேனாவரையரைப் போல இருமொழிப் புலமையில் தலை நின்றவர். தமிழியல் நன்றாகத் தெரிந்தவர். தொல்காப்பியச் சூத்திர விருத்தி முதலியவற்றை அலசியவர். எனினும் அவர்தம் தமிழ்நடை இருமொழிக் கலவையேயாம் ''விசேடதீக்கை'' என்பதை எழுதுகிறார்! தனித் தமிழில் எழுதத் தேர்ந்தவர்தாம் இப்படி எழுதுகிறார்.

10. 2 ''விசேட தீக்கையாவது அவ்வாறு சமய தீக்கை செய்து குண்டத்தில் வாகீசுரனையும் வாகீசுவரியையும் ஆவாகித்து மாணாக்கன் ஆன்மாவை வாங்கி வாகீசுரனால் வாகீசுவரி கருப்ப நாடியிற் செலுத்திக் கருப்பாதான முதலிய கிரியைகளை மும்மூன்று ஆகுதியின் நிரப்பிக் கரு முதிர்ந்து பயந்த

17. நாலாயிர திவ்விய: ஆழ்வார்கள் திவ்விய சரித்திரம் பக். 7, 8.

தாகப் பாவித்துக் குண்டத்தினின்றும் ஆன்மாவை மீள வாங்கி மாணாக்கன் இதயத் தானத்திலே தாபித்து இவ்வாறு சிவபுத்திரனாகச் செய்வது. இதனானே சிவபூசை முதலியவற்றிற்கும் யோக நெறிக்கும் சிவாகமம் ஓதுதற்கும் அதிகாரியாவான்''[18]

10. 3 'மயிலை தாஸர்' நடையில் வேற்று மொழியெழுத்தும், சொல்லும் பயின்று நின்றன. இவர் நடையில் வேற்று மொழி எழுத்துப் பயிலாமல், வேற்று மொழிச் சொற்கள் தமிழ் எழுத்துக்களில் வந்தன.

## பரிதியார்

11. 1 இந்நிலை, உலகம் என்று சொல்லத்தக்க 'உயர்ந்தோர் மாட்டும்'[19] இடைக்கால பிற் காலங்களில் இருந்தமையால் தான் ''தமிழ் பைஸாஸ பாஷை; சமஸ்கிருதம் தேவபாஷை தமிழ் அபிவிருத்தியடைந்ததும் அது இந்நாள் வரை ஜீவித்து வருவதும் வடமொழியால்தான். வேதாந்த சித்தாந்த சாஸ்த்ர பூஜாவிதிகளையும் ஸ்தோத்ரா பூஜாவிதிகளையும் தவயோக ஸாதனங்களையும் நாடக-நாட்டிய-கலா ஞானங் களையும் தமிழர் சமஸ்கிருதத்திடமிருந்தே ஆஸ்ரயித்துக் கொண்டனர். அதனால் சம்ஸ்கிருதப் பதங்களை லிபி களைத் தமிழில் வெகுவாக ஸம்பத்தப் படுத்தித் தமிழைப் போஷிக்க வேண்டும் என்கின்றனர் ஒருசாரார்'' எனத் திருக்குறளுக்கு உரைவரைந்த பரிதியார் எழுதினார்.

11. 2 திருக்குறளைக் கையிலே வைத்துக் கொண்டுகூட இப்படி ஒருவரால் எழுத முடிகின்றது என்றால் எந்த அளவுக்கு அவர் திட்டவட்டமான ஒரு முடிவை உள்ளே வைத்துக் கொண்டு உரையெழுதத் தொடங்கினார் என்பது நன்றாகவே புலப்படுகின்றது.

11. 3 எந்த மொழி, உயிர்ப்பையெல்லாம் நாளும் பொழுதும் பறித்துக் கொண்டு, உயிர் மூலத்தை உரமாகத் தாக்கித் தாக்கி நெருக்கி எழமாட்டாமல் செய்து கொண்டு வந்ததோ, அந்த மொழியால் தான் ஜீவித்து வருவதாகக் கூறும் அளவு தடிப்பேறியவர் உரையெழுதினால் அவ்வுரை எப்படியிருக்கும் என்பதைக் கூற வேண்டியதில்லை.

---

18. சிவஞான. சிறப்புப்பா.
19. தொல். பொருள் 638.

''வழக்கெனப் படுவதுயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான''

## பெயர்மாற்றம்

12. 1 மதுரை என்றும் ஆலவாய் என்றும் பெயர்கள் இருக்க 'துவாத சாந்தம்' நுழைக்கப்பட்டது. மதுரை, ஆலவாய் என்பவை, தேனனைய தமிழ்நகர் என்றும், அலைமோதும் மதிலுடையது என்றும் தமிழியல் நெறிப்படி அமைந்த பெயர்களைத் தாமும் அப்பொருள் விலக்கி, புனைவுகள் அமைத்து உலாவும் வண்ணம் தொன்மம் (புராணம்) படைக்கப்பட்டது தெளிவே.

''மரைக்காடு'' மறைக்காடாக வேதாரணியமான செய்தி எவரறியார்?

'பழமலை' முதுகுன்றமாய் விருத்த கிரியான செய்தியென்ன?

தீயுண்டாகும் கல்லையுடையதும், உயர்ந்து ஓங்கியதும் ஆகியவற்றால் முறையே அருணமலையும் அண்ணாமலையும் எனப்பட்டது அருணாசலம் அருணகிரி என மாற்றப்பட்டதேன்?

மயிலாடுதுறையும் குரங்காடுதுறையும் முறையே மாயூரமாகவும், கபிஸ்தலமாகவும் மாறுவானேன்?

ஐயாறு 'பஞ்சநத'மானதும் குடமூக்கு கும்பகோணமானதும் எவரறியார்?

12. 2 இனிக் கரும்பனையாள் அம்மை, கரும்பன்ன சொல்லம்மை, குயிலினும் நன்மொழியம்மை, பண்மொழி நாயகி, யாழின் மொழி நாயகி, யாழின் மொழியம்மை, யாழைப் பழித்த மொழியம்மை, குழல்வாய் மொழியம்மை, பாலினும் நன்மொழியம்மை என்பன போல மொழியாலும், வாள் நெடுங்கண்ணி, காவியங் கண்ணியம்மை, மைமேவு கண்ணியம்மை, வடுவகிர்க் கண்ணியம்மை, வாளையங் கண்ணியம்மை என விழியாலும் இன்ன பிறவற்றாலும் பெற்ற பெயர்களெல்லாம் கருவழித்தும் உருவழித்தும் கெடுப்பானேன். வடமொழி மயப்படுத்துதல் என்னும் ஒன்றையன்றிவேறின்றே! பரிதியார் அன்னோர் இப்படியாலே தானே அப்படி எழுத வாய்ந்தது?

### பலசமயப் புகவு

13. 1 சமண சமயம், பௌத்த சமயம், இசுலாமியம், கிறித்தவம் இன்ன சமயப் புகவும், அவ்வச் சமயச் சொல்

லாட்சிகளைத் தமிழில் சேர்த்தன. சமய நாட்டத்தில் அழுந்தியவர்கள் இலக்கணம் கண்டனர். இலக்கியம் படைத்தனர்; உரைவரைந்தனர். இவற்றால் மொழி வளம் பெற்றது உண்டு என்பது மெய்ம்மையே. ஆனால்; அச்சமய அழுத்தத்தில் நின்றவர்கள் தங்கள் சமயத்தைச் சால்புடன் காக்க நினைத்தது போல் மொழி நலத்தை முறையாகப் பேண வேண்டும் என்பதில் கருத்துச் செலுத்தத் தவறி விட்டனர்.

13. 2 மணிமேகலையின் இறுதி நான்கு கதைகளைக் கற்பார் இவ்வுண்மையை அறிவர். 'ஸ்ரீபுராணம் முதலிய அருக சமய நூல்களைக் கற்பார் இன்னும் தெளிவாக அறிவர். கிறித்தவ சமயப் பரப்புநர்கள் தங்களுக்கென ஒரு நடையை அமைத்துக் கொண்டு வழிபாடு செய்வதும், பொழிவு செய்வதும் இற்றை நிலையிலும் கூட மாற்றமில்லாமல் உள்ளது.

13. 3 'யோவான் ''யாக்கோபு' பேதுரு, வளன் எனத்தமிழியல் கருதிப் பெயராக்கம் செய்யினும் வேண்டாத அளவு பிற மொழிச் சொற்களைத் தாங்கியே அவர்கள் திருமறை நூல் இக்காலத்தும் தோற்றமளிக்கின்றது.

மொழியாக்கக் குறைவுக்கு இவையெல்லாம் அடிப்படையாகத் துணை நின்றவை என்பது மறுப்பற்ற செய்தியாம்.

# 8. ஆள்வும் வாழ்வும்

## மன்னர் சிறப்பு

1. 1 ''ஆள்பவர் எப்படி; வாழ்பவர் அப்படி'' என்பதொரு பழமொழி. ''நெல்லும் உயிரன்று; நீரும் உயிரன்று; மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்''[1] என்பது சங்கப் பாட்டு.

1. 2 ''மன்னனைக் காணின் மாலைக் கண்டேன்'' என்னும் பெருமிதவுரை அரசரை நன்கு அடையாளம் காட்டும். 'ஆள்பவன்' என்பது நிகழ்கால வேந்தனைக் குறித்தல் வெளிப்படை. ஆயின் இறந்தகாலத்தில் சொன்னால் ஆள்பவனாக இருந்தவன் 'ஆண்டவன்' ஆகிவிடுகின்றான் அல்லவோ! ஆண்டவன் வரலாறே இறைவன் வரலாறாக எழுந்தமை ஆய்வுடையார் எளிதில் கண்டறியும் செய்தியே.

1. புறநானூறு. 186.

## பாண்டியர்

2.1 'பாண்டிய மன்னர் தலைநகர் உள்நாட்டில் இருந்தது. தெற்கில் இருந்த மதுரை முற்றாக அழிந்தது; கடலோடணுகிய கதவநகர் (கபாடபுரம்) அழிந்தது; ஆனால் நாட்டின் நடுவிடத் தமைந்த மதுரை நிலைத்தது. சோழர் புகாரும் சேரர் வஞ்சியும் இடமும் தடமும் காணவொண்ணாமல் இதுகாறும் இருப்பதும், ஆய்ந்துரைப்பதும் அறிஞர் அறிந்த செய்தியே.

2.2 பாண்டியர் தலைநகராம் மதுரை, தமிழ்க்குத் தலைநகராகவும் திகழ்ந்தது. முத்தமிழ் நாட்டுப் புலவர்களும் ஒருங்குகூடி ஆயவும் அரங்கேற்றவும் இடமாகவும் வாய்த்திருந்தது. வேந்தர்களுடன் சிற்றூர் பேரூர்ப் புலவர்களும்- பல்வேறு தொழில் நிலை குடிநிலை ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தவர்களும் சங்கச் சான்றோராகத் திகழ்ந்தனர். மூவேந்தரும் தமிழ் வளர்ச்சியில் பங்கு கொண்டவரே எனினும் பாண்டியர் பங்கு மிகப்பெரிதாம்.

2.3 தமிழ் வளர்க்க-வழிவழியாக வருவாரும் தமிழ் வளர்க்கச் சங்கங் கண்ட பாண்டியர் பெயர்களைக் காலவகையில் பார்த்தல் ஓராய்வு முறையாம்.

கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி
தலையலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன்
நம்பி நெடுஞ்செழியன்
பாண்டியன் அறிவுடை நம்பி
பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்
பாண்டியன் கருங்கையொள் வாட்பெரும் பெயர் வழுதி
பாண்டின் கீரஞ்சாத்தன்
பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி
பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்
பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
பாண்டியன் முது குடுமிப் பெருவழுதி
பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி
பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு

இப்பெயர்கள் புறநானூற்றில் பாடப்பட்டோர் வரிசையில் காணப்படுவன.[2] இவ்வேந்தர்கள் அனைவரும் சங்க காலத்தவர் என்பதும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு

2. டாக்டர் உ. வே. சா. பதிப்பு.

முற்பட்டவர் என்பதும் வெளிப்படை. இவருள் உக்கிரப் பெருவழுதியே கடைசி வேந்தன் என்றும், அவன் காலம் கி. பி. 225 என்றும் கூறுவர்.

2. 4 இவர்களுக்குப் பின்னர் ஆறாம் நூற்றாண்டு முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்த பாண்டியர்

| பெயர்கள் | காலம் |
|---|---|
| கடுங்கோன் | 590- 620 |
| மாறவர்மன் | 620- 645 |
| சேந்தன் | |
| அரிகேசரி பராங்குச மாறவர்மன் | 670- 710 |
| கோச்சடையன் இரணதீரன் | 700- 730 |
| மாறவர்மன் இராசசிம்மன் | 730- |
| சடிலவர்மன் | 765- 815 |
| சிறீமாற சிறீவல்லபன் | 815- 862 |
| வரகுணன் II | 862- 880 |
| மாறவர்மன் இராசசிம்மன் | 900- 920 |
| வீரபாண்டியன் | 920- 959 |
| பராக்கிரம பாண்டியன் | 1150- |
| குலசேகரன் | 1167-1171 |
| குலோத்துங்க வீரபாண்டியன் | 1182-1189 |
| விக்கிரம பாண்டியன் | 1182-1190 |
| ஜடாவர்மன் குலசேகரன் | 1190-1214 |
| மாறவர்மன் சுந்தரபாண்டியன் I | 1216-1238 |
| மாறவர்மன் சுந்தரபாண்டியன் II | 1238-1251 |
| ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் | 1251-1261 |
| வீரபாண்டியன் | 1262-1267 |
| மாறவர்மன் குலசேகரன் | 1268-1308 |
| சடாவர்மன் சுந்தரன் | 1275-1290 |
| மாறவர்மன் குலசேகரன் | 1314-1321 |
| மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் | 1334-1352 |
| சடாவர்மன் பராக்கிரமபாண்டியன் | 1357-1372 |
| பராக்கிரம பாண்டியதேவன் | 1365 |
| பராக்கிரம பாண்டியன் | 1384 |
| ஜடாவர்மன் குலசேகரன் | 1395 |
| அரிகேசரி பராக்கிரம பாண்டியன் } மாறவர்மன் வீரபாண்டியன் } | 1422 |
| அழகன் பெருமாள் குலசேகரன் | 1430 |
| வீரபாண்டியன் I | 1437 |
| ,, II | 1457 |

| | |
|---|---|
| பராக்கிரம பாண்டியன் குலசேகரதேவன் | 1479 |
| பராக்கிரம பாண்டியன் | 1516 |
| ஜடிலவர்மன் சிறீவல்ல பராக்கிரமன் | 1533 |
| குலசேகரன் அல்லது பெருமாள் வீரபாண்டியன் | 1543 |
| கோனேரின்மை கொண்டான் குலசேகர தர்மபெருமாள் | 1550 |
| சிறீவல்லப அதிவீர ராமன் | 1562 |
| குலசேகர பராக்கிரம அழகன் சொக்கன் | 1572 |
| அபிராம வரதுங்கராமன் வீரபாண்டியன் | 1586 |
| சீவல மாறன் | 1615 |

இப்பெயருடைய வேந்தரும் அவர் காலமும், கா. சுப்பிர மணியனார் இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றவையாம்.

## பிறர் ஆட்சி

3. 1 இவ்வாறே சோழர் பெயர்களும், சங்ககாலத்திற்கு முற்பட்டும் பிற்பட்டும் இருந்த நிலையைப் பட்டியலிட்டுக் கண்டு கொள்ளலாம். சங்ககாலச் சேரவேந்தர் பெயர்கள் மற்றை வேந்தர்களின் பெயர் போலவே தூயதமிழில் அமைந்தனவே. இடைக்கால-பிறகாலப் பாண்டியர், இடைக்கால-பிற்காலச் சோழர் எனச் சொல்லப்படுவது போல சேரர் பெயரைச் சொல்ல வாய்க்கவில்லை. தமிழின் வழியேயற்று மலையாளம் என்னும் மொழிக்கு உரியவராகி வடமொழி வழிப்பட்டவராகவே பிரிந்துவிட்டனர். நாடாள் வேந்தர் நிலைமை இஃதெனின் அந்நாட்டு வாழ்வார் தம் மொழிநிலை எப்படி இருந்திருக்கும்?

3. 2 இனிப் பல்லவ வேந்தர்களை என் சொல்வது? அவர்கள் தமிழர் அல்லர். அவர்கள் வடமொழியை வளர்த்தற்கே ஆவன செய்தனர். கல்வெட்டிலும் வடமொழியைப் புகுத்தினர். அவர்கள் ஆட்சியிலும் தமிழகம் ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரை நான்கு நூற்றாண்டுகள் இருந்தது.

3. 3 பதினாறாம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை ஏறத்தாழ இருநூறு ஆண்டுகள் மதுரையில் நாயக்க மன்னர் களின் ஆட்சி நடந்தது.

---

3. காலக்குறிப்பு அகராதி. பக்.132-4

3. 4 அதற்கு முற்படவே நெல்லைப்பகுதியில் வீரபாண்டியக் கெட்டிபொம்மு வழியினர் ஆட்சி இருந்தது. தஞ்சைப் பகுதியில் வீர சிவாசி வழிவந்த மராட்டியர் ஆட்சி ஊன்றியது. தெலுங்கினைத் தாய்மொழியாக உடைய நாயக்க மன்னர்களும், மராட்டியைத் தாய்மொழியாக உடைய சிவாசி வழியினரும் தங்கள் மொழிவளர்ச்சிக்கும், வடமொழி வளர்ச்சிக்கும் பாடுபட்டனரேயன்றி மக்கள் மொழியைக் கருதினார் அல்லர். அவர்கள் காலத்தில் தமிழ் தன் உயிரைத் தாங்கிக் கொண்டிருந்ததே அருமை எனலாம்.

3. 3 ஆங்காங்கிருந்த தமிழ்க் குறுநிலமன்னர்களும், தமிழ்ச் சைவமடங்களும், வழிவழியாக வந்த புலவர் குடும்பத்தவரும் அக்கால நிலையில் தமிழ் முற்றாக அழிந்து விடாமல் நோய்ப்படுக்கையில் கிடக்கும் நோயர் நிலையில் உயிரோடிருக்க வைத்திருந்தனர்.

## ஆங்கிலர் ஆட்சி

4. 1 பதினாறாம் நூற்றாண்டு முதலே ஆங்கிலர் முதலிய அயலார் குடியிருப்பாகவும், ஆட்சிக்களமாகவும் தமிழகம் ஆயிற்று. அவர்கள் நாட்டு வளத்தைக் கொள்ளையடித்ததுடன், நாட்டுமொழி வளர்ச்சிக் கருத்தும் இல்லாராய் இருந்தனர். ஆட்சிக்குத் துணையாமளவு பணிசெய்தற்கு ஆங்கிலக் கல்வி பயிற்று வித்தலிலேயே கருத்தைப் பெரிதும் செலுத்தினர். ''கற்றவர்கள் என்பார் ஆங்கிலம் கற்றவர்களே'' என்னும் புதுமொழியும் தோன்றுநிலை உண்டாயிற்று. அதனினும் மேலாக, ''எனக்குத் தமிழ் தெரியாது'' என்றும், ''தமிழில் பேச வராது'' என்றும் சொல்லித் தங்களை மேனாட்டுப் பிறவியாகக் காட்டிக் கொள்வதே மேதைத் தன்மை என்னும் போலிகளும் நடிப்பர்களும் நாட்டில் மலிந்தனர். கொடிகட்டிப் பறக்கும் அவர்கள் குதிகாலுக்குக் கீழே கிடந்த தமிழ், எப்படித்தலை தூக்கமுடியும்?

## கல்விநிலை

4. 2 ஆங்கிலவர் ஆட்சிக் காலத்தில் அலுவலக நடைமுறை அனைத்தும் ஆங்கிலம் ஆயிற்று; கல்விக்கூடங்கள் தொடக்கப் பள்ளி முதலே ஆங்கிலச் சாலையாக அமைந்தன! அங்குப் பொழுதுபோக்குக்கு அமைந்தது போல் தமிழ்ப்பாடம் இடம் பெற்றது. அதுவும் கல்லூரி எல்லைக்குள் இல்லை; கீழ்

வகுப்புகளில்; கல்லூரிகளில் தமிழாசிரியர் என்றால், நகையாடற்குரிய பிறப்பாகப் பிறந்து விட்ட ஒருவர், 'இடுக்கண் வருங்கால் நகுக' என்னும் திருக்குறளின் மெய்வடிவாகத் திரிந்தார்.

4. 3 மருத்துவர், பொறியர், வழக்குரைஞர், இன்னவர் தமிழ்த் தாய் பெற்ற மக்கள் எனினும், அத்தாயை மறந்ததுபோலவே தமிழையும் முற்றாக மறந்தவர். என்செய்வார்? ஆங்கிலவர் வைத்துக் கொண்டது போல் 'துபாசி' †இல்லாமல் தமிழறிந்து கொண்டிருந்தனர் என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

## கோயில் மொழி

5. 1 ஆட்சி நிலை இப்படியானால் என்ன? எப்படியானால் என்ன? தமிழ்வேந்தர் காலத்திலேயே 'தமிழ்ஞானசம்பந்தர்' பாடிய பாட்டுக் கூடத் தமிழ்க் கடவுள்களுக்குப் புரியாமல் போயிற்று! அந்நாளில் புகுந்த வடமொழிவழிபாடு இன்று வரை புரியாமலே சேதப்பட்டுக் கொண்டேதான் உள்ளது! முழுச்செவிடர் தலையாட்டுவதுபோல் தமிழக மக்கள் திருக் கோயிலில் தலையாட்டிக் கொண்டுதான் உள்ளனர்! கோயில் வழிபாடும் நல்வினை அல்வினை வழிபாடும் தமிழுக்கு ஆகாது என்று வடமொழியாளர் கூறுவது அவர்கள் தந்நலங் கருதியது; அப்படித்தான் அவர்கள் சொல்வார்கள் என்பதில் இருகருத்து இல்லை. ஆனால், தமிழர்களும் அவர்களுக்கு மேலே தாவிக்குதிக்கும் வெறியில் தலைப்பட்டு நிற்பதும் தடைப்பட்டு நிற்பதும்தான் அவர்கள் தமிழர்கள் என்பதற்கு ஐயுறவானதாக உள்ளது!

## இசைத் தமிழ்

5. 2 ஆட்சி நிலையமும், ஆலயமும்தான் இப்படி என்றால் உள்ளத்தை ஒன்றவைக்கும் இசை நிலைதான் என்ன? பாடுவோரையும் பாடக் கேட்போரையும் இசையவைக்கும் இசை, இசையாமலே இந்நாள் வரை போயிற்று. அண்ணாமலை தமிழிசை மன்றமும், முத்தையா தமிழிசை மன்றமும், தமிழிசைக் கல்லூரிகளும் தோன்றி விட்ட இந்நாளில்கூட 'தமிழிசையா?' அப்படியொன்று உண்டா எனக்கேட்கும் இழிநிலை உண்டு என்றால், வேற்று மொழியாட்சி கொடி கட்டிப் பறந்த அந்நாளிலே கேட்க வேண்டுமா?

---

†. துபாசி—இருமொழிப் புலமையர்: மொழிபெயர்ப்பர்.

### தமிழிசை நூல்கள்

5. 3 பண்வகுத்துப் பாடிய பரிபாடல் இருந்தும், சிலம்பின் வரிப்பாடல்கள் திகழ்ந்தும், தேவார திருவாசக திருவாய் மொழித் தேனிசைப் பாடல்கள் உலாவந்தும், 'திருவிசைப்பா' என்றொரு நூலே சிறந்தும், சித்தர் பாடல்களும் அருண கிரியார் வண்ணப் பாடல்களும், வள்ளலார் முதலிய பெரு மக்கள் பாடிய கீர்த்தனைப் பாடல்களும் கண்முன்னே காட்சி வழங்கியும் அவற்றையெல்லாம் நோக்கியும் பாராமல் கேட்டும் கேளாமல் 'தமிழிசை'க்குத் தடையராயும் எதிர்ப் படையராகவும் பணி செய்தலைக் கடனாகக் கொண்ட வர்கள் தாம் அத்தகையர் என்றால், தமிழர்க்கேனும் உணர்வு வரவேண்டுமே! தமிழிசையால் வாழ்வார்க்கேனும் தம் முணர்வு வேண்டுமே!

5. 4 இப்படி ஒரு மொழி மீளா அடிமையாய் சிறைப் படுத்தப் பட்டும் சீரழிக்கப் பட்டும் கிடக்கும் நிலையில் 'வாராது வந்த மாமணி'யென, நெட்டிடை கிழித்துப் பட்டொளியொன்றுண்டாயிற்று. அதனைக் காண்போம்.

# 9. தூண்டலும் துலங்கலும்

1. 1 ''எந்த ஒரு தூண்டலும் ஒரு துலங்கலுக்கே; எந்த ஒரு துலங்கலும் தூண்டலால் நிகழ்ந்ததே'' என்பது பொது விதி. இவ்விதி 'தனித்தமிழ்' உணர்வு தோன்றியதற்கும்பொருந்தும்!

1. 2 மறைமலையடிகளார்க்குத் தனித்தமிழ் உணர்வு தோறின் யதற்குரிய நெருக்கச் சூழல் பலப்பல உண்டு. அவற்றைத் 'தூண்டலும் துலங்கலும்' வழியே அறிவோம்.

### அறிஞர் கால்டுவெல் (1814-1891)

2. 1 கிறித்து சமயத் தொண்டராக வந்த இவர் பன்மொழிப் புலமையாளர். குறிப்பாகத் திராவிட மொழிகள் பலவற்றை யும் நன்கு பயின்றவர். இவர் ஆங்கிலவர் ஆகலின் மேலை யாரிய மொழிகள் சிலவும் நன்கறிந்தவர். இவர் செய்த செயற்கருஞ் செயல் 'ஒப்பிலக்கணம்' ஒன்று வரைந்ததாம். அந்நூல் அடிகளார் தனித்தமிழ்க் கொள்கைக்கு அடிப்படை நூலெனின் தகவாம்.

## கால்டுவெலார் கருத்துரை

2. 2 ஒப்பிலக்கண நூலின் முகவுரையே தனிநூலாம் விரிவுடையது. அதிலிருந்து சில குறிப்புகளை அறிதல் பயன்தரும்:

வடமொழியில் இருந்து திராவிட மொழிகள் பிறந்திருக்க வேண்டும் என்று கொண்ட பழங்கொள்கை குருட்டுக் கொள்கையே என்பதில் ஐயமேயில்லை. இந்தி வங்காளி முதலிய கௌரிய மொழிகள் வடமொழியில் இருந்து தோன்றியிருக்கக் கூடுமாதலால் திராவிட மொழிகளும் அவ்வாறேதான் தோன்றியிருக்கவேண்டும் என்று கொள்ளுதல் சால்பாமோ? ஆகாது. கீழ்வரும் உண்மைகளைச் சரிவர உய்த்துணராமையே தவறான இம்முடிவுக்குக் காரணமாகும்.

2. 3 1) திராவிட மொழிகளில் வடமொழிச் சார்பில்லாத தனிப்பகுதி, வடமொழிச் சார்புள்ள பகுதியினும் மிகமிக விரிந்ததொன்று என்பதைப் பண்டையாராய்ச்சியாளர்கள் புறக்கணித்து விட்டனர்.

2. 4 2) ஒருமொழியின் உயிர்நிலைகள் என்று கருதப்படுவனவான இடப்பெயர்கள், வினைத் திரிபுகள், பெயர்த் திரிபுகள், சொல்லாக்க முறை முதலிய எல்லாவற்றிலும் திராவிட மொழிகள் வடமொழியினின்று அடியோடு மாறுபடுகின்றன என்ற கண் கூடான உண்மையையும் அவர்கள் புறக்கணித்து விட்டார்கள்.

2. 5 3) திராவிடமொழிகளும் வடமொழியினின்று தோன்றினவே என்று கொண்ட மேனாட்டாராய்ச்சியாளர் தங் கொள்கைக்குத் திராவிட மொழிகளில் அக்காலை வெளியிடப்பட்டிருந்த அகர வரிசைகளையே (Dictionaries) ஆதாரமாகக் கொண்டிருந்தனர். அவற்றுள் வடமொழிச் சொற்களிற் பெரும்பாலான மாறுதலின்றி அப்படியே காணப்படுகின்றன. மாறுதல் பெற்ற சிலசொற்கள் தம் வடமொழித் தொடர்பை நன்கு தெரிவிப்பனவாகக் காணப்படுகின்றன. ஆனால், திராவிட மொழிப் புலவர்கள் இச்சொற்களைத் திராவிடச் சொற்களைத்-திராவிடச் சொற்களாகக் கொள்ளாமல் (வடமொழியிலிருந்து வந்த) திசைச் சொற்களாகவே கொண்டனர் என்பதும் அவற்றின் திரிபளவிற்கு ஏற்றவாறு அவை அவர்களால் ஒழுங்குபடுத்திப் பதிப்பிக்கப்பட்டன என்பதும்-பாவம்! அவ்வாராய்ச்சியாளர்க்குத் தெரியாது. அன்றியும் வடமொழிச் சார்பற்ற சொற்களின் தொகுதியே

பெரும் பகுதியாகும் என்பதை உணர்ந்து, அச்சொற்களைத் தனியாகப் பிரித்து முறைப்படுத்தி நாட்டுமொழிச் சொற்கள் அல்லது செஞ்சொற்கள் என்று பாராட்டி வந்தனர் என்பதை அவ்வாராய்ச்சியாளர் யாங்ஙனம் அறிந்திருப்பர்?

2.5.1 உண்மையில் திராவிட மொழிகளிற் காணப்படும் வட சொற்களையும் சிதைவுகளையும் பிரித்தறிதல் அரிதன்று ஒரு சில சொற்களே வடசொல்லா திராவிடச் சொல்லா என்று ஆராய்ந்து அறிதற்கு அரியனவாம் 'நீர்' என்பதும் 'மீன்' என்பதும் இருமொழியாளராலும் தத்தம் மொழிச் சொற்கள் என்று உரிமை பாராட்டப்படுகின்றன. எனினும், இரண்டும் திராவிடச் சொற்கள் என்பதே ஏற்புடைத்தாகும்.

2.6 4) மேலும், வடமொழியிலிருந்து தோன்றியனவே திராவிட மொழிகள் என்று நம்பிய மேனாட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு, வடசொற்களையே எடுத்தாளாமலோ அங்கொன்றும் இங்கொன்றுமாக மிகவும் அருகிய நிலையில் மட்டும் எடுத்தாண்டோ வரும் திருந்தாமொழிகளும் திராவிட மொழியினத்தில் இருக்கின்றன என்பதே தெரியாது. அன்றியும் வடசொற்களை ஓரளவிற்கு எடுத்தாளும் திருந்திய திராவிட மொழிகளும் கட்டாயமாக அவற்றை எடுத்தாளத்தான் வேண்டும் என்பதில்லாமல், விருப்பமுளதேற் பயன்படுத்தியும், இன்றேல் அறவே ஒதுக்கியும் வருகின்றன என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஆனால், இன்றைய நிலையை நோக்கின் வடமொழியை அறவே நீக்குவதென்பது தெலுங்குமொழிக்கு அரிதாகும். கன்னட மொழிக்கோ மிகவும் அரிது. மலையாளமொழிக்கோ அரிதினும் அரிது. இம்மொழிகள் கணக்குவழக்கில்லாமல் வடசொற்களை எடுத்தாண்டு வந்துள்ளமையாலும் அச்சொற்களின் உதவியை நாடுவதே வழக்கமாகக் கொண்டுள்ளமையாலும் தத்தம் சிறப்புப் பண்புகளை யிழந்து, தனித்து நின்றியங்கும் ஆற்றலையும் இழந்து நிற்கின்றன. ஆனால், திராவிட மொழிகள் அனைத்திலும் மிகவும் திருந்திய பண்பட்ட நிலையிலுள்ள தமிழ் மொழியோ, வேண்டுமென்றால் வடசொற்களை அறவே அகற்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்திருப்பதோடன்றி அவற்றின் உதவியில்லாமல் மிகவும் மேம்பட்டு வளமுற்று மிளிரும் ஆற்றலும் வாய்ந்ததாகும்.

2.6.1 பண்டைத் தூய தமிழ்மொழிக்குச் செந்தமிழ் என்று பெயர். இச் செந்தமிழிலேயே தமிழ்மொழியிற் காணப்படும் பண்டை யிலக்கியங்களிற் பெரும்பாலான இயன்

றுள்ளன. ஆனால், அவற்றுள் காணப்படும் வடசொற்களோ மிகமிகக் குறைவு. இன்றைய பேச்சுத் தமிழுடனும் உரைநடைத் தமிழுடனும் இந்நிலை மாறுபட்ட தொன்றாகக் காணப்படும். எதனால் அவ்வாறெனிலோ கண்ணும் கருத்துமாய் இருந்து வடசொற்களையும்வடமொழி எழுத்துகளையும் விலக்கி, தூய தமிழ்ச்சொற்கள் மரபுமொழிகள் அமைப்புகள் ஆகியவற்றையே கையாண்டு வந்துள்ளமையினாலேதான். தமிழ் மக்களிடையே இச் செந்தமிழ் மொழிப் பாதுகாப்பு எவ்வளவுக்குப் பரவியிருந்த தென்பது எழுதப்பட்ட ஒரு தமிழ்நூலில் எவ்வளவுக் கெவ்வளவு வடசொற்கள் அருகிக் காணப்படுகின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு அது சிறந்ததொரு நூலென்றும், எவ்வளவுக் கெவ்வளவு வடசொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அது தாழ்ந்ததொரு நூலென்றும் கருதி மதிப்பிடும் பழக்கம் பண்டு தொட்டுப் பயின்று வருகின்றமையினாலேயே இனிது தெளியப்படும்.

2. 6. 2 பிறமொழி நூல்கள் சிலவற்றில் எவ்வளவுக்கெவ்வளவு வடமொழிச் சொற்கள் பயின்று வருகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அந்நூல்கள் அவ்வம் மொழியினரால் சிறப்புடன் போற்றப்படும்; தமிழிலோ எவ்வளவுக் கெவ்வளவு தமிழ் நூல்கள் வடமொழியின் உதவியை நாடாமல் தனித்தியங்குகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு சிறப்புடன் போற்றப்படும். உண்ணாட்டுச் சிற்றூர்களிலும் நாட்டுப் புறங்களிலும் வாழ்ந்துவரும் தாழ்ந்த மக்களிடையே வடமொழிச் சொற்களைப் பேச்சுவழக்கிலும் கையாளாமல் ஒதுக்கும் தூயபழக்கம் காணப்படுகின்றது. ஒரு மொழியின் தொன்மைச் சிறப்புநிலை அம்மொழியியலிலும் செய்யுள்களிலும் தாழ்ந்த குடிமக்களின் பேச்சுக்களிலுமிருந்தே ஆராய்ந்து காணப்படும் என்பது ஒரு பொதுவுண்மையாகும்.

2. 6. 3. ''பிற்காலத்தில் மிகவும் வலிந்து முயன்று எழுதப்பட்ட தமிழ் உரைநடை நூல்களிலும் பார்ப்பனர்கள் பேசும் தமிழிலும், மிகவும் கற்றவர்களாகக் கருதப்படும் தமிழர்களின் பேச்சிலுமே வடமொழி மிகைப்படப் பரவி வழங்குகின்றது. அதுவும் சமய உண்மை, அறிவியல், தத்துவம் ஏனைக் கலைகளிலுள்ள மரபுச் சொற்கள் ஆகியவற்றை விளக்குமிடங்களில் மட்டுமே இவ்வாறு வடசொற்கள் பெரும்பான்மையும் கையாளப்படுகின்றன. ஆனால், இவ்வாறு காணப்படும் வடசொற்களின் தொகை,

ஆங்கில நூல்களில் கையாளப்பட்டுக் காணப்படும் இலத்தீன் மொழிச் சொற்களின் தொகையைவிட மிகுதியானது ஒன்றன்று.''[1]

3. 1. பழந்தமிழ் இலக்கண இலக்கியப் பரப்பு முற்றாக வெளிப்படுமுன் வாழ்ந்தவர் கால்டுவெலார். அவர் கண்டறிந்த பண்டை நூல்களின் அளவு கொண்டே இத்தகு முடிவுகளைத் தெளிவாக ஆய்ந்துரைத்தார். அவர்தம் ஆய்வுகளில் ''கடுமையான சறுக்கல்கள் உண்டு''[2] என்பது மெய்ம்மையாயினும் அவர்தம் அடிப்படை ஆய்வின் உண்மை செவ்விதாக அமைந்தது. அடிகளார்க்கும் அவர்க்குப் பின்னே சொற்பிறப்பாய்வில் முழுதுற ஒன்றிய பாவாணர்க்கும் கால்டுவெலார் தந்த கருத்துவளமும் வழி காட்டுதலும் பெரிதாம் என்பது இங்குக் கால்டுவெலார் காட்டியுள்ள நான்கு குறிப்புகளாலேயே நன்கு விளக்க மாகும்.

## பேராசிரியர் பெ. சுந்தரனார் (1855-1897)

4. 1. அடிகளாரின் இயற்றமிழ் ஆசிரியர் 'நாராயணசாமி' என்பார். அவர் மாணவராக இருந்தவர் பேராசிரியர் சுந்தரனார். அடிகளாரைச் சுந்தரனாரிடத்து ஆற்றுப் படுத்துத்தாமும் உடன் சென்று பேராசிரியரைத் திருவனந்த புரத்தில் கண்டு அளவளாவியவர் நாராயணசாமியார்.

4. 2. பேராசிரியர் தொடர்பு அடிகளார்க்கு நலம்பல சேர்த்தது. அடிகளார் புலமையை அறிந்த பேராசிரியர், ஆங்கொரு பள்ளியில் தமிழாசிரியப் பணிபுரிதற்கு ஏற்பாடு செய்து தந்தார். அரிய பொழிவுகள் சில செய்தற்கும் வாய்ப்புச் செய்தார். அடிகளார் புலமைத்திறம் விளங்கச் சான்றிதழ் ஒன்றும் வழங்கினார்[1] இவ்வெல்லாவற்றினும் மேலாகப் பேராசிரியர் புலமைத் திறம், ஆய்வுச் சிறப்பு ஆகியவற்றை அடிகளார் அறிந்து கொள்வதற்கு வாய்ப் பாயிற்று.

4. 3. ''கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய மொழிகளின் மூலமொழி தமிழே'' என்றும், ''சீரிளமைத் திறமுடையது'' அது என்றும் மனோன்மணியத்தின் தமிழ்

---

1. கால்டுவெல் ஒப்பிலக்கணம்; கழகம். பக். 54-62.
2. தமிழ் வரலாறு. பாவாணர். கால்டுவெல் கண்காணி யாரின் கடுஞ் சறுக்கல்கள் பக். 26-28.
1. மறைமலையடிகள் வரலாறு. பக். 9-10.

வாழ்த்தில் இசைத்தவர். அன்றியும் வரலாற்று ஆய்வு நோக்கில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியவரும் அவர் : ''சதுமறையாரியம் வருமுன் சகமுழுதும் நினதாயின், முது மொழிநீ அநாதியென மொழிகுவதும் வியப்பே'' என விளம்பியவரும் அவர். பேராசிரியர் காட்டிய வரலாற்றுத் திருப்பம் வருமாறு :

4. 4. ''மனோன்மணீய ஆசிரியர் பேரா. சுந்தரம்பிள்ளை அவர்கள் 1908-இலேயே, 'வட இந்தியாவில் சமற்கிருதத்தையும் அதன் வரலாற்றையும் படித்து, நாவல (இந்தியா) நாகரிகத்தின் அடிப்படைக் கூற்றைக் காணமுயல்வதானது அப்புதிரை (problem) மிகக் கேடானதும் மிகச் சிக்கலானதுமான இடத்தில் தொடங்குவதாகும். விந்தியமலைக்குத் தெற்கிலுள்ள இந்தியத் தீவக் குறையே (peninsula) இன்றும் சரியான இந்தியாவாக இருந்து வருகின்றது.

4. 5. இங்குள்ள மக்களுட் பெரும்பாலார், ஆரியர் வருமுன்பு தாங்கள் கொண்டிருந்த கூறுபாடுகளையும் மொழிகளையும் குமுகாய (சமுதாய) ஏற்பாடுகளையுமே இன்றும் தெளிவாகக் கொண்டிருந்து வருகின்றனர். இங்குக்கூட, வரலாற்றாசிரியனுக்கு உள்நாட்டுப் பாவினின்று அயல்நாட்டு ஊடையை எளிதாய்ப் பிரித்தெடுக்க இயலாவாறு, ஆரியப் படுத்தம் பேரளவு நிகழ்ந்துள்ளது. ஆயினும் எங்கேனும் ஓரிடத்தில் அதை வெற்றிபெறப் பிரித்தெடுக்க இயலுமாயின், அது தெற்கில்தான். எவ்வளவு தெற்கே போகின்றோமோ அவ்வளவு பிரித்தெடுக்கும் ஏந்து (வசதி) மிகும்.

4. 6 அங்ஙனமாயின் அறிவியல் முறைப்பட்ட இந்திய வரலாற்றாசிரியன், தன் ஆராய்ச்சியை இது வரை மிக நீடப் பெருவழக்காகக் கையாளப்பட்டு வந்த முறைப்படி கங்கைச் சமவெளியினின்று தொடங்காமல் கிருட்டிணை காவேரி வைகையாற்றுப் பாய்ச்சல் நிலங்களினின்று தொடங்குதல் வேண்டும்'' என்று எழுதினார்''[2] என்று குறிப்பிடுகிறார் பாவாணர்.

4. 7 இத்தகு பேராசிரியர் தொடர்பும் உடனுறைவும் அடிகளாரின் பத்தொன்பதாம் இருபதாம் அகவைகளில் நேர்ந்தன. அவ்வாண்டுகள் 1895, 1896 ஆம்.[3]

கால்டுவெலார் தமிழைப் பற்றிக் கூறிய கருத்துகளுக்குப் பேராசிரியர் ஆய்வு அரணாக இருந்தமை

---

2. தமிழர் வரலாறு. முன்னுரை பக். 15
3. மறைமலையடிகள் வரலாறு. பக். 10-11

அடிகளார்க்குச் சிறந்த தூண்டுதலாக அமைந்திருக்க வேண்டும்.

## சூளை சோமசுந்தர நாயகர் (1846-1901)

5. 1 நாகையில் அடிகள் இருந்த இளந்தை நாளில் ஆங்குப் பொழிவு செய்ய வந்தாருள் ஒருவர், "வைதிக சமய சித்தாந்த சண்டமாருதம்" எனப்பட்ட சூளை சோம சுந்தர நாயகர் ஆவர். அவர் தொடர்பு அடிகளுக்கு ஏற் பட்டது. அவர் கருத்துகளை மறுத்து எழுதியவர்க்கு அடிகள் 'முருகவேள்' என்னும் புனை பெயர் கொண்டு மறுப்பு எழுதினார். அம் மறுப்புகள் 1897 இல் நாகை 'நீலலோசனி' என்னும் இதழில் வெளிவந்தன. பின்னர் நாயகர் கருத்திற்கு இணங்கி 'சித்தாந்த தீபிகை அல்லது உண்மை விளக்கம் என்னும் மாதிகையின் ஆசிரியராக அமர்ந்து அரிய கட்டுரைகள் வரைந்தார். சோம சுந்தர நாயகரின் புலமை நலத்திலே அடிகள் தோய்ந்தாலும், வரை கடந்த வடமொழி வழிப்பட்ட உரை நடையை மேற் கொண்டாரல்லர்.

5. 2 "அடிகள், இவருடைய உரைநடைச் சிறப்பை-இனிமையை-அடிக்கடி எடுத்தோதி இன்புறுவதுண்டு-அடிகள் தாம் எழுதும் உரைநடைக்கு 'இவரையும் (சபாபதி நாவலரையும்) யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவல ரையும், வடலூர் திருவருட் பிரகாசவள்ளலார் இராமலிங்க சுவாமிகளையும் வழிகாட்டிகளாகக் கொண்டோம்' என்று கூறுவதுண்டு"[4] என்பதால் சோமசுந்தர நாயகரின் பெருங் கலவை நடை அடிகளார்க்கு உடன்பாடாயில்லை என்பது புலப்படும். இஃதொரு மறைமுகத் தூண்டுதலாம்,

## பரிதிமாற் கலைஞர் (1870—1903)

6. 1 முப்பத்து மூன்று ஆண்டுகளே வாழ்ந்த இப்பெரும் புலவர் தம் பெயராகிய 'சூரிய நாராயண சாஸ்திரி' என்பதைப் பரிதிமாற் கலைஞனென மாற்றிக் கொண்டவர். 1893 இல் சென்னை கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரிய ராகப் பணி தொடங்கியவர்.[5] அதே கல்லூரியில் 1898 இல் மறைமலையடிகளாரும் தமிழாசிரியப் பணி ஏற்றார்.[6]

4. மறைமலையடிகள் வரலாறு பக். 121.
5. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் பக். 30
6. மறைமலையடிகள் வரலாறு பக். 22

ஆகலின், கல்லூரியின் ஒருங்கிணையும், துறைத் தொடர்பும் அடிகளாருக்கு முன்னோடியாக அமைதல் கருதக் கூடியதே.

6. 2 சூரியநாராயண சாத்திரியார் தம் பெயரை மாற்றிக் கொண்டார். அப்பெயர் தனித்தமிழில் பரிதிமாற்கலைஞர் என ஆயிற்று. சூரியன்-பரிதி; நாராயணன்-மால்; சாத்திரி கலைஞன். சாத்திரியார் தம் பெயரைத் தனித் தமிழாக்க வேண்டும் என்றா மாற்றினார்? அவரே கூறுகிறார்.[7]

6. 3 இனியிந் நூலினை வெளிப்படுத்தும் வழி, எனதுண்மைப் பெயரை மறைத்துப் பரிதிமாற் கலைஞன் எனப் புனைவுப் பெயர் நிறுத்தி வெளிப்படுத்துகின்றேன். நன்னூலொன்று செய்தானது, புகழின்மையா னிகழப் பட்டொழிதலும் புன்னூலொன்று செய்தான துயர்ச்சியாற் சாலவும் புகழப் பட்டிலங்கலும் நாடொறுங் காண்டலினென்க. இவ்வாறு உண்மை மதிப்பு விளங்குதல் ஒன்றையே உன்னியானென் மெய்ப்பெயர் குறியாமையைப் பொருட்படுத்தாது நூலுட் காணப்படும் குற்றங்களை யெனக் கெடுத்துக் காட்டலே யன்றி மிகையெனத் தாங்கொள்வனவற்றிற்கு என்மீது பொறை பாராட்டலும் வேண்டுமென்று செந்தமிழுலகிற் செம்மை சான்ற பெரியோரை நோக்கிக் கேட்டுக் கொள் கிறேன்.

'சங்க நூ லென்னும் பொங்குதே மலரிற்
'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பீ!
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ.

சென்னை
6. 12. 1899

6. 4 எழுதிய செய்தியால் சூரிய நாராயணர் உட்கிடை தெள்ளிதிற் புலப்படும். ஆக்காலம் எக்காலம் என்பதும் இனிதின் விளங்கும். 'தனித் தமிழ்' விருப்பில் பெயர் மாற்றம் செய்கிறேன் என்னும் குறிப்பு இலது. ஆனால், தனித் தமிழாக ஆக்கிக் கொண்டது அவர்தம் உள்ளத் துணர்வை வெளிப்படுத்துவதாக அமைந்தது.

6. 5 தனித்தமிழ் விருப்பால் செய்தார் எனின், 'தனிப் பாசுரத் தொகை; என்னும் பெயரை நூலுக்குச் சூட்டியிரார். 'தனிப்பாத்தொகை' 'தனிப்பாடல் தொகை' 'தனிப்பாடல் திரட்டு' என வேறு பெயர் சூட்ட நேர்ந்திருக்கும்.

7. தனிப்பாசுரத் தொகை முகவுரை பக். 8

6. 6 தனிப் பாசுரத் தொகையின் மறுபதிப்பு போப்பைய ருடைய ஆங்கில மொழி பெயர்ப்புடன் 1901 இல் வெளி வந்தது. நாற்பது பாடல்களான் இயன்ற முதற்பதிப்பு, திருவள்ளுவர், போர், எறும்பு என்னும் முத்தலைப்புப் பாடல்களும் புதுவதாய் இணைக்கப் பெற்று நாற்பத்து மூன்று பாடல்களான் வெளிவந்தது. அப்பதிப்பு முகவுரையில் முதற்பதிப்பு முகவுரையில் தம் பெயர் பற்றிப் பொறித்த செய்தியை மாற்றாது பொறித்ததுடன். "அன்னணம் வெளிப்படுத்திய நூல் கண்டு பலரும் உவந்து வியந்து பேசக் கேட்ட யாம் உள்ளக் கிளர்ச்சியுற்று நூலிற்கு மறுபதிப் பொன்று வெளியிடலாமென்றெண்ணினோம்." என்றெழுது கின்றனர். அதில், 'வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி' என்னும் பெயருடன் 1—8—1901, சென்னை என்னும் குறிப்பும் வைத்துள்ளார்.

6. 7 பரிதிமாற் கலைஞர் தம் உட்கிடையை உள்ளவாறறிந்த சி. வை. தாமோதரனார் தாம் அதற்கு வழங்கிய சிறப்புப் பாயிர முதற்பாடலில்,

> பரிதிமாற் கலைஞனெனும் புனைவு பெயர் தானிறுவிப்
> பாரார் பார்த்துக்
> கருதுமா றுள்ளபடி யறிதரல் வேட் டிசைநலஞ்சால்
> கலைவ லாளன்
> சுருதிவலார் குலக்கோமான் சூரியநா ரயணப் பேர்த்
> தோன்ற லெந்தங்
> குருதிவேற் குமரனடி மறவாத கொள்கையினான்
> குணக்குன் றன்னான்

என்று பாடியுள்ளார். "பாரார் பார்த்துக் கருதுமாறுள்ள படி யறிதரல் வேட்டு" என்பது முகவுரைக் குறிப்பை வழி மொழிவதாம்.

6. 8 பரிதிமாற் கலைஞர் இயற்றிய நூல்களின் பெயர்கள் 'மானவிஜயம்' 'ரூபாவதி' 'கலாவதி' என்பவற்றை அறி யினும் 'தனித்தமிழே தமிழ் எனக் கருதியவர் அல்லர் என்பது புலப்படும். அன்றியும், தனிப்பாசுரத் தொகை முதற்பதிப்பில் அன்றி, வேறு எந்நூலிலும் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி என்னும் பெயரையே குறிப்பிட் டுள்ளார். இவை, இக்கருத்தைத் தெளிவிக்கும்.

6. 9 ஒருமுறை பெங்களூர்க் கல்லூரித் தமிழாசிரியர் தி. கோ. நாராயணசாமிப்பிள்ளை என்பார் சாத்திரியாரைப் பார்க்க வந்தார். அப்பொழுது, ''வருக! பிள்ளையவர்களே! வருக! ஈண்டை வருக! இங்ஙன் இருப்பீர்! நேற்றைப் பிற்பகல் வருவல் என்று உரைத்த நும்மாற்றம் மறந்தினிரோ?'' என்று வினவினார். அதனைக் கேட்ட நாராயண சாமியார் வியப்புற்று, ''எப்போதும் இதே நடையில் தான் பேசுவது வழக்கமோ?'' என வினவினார். அதற்கு ''ஆங்கிலம் படித்த தமிழறிஞர்களுடைய தமிழறிவு தெளிவாயிருப்ப தில்லை என்றும் அவர்களுக்குச் செந்தமிழ் பேசக் கூட வராது என்றும் தனித்தமிழ்ப் புலவர்கள் கூறிப் பரிகசிப்ப துண்டு என்பது நானறிவேன். அதற்காகவேதான் பண்டிதர் களிடம் இத்தகைய நடையிற் பெரும்பாலும் நான் பேசுவது''[8] என்று பதிலிறுத்தார் என்பதிலிருந்து 'செந் தமிழில் பேசவராது என்று குறை கூறுவார்க்கு அறை கூவலாகவே கொச்சையும் கலப்புமில்லா நடையைக் கண்டு பிடித்தார் என்பது புலப்படும்.

6. 10 சாத்திரியார் உரைநடையைக் கேட்டு மகிழ்ந்த அளவால் தான் அந்நடையிலேயே ஒரு நூல் இயற்றித் தருமாறு சி. வை. தாமோதரனார் வேண்டினார். அவ்வேண்டு தலால் விளைந்ததே 'மதிவாணன்' என்னும் புனைவு நூலாகும். அது 1897 இல் ஞானபோதினி இதழில் எழுதத் தொடங்கப் பட்டது. 1902-இல் நூலாக வெளிப்பட்டது. மதிவாணன், கயற்கணி, மாயவன், மெய்ம்மொழி, மாவீரவழுதி, இன்பவல்லி, சொக்கநாதர், வேலவன், முருகன் என்பவை கதை உறுப்பாளர் பெயர்கள். பாண்டியனைத் ''தனித்தமிழ் நாடன்''[9] என்கிறார். ஆங்குவரும் 'தீட்சிதர்' 'தீக்கிதராகவே'[10] வருகின்றார். ஓரே ஓர் இடத்தில் 'சீதோஷ்ணமானி'[11] வருகின்றது. கலவை நடை பெரிதும் இன்றியும், முற்றுலும் தமிழியல் கொண்டேயும் இயல்கின்றது அது!

6. 11 இனி மணிப்பிரவாளபாஷையை 'ஆபாச பாஷை'[12] என்றும், பரிமேலழகர் வடநூலார் மதம் பற்றியே உரை

---

8. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் பக். 87-8.
9. மதிவாணன் பக். 53.
10. ,, ,, 69.
11. ,, ,, 10.
12. தமிழ் மொழியின் வரலாறு பக். 18-20

வகுத்தனர்[13] என்றும், வீரசோழியம் பிரயோக விவேகம் நன்னூல் சின்னூல் ஆயவை வடமொழி இலக்கணங்களைத் தமிழில் புகுத்துவன[14] என்றும் ஈசானதேசிகரின் பாயிரக் கூற்று 'பாஷைநூல் என்னும் அரிய சாஸ்திரத்தின் பயிற்சியும் சரித்திரக்கண்ணும் இல்லாத குறைவினால் எழுந்த பொருந்தாக் கூற்றுக்களாம்'[15] என்றும் கூறியுள்ள செய்திகள் மறைமலை யடிகளார் உள்ளத்தில் ஆழப்பதிந் திருத்தல் வேண்டும் எனக் கொள்ளலாம்.

6. 12. இனி, தமிழ் 'உயர்தனிச் செம்மொழி' என்பதைச் செந்தமிழ் முதல் இதழில் வரைந்ததுடன், தமிழ்மொழியின் வரலாற்றிலும் வரைந்தார்.

''உயர்தனிச் செம்மொழி என்பதன் இலக்கணந்தான் என்னை? அதனைச் சிறிது ஆராய்வோம்.

தான் வழங்கும் நாட்டின் கணுள்ள பலமொழிகட்கும் தலைமையும், அவையிற்றினும் மிக்க மேதகவுடைமையு முள்ள மொழியே உயர் மொழி என்பது. இவ்விலக்கணத்தால் ஆராய்ந்தவழி, நம் தமிழ் மொழி தென்னாட்டில் வழங்கும் தெலுங்கு, கன்னட, மலையாள, துளுவங்களுக் கெல்லாம் தலைமையும் அவையிற்றினும் மிக்க மேதகவுடைமையால் தானும் உயர்மொழியே யென்க.

6. 13 ''தான் வழங்கு நாட்டில் பயிலும் ஏனைய மொழிகளின் உதவியின்றித் . தனித்தியங்க வல்ல ஆற்றல் சான்றதே தனிமொழி எனப்படும். தான் பிறமொழிகட்குச் செய்யும் உதவி மிக்கும் அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தலே வழக்காறு. தமிழ் மொழியின் உதவி களையப் படின், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலியன இயங்குத லொல்லா; மற்று அவையற்றினுதவி களையப் படினும் தமிழ்மொழி சிறிது மிடர் படுதலின்றித் தனித்து இனிமையின் இயங்க வல்லது. இஃது இந்திய மொழிநூற் புலவர்கள் பலர்க்கும் ஒப்பமுடிந்தது. ஆதலின் தமிழ்மொழி தனிமொழியே யென்க.

6. 14 ''இனிச்செம்மொழியாவது யாது? 'திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தாய்மொழி புகல் செம்மொழியாம்' என்பது இலக்கணம். இம்மொழிநூல் இலக்கணம் நம்முடைய தமிழ் மொழியின் கண்ணும் அமைந் திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொல்முடிவு

13—15 தமிழ் மொழியின் வரலாறு பக். 18-20.

களும் பொருள் முடிபுகளும் இன்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதின் உணராவற்றாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்த மெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப் படுவது. இது தமிழ் மொழியின்கண். முற்றும் அமைந்திருத்தல் காண்க.

6. 15 "நாட்டின் நாகரிக முதிர்ச்சிக் கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப்பாஷைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்களேற்படு மிடத்துப் பிறபாஷை சொற்களன்றித் தன் சொற்களே மேற்கோடல் வேண்டும். இவையும் நம் உயர்தனிச் செம்மொழிக்கும் பொருந்துவனவாம். ஆகவே தமிழ் தூய மொழியுமாம், எனவே தமிழ் செம்மொழி என்பது ஒருதலை. இது பற்றியன்றே தொன்று தொட்டு நம் தமிழ் மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று.[16]

இத்துணை விரிவாகப் பரிதிமாற்கலைஞர் கருத்துகளைத் தொகுத் துரைத்தது, இக்கருத்துகள் எல்லாமும் கலைஞர்க்கு அணுக்கராகப் பணியில் இருந்த அடிகளார்க்குத் தெளிவாக அறியப்பட்டிருக்கும் என்பதாலேயேயாம். இவை, உள்ளகத்து ஊற்றெழும்பா திரா அன்றோ!

## செல்வக் கேசவராயர் (1864-1921)

7. 1 பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியராக விளங்கிய இவர் தமிழ், தமிழ்வியாசங்கள், தமிழ் வியாசமஞ்சரி, திருவள்ளுவர், கம்பநாடர் முதலிய நூல்களை இயற்றியவர். பலநூல்களுக்கு உரை கண்டவர்.

7. 2 'தமிழ்' என்பது பற்றிச் சுதேச மித்திரனில் வரைந்த கட்டுரைகள் தமிழ் என்னும் பெயரால் நூலாயது. சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் சி. வை. தாமோதரனார் தலைமையில் இக்கட்டுரைகள் படிக்கப்படவும் ஆயின பின்னர் 1896, 1906-ஆம் ஆண்டுகளில் அச்சேறி நூலுருக் கொண்டன.

7. 3 'வடமொழிச் சார்பின்றியே தமிழ் தனித்தியங்க வல்லது' எனக் கால்டு வெலார் ஒப்பிலக்கணமேற் கோளுடன் காட்டுகிறார் செல்வக்கேசவர். "உலகவழக்கில் தமிழ் மொழியின் மிகுதி" என்னும் பகுப்பில் அவர் எழுதுவன:

---

16. செந்தமிழ் முதல் தொகுதி; முதல் இதழ்.
தமிழ் மொழியின் வரலாறு பக். 110-111.
தமிழ் வியாசங்கள்பக். 62-63.

7. 4 இதன் திறம் இன்னும் விரிக்க விரிக்க விரியும். நாம் பலபடப் பாரிக்கவேண்டா. இன்றளவும் உள்ளதமிழை மேனோக்காகக் காண்கும். வம்மின்:

7. 5 உழவும் கலப்பையும் காருங் கயிறுங்குண்டையும் நுகமும் சாலும் வயலும் வாய்க்காலும் ஏரியும் மடுவும் ஏற்றமும் பிறவும், பயிரும் களையும் நட்டலும் கட்டலும் முதலாய ஏரெழுபதும் தமிழ் மொழிகளான் இயன்றனவே.

7. 6 தமிழர்கள் வதிதரும் வீடுகளின் கூறுகளாகிய தலைக் கடையும் புழைக்கடையும் கூரையும் வாரையும் கூடமும் மாடமும் தூக்கும் தூணும் கல்லும் கதவும் திண்ணையும் குறடும் தரையுஞ் சுவரும் மண்ணும் மரனும் மற்றவுந் தமிழே.

7. 7 தலையுங் காலும் கண்ணுங்காதும் மூக்கும் மூஞ்சியும் வயிறும் மார்பும் நகமும் சதையும் நாவும் வாயும் பல்லும் மயிரும் மற்றவும் ஆகிய உடற்கூற்று மொழிகள் தானான தனித்தமிழன்றே!

7. 8 தமிழ் நாட்டிலுள்ள சிற்றூர் சீறூர் ஆரூர் பேரூர் புத்தூர் புற்றூர் சேய்ஞ்ஞலூர்மணலி நெல்லூர் நெல்லை கொன்றூர் குறட்டூர் என்னும் ஊர்கள் பலப்பல தமிழ் மொழியே புனைந்தன.

7. 9 ஞாயிறும் திங்களும் செவ்வாயும் வியாழமும் வெள்ளியுஞ் ஆகின்ற கிழமைகட்குத் தமிழ்ப் பெயரே பெயர்.

7. 10 தொண்ணூற் றொன்பதினாயிரத்துத் தொள்ளா யிரத்துத் தொண்ணூற்றொன்பது வரையில் எண்ணப்பட்ட எண்களில் ஒன்றேனும் வடமொழியால் எண்ணப் படுவதில்லை. ஆழாக்கு உழக்கு நாழி குறுணி பதக்கு தூணிகலன் என்னும் முகத்தலளவையும், பலம் வீசை மணங்கு என்னும் எடுத்தலளவையும் இன்னும் கீழ் வாயிலக்கம் மேல்வாயிலக்கம் அவற்றின் குறியீடுகளும் எல்லாம் தமிழே.

7. 11 தமிழர்கள் உண்ணும் சோறும் சாறும் காயும் கறியும் பாலும் பழமும் நெய்யும் தயிரும் உப்பு முதலொன்பதும் பருப்பு முதல் பத்தும் தமிழ்ச் சுவையே யுடையனவாய்த் தமிழ் மணமே வீசுகின்றன.

தமிழர்கள் செவிக் கொள்ளும் உணவான எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் அணியும் ஆகிய ஏடும்

சுவடியும் எடுத்துப் பார்க்குமிடமெல்லாம் தமிழாகவே இருக்கின்றன.

7. 12 இவர்களுடைய துணியும் அணியும் தமிழே. இவர்கள் தொழும் கடவுளும் தமிழ் மயமே. தமிழர்களுடைய வீடும் நாடும் காடும் மேடும் எங்கும் புகுந்து பார்த்த விடமெல்லாம் தமிழ் தமிழாகவே இருக்கின்றன.[17]

தனித்தமிழே தமிழாய் எழுதும் செல்வக்கேசவர், அத்தமிழ் எழுதுதலில் தமக்கிருந்த அருமையான தேர்ச்சியை அழகுநடையில் இவ்வாறு எழுதிக் காட்டினார். இந்நடை எழுதவல்லாராயினும் இவருட்கிடை வேறாக இருந்த தென்பது அடுத்த தலைப்பாலேயே விளங்குகின்றது.

7. 13 'திசைவடசொற்கள் விரவிவருதலால் தமிழ்க்குளதாகும் நன்மை' என்பது அடுத்த தலைப்பு:

தான் பிறிதுமொழிவிழையாமல் தன்னாற்றலே ஆற்றலாக நடந்தேற வல்லதாயின் தமிழ் ஏனை வடதிசைச் சொற்களை முற்றுங்களைந்து விட்டுக் காரியம் நடத்தலாகாதோ? தமிழ் தனித்தியங்கும் வலிமையுடைத்தென வாளாகூறிக் கொள்வதனாற் பயனென்னை? நன்று. தமிழ் மொழி வல்ல நாவலரும் பாவலரும் இங்ஙனே செய்ய விரும்பினால் இது செய்யக் கூடாத காரியமன்று!

7. 14 இது செய்யக் கூடுமாயினும் இதனை ஒருதலையாகக் கொண்டு செய்வது தகுதியன்று என்பது நாம் அறிந்தபடி. ஆன்பால் உண்பான், கனியாக, கண்ட சருக்கரையாக, தேனாக அதனுடன் கலந்துண்டலை வேண்டா என்பர் உளரா? அவ்வான்பால் தானும் தன்னளவில் மதுரம் மிக்கு தேனும், கனி முதலியவற்றால் தனது இன்சுவை குன்றுதலுடைத்தாமோ? அடையும் காயும் சுண்ணமும் விரவ மென்றவிடத்து அம்மூன்றினும் பிறிதாய சுவையும் நிறமும் தோன்றுமன்றே. அங்ஙனமே தமிழும் திசை வடசொற்களும் தனித்தனியாக நின்றுழித் தோன்றும் ஆற்றலையும் ஓசையின்பத்தையும் காட்டில், அவை தம்முள் விரவ நின்றவிடத்துத் தோன்றும் ஆற்றலும் ஓசையின்பமும் மிகச் சிறந்தனவேயாம். பாகமும் செவ்விதாக இருக்கும்.

7. 15 அறுசுவையுண்டி அடுவார் அதற்குரிய உபகரணங்களின் அளவும் நிறையும் அறிந்து சேர்த்து அட்டவிடத்து, அவ்வுண்டி உரமும் சுவையும் தருதல்போல, தமிழ்நூல்

17. தமிழ் பக். 23. 24.

யாப்பவரும் திசை வடசொற்களை இயையும் இடனும் அளவும் அறிந்து வழங்குவராயின் அவர் வாக்கு வளமும் இன்பமும் தருவதாகும். பாகமும் செம்பாகமாக இருக்கும்.

7. 16 இந்நுட்ப மறியாது முற்றும் தமிழையாயினும், பலபட வடதிசைச் சொற்களையாயினும் வழங்கினால் அந்நூலின் நடையானது சிலாபாகமென்று சிறப்பிழக்கும். நீலமும் மரகதமும் பவழமும் முதலியன இடையிடை விராய முத்து வடமே கண்ணினுக்கின்பம் தருவதல்லது, முற்றும் முத்தானாய முத்துமாலை அவ்வின்பந்தருவதில்லையே.

7. 17 ஆகவே, இடையிடையே வடதிசைச் சொற்கள் கலந்து வருவது தமிழுக்கு இனிமைமேலினிமையும் பெருமைமேற் பெருமையுந் தொடுப்பதாகின்றது. ஆயினும் அது செய்யு மிடத்தில் சித்திரகாரி யானவன் தான் உருப்படுத்தும் உருவின்மீது பல வன்னங்களை வாரியிறைக்காமல் அவ்வவ் வுறுப்பின் நலனும் ஒளியும் உய்த்தறிந்து அவ்வதற்கியையச் சூக்குமமாகவும் தூலமாகவும் துரியக் கோலால் வன்னந் தீட்டுவதுபோல, நூலாசிரியனும் தனது யாப்பில் இடனறிந்து வடதிசைச் சொற்களைச் சுருக்கியும் பெருக்கி யும் வழங்கற்பாலன். இங்ஙனம் திசை வடசொற்களும் அவை குறிக்கும் கருத்துக்களும் ஏறிவருமாயின், தமிழின் போக்கும் தமிழருடைய கருத்தின் போக்கும் உரம் பெற்று வரும்.

7. 18 ஆங்கிலேயர்களுடைய பாஷையும் அவர்களுடைய கருத் தின் போக்கும் நாட்குநாள் மேம்பட்டு வருவதற்குக் கார ணம் பலதேய சொற்களும் பலதேய நூல்களின் சாரமும் அவர்களுடைய பாஷையில் ஏறிவருவதேயாம். வேற்றுப் பலமொழிகள் விரவாமலும் வேறுதேய நூல்களின் கருத்துக் களை அமைத்துக் கொள்ளாமலும் உள்ளதை உள்ளபடி வைத்திருக்கின்ற பாஷையானது, உண்ணவும் நண்ணவும் உடலை மண்ணவும் உதவாதபடி ஏரி குளங்களில் கட்டி வைத்திருக்கின்ற நீர்நிலைக்குச் சமானமாகும்,

7. 19 காலகதிக்கேற்பத் தன் வழியே போக விடுகின்ற பாஷை யானது ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும் யாற்று நீருக்குச் சமானமாகும். நிலைநீர் நாட்கு நாள் ஒளி மழுங்கி நன்மை கெடுவது. யாற்று நீரோ தெளிவும் வளமும் பெருகி நன்மை தருவதாகும். ஆகவே, ஒரு பாஷையை அதன் போக்கிலே போகவிட்டால், அது நாட்குநாள் வளம் பெருகி மேம்படும் என்பதில் ஐயமில்லை. ஒரு பரம்பரையில் பல்வேறு குடிகள்

கூடிக் கலப்பதனால் அதன் கோத்திரப் பெயர் குடிப்பெயர் நீங்கி விடுமா? பல்வேறு பாஷா சம்பந்தம் உண்டாவதனால் ஒரு பாஷையின் தொன்மையும் தலைமையும் போய்விடுவதில்லை. பலவேறு குடிகளில் கொள்வதுங் கொடுப்பதுஞ் செய்வதால் தங்கள் பரம்பரை தூய்மை இழக்கின்றதென்று அஞ்சுகின்றவர்கள், நாட்கு நாள் க்ஷீணித்து மந்தகதி அடைவதல்லது முன்னிலும் வளமிகுவதில்லை. வேறு பாஷா சம்பந்தம் பெறாமல் தனித்தியங்கும் பாஷையும் அங்ஙனமே க்ஷீணமடைந்து வளங்குன்றுவதாகும்.[18]

7. 20 தனித்தமிழில் எழுத முடியும் என்பதைக் காட்டி, தமிழ் மொழிவல்ல நாவலரும் பாவலரும் இங்ஙனே செய்ய விரும்பினால் இது செய்யக் கூடாத காரியமன்று என்று தெளிவித்து, தனித் தமிழாக எழுதினால் என்னநேரும் என்பதை எடுத்துக் காட்டுடன் விளக்கித் தாம் முற்கூறிய கருத்தை மறுத்தார் என்பதே இப்பகுதிகளில் உள்ளுறை என்பது தெள்ளிதாம்.

7. 21 'தமிழ். முதற்பாகம்-தமிழ் மொழி' என்றே நூலைத் தொடங்கியவர் இப்பகுதியில் ஒன்பது இடங்களில் 'பாஷை' என வேற்றுமொழியையும், வேற்று எழுத்தையும் பயன் படுத்தியுள்ளார். 'க்ஷீணம்' என்பதை இருமுறை பயன் படுத்தினார். இவ்வாறே சம்பந்தம், சமானம், சிலாபாகம், சூக்குமம், தூலம், காலகதி, கோத்திரம், உபகரணம் என்னும் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். இச்சொற்களெல்லாம் அரிய கண்டுபிடிப்புகளின் வழியோ, பெரிய கலைத் திறத்தின் வழியோ வந்த சொற்களோ? இவற்றின் நேரான தூய தமிழ்ச் சொற்கள் இருக்கவும் இவற்றைப் பயன் படுத்திய நிலைமை இவர்தம் நோக்கில் இன்னும் ஆழ்ந்து செல்லவில்லை என்பதையே காட்டுகின்றதாம். இத்தகையவெல்லாம் அடிகளார்க்கு அரிய தூண்டுதல் என்பதில் ஐயுறவில்லையாம்! அடிகளார் பணியாற்றிய கிறித்தவக் கல்லூரித் தொடர்பும், சென்னை வாழ்வும், கால இணைவும் அடிகளார் உள்ளத்தில் பதிவை ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துவனவாம்.

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

8. 1 இனி 1901 ஆம் ஆண்டில் தமிழ் மொழிக்கு ஆக்கமான ஓரமைப்பு உருவாயிற்று. நெட்டிடைபட்டு அவ்வமைப்புத் தோன்றினாலும், அதன் தோற்றமும் ஏற்றமும் தொண்டும்

18. தமிழ் பக். 24-6.

அக்கால நிலையில் எண்ண எண்ண அருமைப்பாடு உடையி தாம். நாட்டு விடுதலை வேட்கையர் கூடிய கூட்டத்திலே மொழிவிடுதலையும் மொழி வளமும் கருதிய ஆர்வலர் பொன். பாண்டித்துரையாரால்[19] தொடங்கப்பட்ட அரிய அமைப்பாகும் அது. முன்னை மூன்று சங்கங்களையெண் ணி நான்காம் தமிழ்ச்சங்கமென அக்காலப் புலவர்களாலும் பிற்காலப் புலவர்களாலும் பேசவும் எழுதவும் பாடவும்பட்ட பெருமைக்கு உரியதாம். அன்றியும் பின்னர்த் தோன்றிய மற்றை மற்றைத் தமிழ்ச்சங்கங்கள், அமைப்புகள் ஆகிய வற்றுக்கெல்லாம் முன்னோடியும் வழிகாட்டியுமாம். அது. மதுரைத் தமிழ்ச் சங்கம் என்க.

8. 2 மதுரைத் தமிழ்ச் சங்கம் 'செந்தமிழ்' எனத் திங்களிதழ் ஒன்றனைத் தொடங்கியது. மிக அரிய ஆராய்ச்சிக் கட்டுரை களும் தமிழ் தொடர்பான கல்வெட்டு வரலாறு செப்பேடு ஆகியனவும், பழந்தமிழ் நூல்களும் வெளிவர உதவிய சீர்மை சிறந்தோங்கியது அவ்விதழ். முதல் இதழிலே அவ்விதழின் பெயரும் செயன்மையும் விளக்கப் பெறுகின்றன:

8. 3 "இஃது தமிழின் செம்மையினையே உலகிற்கு நன்கு அறிவுறுத்தலானும், செந்தமிழ் வளர்ச்சியே செய்தலானும். செவ்விதாய தமிழானே நடத்தலானும் செந்தமிழ் நாட்டுத் தலைநகர்க் கண்ணே தோற்றமுடைத்தாகலானும் 'செந் தமிழ்' எனப் பேர் பெற்று விளங்கும்.

8. 4 "இதுகாறும் அச்சிடப்படாத செந்தமிழ் நூல்களும் தமிழ் நாட்டுப் புராதன சரிதங்களும் சாஸனங்களும் வடமொழி யினும் ஆங்கிலத்தினும் தமிழிற்கு வேண்டுவனவாகக் கருதப் படும் நூன்மொழிபெயர்ப்புக்களும் தமிழின் அருமை பெருமை அடங்கிய விஷயங்களும் தமிழாராய்ச்சியைப் பற்றியனவும் தமிழ் வளர்ச்சிக்கு வேண்டுவன பிறவும் இதன் வாயிலாக வெளிவரும்."[20]

8. 5. செந்தமிழ் என்னும் பெயரைத் தேர்ந்தது இந்நாளில் அருமையுடையதாகத் தோன்றா விடினும், அந்நாளில் அருமையினும் அருமையுடையதாம். ஏன்? தமிழில் நடை பெற்ற இதழ்களுள் எதுவும் தமிழ்ப் பெயராக இருந்தது இல்லை! ஆதலால், பாலையிடை வாய்த்த பசுஞ்சோலை, செந்தமிழ் இதழ் எனல் தகும்.

---

19. காலம் 1867—1911.
20. செந்தமிழ்-தொகுதி-1. சுபகிருது கார்த்திகை. பகுதி-1 பக். 10.

8. 6 உதயதாரகை (1841), தற்போதம் (1848), தேசோபகாரி (1860) தத்துவ போதினி (1893), ஜனபோதினி (1870) சத்தியவர்த்தமானி (1870), நற்போதகம் (1870), உபாத்தியாயர் (1887), சத்தியதூதன் (1887), மாதர்மித்திரி (1887), ஸ்ரீ உலோகரஞ்சனி (1887), பெண்மதி போதினி (1891) விவேக சிந்தாமணி (1892), ஞானபானு (1894), மாணவர் போதகம் (1895), மாதர் மனோரஞ்சனி (1899) விவேகபானு (1900), ஜனப்பிரியன் (1900), விநோத சித்திரப் பத்திரிகை (1900)—இவற்றுள் எந்த ஓர் இதழின் பெயராவது செந்தமிழாக உள்ளதா? செந்தமிழில் பெயர் கொண்டு வெளிவந்த முதல் இதழ் செந்தமிழே! அதன் பின்னரே 1923இல் செந்தமிழ்ச் செல்வியும், 1925 இல் தமிழ்ப் பொழிலும் வெளிவந்து இன்றுவரை தமிழ்த் தொண்டு செய்து வருகின்றன. தென்மொழி இதழ், தனித்தமிழை முன்வைத்தே தோன்றி அதற்கெனவே பணிசெய்து வரும் இதழாகும். இத்தகைய தமிழ்ப்பணி கருதிய இதழ்களுக்கு வழிகாட்டிய முழுப் பெருமையும் செந்தமிழுக்கு உரியதேயாம்.[21]

8. 7 பெயர்தான் செந்தமிழாக அமைந்ததே யன்றி, அது கூறுமாறு அதன் நடை செந்தமிழாக இல்லை. இதனை அதன் செயன்மை விளக்கமாக வரும் பகுதியினுள்ள உரை நடையே தெளிவிக்கும். புராதனம், சரிதம், சாஸனம் விஷயம் என்பவற்றைக் காண்க. வடமொழிச் சொற்களும், தமிழல்லா எழுத்துகளும் விரவ அமைந்தது 'செந்தமிழ்' ஆகுமா?

8. 8 ஆனால் அக்காலத்தில் தமிழ் மொழியுடன் வடமொழிச் சொல்லும் எழுத்தும் கலப்பதும் கலப்பாக அவர்கள் கருதவில்லை என்பதே தெளிவாகின்றது. தன்மொழிச் சொல்லன்றி எச்சொல் கலப்பினும், தன் நெடுங்கணக்கில் உள்ளவையன்றி எவ்வெழுத்துக் கலப்பினும் கலப்பே எனக் கருதினர் அல்லர்.

8. 9 முதல் இதழிலேயே சோழ சக்கரவர்த்திகள், புராதன சரித்திர விஷயங்கள், பிரதாபருத்திரீயம், தர்க்க சாஸ்திரம் என்னும் தலைப்பில் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. 'வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரி பி. ஏ.,' எழுதிய 'உயர் தனிச் செம்மொழி' என்பதும், 'பத்திராதிபர்' எழுதிய 'ஆராய்ச்சி' என்பதுமே தமிழ்த் தலைப்பு உடையவை.

---

21. மதுரை நான்காம் தமிழ்ச் சங்க வரலாறு பக். 69–70

8. 10 செந்தமிழில், 'விவசாய ரசாயன சாஸ்திரச் சுருக்கம்' என ஒரு தொடர் வெளிவருகின்றது. அதில் 'சுருக்கம்' என்ப தொன்றே தமிழ்! தலைப்பே இந்நிலையாயின் செய்தி எப்படி?

8. 11 ''நமது நாட்டார் இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பொருள் களும் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களின் விகாரமே என்று சொல்லுகிறார்கள். பிருதிவி-என்றால் மண், அப்பு-என்றால் ஜலம், தேயு-என்றால் நெருப்பு, வாயு-என்றால் காற்று, ஆகாயம்-என்றால் நமது உணர்ச்சிக்குப் புலப்படாத அதி நுட்பமான காற்றைப் போன்றது என்கிறார்கள்.''[22]

8. 12 'மண் விண் தீ நீர் காற்று' என்பவை வழக்கில் இல்லாத சொற்களா? இலக்கிய இலக்கணங்களில் பயிலாத சொற் களா? ஆங்கிலத்தில் இருந்து ஒன்றை வடமொழியில் மொழி பெயர்ப்பதே தமிழ்மொழி பெயர்ப்பு என்பதைத் தலைப்பே காட்டவில்லையா? 'கார்பண்டை ஆக்ஸைடு' என்பதைக் 'கரியமில வாயு' என்று மொழி பெயர்த்து விட்டால் தமிழ் மொழி பெயர்ப்பா? தமிழ் மொழி பெயர்ப்பு என்றே கருதிக் கொண்டு செய்தனர். தமிழர்களும் 'ஆமாம்' என்றும் ஏற்றுக் கொண்டனர்.

8. 13 'தமிழில் சாஸ்த்ரபரிபாஷை மாஸப்பத்திரிகை' எனச் சேலத்தில் இருந்து வெளிப்பட்டது.[23] இனி அதன் கலைச் சொல்லாக்கம் எப்படி இருக்கும் என்று சொல்லவேண்டுமா?

### பாரதியார்

9. 1. ''மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ்ச்சொல் எனக்கு அகப்படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

'அவயவி' சரியான வார்த்தையில்லை.

'அங்கத்தான்' கட்டிவராது.

'சபிகன்' சரியான பதந்தான். ஆனால் பொது மக்களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டு பிடித்துக் கொடுத்தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த்தேன்.

9. 2. 'உறுப்பாளி' ஏதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனத்திற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன். கடைசி

---

22. செந்தமிழ். தொகுதி-1. பகுதி. 9.
23. பாரதியார் கட்டுரைகள். தமிழில் சாஸ்த்ர பரிபாஷை.

யாக 'மெம்பர்' என்று எழுதிவிட்டேன். இன்னும் ஆரஅமர யோசித்துப் பார்த்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொரு முறை சொல்கிறேன்.

9. 3. பாருங்களேன் : 'மெம்பர்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச்சொல் ஒன்று வேண்டும் என்று மேற்கண்ட பத்தியை எழுதியவர் பேரார்வம் கொள்கிறார். அதற்காகப் பெருமுயற்சியும் செய்கிறார். சில சொற்களையும் காண்கிறார். அவை எம்மொழிச் சொற்கள்? தமிழ்ச் சொற்களா ?

9. 4. அயல்மொழிச் சொல்லை மொழிபெயர்த்ததும் அயல் மொழிச் சொல்லாகவே இருக்குமானால் அது தமிழ்த் தொண்டுதானா ? அது தமிழுக்கு வளர்ச்சியாகுமா ? ஆங்கிலச் சொல்லையகற்றி வடமொழிச் சொல்லைப் புகுத்துவது தமிழுக்கு உண்மையில் ஆக்கந்தானா ?

கொள்ளையடித்துக் கொண்டு போகிறவன் கடல் கடந்த அயல்நாட்டுக்கொள்ளையன் ஆனால் என்ன ? அடுத்துள்ள உள்நாட்டுக் கொள்ளையன் ஆனால் என்ன? கொள்ளையன் கொள்ளையன்தான் ! கொள்ளைபோயது கொள்ளை போயதேதான் ! [24].

9. 5. மெம்பரைத் தமிழாக்க முயன்றவர் 'வாழிய செந்தமிழ்' பாடிய பாரதியாரே ! தமிழ்ப் பள்ளிக்கூடங்களில் 'அ-ன்' வரை தமிழே நடக்கவேண்டும் என்ற பாரதியாரே, பலகை' குச்சி எல்லாவற்றுக்கும் தமிழிலே பெயர் சொல்லவேண்டும் 'சிலேட்' 'பென்சில்' என்று சொல்லக்கூடாது என்ற பாரதியாரே [25] - இவ்வாறு மொழிபெயர்க்க முனைகிறார் ! இதன் அடிப்படை, வடமொழியைக் கலப்பது கலப்பு இல்லை ; ஆங்கிலம் முதலிய பிறமொழிக் கலப்பே கலப்பு என்று அவர்கள் கொண்டதுதான் ! இவ்வகையில் மறைமலையடிகள் நோக்கு தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தது.

## திருவிடர்கழகம்

10. 1. 19-11-1908இல் திருக்குற்றாலத்தில் விருதை சிவஞான யோகிகள் முயற்சியால் 'திருவிடர்கழகம்' என ஓர் அமைப்பு உண்டாயிற்று. இக்கழக அவையின் நோக்கு , குறிப்பு ஆகியவை உள்ளது உள்ளபடி வருமாறு :

---

24. தமிழ். பக். 55-6.
25. தமிழ். பக். 56. (பாரதியார் கட்டுரைகள் : சமூகம்)

10. 2.

## திருவிடர் கழகம்
## (The Thiruvidar Association)

1. அவையின் நோக்கங்கள் (Objects of the Association)

அ) திருவிடரின் பழைய வரலாறுகளையும் திருவிட மொழியின் உண்மை வரலாறுகளையும் ஆராய்ச்சி செய்தல்.

ஆ) ஆராய்ச்சியிற் கண்ட பொருளைத் தீர்மானிக்கக் கூட்டங் கூடிப் பேசல். அத்தீர்மானங்களை அச்சியற்றி உறுப்பினர்க்கும் உலகுக்கும் வெளிப்படுத்தல்.

இ) அரிய பொருள்களைப் பற்றிப் பெருஞ்சொல் (பிரசங்கம்) இயற்றல் முதலிய செயல்களால் திருவிடரின் அறிவு ஒழுக்கம் ஒற்றுமை தெய்வக் கோள் சிக்கனம் ஊரன் உரிமைகளின் நிலைமையை வளர்த்தல்.

ஈ) திருவிடர் பழைமைகளை நூல்மேற்கோளோடு கண்டுபிடித்துப் பண்ட முதலியவற்றை அப்போதப் போதச்சியற்றிச் சுவடியாக வெளிப்படுத்தல்.

ஊ) இக்கழகத்தில் அரசுக்கு மாறான செயல் பேச்சு எழுத்து முதலியவற்றை நீக்கல் என்பன.

10. 2.

## குறிப்பு

அ) திருவிடரின் பழைய வரலாறுகளை ஆராய்தல் என்பது திருவிட நாட்டின் முற்கால பிற்கால நிலைமைகள் யாவை? திருவிடர் என்பவர் யாவர்? திருவிடர் தோற்றம் யாது? அன்னவர் அறிவு கைத் தொழில் செட்டு கடற்செலவு உரிமைமொழி நூல் தெய்வக்கோள் மணம் தூய்மை உணவு ஒழுக்கம் வழக்கம் அரசியல் அவைக்களம் சீர்த்தேற்றம் முதலியவை எத்தகையன என ஆய்தல்.

2) திருவிட மொழியின் உண்மை வரலாறுகளை ஆராய்தல் என்பது திருவிட மொழியாகிய தமிழின் தோற்றம் யாது ? அதன் இயல்பு யாது ? அது இயல் மொழியா ? செயல் மொழியா ? அதன் வளர்ச்சி எவ்வாறு ? அதினின்று தோன்றிய மொழிகள் எவை ? அதிற் பிறமொழிகளின் கலப்புளதா ? அவை யாவை ? அதன் எழுத்தின் (இலக்கண) அமைப்பு எத்தகைத்தது ? தமிழ்த் தொன்மை நூல்கள் யாவை ? தமிழ் மொழியின்

முதனிலைகள் (பகுதிகள்) எத்தகைத்தன? உலகிலுள்ள மொழிகள் அனைத்துக்கும் அல்லது ஒவ்வொரு சிறந்த மொழிகளுக்கும் தமிழுக்கும் என்ன ஒற்றுமைகள் அல்லது வேற்றுமைகள் உள்ளன என்பது முதலியவற்றைப் பற்றி ஆய்தல்.[26].

10. 3 திருவிடர்கழக நோக்கம், குறிப்பு, கட்டளைகள் என்பன வெல்லாம் தனித் தமிழாகவே உள. 'தனித் தமிழ்' என்னும் தொடர் இல்லையே யன்றி அதனைச் செப்பமாகக் கடைப் பிடித்து எழுதப்பட்டுள்ளமை கண்கூடு. அடிகளார் 'தனித் தமிழ்' இயக்கம் தோற்றுவிக்கும் குறிப்பு ஏற்படுவதற்கு எட்டாண்டுகளுக்கு முற்பட்டது இவ்வமைப்பு. இச் செய்தியை அடிகள் அறியாதிரார்.[27]

10. 4. 'பிரசங்கம்' பெருஞ்சொல்லாகவும்,[28] 'பகுதி' முதனிலையாகவும் பெயர்க்கப்பட்டுள்ளன. அவ்வாறே, Objects நோக்கங்களாகப் பெயர்க்கப்பட்டுள்ளது. மேலும், Treasurer, 'பொருளாளர்' என்றும், Majority பேரெண் கருத்து என்றும், Casting vote கிழமைக்குடவோலை என்றும், General body பொதுக்கூட்டம் என்றும், Menaging Committee நிகழ்த்து கூட்டம் என்றும், Cunvening meeting குறிக்கூட்டல் என்றும், Annual report ஆண்டறிக்கைத்தாள் என்றும், Subscription கட்டணம் என்றும், Patron of the association கழகக்காவலர் என்றும் மொழியாக்கம் செய்யப் பட்டுள. அன்றே பொதுக்கூட்டம் பேரவை என ஆளப் பட்டுளது.

10. 5. இதனை நோக்க அடிகளார்க்குத் தனித்தமிழ் எண்ணம் தோன்றிச் செயலாக்கமுறுதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னரே தனித்தமிழில் எழுதிச் செயற்படுத்தும் முயற்சி கிளர்ந்துவிட்டது எனலாம்.

இனி அதே மாநாட்டில் 'தமிழர் தொன்மை' என்னும் 26 அடி அகவற்பா வொன்றும் பாடப்பட்டுள்ளது.[29]

---

26. திருவிடர் கழகம் பக். 19
27. அடிகள் யோகிகள் தொடர்பு. மறைமலையடிகள் வரலாறு பக். 110-11. காண்க.
28. பிரசங்கம் என்பது வடசொல். அதற்குச் சமமான தமிழ்மொழியை நாம் இன்னுங்காணவில்லை. நாவலர் சரித்திரம் பக். 25 (ஆண்டு 1916)
29. திருவிடர் கழகம் நூல் - பின்னட்டை.

## தமிழர் தொன்மை

10. 6 அகவல்

''ஒண்மை யறிவு மோர்வுமிக் கோரே
2 உண்மை கேண்மின் உண்மை கேண்மின்
மீன்கொடி படைத்த மேன்மை மனுக்கள்
4. ஆன்ற பாண்டிய ரனைவருந் தமிழர்
தென்கட் பஃறுளி யாறு சீர்சால்
6. நற்புகழ் வடக்கண் நளிரிமை யார்மலை
வரைதமிழ் நாடா வயங்கிய முற்கால்
8. திருவிட மெனும்பே ரதற்குச் சிறந்தது
பின்னா ரியர்கள் பிறங்கின் னாட்டில்
10. உன்னிவந்துகுடி யுறுமுன மிங்குத்
தமிழ்மொழி வழக்குந் தகையொண் ணூலும்
12. இமிழிசை யைந்திணை இனமும் தேவும்
போற்றவர் யார்க்கும் பொதுச்சிவக் கோனும்
14. ஆற்றருந் தளியு மகத்தெண் ணெழுத்தும்
நயமிகு மொழுக்கமும் நனிசீர்த் தேற்றமும்
16. உயிர்த்திருந் தனவற முனுற்றர சிருந்தது
மற்றிவை யாவும் வான்றமிழ்ப் புலவர்
18. சொற்ற மொழிகள் தொகைப் படு வேதம்
ஆகமம் புராணம் அவிரிதி காசம்
20. வாகய லார்சொல் மருளி லாங்கிலக்
கற்றவர் கற்பொறி கவின்பந்தர்க்கார்
22. தத்தர் முன்னையர் தம்முறை வழியால்
துணியப் பட்டன. தொன்றீ ரினத்தில்
24. இணங்கா நாற்குல மியற்றினர் பின்னோர்
என்னலு மொருதலை யிவையுண்
26. மன்னி யுணர்ந்து மயக்கொழி வீரே.''

தமிழர் தொன்மை சுட்டும் இப்பாடல் நடையும், பொருளும் கருதத் தக்கன.

### சுப்பிரமணிய சிவா

இனி நிறைவாக மற்றோர் தூண்டலுண்மை காண்டற் குரியதாம்.

11. 1 விடுதலை வீரர் சுப்பிரமணிய சிவாவினால் நடத்தப் பட்ட இதழ் ஞானபாநு என்பது. அது 1894 இல் தொடங் கப்பட்டது. பின்னாளில் சிவா, இதழாசிரியர் பொறுப் பேற்றார். அதில் 1915 இல் வந்ததோர் அறிக்கை வருமாறு:

ஐந்து ரூபாய்!

11. 2 ''உங்களால் தனித்தமிழ் எழுத முடியுமா? முடியுமானால் முந்துங்கள். சமஸ்கிருதம் முதலிய அந்நிய பாஷைச் சொற்களில் ஒன்றும் கலவாது தனித்தமிழில் நமது 'ஞானபாநு'வில் எட்டுப் பக்கத்திற்குக் குறையாது வரும் படியாக தமிழ்ப் பாஷையின் சிறப்பைப் பற்றியாவது திருவள்ளுவ நாயனாரின் சரித்திரத்தையாவது எழுது வோருக்கு ரூபா ஐந்து இனாமளிப்பதாகத் தமிழபிமானி யொருவர் முன் வந்திருக்கிறார்.

சமஸ்கிருதச் சொல்லாகிய கஜம் திரிந்து தமிழில் கயம் என்றாயிருப்பது போன்ற திரிபுச் சொற்களும் உபயோகப் படுத்தலாகாது. சுருக்கத்தில் எந்தப் பாஷையின் சொற்களுக்கும் சம்பந்தமில்லாத தனித் தமிழ்ச் சொற்களே உபயோகிக்கப்பட வேண்டும்.

வியாசங்கள் வருகிற ஆவணிமீ 15-ம் தேதிக்குள் நமது 'ஞானபாநு' கார்யஸ்தலத்திற்கு அனுப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது. வெகுமதிப்புக்குரிய தாகிய வியாசமானது நமது பத்திரிகையில் பிரசுரிக்கப் படும். இவ்விஷயத்தைப் பற்றி மற்ற விஷயங்கள் வேண்டு வோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்க.

கார்யஸ்தர்
ஞானபாநு
மைலாப்பூர், சென்னை'' [30]

11. 3 என்பது அவ்வறிக்கைச் செய்தி. தனித் தமிழில் அறிக்கை இல்லை எனினும், அத் தமிழில் எழுதத் தூண்டல் உள்ளது. 'சமஸ்கிருதம்' முதலிய அந்நிய பாஷை' என்ற குறிப்பும் உண்மை எண்ணத் தக்கது.

11. 4. ''இயன்றவரை தமிழே பேசுவேன்; தமிழிலே எழுது வேன்; சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன்'' என்னும் பாரதியார் எழுத்தும், 'ஞானபாநு'வில் ''உங்கள் நா தமிழே பேசுக; நீங்கள் கையிலேந்தும் இறகு தமிழே எழுதுக; உங்களுடைய ஹிருதயம் தமிழையே நாடுக; உங்களையெல்லாம் தமிழ் மாது தயையுடன் ரட்சித்திடுக'' [31] என்னும் சிவாவின் எழுத்தும் இணைத்துக் காணத் தக்கன.

30. மகாகவி மலர். பக். 83-94. (1915 ஜூலை ஞானபாநு இதழ்)

31. ,, ,, (1915 நவம்பர் ,, ,, )

இத் தூண்டல்கள் எல்லாமும் பிறவும் கூடிய துலங்கு தலே அடிகளார் உள்ளத்தெழுந்த தனித்தமிழ்க் கொள்கை என்க.

# 10. ஆய்வும் தோய்வும்

## அகத் தூண்டல்

1. 1 புறத் தூண்டல்கள் எவை எவையாக இருக்கலாம் என்பதை முன்னர்க் கண்டோம். அப்புறத் தூண்டல்கள் மட்டும் ஒரு சீரிய துலங்கலை உண்டாக்கி அதனை நிலைப்படுத்தி நெறிப்படுத்தி வைத்துவிட முடியாது. புறத்தூண்டலால் மட்டும் துலங்கல் பளிச்சிட்டு மின்னிப் படிந்து போதலும் உண்டு. ஆனால் புறத்தூண்டலுடன் அகத் தூண்டலும் அமையும் போதே அசைவிலாக் கடைப்பிடியை வழங்குதல் உறுதியாம். அதனை நோக்குவதே இவ்வாய்வும் தோய்வும் என்க.

## அடிகளார் கல்வி

2. 1 அடிகளுக்கு அரிய அகத்தூண்டலாக அமைந்தது இளந்தைப் பருவத்திலேயே அவர் ஆழ்ந்து கற்ற தமிழ் வளமேயாம். இத் தமிழ் வளம் இனைத்தெனத் தாம் இயற்றிய, திருவொற்றியூர் முருகர் மும்மணிக் கோவை முகப்பிலே குறிப்பிடுகிறார்.

2. 2 ''எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது இருபத்தோராம் ஆண்டில் பெரும்பாலும் நிரம்பியதெனலாம். இருபத்தோராம் ஆண்டிற்குள் தொல்காப்பியம், திருக்குறள், சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தோம்.

2. 3 கலித்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், நாலடி முதலிய நூல்களிற் பெரும்பகுதிகள் அங்ஙனமே நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டன.

2. 4 சிவஞானபோதம், சிவஞான சித்தியார் என்னும் நூல்கள் இரண்டும் முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டன. இவையேயன்றி நன்னூல் விருத்தி இறையனார் அகப்பொருள் உரை, தண்டியலங்காரம் முதலான நூல்களும்

முன்னமே முழுமையும் நெட்டுருச் செய்து மூடிக்கப்பட்டன வாகும்.

2. 5 கல்லாடம் சீவகசிந்தாமணி, பெரிய புராணம் என்னும் நூல்களின் சொற்சுவை, பொருட்சுவைகளில் பெரிதும் மூழ்கியிருந்தும் அவற்றிலிருந்தெடுத்துப் பாடஞ் செய்த செய்யுட்கள் மிகுதியாயில்லை. என்றாலும் அவற்றின் சொற் பொருணயங்கள் எமதுள்ளத்தில் வேரூன்றி நின்றன. இங்ஙனமாக விழுமிய தமிழ்ப் பழநூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே செய்யுளும் உரையும் தனிச் செந்தமிழ் நடையில் எழுதும் திறம் எம திளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்ப தாயிற்று. எழுதும் திறம் வாய்ப்பவே அவைக்களங்களிற் பேசும் திறமும் அதனையொட்டி வாய்ப்பதாயிற்று.

3. 1 அடிகளார்க்கு இருபத்தோராம் அகவை என்பது 1897 ஆம் ஆண்டாம். அக்காலத்துள் தொல்காப்பியம் (1847, 1868, 1885) சிலப்பதிகாரம் (1880) சிந்தாமணி (1887) கலித் தொகை (1887) பத்துப்பாட்டு (1889) மணிமேகலை (1894) என்பவை வெளிப்பட்டிருந்தன. புறநானூறும் (1894) வெளிவந்திருந்தது. இவை பழந்தமிழ் நூல்கள். திருக்குறள் நாலடியார் மூலம் 1812 இலேயே வெளிவந்து விட்டது. சரவணப் பெருமாள் கவிராயர் பதிப்பு 1930 இலும், ஆறுமுக நாவலர் பதிப்பு 1861 இலும் வெளிவந்து விட்டன.

3. 2 இவற்றை நோக்க வெளிவந்த நூல்களையெல்லாம் விடாமல் திறமாகக் கற்றறிந்தார் அடிகள் எனலாம். ஐங்குறுநூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல் என்னும் தொகை நூல்கள் 1903 முதல் 1918-க்குள் வெளிவந்தன வாகலின் தம் இருபத் தோராம் அகவை வரையான கல்வியைச் சுட்டிய அடிகள் இவற்றைச் சுட்டினார் அல்லர்.

3. 3 அடிகளின் இவ்வழுத்தமான கல்வி—அதிலும் செந்தமிழி லேயே அமைந்த நூல்களையெல்லாம் முற்றாக வரப்படுத்திக் கொண்ட கல்வி—அழுத்தமே தனித்தமிழை இயல்பாகப் பேசவும் எழுதவும் வாய்ப்பு ஆயிற்றாம்.

## ஆசிரியர் ஊட்டிய விழிப்பு

4. 1 அடிகளார், தம் ஆசிரியர் சோமசுந்தர நாயகர் வடமொழி தென்மொழிக் கலவையில் மூழ்கிக் கிடந்ததை நினைவுகூர்கின்றார்:

''என்னுடைய ஆசிரியர் அறுபது நூல்கள் வரை எழுதியிருக்கிறார். அவர்கள் நூலை எல்லோரும் படித்து விட முடியாது. அவர்கள் நூலிலே நூற்றுக்கு எண்பது வடசொற்கள் கலந்திருக்கும். மிகுதியாக வடசொற்கள் கலந்திருக்கும். ஆசிரியரை நோக்கி, 'ஏன் மிகுதியாக வடசொற்களைச் சேர்த்து எழுதுகிறீர்கள்?' என்று கேட்டதற்கு ''என்னால் வடசொற்களின்றி எழுத இயலாது. நீ வடசொல் கலவாது தனித்தமிழிலே எழுது' என்று சொன்னார். நச்சினார்க்கினியர் சிவஞான முனிவர் முதலிய உரையாசிரியர்கள் எழுத்திலே நான் சொக்கித் தனித்தமிழிலே எழுதத் துவங்கினேன். ஆசிரியர் யான் தனித்தமிழிலேயே எழுதும் கட்டுரைகளைப் பார்த்து, நீ தனித்தமிழிலேயே எழுது. உனக்குத் தனித்தமிழிலே எழுதும் ஆற்றலை இறைவன் ஆக்கியுள்ளான். உன் தனித்தமிழைப் படிக்கப் படிக்க என் காதுகளுக்கு இன்பமாயிருக்கிறது' என்றார். தனித்தமிழில் எழுதுவதை விடாதே! நீ தனித்தமிழிலே எழுதுவது எனக்கு விழிப்பையும் கிளர்ச்சியையும் உண்டுபண்ணுகிறது என்றும் கூறினார்.''[1]

## ஆசிரியர் காலநிலை

4. 2 அடிகளுக்கு வாய்த்த தனித்தமிழ் ஆற்றல் அவர்தம் ஆசிரியர்க்கு வாயாமையையும் எழுதுகிறார் அடிகள்:

> இவர்களது இளமைக்காலத்தில் தனித்தமிழ்ப் பேரிலக்கணமான தொல்காப்பியமும், தனிச் செந்தமிழ்ப் பேரிலக்கிய நூல்களான பத்துப்பாட்டு, புறநானூறு, கலித்தொகை முதலானவைகளும் அச்சிற் பதிக்கப்பட்டு வெளிவந்தில. இவர்கட்கு 39 ஆம் ஆண்டு நடைபெறும் போதுதான் அதாவது கி. பி. 1885-ஆம் ஆண்டிற்றான் தமிழ்த்திருவாளர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களால் முதன்முதல் தொல்காப்பியப் பொருளதிகாரம் அரிது முயன்று அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது.

4. 3 கி. பி. 1887-ஆம் ஆண்டில் திருவாளர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தனிச் செந்தமிழ்ப் பேரிலக்கிய நூலான கலித்தொகையையும், திருவாளர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய சீவகசிந்தாமணியையும் வெளிப்படுத்திய ஞான்று நாயகரவர்கட்கு அகவை 41.

1. மறைமலையடிகளார் கடிதங்கள் பக். 54.

4. 4 1889-ஆம் ஆண்டில் ஐயரவர்கள் பத்துப்பாட்டு என்னும் தன்னிகரில்லாத் தனிச் செந்தமிழ்ப்பெரு நூலை வெளிப் படுத்தியபோது நாயகரவர்கட்கு அகவை 46.

4. 5 1893-இல் அவர்கள் புறநானூறு என்னும் அரும் பெருந் தமிழ்ப்பழநாகரிகமாட்சி தெரிக்கும் விழுமிய நூலை வெளிப் படுத்திய போது நாயகரவர்கட்கு அகவை 47. இங்ஙனமாக இவ் வரும்பெருந்தமிழ் நூல்களெல்லாம் நாயகரவர்கட்கு முப்பத்தெட்டாண்டு அகவை சென்ற பின்னர் வெளிப் பட்டமையால் இவர்கள் தமது இளமைக் காலத்திலேயே இவைகளைப் பயின்று தனிச் செந்தமிழ் வளனும் விழுப்பமும் உணர்ந்தின்புறுதற்கு இடமில்லாமலே போயிற்று.[2]

## தடை விடை

5. 1 நாற்பதாண்டு நிறைந்த நாள் தொட்டேனும் வெளிப் போந்த நூலைப் பயிலாமை என்னை என வினாவிக் கொண்டு அடிகளே மறுமொழி பகர்கின்றார்.

5. 2 ''தொடர்பாக இவர்கள் பரந்தாழ்ந்த சமய நூலாரய்ச் சியிலேயே முனைந்து நின்றமையால் தமது முப்பத்தொன்ப தாம் ஆண்டிலிருந்து வெளிப்போந்த தொல்காப்பியம் கலித் தொகை புறநானூறு முதலான பண்டைத் தனிச் செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயிறலிற் கருத்தூன்ற மாட்டாதவரானார்கள். இவ்வரும் பெருங் கருவி நூல் களெல்லாம் ஒருவர் தமக்கு இருபதாண்டு நிரம்பு முன்னரே பயின்று தெளியற் பாலனவாம்; இருபதாண்டிற்குப்பின் அறிவுநூல்களே ஆராயற்பாலன.

5. 3 ''நாயகரவர்கள் தமக்கு இருபதாண்டு நிரம்புமுன்னே கிடைத்த நன்னூல் முதலான பிற்காலச் சிற்றிலக்கணங் களையும் திருக்குறள் நாலடியார் பெரியபுராணம் முதலான இலக்கியங்களையும் நன்கோதியுணர்ந்தமையால் இருப தாண்டுக்குமேல் அறிவுநூற் பயிற்சியிலேயே தமது கருத்தைத் தோய்விப்பாராயினர். அறிவுநூற் பயிற்சியிற் கருத்து ஈர்ப் புண்டபின், அதனை மறித்தும் கருவி நூற்பயிற்சியிற் செலுத்துதல் இயலாது. தேமாங்கனியின் சுவைகண்டவர்க்கு அதனிற் குறைந்த சுவையுடைய கனிகளிற் செல் லாமை இயற்கையன்றே. ஆகவே நாயகரவர்கள் பண்டைத்

---

2. சோமசுந்தர நாயகர் வரலாறு பக். 10.

தனிச் செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயிலாத காரணம் இதுவாதல் கண்டு கொள்க'' என்கிறார்.[3]

5. 4 தம் ஆசிரியரவர்கள் வேண்டுமென்று முனைந்தால் உரையும் பாட்டும் தனித்தமிழில் சுவைபெருக எழுதவல்லவர் என்பதை எடுத்துக் காட்டால் விளக்கும்[4] அடிகளார், தம் ஆசிரியரின் வடசொற்கள் கலந்த நடையை எடுத்துக் காட்டித் தமிழ் ஒன்றே அறிந்த எந்தத் தமிழ்மகனேனும் கற்று எளிதில் அறிந்து கொள்ள இயலுமோ என இரங்கிக் கூறுகிறார்.[5]

## விருப்பும் மறுப்பும்

6. 1 தாம் தம் ஆசிரியர் போல் கலப்பு நடையில் எழுதுதற்குச் சிறுவிருப்பு உண்டாயதையும் தடுத்து ஆட் கொள்ளபட்டதையும் அடிகளே கூறுகிறார்:

''யாம் நாயகரவர்களின் நூல்களைப் பயின்று அவர்களையடுத்த இளமைக் காலத்தில் நாயகரவர்களின் உரை நடையைப் போல் வடசொற் கலப்பு மிகுதியும் உடைய ஓர் உரைநடை எழுத எமக்கு ஒரு விருப்பம் உண்டாயிற்று. என்றாலும் நக்கீரர் சேனாவரையர் சிவஞான முனிவர் முதலான உரையாசிரியன்மார் வரைந்த தனித்தமிழ்த் தீஞ்சுவை யுரை நடையிற்பெரிது பழகிய எமதுளத்தை வடசொற் கலந்த நடைக்குத் திருப்புவது எளிதில் இயலவில்லை''[6]

6. 2 தாம் நாயகர் அவர்களைப் பின்பற்றி வடசொற்களை மிகுதியும் கலந்து எழுதாமைக்கு நாயகர் அவர்களும் ஒரு காரணம் என விளக்கும் அடிகள் காட்டும் சான்றுகளில் ஒன்று:

''1898ஆம் ஆண்டு மூன்றாந் திங்கள் ஒன்பதாம் நாளிற் சென்னைக் கிறித்துவ கல்லூரியில் தமிழாசிரியராய் அமர்ந்த காலந்தொட்டு. நாயகரவர்கட்கு அணுக்கராய் ஒழுகி வருகையில் வடசொல் மிகக்கலந்த அவர்களது உரைநடையைப்போல் யாமும் எழுதுவது நல்லதாமோ? என்பதை அவர்கள்பால் வினவ அவர்கள், வடசொற்

3. சோமசுந்தர நாயகர் வரலாறு பக். 11-12.
4, ௸ ௸ 18
5. ௸ ௸ 22
6. ௸ ௸ 22

கலவா உனது உரைநடையே இனியதாயும் எவர்க்கும் எளிதிற் பொருள் விளங்கத்தக்கதாயும் இருத்தலால், உனது நடைப்படியே எழுது; எனது உரை நடையைப் பின்பற்றாதே' என்று ஆணை தந்தார்கள். அவர்களின் அக்கருத்தை அறிந்தபின் முன்னமே தொல்லாசிரியர்தம் தீந்தமிழ் உரைநடையிற்பழகி அதன் சுவைகண்ட எமதுளத்திற்கு அவர்கள் இட்ட கட்டளை மிகவும் பொருத்தமுடையதாகவே காணப்பட்டது. அதுமுதல் தீந்தமிழ் உரைநடை எழுதுவதில் எமது உள்ளம் உறைந்து நிற்கலாயிற்று.''[7]

6. 3. இவற்றைக் கூறிய அளவில் அமையாத அடிகளார், ''அவர்கள் தம்மைப் போலவே வடசொற் மிகக்கலந்த நடையெழுதுதலை எனக்குச் சிறிது அழுத்திச் சொல்லியிருந்தால் யாமும் அங்ஙனமே எழுதித் தமிழுரை வனப்பைச் சிதைத்திருப்போம். ஆனால் அங்ஙனம் ஆகாமல் இறைவன் திருவருளே அவர்களிடை நின்று தடுத்துத் தமிழ் நலனை ஓம்பியது'' என்கிறார்.[8]

## ஆய்வு நூல்கள்

7. 1. இவற்றால் அடிகளார் எழுத்தாலேயே அவர்தம் இருபத்தோராம் அகவையிலேயே தனித்தமிழ்க் கடைப்பிடி தோன்றிவிட்டமை தெளிவாக விளங்குகின்றது. தம் அகத்து எழுந்து ஆழ்ந்துகிடந்த தனித்தமிழ் நாட்டம், தம் ஆசிரியராலும் வரவேற்கப் பட்டதையும் கூறி மகிழ்கின்றார் அடிகளார். ஆகலான் புறத் தூண்டல்களுக்கு முன்னரும், இடையேயும் அகத்தூண்டல்களும் இருந்தன என்பது வெளிப்படையாம்.

7. 2. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை முதற்பதிப்பு 1903இல் வெளிவந்தது. அப்பாட்டைப் பற்றி ''இப்பாட்டினுள் இடைச் சொற்களையும் வேற்றுமை யுருபுகளையும் நீக்கி எண்ணப்பட்ட சொற்கள் சிறிதேறக்குறைய ஐந்நூறு சொற்களாகும்; இவற்றுள் முன்வந்த சொல்லே பின்னும் வருமாயின் பின்வந்தது எண்ணப்படவில்லை. இவ்வைந் நூறு சொற்களுள் நேமி, கோவலர், படிவம், கண்டம், படம், கணம், சிந்தித்து, விசயம், அஞ்சனம் என்னும் ஒன்பதும் வடசொற்கள்; யவனர் மிலேச்சர் இரண்டும் திசைச்

---

7. சோமசுந்தர நாயகர் வரலாறு பக். 23.
8. ,, ,, 24.

சொற்கள். ஆக இதனுட் காணப்பட்ட பிறமொழிச் சொற்கள் பதினொன்றேதாம். எனவே, இப்பாட்டினுள் நூற்றுக்கு இரண்டு விழுக்காடு பிறசொற்கள் புகுந்தன என்றறிக; ஏனையவெல்லாம் தனிச்செந்தமிழ்ச் சொற்களாகும்''[9] என்று பகுத்தெழுதும் நோக்கும் திறமும் தனித் தமிழ் நாட்டம் அழுந்தியிராமல் முடியாவே!

7. 3 இவ்வாறே பட்டினப்பாலையை, ''இப்பாட்டின்கட் சிறிதேறக்குறைய ஆயிரத்து முந்நூற்றறுபத்தொன்பது சொற்களிருக்கின்றன. இவற்றுட் பதினொரு சொற்கள் வடசொற்களாம். அவை மகம், அங்கி, ஆவுதி, பூதம், மது, பலி, பதாகை, அமரர், கங்கை, புண்ணியம், சமம் என்பனவாம். ஞமலி என்னும் ஒருசொல் பூழிநாட்டிற்குரிய திசைச்சொல்லாகும். ஆகவே, இப்பாட்டில் நூற்றுக்கு ஒன்று விழுக்காடு பிறநாட்டுச் சொற்கள் கலந்தன என்பது அறியற்பாற்று. இதனால் இவ்வாசிரியர் காலத்திற் றமிழ் மிகவும் தூயதாக வழங்கப்பட்டு வந்ததென்பது புலப்படும் என்க''[10] என்று ஆய்ந்து அறுதியிட்டுக் கூறுவதைப் பார்க்க 1906ஆம் ஆண்டுக்கு முற்படவே தனித்தமிழ் நாட்டத்தில் தோய்ந்திருந்தார் அடிகளார் என்பது வெளிப் படும்.

7. 4. 1905ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவில் 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்' என்னும் தலைப்பில் அடிகளார் உரையாற்றினார். அவ்வுரையே அடுத்த ஆண்டு, அப்பெயராலேயே நூலாக வெளிப்பட்டது. அந்நூல் 55 பக்கங்களையுடையது. அதில் ஏறத்தாழ ஒன்ப தாயிரம் சொற்கள் உள. இவ்வொன்பதாயிரத்துள் சிறப்புப் பெயர்கள் நீங்கலாக இடம்பெற்ற வடசொற்கள் இருபத்தைந்தாம். அவை : இரத்தம், வசித்து, சைவம் (2). காரணம் (3), பிரயோகம் (4), நியாயம் (7), சுத்தம் (9), உச்சரிப்பு (13), வாக்கியம் (16), காப்பியம் (18), பேதம் (20), சூத்திரம் (21), இலௌகிகம் (27), தத்துவம் (29), வியாபாரி (30), தூபி (33), சிலாசாதனம் (34), சடம் (35), சித்து (42), இரசம் (42), சொரூபம், பிரமாணம் (44), அந்தரங்கம் (45), பிராணி (48), வேதாந்தம் (51) என்பனவே. இவற்றை நோக்க 370 சொற்களுக்கு ஒரு சொல்லே வடசொல் என்பது விளங்கும். தனித்தமிழ்

9. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை பக். 56.
10. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை பக். 77.

உணர்வு ஊற்றெடுத்திராக்கால் இவ்வாறு எழுதுதற் இயன்றிராதாம்.

7. 5 இரண்டாம் பதிப்பின் முகவுரையில் ''இந்நூல் நடையின் கண் ஆங்காங்கு விரவியுள்ள சிற்சில வடசொற்களும் அம் மூன்றாம் பதிப்பின்கண் முற்றுங்களைந்து விடப்படும்'' என் கிறார்.

7. 6 ''நீர் வேட்டுச் செல்கின்றான் ஒருவன் நறுமணங்கமழும் இளமரக்காவின் இடையிடையே தங்கி அயர்வு சிறிது ஒழிந்து முப்பழச்சாறுந்தேனும் விரசினாற் போற் சுவைக் கும் தெண்ணீர் நிரம்பிய நீர் நிலையிற் சென்று நீர் ஆரப் பருகி வேட்கையொழிந்து அயர்வு முற்றும் நீங்கினாற் போல ஆசிரியர் தொல்காப்பியனார் திருவாய்மலர்ந்தருளிய எழுத்ததிகார சொல்லதிகாரங்களிடையே தங்கித் தமிழ்ப் பெருமை தெரியா அறியாமை சிறிது சிறிதே ஒழிந்து இப்போது பொருளதிகாரத்திற் சென்று ஆண்டு விரிந்த நுண்பொருட்டொகுதியில் ஒன்றிரண்டு நுகர்ந்து எமதறி யாமை முற்றும் போக்குவோம்''[11] என்று எழுதும் அடிகளார் உரைநடை தனித் தமிழ்க் கொள்கை வெளிப் பாட்டுக்குப் பதினோராண்டுகளின் முன்னே வரையப்பட்ட தெனின், அக்கருத்து அன்றே ஆழ்ந்து கிடந்தது என்பதே தகவாம்.

## ஆய்வுக் கட்டுரைகள்

8.1 தமிழ் மக்கள் வழங்கிய தமிழ் மொழி மிகப் பழைய தாதலும் அஃதொரு தனித்த முழு முதற் சொல்லாதலும் தேறாத வரலாற்று ஆசிரியர்கள் பிற்றை ஞான்று தோன்றிய சில தமிழ் நூல்களில் வடசொற்கள் சில வழங்குதல் பற்றித் தமிழ் வட மொழியினின்று தோன்றியதாமென்று கூறுவதை மறுத்து எழுதியவர் அடிகளார்.[12]

8.2 ஞானசாகர இதழில் தமிழ் வடமொழியினின்று பிறந்த தாமா? எனத்தலைப்பிட்டு மறுத்து எழுதியவர் அடிகளார்.[13]

8.3 தமிழ் வடமொழியின் வேறாயதோர் தனிமொழி என்பதை நிறுவிக் காட்டியவர் அடிகளார்.[14]

---

11. பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும் பக். 39
12. பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும் பக் 7.
13. ,, ,, 8.
14. ,, ,, 9.

8. 4 இவ்வினைப்பாடுகள் எல்லாமும் 1905-ஆம் ஆண்டுக்கு முன்னரே அவர்களால் செய்யப்பட்டது. எனின் 1916-ஆம் ஆண்டில்தான் தனித்தமிழ்க் கொள்கை உருவாயிற்று என்பது தகுமா? என ஐயுறவுண்டாதல் இயல்பே. 'தகும்' என்பது மறுமொழியாம்.

8. 5 வழியிலே ஒருகால் கண்ட இறப்பும் முதுமையும் நோயும் புத்தரைத் துறவு கொள்ள ஏவிற்று என்னும் செய்தி நாட றிந்தது! பிறந்த சின்னாளிலேயே தாயை இழந்தவர் புத்தர். மண முடிக்கும் நிலையும், மகப்பேறுறும் நிலையும் அடைய மூத்தவர், மூப்புகளைக் கண்டவர் புத்தர். இளமை தளிர்ப்பு முதல் மூப்பு வரை தந்தையாரைக் கண்முன் கண்டவர் புத்தர். இல்லாளின் மகபேற்றுத் துயருடன் தாமும் இடையிடை ஏதேனும் நோய்க்கு ஆட்படாதிருக்க இயலாத மானிட உடற்பிறப்புடையவர் புத்தர். இவ்வாறா கவும் ஒரு நாள் துறவு மேற்கொண்ட குறிப்புக் கூறுவ தென்ன?

8. 6 புத்தர் உள்ளகத்துத் ததும்பி வழிந்த உணர்வு ஒருநாள் வெளிப்பட விளங்கிற்று என்பதே. இவ்வாறே அடிகளார் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்த தனித்தமிழ்க் கொள்கை ஒருநாள் ஒரு சூழலில் கிளர்ந்தெழுந்தது என்பதே.

8. 7 நீறுபூத்த நெருப்பாகக் கிடந்தது எரிவாய்ப்புக் கிட்டிய காலையில் தன்னிருப்பைக் காட்டி ஒளிவிடுவது இல்லையா! அது போல்வது தனித்தமிழியக்கத் தோற்றரவு என்க.

# 11. தந்தையும் மகளும்

## நீலாம்பிகையார்

1. 1 தந்தை, தவத்திரு மறைமலையடிகளார்; மகள் தமிழ்த் திரு நீலாம்பிகையார். அடிகள் நாகையைச் சார்ந்தவர். அதனால், நாகையில் கோயில் கொண்ட அம்மையின் திருப் பெயரைத் தம் இனிய மகளார்க்கு இட்டிருந்தார். நீலா பிறந்த நாள் 6. 8. 1903.

1. 2 நீலா தொடக்கப் பள்ளிப் படிப்பைச் சென்னையிலும் பல்லவபுரத்திலும் பயின்றார். பல்லவபுரத்தில் அதற்கு மேற்பட்ட வகுப்புப் பள்ளி அக்காலத்தில் இல்லாமையால் அவர்தம் பள்ளிப் படிப்பு அவ்வளவில் நின்றது.

1\. 3 படிப்பு பள்ளியில் மட்டும் பயிலப் பெறுவதோ? அதற்கு இடமேது? காலமேது? ஆர்வம் இருந்தால் எங்கும் என்றும் கற்க வாய்ப்புண்டே! உலகத்தைப் போலத் திறந்த வெளி உரிமைப் பள்ளிக் கூடம் ஒன்றுண்டோ? அதிலும் அடிகளார் தம் அன்புச் செல்வியின் கல்விக்குப் பள்ளிக்கூடம் விடுத்தமை ஒரு தடையாமோ?

## நீலாம்பிகையார் கல்வி

2\. 1 மும்மொழிவல்ல அடிகளார் புலமை நலமெல்லாம் நீலாவினிடத்துத் தங்கியது. அவர் தாமும் மும்மொழிப் புலமையும் இலக்கண இலக்கியத் தேர்ச்சியும், திருமுறைத் திறமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றார். அடிகளார், தம் மக்களுள் நீலாம்பிகையார்க்கே ஆர்வத்தோடும் கற்பித்தார் என்பதும், பல்வேறு பணிகளுக்கு இடையேயும் காலமும் களமும் வகுத்து முறையே கற்பித்தார் என்பதும் கருதத் தக்கனவாம்.

2\.2 அடிகளின் குரலோ தேனினும் இனியதாம்! நீலாம்பிகையின் குரலோ அதனினும் இனியதாம்! யாழும் குழலும் குயிலும் நீலாம்பிகையின் குரலுக்குத் திறை செலுத்தல் வேண்டுமாம்! அடிகள், தோடி பைரவி, ஆனந்த பைரவி, மோகனம், மத்தியமாவதி, சங்கராபரணம், நீலாம்பரி முதலாகிய பண்களை நீலாம்பிகைக்குக் கற்பித்தாராம்.

## தனித்தமிழ் தோற்றம்

2\. 3 1916 ஆம் ஆண்டு! நீலாவுக்கு அகவை 13. அடிகளார் வள்ளலார் பாடிய,

''பெற்ற தாய்தனை மகமறந்தாலும் பிள்ளையைப்
பெறுந்தாய் மறந்தாலும்
உற்றதே கத்தை உயிர் மறந்தாலும் உயிரை
மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகங் கலைமறந்தாலும் கண்கள்நின்
றிமைப்பது மறந்தாலும்
நற்ற வத்தவர் உள்ளிருந் தோங்கும் நமச்சிவா
யத்தை நான் மறவேனே''

என்னும் பாடலைப் பாடினார்.

2\. 4 பாடிய அளவில் நில்லாமல், ''நீலா! இப்பாடலில் 'தேகம்' என்றுள்ள வடசொல் ஒன்றனையும் நீக்கி, அவ்விடத்தில் 'யாக்கை' என்னும் தமிழ்ச் சொல் பெய்யப்

பெற்றிருக்குமானால் இச்செய்யுளின் ஓசையின்பம் எவ்வளவு மேம்பட்டதாக இருக்கும்! பிறமொழிச் சொற்கள் கலப்பதால் தமிழின் இனிமை குறைகின்றது; அன்றியும், நாளடைவில் தமிழில் கலந்த பிறமொழிச் சொற்கள் நிலை பெற்று அச்சொற்களுக்கு நேரே வழங்கி வந்த நம் அருமைத் தமிழ்ச் சொற்கள் மறைந்து விடுகின்றன' என்றார்.

2. 5 'அப்படியானால் நாம் அயல்மொழிச் சொற்களை விலக்கித் தனித்தமிழாலேயே பேசுதல் வேண்டும். அதற் கான முயற்சிகளைக் கைவிடாது மேற்கொள்ள வேண்டும்.'[1] என்றார் நீலாம்பிகையார்.

2. 6 'வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிதல்' என்பார் வள்ளுவர். மகளார் சொல்லைக் கேட்ட அடிகளார் வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்ததாக மகிழ்ந்தார். மகளாரும் தம் தவத்தந்தையார்க்கு ஏற்ற தவமகளாகத் திகழ்ந்தார். அந்நிலையில் அடிகளார் உள்ளத்தில் கிடந்த தனித்தமிழ் முகை, மலர்ந்து மணம் பரப்புவதாயிற்று. தந்தையாரை நினைந்து மகளாரும், மகளாரை நினைந்து தந்தையாரும், இருவரையும் நினைந்து தமிழன்னையும் பூரிப்படையும் நிலையாயிற்று!

## இயக்கம்

3. 1 அன்புத் தந்தையாம் அடிகளார் ஆர்வமும், அருமை மகளாம் நீலாம்பிகையின் வேண்டலும் ஒன்றுபட்டுப் பிறந்ததே தனித்தமிழ் இயக்கம்!

3. 2 ஓர் இயக்கத்தின் சீர்மை பெயரில் இல்லை! கூட்டத்தில் இல்லை! முழக்கத்தில் இல்லை! அதன் இயக்கத்திலேயே உள்ளது! இயக்கத்தின் இயக்கச் சிறப்பே, இயக்கச் சிறப் பாம்!' தேக்கமாயின், கட்டுக்கிடை நீரெனக் கெட்டுக் கேடுறுத்தும்.

3. 3 "வெந்நீரும் ஆடாதார் தீக்காய்பவோ" என்பது பழ மொழி. அவரவர் செய்யத்தக்க வினையை அவரவர் செய் யாமல் அடுத்தவரை ஏவிச் செய்ய நினைவார், செய்ய இயலாதவரே' என்பதை விளக்கும் பழமொழி இது. அடிகளார் ஆர்வமும் ஆர்வத்தால் தோன்றிய இயக்கமும் எவரையும் எதிர்நோக்காமல் தம்மளவில் தோன்றியதே!

---

1. மறைமலையடிகள் வரலாறு. பக். 292-298.
கழக அமைச்சர் திருவரங்கர் வரலாறு பக். 27-28

அதற்கு அருந்துணையாக வாய்த்த முதல் உறுப்பாளி நீலாம்பிகையாரே! ஆதலான் அடிகளார் இயக்கம் எவரையும் எதிர் நோக்காமல், எவருக்கும் காத்துக் கிடவாமல், தலைவர், செயலர், பொருளர், உறுப்பர் எனத் தேடியலையாமல் நினைத்த போதே நிறுவனமாகி-இயக்கமாகிச் செயலில் தலைப்பாடுற்றதாம்.

3.4 'சுவாமி வேதாசலமாக' இருந்த அடிகளார் 'மறைமலையடிகள்' ஆனார். அவர்கள் அமைத்து நடாத்தி வந்த, 'சமரச சன்மார்க்க சங்கம்', 'பொது நிலைக் கழக'மாயிற்று. 'ஞான சாகரம்' என்னும் இதழ் 'அறிவுக்கட லாயிற்று.'[2] மிக மிக அரிதாக அதுகாறும் பயன்படுத்தி வந்த வேற்றுச் சொற்கள் விலக்குண்டு பேச்சும் எழுத்தும் பொழிவும் எல்லாம் எல்லாம் தனித்தமிழாயிற்று. அடிகளார் திருமனை தனித்தமிழ்க் கோயிலாயிற்று.[3]

3.5 அடிகளார் இளந்தைப் பருவந்தொட்டே கட்டுரைகளும் நூல்களும் யாத்தவர் அல்லரோ! புதிய படைப்புகளில் பிற மொழிக் கலப்புப் புகாமல் காக்கலாம்! ஆனால் முன்னரே வெளிவந்த படைப்புகளில் அருகிய அளவிலேனும் பிற மொழிக் கலப்பு உண்டே! என் செய்வது?

3.6 ''புதுமை நிலா அழகு நிலா பூத்தது விண் மேலே
பழமையிலே புது நினைவு பாய்ந்தெழுந்தாற் போலே''
என்பார் பாவேந்தார். அதுபோல் பழம் பதிப்பு புதுப் பதிப்பாகும் போது கலப்புகளை அகற்றித் தனித்தமிழில் வெளிப்பட்டது. புதுப்பதிப்பு வெளிப்படுந்தோறும் அதனை அடிகளார் சுட்டிக் காட்டுதலை முறையாக மேற் கொண்டார்.

## மறுபதிப்பும் திருத்தமும்

4.1 முல்லைப் பாட்டின் மூன்றாம் பதிப்பும், பட்டினப் பாலையின் இரண்டாம் பதிப்பும் 1919-இல் வெளிவந்தன. அவற்றுள் முல்லைப்பாட்டு மூன்றாம் பதிப்பு முகவுரையின் ஒருபகுதி:

---

2. மறைமலையடிகள் வரலாறு பக். 298

3. நீலாம்பிகையார் தம் உடன்பிறந்தார் திருஞான சம்பந்தத்தை 'அறிவுத் தொடர்பு' என்றும், மாணிக்க வாசகத்தை 'மணிமொழி' என்றும், சுந்தர மூர்த்தியை 'அழகுரு' என்றும், திரிபுர சுந்தரியை 'முந்நகரழகி' என்றும் பெயரிட்டு வழங்கினார் என்ப. ஷை நூல் பக். 298

4.2 ''இவ்வாராய்ச்சி யுரையின்கண் மற்றொரு முதன்மை யான சீர்த்திருத்தமும் செய்திருக்கின்றோம். தொன்று தொட்ட சிறப்பும் இலக்கண இலக்கிய வரம்பும் தனக் கெனப்பன்னூராயிரம் சொற்களும் வாய்ந்து, இன்றுகாறும் வழக்கு வீழாது உயிரோடு உலாவிப் பன்னீறாயிரம் மக் கட்குப் பெரிது பயன்பட்டு வரும் நமது இனிய செந்தமிழ் மொழியை அயல்மொழிச் சொற்கள் விரவாமற் பாதுகாத் துத் தூயதாய் வழங்கி அதனை வளம்பெறச் செய்வது தமிழ ராயினார் ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாத கடமை யாம்.

4.3 ''சில நூற்றாண்டுகளாய்த் தோன்றி இலக்கண இலக்கிய வரம்பில்லாது தமக்கெனச் சில சொற்களேயுடைய மொழி களையும், உலக வழக்கிற்குச் சிறிதும் பயன்படாமல் இறந்துபட்ட மொழிகளையும் அவற்றிற்குரியாரும் அவற் றிற்கு உரியார் போற் றம்மை எண்ணிக் கொள்வாரும் அவற்றைத் தூயவாய் வழங்கவும், அவற்றை உயிர்ப் பிக்கவும் ஓவாது முயன்றுவர, எல்லா நலங்களும் ஒருங் குடைய நமதருமைச் செந்தமிழ் மொழியை நம்மனோர் பயிலாதும் பாதுகாவாதும் கைவிட்டிருத்தல் நிரம்பவும் இரங்கற்பாலதொன்றாம். இனியேனும் அவர் அங்ஙனம் மடிந்திராமைப் பொருட்டு நம்மனோரிற் கற்றவராயிருப் போர் ஆரியம் ஆங்கிலம் முதலான பிறமொழிச் சொற்களைக் கலவாமற் றனித் தமிழிற் பேசவும் எழுதவும் கடைப் பிடியாய்ப் பழகி வரல் வேண்டும்.

4.4 ''இதனை முன் நடந்து காட்டும் பொருட்டு இதற்குமுன் யாம் எழுதிய நூல்களிற் புகுந்த சிற்சில அயன்மொழிச் சொற்களையும் அந் நூல்களைத் திரும்பப் பதிப்பிட்டு வரும் இப்போது முழுதும் களைந்து விட்டு, அவை நின்ற இடத்திற் தூய தமிழ்ச் சொற்களையே நிரப்பி வருகின் றோம்.

4.5 ''இம் முல்லைப் பாட்டாராய்ச்சியுரையின் கண்ணும் முற் பதிப்புக்களில் இருந்த அயன் மொழிச் சொற்களை நீக்கி அவற்றிற் கீடான செந்தமிழ்ச் சொற்களையே இப்பதிப்பின் கட்பெய்து வைத்திருக்கின்றோம். என்றாலும் கால நிலைக் கும் நாகரிக வளர்ச்சிக்கும் இசையச் சில அயன் மொழிச் சொற்களையும் சில சொற்றொடர்களையும் குறியீடுகளை யும் ஒரேவிடங்களில் மிகச் சிறுக எடுத்தாளுதல் வழுவன் றென்பதூஉம் அறிஞர்க்கு உடன்பாடாம் என்க. இத்தன்

மையவான ஆராய்ச்சியுரைகள் எழுதுவதற்கு நல்வழி காட்டின ஆங்கில மொழி நல்லிசைப் புலவர்க்கு யாம் எழுமையும் நன்றி பாராட்டுங் கடமை உடையேம்.''[4]

5. 1 ''சில அயன்மொழிச் சொற்களையும் சில சொற்றொடர்களையும் குறியீடுகளையும் ஓரோவிடங்களில் மிகச் சிறுக எடுத்தாளுதல் வழுவன்று'' என்று கூறும் அடிகளார் இம் முல்லைப் பாட்டில் எடுத்தாண்டுள்ளவை தாம் எவை எனின் வருமாறு :

5. 2 மில்டன் (5), ஓமர், தாந்தே, செகப்பிரியர் (7), கீதே (8) இரசிகர் (Ruskin) (9), உவிலியம் மிண்டோ (24) பெயின் (32) சோனகர் (72), பெலுச்சி மிலேச்சர் (73) என்னும் ஆங்கிலவழிச் சிறப்புப் பெயர்களும், காளிதாசர் (8), சூத்திரம், விருத்தப்பா, பௌத்த சமயம், ஆசியா (16), இந்திரன், வருணன், மித்திரன், இருக்கு தஸ்யு (18) இரிஜிஸ்வான், வங்கிரிதன், சுசுரவர், கிரிடி (19) தாசர்கள் (20) பிராமணங்கள், உபநிடதங்கள் (21) கௌதம சாக்கியர் நிருவாணம் (22) வேதாந்த சூத்திரம், இராமாநுசர், சங்கராசிரியர் தீபா பண்டிதர் (35), சாகுந்தலம் (58) என்னும் வடமொழிவழிச் சிறப்புப் பெயர்களுமே யல்லாமல் பிறி தில்லையாம்.

5. 3 இத்தகு சொற்களுக்காகத் தானே ''வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ; எழுத்தொடுபுணர்ந்த சொல்லா கும்மே''[5] என ஆசிரியர் தொல்காப்பியர் நூற்பா யாத்த தாம் என்க.

6. 1 இனிப் பட்டினப்பாலை இரண்டாம் பதிப்பின் முகவுரையிலும் சில அரிய குறிப்புகளை வெளியிடுகிறார் அடிகள்.

இப்பதிப்பின்கண் மற்றொரு முதன்மையான மாறுதல் செய்திருக்கின்றோம். பெரும்பாலும் வடமொழி புகுதாமல் தனித்தமிழ் நடையில் நூல்கள் எழுதுவதே எமக்கு இயற்கை என்றாலும், வடசொற்களை அறக்களைய வேண்டுமென்னுங் கடைப்பிடி எமதுள்ளத்தில் முன்னிருந்தது இல்லை. ஆனால், இஞ்ஞான்று பலவகைப்பட்ட நூல்கள் எழுதுவாரும் நூல்கட்கு உரைவகுப்பாரும் வடசொற்களையும் பிறசொற்களையும் தாம் எழுதுந்தமிழில் ஒரு வரை

4. மூன்றாம் பதிப்பின் முகவுரை பக். 19-20
5. தொல். 884.

துறையின்றிப் புகுத்தித் தமிழின் தீஞ்சுவையையும் அஃகா வளத்தையும் கலங்காத் தூய்மையையும் பழுதுபடுத்தி அதனை அழித்து வருதல் கண்டும், பொருள்களைத் தெரித்தற்கு வேண்டிய அளவு சொற்கள் இல்லாமற் பல வகைக்குறைபாடுகள் உடைய தாயிருக்கும் ஆங்கில மொழியைப் பிறமொழிக் கலப்பில்லாமல் வழங்குவது பெரிதும் வருத்தமே யென்றாலும் அம்மொழிக்குரிய ஆங்கில நன் மக்கள் இயன்ற மட்டும் அதனைத் தூய்மையாகவே வழங்கல் வேண்டு மென்று கட்டுரைத்து வருதல் கண்டும் மற்றை மொழியின் உதவியை வேண்டாது தனித்து இயங்க வல்ல சொல்வளமும் பொருட் செழுமையும் உடைய நம் செந்தமிழ் மொழியை அதற்கேயுரிய சொற்களால் வழங்காமல் அயல் மொழிச் சொற்களை இடையிடையே நுழைத்து அதன் அழகையும் வலிமையையும் சிதைத்தல் பெரியதொரு குற்றமாமென உணரலானேம்.

6. 2 இன்றியமையாது வேண்டப்பட்டாலன்றித் தமிழிற் புகுத்தல் நிரம்பவும் பிழைபாடுடைத்து, "தமிழிற் பிறமொழிக் கலப்பு' என்று யாம் எழுதிய பிறிதொரு கட்டுரையில் இதனைப் பற்றி விரித்துப் பேசியிருக்கின்றேம். ஆகவே, இவ்வாராய்ச்சியுரையின் முதற்பதிப்பில் ஆங்காங் கிருந்த சிற்சில வடசொற்களையும் இப்பதிப்பில் களைந்து விட்டு அவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களையே அவ்வவ்விடங்களில் அமைத்திருக்கின்றேம். இங்ஙனமே, இனிப்பதிப்பிடும் எம்முடைய நூல்கள் எல்லாவற்றிலும் வடமொழிச் சொற்கள் இல்லாவாறு அவற்றை முற்றுங் களைந்துவிட உறுதி செய்திருக்கின்றேம். ஆனாலும், சிறப்புப் பெயர்களாயும் குறியீடுகளாயும் வழங்கும் ஒரு சில வடசொற்களைமட்டும் இன்றியமையாது வேண்டிய இடங் களில் ஏற்றுக்கோடல் இழுக்கு ஆகாதென்பதும் உணரல் வேண்டும்.

6.3 தமிழிற் பயன்படும் நூல்கள் எழுதும் அறிஞர் எல்லாரும் அயல்மொழிச் சொற்களைத் தம்மால் இயன்ற மட்டும் விலக்கித் தூய தமிழிலேயே எழுதப் பழகுவராயின் அதனால் நம் செந்தமிழ் மொழி வளம் மிகப் பல்கித் துலங்குவதோடு அதனைத் துலக்கும் அவர்க்கும் அழியாப் புகழும் அறமும் உண்டாமென்க.[6]

---

6. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை. இரண்டாம் பதிப்பின் முன்னுரை. பக். 17-19.

6. 4 இம் முன்னுரையில், ''வேதாசலம், பல்லாவரம், சமரச சன்மார்க்க நிலையம், சாலிகஅசக ஞூ சித்திரை மீ'' என்று பெயரும் குறிப்பும் உள்ளன. ஆனால் மூன்றாம் பதிப்பின் முகவுரையில், ''மறைமலையடிகள், பல்லாவரம், பொது நிலைக்கழகம், திருவள்ளுவர் ஆண்டு கக சாக, ஆனி உரு[2]'' என்று பெயரும்குறிப்பும் உள்ளன. இம்மாற்றம், கடைப்பிடி இறுக்கம் வலுத்தலைக் காட்டுவதாம்.

## நீலாம்பிகையார் தமிழ்ப்பணி

7. 1 அடிகளார் படைப்பும் பதிப்பும் இவ்வாறு தனித் தமிழாகத் தழைத்து வருங்கால் அவர் தம் மகளார் தனித் தமிழ்ப்பணி விளக்கமுற்று வந்த வகையும் இவண் சுட்டத் தக்கதாம.

7. 2 அடிகளார் உள்ளத்தில் இருந்த தனித்தமிழ் ஓவியப் படத்தில் சிறுசிறு கீற்றும் வண்ணமும் தீட்டி ஒழுங்குறுத்த நேர்ந்தது. ஆனால், மகளார் உள்ளத்திரையில் பதிவான ஓவியமே தனித்தமிழ் ஓவியம் ஆயிற்றன்றோ! அதனால் அவர் தம் தொடக்கப் படைப்பு முதலே முற்றிலும் தூய தமிழாகவே அமைந்தது. அடிகளாரும், 'வ றி ஞ ன் ஓம்புமோர் செய்யென' மகளார் படைப்பைக் கண்காணித் தும் மேற்பார்வையிட்டும் வேண்டும் செப்பங்கள் செய்து வந்தார். இது, தவத்திரு அடிகளார்க்கு வாய்க்காமல், அவர் தம் தவ மகளார்க்கு வாய்த்த தனிப்பெருவாய்ப்பாம்.

## வடசெற்றமிழகரவரிசை

7. 3 அம்மையார் தனித்தமிழில் உரைநடை நூல்கள் சில யாத்தனர்; கட்டுரைகள் வரைந்தனர். ஆ யி னு ம், இவ்வெல்லா வற்றினும் சீரியது 'வடசொற்றமிழ் அகர வரிசை' தொகுத்துத் தந்ததாம. தாம் தனித் தமிழில எழுது மாப்போலப் பிறர்பிறரும் எழுதுதற்குத் தூண்டும் கருவி நூல் தருதல் அருமைப் பாடே யன்றோ! அதனால் அப்பணி தலைப்பணியாகச் சுட்டும் தகவினதாம்.

7. 4 ''இக்காலத்துத் தமிழ் மக்களிற் பெருந் தொகையினர் வடசொற்களையும் தமிழ்ச் சொற்களையும் பிரித்தறிய முடியாதவர்களாகித் தாமெழுதும் கட்டுரைகளிலும நூல் களிலும் வடசொற்களைச் சேர்த்தெழுதியும், அவற்றைத் தமிழ்ச் சொற்களாகவே பிழைபடக்கருதியும் தமிழின் தூய்மையையும் இனிமையையும் பழமையையும் கெடுத்து விடுகின்றார்கள். வடசொற் கலப்பால் தமிழ் தன்னிலை

திரிந்து கேடுறுவதை எனது பதின்மூன்றாவதாண்டில் அறியலானேன்'' என்று கூறும் நீலாம்பிகையார், தாமும் தம் தந்தையும் தனித்தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டுமென உறுதி கொண்டதையும், அந்நாள் முதலே வடசொல், தமிழ்ச் சொற்களை ஆராய்ந்தறியும் முயற்சியில் ஈடுபட்டதையும் வடசொற்றமிழ் அகரவரிசை முகவுரை யிலே குறிப்பிடுகின்றார்.[7]

7. 5 வடசொற்றமிழ் அகரவரிசை 320 பக்கங்களையுடையது. இவ்வரிசையில் ஏறத்தாழ 7000 வடசொற்களும் அவற்றுக்கு உரியதாம் எனக் கருதும் தனித்தமிழ்ச் சொற்களும் உள. இந்நூலின் சீர்மைக்கு உதவிய பெருமக்கள் இருவர் நினைவு கூரப்படுகின்றனர். ஒருவர் அடிகளார்; மற்றொருவர் அந் நாளில் சொற்பிறப்பாய்வில் தலைப்பட்டு அரியபெரியபணி செய்து வந்த தவத்திரு ஞானப்பிரகாச அடிகளார்.

7. 6 ''இந்நூலின்கணுள்ள ஐயுறவான சொற்கள் சில வற்றிற்கு ஆராய்ச்சிக் குறிப்பு எழுதியனுப்பிய என் தந்தை யாரவர்கட்கு என் நன்றி யறிதலும் வணக்கமும் உரியன வாகுக. இந்நூற்கையெழுத்துப் படிகளைப் பார்வையிட்டுச் சில சொற்களுக்கு ஆராய்ச்சிக் குறிப்பெழுதியனுப்பிய சொல்லாராய்ச்சி வல்ல பெரியார் (யாழ்ப்பாணம் நல்லூர்) சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கட்கு என்பெரு நன்றியும் வணக்கமும் உரியனவாகுக''[8] என்பது அவ்வுரை.

7. 7 இவ்வகர வரிசை நூலில், ஞானப்பிரகாச அடிகளாரும் பிறரும் ஐயுற்ற சொற்களுக்கு அடிகளார் எழுதிய விளக்கம் பிற்சேர்க்கை இரண்டு எனக் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் வடசொற்களெனப் பலரும் மயங்கும் புனிதம், சலம், தவம் காரணம், காரியம், பாவம், மலம், அரன், ஆணவம் ஆகிய சொற்கள் தமிழ்ச் சொற்களே என அடிகளார் சான்று காட்டி விளக்கியுள்ளார். 'பரிகாரம்' என்பதை இருபிறப்பி யாகக் காட்டுகிறார்.

## தனித்தமிழ்க் கட்டுரைகள்

8. 1 திராவிடன், தேசாபிமானி, ஆனந்த போதினி, ஒற்றுமை தமிழ்நாடு முதலான இதழ்களில் நீலாம்பிகையார் எழுதிய கட்டுரைகள் தனித்தமிழ்க் கட்டுரைகள் என்னும் பெயரால் நூலாக வெளிவந்தது. அதில் தனித்தமிழ்ப் பாதுகாப்பு,

7. முகவுரை பக். 6-7.
8. முகவுரை. பக். 8

தமிழைப் பற்றிய வினாக்களுக்கு விடை, தமிழில் வடமொழி கலத்தல் ஆகாது என்னும் கட்டுரைகள் 'தனித்தமிழ்" தொடர்பானவை என்பது பெயரானே விளங்கும், பிற கட்டுரைகளும் தனித் தமிழில் இயல்வனவே எனினும் இம் முக்கட்டுரைகளும் தனித்தமிழே பற்றியவை என்பது சிறப்பாம்.

9. 1 'தனித் தமிழ்ப் பாதுகாப்பு' என்னும் கட்டுரையில், ஒரு மொழியில் மற்றொரு மொழி கலக்கும் முறைமை, தமிழின் தனித்து இயங்கவல்ல தகைமை, ஒருபொருட் பன்மொழிப் பெருமை, பழந்தமிழ் இலக்கியங்களின் தூய்மை, ஆங்கிலக் கலப்புக் கூடாது என்பவர் வடமொழிக் கலப்பை வரை கடந்து கலக்கும் நிலைமை, ஆரியமொழி தேவமொழி என்று கூறும் ஏமாற்று என்பவை ஆயப்பட்டுள.[9]

9. 2 'தமிழைப் பற்றிய வினாக்களுக்கு விடை' என்னும் கட்டுரை, பிறமொழிக் கலப்பு இயற்கை என்றும், பிற மொழிக் கலப்பே மொழிவளர்ச்சி என்றும் கூறுவார்க்கு' மறுமொழியாயும், மொழிக்கலப்பால் ஒருமொழி பிறிது மொழியாகத் திரியும் என்பதை நிறுவிக் காட்டும் விளக்க மாயும் அமைந்துள்ளது.[10].

9. 3 'தமிழில் வடமொழி கலத்தல் ஆகாது என்னும் கட்டுரை, பிறமொழிகளின் துணை தமிழுக்கு வேண்டுவது இன்று என்றும், தமிழைப் பன்மொழிக் கலவையாக்கும் கேட்டை விலக்குதல் வேண்டும் என்றும், கலப்பை விலக்கித் தூய்மை பேணல் இன்றியமையாதது என்றும் விளக்குகின்றது.[11]

9. 4 'தந்தையொப்பர் மக்கள்' என்பதை மெய்ப்பிக்கும் சான்றாகித் தந்தையார் மேற்கொண்ட தனித்தமிழ்ப் பணி யில் உடனாகி ஒன்றாகி உழைத்த பெருமை நீலாம்பிகை யார்க்கு உண்டு என்பது அவர்தம் படைப்புகளால் தெள்ளி தின் விளங்குவதாம்.

---

9. தனித் தமிழ்க் கட்டுரைகள் பக். 35-46
10. ,, ,, ,, 47-55
11. ,, ,, ,, 55-60

# 12. கொள்கையும் கோட்பாடும்

## கொள்கை அடைவு

1. 1 அடிகளாரின் தனித்தமிழ்க் கொள்கை அரும்பி முகைத்து மலர்ந்த வகையைக் கண்டோம். அக்கொள்கையைத் தமிழுலகம் கொள்ளுமாறு, கோட்பாடாக்கிய திறத்தைக் காண்போம்.

1. 2 அடிகளார் இயற்றிய நூல்கள், அவற்றின் முகவுரைகள், கடிதங்கள் ஆகியவற்றில் அவர்தம் கொள்கைகள் பளிச்சிடுகின்றன. அவற்றினும் மேலாகத் தனித் தமிழ்க் கருத்தே கருத்தாய் எழுதிய கட்டுரைகளும் சில வாய்த்துள்ளன.

## கொள்கை விளக்கம்

1. 3 தமிழிற் பிறமொழிக் கலப்பு,[1] தனித் தமிழ் மாட்சி,[2] தனித்தமிழும் கலப்புத் தமிழும்,[3] தமிழ் மொழிச் சீர்திருத்தம்[4] என்பன அடிகளார் தம் கொள்கை விளக்கக் கட்டுரைகளாகத் திகழ்கின்றன.

## எழுத்தை உன்னிக்க

2. 1 "யான் தமிழில் எழுதும் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும் நீங்கள் செவ்வையாக உன்னித்து வந்தால் தமிழிற் பிழையின்றிப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெறுவீர்கள்" என்று எழுதுகிறார் அடிகளார்.[5] இலக்கணம் என்பது இதுதானே! அறிவறிந்த சான்றோர் எழுதும் நடைதானே பின்னேயுள்ளவர்களால் இலக்கணமாகவும், இலக்கண மரபுகளாகவும் கொள்ளப்படுகின்றன. எள்ளில் இருந்து எண்ணெய் எடுப்பது போல இலக்கியத்தில் இருந்து எடுபடுவது இலக்கணம் என்னும் உவமையும் இவ்வழிப்பட்டதேயாம்.

## பிறவிப்பயன்

2. 2 15. 5. 49 இல் சைதாப்பேட்டை சிவநெறிக் கழகத்தில் தமிழ்த்தென்றல் திரு. வி. க. தலைமையில் 'சங்க காலத்

---

1. அறிவுரைக் கொத்து பக், 80
2. ,, ,, ,, 96
3. உரைமணிக் கோவை ,, 61
4. அறிவுரைக் கோவை ,, 198
5. மறைமலையடிகளார் கடிதங்கள் பக். 1

தமிழ்' என்பது பற்றி அடிகளார் சிறப்புரையாற்றினார். அவ்வுரையில் ''நான் இளைஞனாய் இருந்தபோது தமிழைப் பற்றிப் பேசினால் பயித்தியக்காரன் என்பார்கள். ஆங்கிலம் அறிந்தவர்களே அன்று மேன்மையாகக் கருதப்பட்டார்கள். அக்காலத்தில் தமிழில் பேசினால் மானக் குறைச்சலாகக் கருதினார்கள்'' என்று தம் இளந்தைக் கால நிலையைக் குறித்தார் அடிகள்.

2. 3 பின்னர்த் தாம் கொண்ட முயற்சிகளைச் சென்ற ஐம்பது ஆண்டுகளாக நான் ஆராய்ச்சி செய்திருக்கிறேன். அறிவினாலே எழுத்தினாலே உணர்ச்சியினாலே நூல் வடிவிலே புதினத் தாள்களிலே எல்லாம் எழுதி வந்திருக்கிறேன் வெளிநாட்டுப் புதினத்தாள்களிலும் என் ஆராய்ச்சி பற்றி எழுதி வந்திருக்கிறேன்...பிராமணீயம் என்பதைப் 'பிராமணம்' என்றே தான் எழுதி வந்தேன். கனவிலும் நனவிலும் நான் வடமொழியில் எழுதுவதில்லை என் பிறவி பெரிதும் பயன்பட்டது'' என்று மகிழ்ந்தார்.

### கடைப்பிடி

2. 4 தம் கடைப்பிடியைக் கூறுங்கால், ''அந்தக் காலத்தில் பொருள் மிகுதியாகத் தந்து என் கொள்கைகளை மாற்றிக் கொள்ளும்படி நேயர்களிலே பலர் என்னை வேண்டினார்கள். பட்டங்களும் பதவிகளும் தந்து உதவுவதாகச் சொன்னார்கள். அதென்னவோ அவற்றிலெல்லாம் எனக்கு விருப்பமில்லை. இப்பொழுதும் பட்டம் பதவி பெற வேண்டும் என்ற விருப்பம் எனக்கில்லை. யான் அறிந்த உண்மையை எல்லோருக்கும் சொல்ல வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். தொண்டின் வாயிலாக என் உயிரைத் தூய்மை செய்து கொள்ள விரும்புகிறேன். அங்ஙனமே செய்து வருகிறேன். கனவிலும் நனவிலும் தமிழையும் சைவத்தையும் எண்ணி வருகிறேன். இன்னும் யான் இப்படியே எண்ணிவர இறைவன் அருள் செய்வானாக''[6] என்றார்.

### நீர்க்கலப்பும் மொழிக்கலப்பும்

3. 1 ஒருமொழி பிறமொழியாளர் தொடர்பு ஏற்படும் வரையும் தூய்மையாக இருக்கும் நிலையையும், பிறமொழியாளர் தொடர்பு ஏற்படுங்கால் கலப்புறுதலையும் ஆற்று நீரோட்டத்துடன் ஒப்பிட்டுக் காட்டுகிறார் அடிகள்.

---

6. மறைமலையடிகளார் கடிதங்கள் பக். 52-58

## மொழியும் ஆறும்

3.2 உயர்ந்த மலை முகட்டில் என்றும் நீர் ஊறும். ஒரு சுனையில் இருந்து இடையறாது ஓடி வரும். ஓர் அருவி நீருக்குத் தமிழ் மொழியை ஒப்பிட்டுச் சொல்லலாம். இனி, அவ்வருவி நீர் ஓடிவரும் வழியின் இடையிடையே சுரப்பின்றிச் சேறும் நீருமாய் நிற்கும் குளம் குட்டைகட்கு வழக்கில் இல்லாத ஆரியம் இலத்தீன் முதலான மொழிகளையும் இன்னும் அவ்வழியின் கீழே இருபாலும் ஆங்காங்குப் புதிது தோன்றித் தனித்தனியே ஓடும் யாறுகளுக்கு ஆங்கிலம் துலுக்கு முதலான மொழிகளையும், இவ்யாறுகளிலிருந்து பிரிந்து வந்து அவ்வருவியொடு கலக்கும் சிறுசிறு கால்களின் நீருக்கு அம்மொழிகளில் இருந்து தமிழில் வந்து கலக்கும் சிலசொற்களையும் ஒப்பாகச் சொல்லலாம்.

பன்னெடுங் காலமாக வறளாது ஓடிவருந் தமிழருவியானது தான் வரும் வழியிலுள்ள ஆரியம் முதலான பழைய குளங்கூவல்களிற் சென்று அவற்றின் சொற்களாகிய நீரையுந் தன்னொடு கலப்பித்துப் புதியவாக்கிப் பின்னும் இடையிடையே தன் கண் வந்து கலக்கும் பின்றைக் காலத்துச் சொற்களாகிய சிறுகால்களின் நீரையும் தன்னுருவாக்கித் தன்னை வழங்கும் மக்கட்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றது.[7]

## மொழிகள் கலக்கும் நிலை

3.3 ஒரு மொழியின் சொற்கள் மற்றொரு மொழியில் வந்து கலக்க வேண்டுவதுதான் என்னையென்று வினவினால், ஒரு மொழியினைப் பேசும் மக்கள் தம் நாட்டையும் தம் இனத்தாரையும் விட்டு நீங்காமல் இருக்கும் வரையில் அவர் தாம் இருக்கும் நாட்டின் கண்ணே பிறமொழி பேசும் பிறநாட்டார் வந்து சேராதிருக்கும் வரையில், அவர் பேசும் மொழியில் அயல்மொழிச் சொற்கள் வந்து கலப்பதற்கு இடமேயில்லை.

அங்ஙனமின்றி அவர் பலநாடுகளையும் அந்நாடுகளிலுள்ள பலதிறப்பட்ட மக்களையும் போய்க் கண்டும் அவர் நாட்டுப் பண்டங்களைத் தாம் விலைகொண்டும் தம் நாட்டுப் பண்டங்களை அவர்க்கு விற்றும், அவர்தம் வழக்க ஒழுக்கங்கள் சிலவற்றைத் தாம் கைப்பற்றியும் தமக்குரிய சில

---

7. அறிவுரைக் கொத்து, தமிழியற் பிறமொழிக் கலப்பு பக். 81

வற்றை அவர் கைப்பற்று மாறு தந்தும் ஒருவரது நாகரி கத்தை ஒருவர் பின்பற்றியும் ஒழுகும் உயர்ந்த அறிவும் உயர்ந்த நடையும் வாய்ந்தவர்களாயிருந்தால் அவர் பேசும் மொழியில் மற்ற மொழிச்சொற்கள் புகுந்து கலவாமல் இரா ஆகவே, இம்முறையால் நோக்குமிடத்துப் பல வகையாலும் உயர்ந்த நாகரிக வாழ்க்கையுடையவராய் விளங்கிய தமிழ் மக்கள் வழங்கி வந்த தமிழிற் பிறமொழிச் சொற்கள் சில வந்து கலக்கலானது இயற்கையேயாம் என்பது உணரப் படும்.[8]

## விழிப்புறுத்தம்

4. 1 இனிப், பிறமொழிச் சொற்கள் கலக்க நேருங்கால் விழிப்போடு கடனாற்ற வேண்டிய வழிவகைகளையும் அடிகளார் கூறுகின்றார்.

ஒரு மொழி வழங்கும் ஒருதேயத்தில் உள்ளார் புதிதாக ஒரு பண்டத்தைக் கண்டுபிடித்துச் செய்து அதற்குத் தமது மொழியிற் பெயரும் இட்டுப் பிறகு அதனை வேறு தேயங் களிற் கொண்டு போய் விலைப்படுத்துங்கால்அப்பண்டத்தின் பெயர் வேறு மொழியிற் கலத்தல் இயற்கையேயாம். இத் தகைய நிகழ்ச்சிகளிலுங்கூடப் புதுப் பண்டங்கள் வாங்கும் மற்ற நாட்டவர் நாகரிகமும் உயர்ந்த அறிவும் உடைய வராயிருந்தால் அவற்றிற்குத் தமது மொழியிலே புதுப் பெயரிட்டு வழங்குவர்.

மேல் நாட்டிலிருந்து வந்து இத்தென்னாட்டில் விலை யாகும் தெளிவான ஒருவகை மட்பாண்டத்தைக் 'கிளாசு' என்றும் 'கோப்பை' என்றும் வழங்குகின்றனர். கிளாசு, கோப்பை என்னும் இச்சொற்கள் ஆங்கிலச் சொற்களின் திரிபுகளாகும்; இப்பாண்டங்கள் மேல் நாட்டிற் செய்யப் பட்டனவாய்த் தமிழ்நாட்டிற்குப் புதியனவாய் இருத்தலால் இவற்றிற்குரிய ஆங்கிலச் சொற்களைத் தமிழர் தாமும் எடுத்தாளுதல் பொருத்தமேயாம். இப்பாண்டங்களையும் கூடத் தமிழறிவு மிக்கவர்கள் 'கண்ணாடிக்குவளை' 'பீங்கான் கிண்ணம்' என்று தமக்குரிய தமிழ்ச் சொற்க ளாலேயே வழங்குவர்.[9]

---

8. அறிவுரைக் கொத்து. தமிழிற் பிறமொழிக்கலப்பு. பக். 81-82

9. " " பக். 86-87.

இனிப் பிறமொழிச் சொற்களை வழங்க வேண்டியும் இன்றியமையா இடங்கள் இவையெனவும் விளக்குவார் அடிகள்:

பிறசொற்களை எடுத்து வழங்குதற்கு இன்றியமையா இடங்கள் என்பன, புதுப்பொருளைத் கூறுதற்குத் தமிழில் உள்ள சொற்களை எவ்வளவு முயன்றுபார்த்தும், அதற்கு அவை இசையாத நேரங்களேயாம். முயற்சியும் அறிவும் உடையவர்கள் கருத்து வைத்தால் எத்தகைய புதுப்பொருள் கட்குந் தமிழிலேயே பெயரமைக்கலாம் என்பதே நமது கொள்கை. உயிரோடு உலவிவரும் மொழிகள் எவையாய் இருப்பினும், அவை எத்துணை ஏழைமையுடையவாயினும் அவற்றிற் குரியோர் உண்மைப் பற்றுடையராய் அவற்றை அங்ஙனம் வளம்பெறச் செய்து வருகுவராயின் அதனால் அவர் உயரமான அறிவும் நன்முயற்சியும் மேன்மேல் மிகப்பெற்றுத் தாமும் தம்மினத்தாரும் உயர்வர்.[10]

## தமிழியலைக் கெடுத்தல்

வேண்டாவகையில் பிறமொழிச் சொற்கள் புகுதலையும் அச்சொற்களையும் தமிழியலுக்குப் பொருந்தாமல் எழுது தலையும் உணர்வு மிக்கூர்ந்து உருக்கமாய் வரைகின்றார் அடிகளார்:

தேனும் பலாச் சுளையும் கலந்து அருந்துவார்க்கு அவற்றி டையே முட்கள் விரவியிருந்து நாவிற்றைத்தால் அஃது எவ்வளவு துன்பத்தினையும் வெறுப்பினையும் தருமோ, அதுபோலவே வேண்டா வழக்காய் உருவு திரியாமல் தமிழில் வரையப்படும் வேற்று மொழிச் சொற்கள் உண்மைத் தமிழ் அறிஞர்க்குப் பெரிய தொரு வருத்தத்தினையும் அருவருப் பினையும் விளைக்கின்றன.

எவ்வகைப் பொருளையும் எத்தகைய கருத்தையும் தெரிவித்தற்கு எண்ணிறந்த தமிழ்ச் சொற்கள் இருப்பவும் அவற்றைப் புறந்தள்ளி மற்றை மொழிச் சொற்களை அதன் கட் கொண்டுவந்து புகுத்தலே ஒருபெருங்குற்றமாம்; அதன் மேலும் இயற்கைக்கு மாறாய் வருந்திச் சொல்லவேண்டும் அவ்வயல் மொழிச் சொற்களை, இயற்கையோடொத்து மெல்லென நடக்குந் தமிழ்ச் சொற்களினிடையே சேர்த்துக்

10. அறிவுரைக் கொத்து, தமிழிற் பிறமொழிக் கலப்பு. பக். 89

கூறுதல் அதனினும் பெரியதொரு குற்றமாம். அஃதல்லாமலும் வயிற்றிற்கு இடப்பட்ட உணவுப் பொருள்கள் தமது உருவு திரிந்து உடம்பிற்கு வேண்டும் பாலாக மாறாமல் அவை அங்ஙனமே வயிற்றினுட் கிடந்தால், அவை அவ்வுடம் பிற்குச் சிறிதும் பயன் படாமையோடு அவ்வுடம் பினையும் பழுது படுத்து மன்றோ? அதுபோலவே தமிழின் தன்மைக்கு ஏற்ப உருவு திரியாமல் எழுதப்படும் வடசொற்கள் முதலியனவும் பயன்படாது போதலொடு தமிழின் அழகையும் சிதைவு படுத்தா நிற்கின்றன.

மேலும் இயற்கை அழகாற் சிறந்த ஒரு நங்கைக்கு அவளது இயற்கையழகு ஒன்றுமே அமையும்; அன்றி அவட்கு வேறு ஆடைஅணிகலன்கள் அணிந்து பார்க்க வேண்டினும் அவளது அழகிற்குப் பொருத்தமான சில வற்றைத் தெரிந்தெடுத்து அவளை ஒப்பனை செய்வதே வாய்ப்புடைத்தாம்; அங்ஙனமின்றி அவளது நலத்திற்குப் பொருந்தாதவற்றையும், பொருந்துமேனும் அளவிற்கு மேற்பட்ட ஆடை அணிகலத் தொகுதிகளையும் அவள்மேல் இடுதல் அவளது ஒப்புயர் வற்ற அழகைக் குறைப்பதோடு காண்பார்க்கும் நகையினைத்தரும்.

இங்ஙனமே, இயற்கை நலம் நிரம்பிய தமிழுக்கு அதன் நலம் ஒன்றுமே அமையும்; அன்றி இன்றியமையாது வேற்று மொழிச் சொற்களைச் சேர்க்க வேண்டிவந்தக்கால், அதன் இயல்புக்குப் பொருந்தினவற்றையே சேர்த்தல் அழகுடைத்தாம்; அவ்வாறன்றி அதன் இயற்கைக்கு மாறானவற்றையும் மாறாகாவிடினும் அளவுக்கு மிஞ்சிய அயல்மொழிச் சொற்களையும் அதன்கண் வலிந்து புகுத்தல் அதன் நலத்தைக் குறைப்பதோடு தமிழறிவு மிக்க சான்றோர்க்கு நகையினையும் விளைக்கும். ஆதலால், அயல்மொழிச் சொற்களை உருவு திரியாமல் சேர்த்தலும் உருவு திரிந்தவற்றையும் அளவுக்கு மிஞ்சிச் சேர்த்தலும் ஒருசிறிதும் பொருந்தாவென்று கடைப்பிடித்துணர்க.[11]

## நீரில் கொட்டி நிலத்தை அகழ்தல்

இனி, வேண்டும் வேண்டும் சொற்கள் தமிழிலேயே இருக்கவும் வேண்டாவகையில் அயற்சொற்களை எடுத்தாளுதல் அறக் கொடுமையாம். அக்கொடுமையை அருமையான உவமையால் எடுத்துக் காட்டுகிறார் அடிகள்:

11. அறிவுரைக் கொத்து, தமிழிற்பிறமொழிக்கலப்பு. பக். 94-95.

கையிலுள்ள பெருந் தொகைப் பொருளைக் கடலிற் கொண்டுபோய் எறிந்துவிட்டு, நிலத்தைத் அகழ்ந்து அடியிலுள்ள பொருளை எடுக்க முயல்வார் திறத்திற்கும், தமிழ்ச் சொற்களைக் கைந்நெகிழவிட்டு, வடசொற்களை வருந்திச் சொல்ல முயல்வார் திறத்திற்கும் வேறுபாடு சிறிதும் காண்கிலேம்.[12]

## கல்லாரும் கற்றாரும்

தமிழ் மொழியைக் கல்லாதவரும் தூய்மையாய் வழங்கி வரக் கற்றோரே தூய்மை கெடுத்து வருதலைக் கடுமையாகக் குறிப்பிடுகிறார் அடிகள்:

பன்னூறாயிரம் மக்களுக்குப் பெரிது பயன்பட்டுவரும் பெருஞ் சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியைக் கல்லாதவர் எல்லாந் தூயதாய் வழங்கிவர, அதனைக் கற்று அதனாற் பேரும் புகழும் பொருளும் அடைந்துவரும் சிற்சிலர் மட்டும் தமக்கு எல்லா நலங்களையும் தந்து தாயினும் தம்மைப்பாது காத்துவரும் அதனை நிலைகுலைத்து அழித்தற்குக் கங்கணங்கட்டி நிற்கின்றார்கள். இவர்களின் இக்கொடுஞ் செயல் தன்னைப்பெற்ற தாயைக் கொல்லுஞ் செயலினும் கொடியதாய் இருக்கின்றது.[13]

## மாறுதல் கொள்கை மறுப்பு

உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் மாறுந் தன்மையவாகலின் அவற்றுள் ஒன்றாகிய மொழியும் மாறுதல் அடைதல் இயற்கையேயாம்'' என்று கூறுவாரை மறுத்து மாறுதலைப்பற்றி அறிவியற் கண்ணோட்டத்துடன் ஆய்வு நடாத்துகிறார் அடிகள்.

மாறுதல் என்னும் சொல்லால் உணர்த்தப்படும் பொருள் என்னை? ஒன்று தன் தன்மை திரிந்து மற்றொன்று ஆதலா? அல்லது அது தன் இயல்புக்கு ஏலாதவற்றோடு கலக்கப் பெற்றுத் தன் நிலைகுறைதலா? அல்லது தன் நிலைக்கு ஏற்றவாறு பிறவற்றின் உதவியால் தானே வரவர வளர்ந்து திரிபுறுதலா? எனின், இம்மூன்றும் மாறுதல் என்னும் சொல்லுக்குப் பொருளேயாம்.

---

12. அறிவுரைக் கொத்து. தமிழிற் பிறமொழிக் கலப்பு பக். 88-9.

13. ௸. தனித் தமிழ் மாட்சி. பக். 96.

முதலிற் சொன்ன பொருளின்படி, தவளையினத்திற் சேர்ந்த சில சிற்றுயிர்களும் பட்டுப் பூச்சி முதலியனவும் ஒருவகை உருவத்தில் இருந்து, பிறகு அவ்வுருவு முழுதுந் திரிந்து தவளையாகவும் பட்டுப்பூச்சி முதலியன வாகவும் மாறுகின்றன.

இரண்டாவது சொன்ன பொருளின்படி மக்கள் முதலான எத்தகைய உயிர்களுந் தம்முடம்பின் இயல்புக்கு ஏலாத நோய்ப் புழுக்களோடும் பாம்பின் நஞ்சையொத்த நச்சுப் பொருள்களோடுங் கலக்கப் பெறுமானால் தம்முடம் பின் நிலைகுலைந்து மாறி விரைவில் அழிந்து போகின்றன.

இனி, மூன்றாவது சொன்ன பொருளின்படி உலகத்தில் உள்ள எல்லா உயிர்களுந் தத்தம் நிலைக்கு ஒத்த பொருள் களின் சேர்க்கையால் தமது நிலைகெடாமலே வளர்ந்து திரிபெய்தி வருகின்றன; மக்கள் தமக்கேற்ற உணவுகளை உட்கொண்டும் இசைவான இடங்களில் குடியிருந்தும் வரவரத் தம்முடம்பும் உணர்வும் மாறி மாறி வளர்ந்து வருகின்றனர். மக்கள் அல்லாத மற்றை உயிர்களில் நிலையியற் பொருள்களாகிய புல் மரஞ்செடி கொடி முதலி யனவும் இயங்கியற் பொருள்களிற் புழு முதல் யாடு மாடு முதலான எல்லாவுயிர்களும் தத்தமக் கேற்ற உணவுப் பொருள்களை உட்கொண்டு தத்தமக்கு இசைவான இடங் களில் இருந்து நாடோறும் மாறுதல் எய்தி வளர்ந்து வருகின்றன.

இம்மூவகைப் பட்ட மாறுதல்களில் எத்தகைய மாறு தலை எல்லா உயிர்களும் விரும்புகின்றன வென்று உற்று நோக்கின், தம் இயல்புக்கு ஒத்தவற்றின் சேர்க்கையால் தமது தன்மை கெடாமல் வரவரப் பெருக்க முற்று மாறி மாறிவளர்ந்து வருதலையே அவையெல்லாம் அல்லும் பகலும் விழைந்து வருகின்றன என்பது எல்லார்க்கும் புலனாம்.

தமக்கு ஏலாத பொருள்களோடு கலந்து தமது நிலை குலைந்து மாறி மாய்தலை எவ்வகைப்பட்ட உயிரும் விரும்பு வதில்லை, தமக்கு இடர்தரும் இடத்தையேனும் பொருளை யேனும் கண்டால் அவற்றை அகன்று போய்ப் பிழைக்கும் முயற்சியைப் புழுமுதல் மக்கள் ஈறான எல்லா உயிர்களும் மிகவும் பரபரப்போடு நிரம்பக் கருத்தாய்ச் செய்தல் எவரும் உணர்ந்ததேயாம். இடம் விட்டுப் பெயராத புல்மரம் முதலியனவும் கூடத் தத்தமக் கேற்ற இடங்களிற் செழுமை

யாய் முளைத்தெழுந்து தத்தமக் கேற்ற உணவுகளை உட்கொள்ளும் வரையில் உயிரோடிருத்தலும், அங்ஙனம் அமையாக்கால் அவைபட்டுப் போதலும் எல்லாரும் அறிவர்.

ஆகவே, உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் எல்லா உயிர்களும் மாறுதல் அடைதலாகிய பொது நிகழ்ச்சியைப் பார்த்து, அப்பொது வகையான மாறுதலுள் எத்தகைய மாறுதல் மக்களால் வேண்டப்படுவது என்பதனை உணர்ந்து பாராமல் தம் நிலைகுலைந்து மாறுதலாகிய வேண்டாத தொன்றைக் கடைப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டு அதன்படி நமது அருமைச் செந்தமிழ் மொழியும் தனது தூய நிலை குலைந்து மாறுதல் அடைய வேண்டுமென்று உரைப்பது அறிவுடையரால்' ஏற்றுக்கோடற்பாலதாமோ?[14]

## அழிவும் ஆக்கமும்

மாறுதல் கோட்பாட்டினரை இவ்வாறு தெளிவித்த அடிகளார், உலகமே ஒருகால் அழிவது தானே; அதனைக் கட்டிக் காக்க முடியாதன்றே; அவ்வாறாக மொழிநிலை மாறி அழிந்து படுதலைக் காக்க முடியுமோ? என்று வினாவுவாரையும் அறுவுறுத்த முயல்கின்றார்:

எல்லாப் பொருளும் எல்லா உலகமும் ஒருகாலத்து மாறி மாய்தல் உண்மையேயாயினும், அம்மாறுதலும் அதனால் வரும் அழிவும் இப்போதே வந்து விடல் வேண்டுமென்று எவரேனும் விரும்புவரோ? ஆண்டு நிரம்பி முதிர்ந்து இறத்தல் உண்மையேயாயினும், ஆண்டு முதிரா நல்லிளமைப் பொழுதிலேயே நோய்கண்டு ஆகாப் பொருள்களோடு கலந்தும் மாய்ந்து போக எவரேனும் விரும்புவரோ? அங்ஙனம் எவரேனும் விரும்புவராயின் அவரை அறிவு திரி பெய்திய வெறியர் என்றே உலகங்கொள்ளுமல்லது, மற்று அவரை ஆஃது உயர்த்துக் கூறுமோ?

ஆண்டில் முதிர்ந்தவர்களும் கூடத் தமது உடம்பின் நலம் பழுதுபடாவாறு அறிவான முறைகளைக் கையாண்டு மேலும் மேலும் அதனை நலமுற வைத்து வாழ் நாளைப் பெருக்குதற்கன்றோ முயல்கின்றனர்? நலமுடனிருந்து வாழ் நாளைப் பெருகச் செய்பவர்களுக்கு அறிவு வளர்ச்சியும் அதனாற் பேரின்பப்பேறும் வாய்த்தலால், உடம்பை விரைவில் நிலைகுலையச் செய்பவர்களுக்கு அறிவும்

14. அறிவுரைக்கொத்து, தனித் தமிழ்மாட்சி. பக். 99-99.

இன்பமும் வாயா. அதுபோலவே, நமது செந்தமிழ் மொழியாகிய ஒலியுடம்பும் பழுதுபடாமற் செவ்வையாகப் பாதுகாக்கப் படுமானால், அஃது இன்னும் பன்னூறாயிரம் ஆண்டு உயிரோடு உலவித் தன்னைப் போற்றி வழங்கும் மக்களுக்கு அரிய பல நலங்களையும் நன்கு பயக்கும்.[15]

## மாறான மாறுதல்

மாறுதல் வகைகளைப் பற்றி ஆய்ந்து, எத்தகைய மாறுதல் மாந்தர் வாழ்வுக்கும் மொழி நலத்துக்கும் வேண்டத்தக்கது என்பதை விளக்கிக் காட்டிய அடிகளார், 'மாறான மாறுதல்' எது என்பதையும் வெளிப்படச் சுட்டுகின்றார்:

தமிழ் வளர்ச்சிக்கு மாறான மாறுதல் என்னென்றால் தூய தமிழ்ச் சொற்கள் இருப்பவும் அவற்றை விடுத்து அயன் மொழிச் சொற்களை அதன்கட் கொண்டு வந்து புகுத்தலேயாம். ஓர் உடம்பின் உள்ளும் புறம்பும் உள்ள உறுப்புகள் எல்லாவற்றின் தொகுதியே அவ்வுடம்பாதல்போல, ஒரு மொழியில் உள்ள அதன் எல்லாச் சொற்களின் தொகுதியே அம்மொழியாகும்...

இயற்கைச் சொற்களால் அமைந்ததாகிய தமிழிற் பிற மொழிச் சொற்களைப் புகுத்துதல் எது போலிருக்கின்றதென்றால், எல்லாவுறுப்புகளும் அமைந்த அழகியதோர் உடம்பில் உள்ள உறுப்புகளை வெட்டியெறிந்துவிட்டு வேறு மண்ணாலும் மரத்தாலும் செயற்கையாக அவ்வுறுப்புகள் போற் செய்து அவற்றை அதன் கண் ஒட்டவைத்துப் பார்த்தலுக்கே ஒப்பாயிருக்கின்றது.[16]

## குறு வட்டமும் பெருவட்டமும்

'தனித்தமிழ் வேண்டும்' என்பார் குறுகியவட்டத்தர் என்றும், அக்கொள்கை கலிகாலக் கொடுமையாய்த் தோன்றிற்றென்றும் தமிழ்க்கேடர் மட்டுமல்லாமல் தமிழால் வாழ்வாரும் பழித்ததுண்டு. தனித்தமிழ் என்பதைத் 'தனித்து அமிழ்' என்று பிரித்து நகைத்துச் செயற்கரிய செய்தார் போல இறுமாந்திருப்பார் இப்பழியுரைத்தல் தானோ வியப்பு? அதற்கு அடிகளார் இரங்கத் தக்க வகையில் விடையிறுத்தார்:

15. அறிவுரைக்கொத்து. தனித்தமிழ் மாட்சி. பக். 99-100.
16. பக். 101-102.

தமிழிற் பிறமொழிச் சொற்களை ஏற்றி அதனை மாசு படுத்தி அழிப்பதுதான் அதனை வளர்ப்பதாகும் என்று எழுதுவோர், தூய தனித்தமிழ் எழுதுவாரைக் 'குறுகிய மன நிலை' 'அறியாமை' 'பேதைமை'யுடையரென இகழ்ந்து பேசி விடுகின்றனர். கொள்கையளவில் ஒருவரோடு மற்றொருவர் மாறுபட்டிருப்பது பற்றி அவர் மற்றவரைக் குறுகிய மன நிலையுடையவர் எனவும், 'அறியாமை' 'பேதைமை' மிக்கவர் எனவும் இகழ்ந்து பேசுதல் அறிவுடையார்க்கு முறையாகாது என்பதை மட்டும் வற்புறுத்துகின்றோம்[17]...

பண்டு தொடங்கிப் புனிதமாய் ஓங்கி நிற்கும் தனித்தமிழ்த் தாயைப் பிறமொழிச் சொற்களென்னும் கோடரியினுள் நுழைந்து கொண்டு, இத்தமிழ்ப் புதல்வர் வெட்டிச் சாய்க்க முயல்வதுதான் கலிகாலக்கொடுமை; இத்தீவினைச் செயலைப் புரியும் இவர் தம்மைத் தடுத்து, எம் தமிழ்த்தாயைப் பாது காக்க முன் நிற்கும் எம்போல்வாரது நல்வினைச் செயல் ஒரு காலும் கலிகாலக் கொடுமையாகாதென்று உணர்மின்கள் நடுநிலையுடையீர்![18]

## திரிப்பும் பிரிப்பும்

ஒவ்வொருவரும் தத்தம் விருப்பப்படியே மொழியைத் திரித்துக் கொண்டு போனால் என்னகேடாம் என்பதனையும் அடிகள் நெடுங்காலக் கண்ணோட்டத்தோடும் குறிப்பிடு கின்றார்:

மக்களை விட்டு மொழியும், மொழியை விட்டு மக்களும் உயிர் வாழ்தல் சிறிதும் இயலாது. 'எனது விருப்பப்படி தான் யான்பேசும் மொழியைத் திரித்தும், அயல்மொழிச் சொற்களோடு கலந்து மாசுபடுத்தியும் வழங்குவேன்; அம் மொழியின் அமைப்பின்படி யான் நடக்கக்கடவேன் அல்லேன்! என்று ஒவ்வொருவனும் தனது மொழியைத் தன் விருப்படியெல்லாம் திரித்துக் கொண்டு போவானாயின், சிறிது காலத்தில் ஒருமக்கட் கூட்டத்தாரிலேயே ஒருவரை யொருவர் அறிந்துகொள்ள முடியாத வகையாய் ஒவ்வொரு சிறு கூட்டத்திற்கும் ஒவ்வொரு புதுமொழி காலந்தோறும் உண்டாகி அம்மக்களை ஒன்று சேரவிடாமல் அவர்களைப் பலசிறு கூட்டங்களாகப் பிரித்துவிடும்.[19]

---

17. அறிவுரைக்கொத்து, தனித்தமிழ் மாட்சி. பக். 96.
18. ,, ,, ,, 109.
19. மறைமலையடிகளார் உரைமணிக் கோவை, தனித் தமிழும் கலப்புத் தமிழும் பக். 62.

## தமிழொலித் தகவு

தமிழிலுள்ள எழுத்துகள் மிகுதியானவை என்றும், பிற மொழிகளிலுள்ள ஒலிகளைத் தமிழ் எழுத்துகளால் கொண்டுவர முடியாத இடருள்ளது என்றும் ஆதலால் எழுத்து வடிவங்களை மீட்டமைப்புச் செய்தலும், புத்தொலி எழுத்து இணைத்தலும் வேண்டும் என்றும் இன்று தொடக்க நிலைக் கல்வியாளர் முதல் பல்கலைக் கழகப் பெருநிலைப் பட்டந் தாங்கிகள் ஈறாகப் பலரும் குரலெழுப்புகின்றனர். இதழ்களில் கட்டுரைகளாகவும், தனி நூல்களாகவும் எழுதி வருகின்றனர். இன்றும் தொடர் கதையாக நிகழ்ந்து கொண்டும் உள்ளது. ஆச்சிக்கலைப் பற்றியும் அடிகள் குறிப்பிடுகிறார். தம் குறிப்புக்குப் பொறியியல் அறிவை மொழியியல் அறிவுக்குப் பயன்படுத்தி ஆய்ந்து கண்ட பா. வே. மாணிக்க நாயகர் கருத்தையும் முன் வைக்கிறார் அடிகள்:

தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகளைக் குறைக்க வேண்டும் என்றும், அயல்மொழிகளிலுள்ள ஒலிகளைத் தமிழிற் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், அப்போது தான் தமிழ் வளர்ச்சியடையுமென்றும் கூறுவர் சிலர்.

நல்லது; தமிழ்ச் சொற்களினாலுந் தமிழ் ஒலியினாலும் தெரிவிக்கக் கூடாதவை இருப்பின் அன்றோ அயல்மொழிச் சொற்களையும் ஒலிகளையும் சேர்த்தல் வேண்டும்? உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் எல்லா அறிவு இயல்களையும் தமிழ்ச் சொற்கள் தமிழ் ஒலிகள் கொண்டே செவ்வையாகத் தெரிவிக்கலாம் என்பது, யாம் எல்லாத் துறைகளிலும் புகுந்து எழுதியிருக்கும் நூல்களைச் சிறிது பார்த்தாலும் தெரிந்து கொள்ளலாம்.

மேலும், தமிழ்நெடுங் கணக்கிலுள்ள முப்பது எழுத்துகளும் முப்பது ஒலிகளுமே மக்களுக்கு இயற்கையாகத் தோன்றக் கூடியவையென்றும், முப்பது தமிழொலிகளைக் கொண்டே உலகத்திலுள்ள எல்லா மொழிகளின் எல்லா ஒலிகளையும் எளிதில் தெரிவிக்கலாம் என்றும் காலஞ் சென்ற திரு. பா. வே. மாணிக்க நாயகர் அவர்கள் மிகவும் நுட்பமாக ஆராய்ச்சி செய்து நன்கு விளக்கிக் காட்டியிருக்கவும், அவை களையெல்லாம் ஆராய்ந்து பாராது தமிழ் நெடுங்கணக்கைக் குறுக்க வேண்டுமென்றும் பிறமொழிச் சொற்களையும் ஒலி களையும் தமிழிற் சேர்க்க வேண்டும் என்றும் சொல்வது மிகவும் வருந்தத் தக்கது. குறைபாடில்லாத தமிழ்

மொழியைச் சீர்திருத்த வேண்டுமென்று சொல்லும் அவர்கள் குறைபாடு நிரம்பிய ஆங்கிலம் முதலான மொழி களைச் சீர்திருத்த முன்வராத தென்னையோ?[20]

## வளர்ச்சியா! தளர்ச்சியா?

'எங்கள் எண்ணம் தமிழ் வளர்ச்சி ஒன்றேதான்! வேறொன்றும் இல்லை' என்று சொல்லிக் கொண்டு மொழிக் கலப்பில் தலை நின்று நிலையழிப்பாரைப் பார்த்து நயமான வினாத்தொடுக்கின்றார் அடிகளார்:

ஒருவர் உண்மையிலேயே தமிழை வளர்க்கும் எண்ண முடையவராக இருந்தால் மக்கட்கூட்டம், மக்களினம், மக்கள் தொகுதி முதலான தமிழ்ச் சொற்களிருப்ப அவற்றை யெல்லாம் விட்டு 'மனித சமூகம்' என்ற வடசொல்லை எழுதுவாரா?

'கடலூர் வாணர்' என்னுந் தமிழ்ச் சொல்லிருக்கக் 'கடலூர்வாசி என்று எழுதுகின்றனர். விடையென்னுந் தமிழிருக்கப் 'பதில்' என்னுந் துலுக்குச் சொல்லை வரைகின் றனர். அவா, ஆவல், விருப்பம் என்னும் தமிழ்ச் சொற்க ளிருப்ப அவற்றை விட்டு 'ஆசை' என்றும், சொல்,கட்டாயம், ஒலி, ஓசை, மொழி, அறிவுநூல், கலைநூல், புலவர், அறிஞர், கற்றார், நேரம், உதவி, பொருள், திருநீறு, சிவமணி, எல்லாம், ஓவியம், முறை, ஒழுங்கு, சிறிது, நினைத்து, சூழ்ந்து, ஆராய்ந்து, அன்பு, மகன், ஆண்மகன், ஆடவன், ஆள், முதன்மை, வலம் வருதல், வணக்கம் செலுத் துதல் என்னுந் தூய தமிழ்ச் சொற்களிருப்ப இவற்றையெல் லாம் விடுத்துப் பதம், வாக்கு, வார்த்தை, அவசியம், சப்தம், பாஷை, விஞ்ஞானம், பண்டிதர், சமயம், உபவிஷயம், விபூதி, உருத்ராட்சம், சகலம், படம், நியாயம், கிரமம், கொஞ்சம், யோசித்து, தயவு, மனிதன், முக்கியம், திக்கு விஜயம், தண்டம். சமர்ப்பித்தல் முதலான வடசொற் களைக் கலந்து எழுதுகின்றனர். தமிழ்ச் சொற்களை வெட்டி வீழ்த்தி வடசொற்களைக் கொண்டு வந்து விதைப் பதுதானா தமிழை வளர்ப்பது?[21]

அடிகளார் கொள்கையும் கோட்பாடும் தெளிவானவை, திட்டமானவை. அடுத்து வரும் சொல்லும் செயலும்; மேலும் சொல்லும்!

---

20. மறைமலையடிகளார் உரைமணிக் கோவை, தனித் தமிழும் கலப்புத் தமிழும் பக். 67.

21. ௸ ௸ பக். 67-77

# 13. சொல்லும் செயலும்

## முந்நிலைத்தூயர்

1. 1 நெஞ்சின் ஊர்தி சொல்; சொல்லின் நிலைப்பாட்டுச் சான்று செயல்; நினைக்கும் ஒன்றைச் சொல்லிச், சொல்லும் அதனைச் செயலுறுத்துதல் முந்நிலைத் தூய்மையாம். இம் முந்நிலைத் தூய்மையே ''உள்ளத்தால் பொய்யா தொழு கல்'' என வள்ளுவரால் வகுத்துரைக்கப்பட்டது. இம்முந் நிலைத் தூயராக அடிகளார் விளங்கினார் என்பதனை மாறுபட்டாரும் மறார்.

1. 2 'கொள்கையும் கோட்பாடும்', 'சொல்லும் செயலும்' இணைந்தவை. இருமை ஒருமை என்னாமல், மும்மை ஒருமையாய் முடிந்தவை.

தனித்தமிழ்க் கருத்து எழுந்த நாள் தொட்டு வாழ்நாள் இறுதிவரை அதனை வளர்த்தும் வழிகாட்டியும் நிலைப் படுத்தும் ஆக்கபணியிலேயே ஊன்றி நின்றவர் அடிகளார்.

1. 3 அடிகளார் 'சைவ சமய' அழுத்தம் வாய்ந்தவர். அவ் வழுத்தத்தால் தனித்தமிழ்க் கொள்கையைத் தளரவிட்டார் அல்லர். தனித்தமிழுக்கு மாறுபட்டவர் சமயத்தால் ஒன்று பட்டவர் எனினும் அது கருதித் தழுவிக் கொண்டாரல்லர்; 'வழு, வழுவே' என நக்கீர நீர்மையராய் நின்றவர்.

## ஒருநிலை அரிமா

2. 1 சிவநெறி மடங்களெல்லாம், சிவபரக் கோயில்களெல் லாம், சிவஞ்சார் அமைப்புகளெல்லாம் வரிந்து கட்டிக் கொண்டு பெற்ற பிள்ளையைப் புறத்தே தள்ளிப் பிறர் பிள்ளையைப் பேணிவளர்ப்பார் போல' வடமொழியை வளர்த்துக் கொண்டிருக்கும் காலநிலையில், அவர்களுள் ஒருவராய் அமைந்து, அவர்களையெல்லாம் எதிரிட்டு, ''எம் பேச்சும் மூச்சும் தனித்தமிழே; உம் ஏச்சும் இழிப்பும் எமக்கொரு பொருட்டில்லை; என்றேனும் நுங்கள் எண்ணம் தெளிவாம்! அன்று எமக்கு மகிழ்வாம்' என ஒரு நிலையில் நின்ற அரிமா அடிகளார்!

## அறிஞர் மதிப்பீடு

2. 2 அடிகளார் தொண்டின் உறைப்பை அப்பாலும் அடிச் சார்ந்த அரிமா பாவாணர் பிழிந்து தருகிறார். எங்கே? வட மொழி வரலாற்றின் முகப்பிலே.

தேனும் பாலும் போன்ற தூய தீந்தமிழ்ச் சொற்களால் உரைநடையும் செய்யுளுமாகிய இருவடிவிலும் பல்துறை தழுவி ஐம்பதிற்கு மேற்பட்ட அரு நூலியற்றி முதலிரு கழக நிலைக்குத் தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிரளித்தவர், மாநிலத்தில் மக்களுள்ளவரை மறையாப் புகழ் பெற்ற மறை மலையடிகளே[1]

2. 3 தமிழிலக்கிய வரலாற்றிலேயும் அடிகளார் பெருமை, அருமைப் படுகின்றது: ''பொதுத் தமிழிலக்கிய மனைத்தும் பொருந்தக்கற்று, ஆங்கிலரும் வியக்கும் அழகிய ஆங்கில நடை கைவரப்பெற்று, ஆரிய மறைகளையும் ஆழ்ந்து ஆராய்தலுற்று, கடந்த மூவாயிரம் ஆண்டாக மறைந்து கிடந்த தனித் தமிழை மீட்டு, எப்பொருள் பற்றியும் செந்தமிழில் எழுதவொண்ணும் என்னும் உண்மையை நாட்டிய மறை மலையடிகள் திருவள்ளுவர்க்கு அடுத்தபடியாக வைத்து எண்ணத்தக்க தனிப்பெருந்தகுதியுடையவராவர்.''[2]

## சொல்லாய்வு

3. 1 தனித்தமிழ் உணர்வு உண்டாதற்கும், அதனை வளர்க்க வழிவகை செய்தற்கும் அடிப்படையானதும் ஆக்கமானதும் சொல்லாய்வே. அச்சொல்லாய்வில் அடிகளார் ஆர்வத் தோடு ஒரு காலத்தில் ஈடுபட்டுப் பயின்றார் என்றும், கட்டுரைகள் வரைந்தார் என்றும், அவர்தம் எழுத்துகளா லேயே அறியக் கிடக்கின்றன. அவ்வெழுத்துகளில் சுட்டத் தக்க ஒன்று மொழி ஞாயிறு பாவாணர்க்கு வழங்கிய சான்றி தழாம்:[3]

3. 2 பண்டித ஞா. தேவநேயனார் பி. ஓ. எல்., பொதுவாக மொழிநூல் ஆய்வு முறைகளைப் பின்பற்றித், தமிழ்ச் சொல் ஆராய்ச்சி பற்றி எழுதிய நூல்கள் தமிழ் மொழிக்கு நீண்ட காலத் தேவையினை நிறைவு செய்தன.

3. 3 எம்முடைய இளந்தைக் காலத்திலே தலைமைக் கண் காணியார் தவத்திரு. திரஞ்சு (Trench) எழுதிய 'சொல்லா ராய்ச்சி', பேராசிரியர் மாக்சுமூலர் எழுதிய 'மொழியறி வியல், பேராசிரியர் சாய்சு எழுதிய 'ஒப்பியல்மொழிநூல்' முதலிய ஆங்கில நூல்களையாமே பெருவிருப்புடன் படித்துக் கொண்டிருக்கும் போது, அந்த முறையில் தமிழ்ச் சொற்

---

1. முன்னுரை. பக். 54.
2. தமிழிலக்கிய வரலாறு-பாவாணர். பக். 232.
3. செந்தமிழ்ச் செல்வி 44. 172-174. (அடிகளார் ஆங்கிலத் தில் எழுதியதன் தமிழாக்கம்)

களை ஆராய வேண்டும் என்று விரும்பினோம். தமிழ்ப் பேரறிஞர்கட்குப் புலப்படாமல் மறைந்து கிடந்த விரிவாக வும் வியப்பாகவும் உள்ள தமிழ் மொழியறிவுப் பரப்பு பண் டாரகர் கால்டுவெல் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வு நூலால் புலப்படலாயிற்று.

3. 4 எனினும் பண்டாரகர் கால்டுவெல் அறியப்படாத வட்டாரத்தில் செய்ததொரு முயற்சியாதலால் தமிழ்ச் சொற்களையெல்லாம் விடாமல் நிறைவாக எடுத்தாராய்ந் துள்ளார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இதுவே மொழி யியலை ஆராய வேண்டுமென்று தூண்டியது.

3. 5 எனவே ஞானசாகரம் (அறிவுக்கடல்) என்னும் எம் முடைய இதழின் முதல் தொகுதியில் அத்துறையில் ஒன்றி ரண்டு கட்டுரைகளை எழுதி வெளியிட்டேம். ஆனால் அப் போது சமயம் மெய்ப்பொருளியல் இலக்கிய வரலாறு ஆகிய துறைகளில் எம்முடைய முழுக்கவனத்தையும் செலுத்த வேண்டி ஏற்பட்டமையால் மொழியாராய்ச்சித் துறையில் தொடர்ந்து ஈடுபடக் கூடவில்லை. ஆயினும் தகுதியுடைய அறிஞர் யாராவது இத்துறையில் ஆராய்வதற்கு முன்வரக் கூடுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேம்.

3. 6 அப்போது யாழ்ப்பாணம் திருத்தந்தை ஞானப்பிரகாசர் தாம் எழுதிய மொழியியல் ஆராய்ச்சி நூலை எமக்கு அனுப்பிவைத்தார். அது ஓரளவு எமக்கு மனநிறைவு அளித்தது. எனினும் மொழியியல் ஆராய்ச்சித்துறை மிகவும் விரிவும் ஆழமுமுடையதாதலால் பழந்தமிழ் இலக்கியங் களைக் கற்று அவற்றைக் கொண்டு நன்கு புரிந்து கொள்ளும் வகையில் மேலும் மொழியியல் ஆராய்ச்சி நூல்கள் வெளி வருதல் வேண்டுமென்று கருதினேம். அந்த நேரத்தில் திரு. தேவநேயனார் யாம் எதிர்பார்த்ததை ஏறத்தாழ முற்றும் நிறைவேற்றியது கண்டு பெருமகிழ்வுற்றேம். அத்துறையில் அவர் மிகவும் உழைப்பெடுத்து ஆராய்ந்து எழுதியிருப்ப வற்றைத் தமிழ் அறிஞர்கள் நன்றாக நம்பலாம்.

3. 7 சொல்லாராய்ச்சித் துறையில் திரு. தேவநேயனார் ஒப் பற்ற தனித் திறமையுடையவர் என்றும், அவருக்கு ஒப்பாக இருப்பவர் அருமையாகும் என்றும் யாம் உண்மையாகவே கருதுகின்றேம்.'' இக்குறிப்புகள் 1949 இல் மறைமலையடி களார் பாவாணர்க்கு வழங்கிய சான்றிதழின்கண் பொதுளி யுள்ளவையாம்.

## சொல்லாய்வுத் தூண்டல்

4. 1 சொல்லாய்வுத் துறையில், ஆங்கிலப் பெருமக்கள் எழுதிய நூல்கள் அடிகளைத் தூண்டியதைச் சுட்டியுள்ளார். மற்றொரு குறிப்பும் கருதத்தகும். அடிகள் கிறித்தவக் கல்லூரியில்பணியாற்றிய காலையில் அக்கல்லூரிப்பேராசிரிய ராகத் திகழ்ந்தவரன்றே பரிதிமாற் கலைஞர். அவர் சொற் பொருளராய்ச்சியிலும் தலைப்பட்டிருந்தார். கட்டுரையும் வரைந்தார்.

4. 2 ''வடமொழியிற் பாணினி முதலாயினார் சொற்பொரு ளாராய்ச்சி செய்து அம்மொழியின்கணுள்ள பகுதிகள் அனைத்தையும் ஒருங்கு தொகுத்து வைத்திருக்கின்றனர் ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிலும் அவ்வாறே பகுதித் தொகைகள் தொகுக்கப்பட்டுள. ஆங்கிலவாணர் அத்துணை யில் நின்றுவிடாமல், இவ்வழியிற் புகுந்து மேன்மேலும் ஆராய்ச்சி செய்து தத்தங் கருத்துகளை வெளியிட்டும், ஆராய்ச்சியின் இறுதியில் நின்றனவற்றைச் சேர்த்து அகராதி செய்தும் தம்மொழிக்கண்ணுள்ள சொற்களின் இயல்புகளை நன்குணர்ந்து நாடோறும் மொழிநூற் புலமை நடாத்து கின்றனர்.

4. 3 இவ்வாறாக நாம் அத்தகையாரது ஆளுகையில் இருந்தும், அன்னாரது நூல்களைக் கற்றும் அவர்கள் செய்யும் பெருமுயற்சிகளையெல்லாம் கண்ணாரக் கண்டும் நமது தாய்மொழியாகிய தமிழிற்காக நாமொன்றும் புதுமை வழியால் உழைத்தலின்றி, வாளா காலம்போக்குதல் நேரி தன்றெனவுணர்ந்த யாம், ஏதோ எம் சிற்றறிவிற் கெட்டிய மட்டில் ஆராய்ந்த சிலவற்றைத் தொகுத்துச் 'சொற் பொருளா ராய்ச்சி' என்னுந் தலைப் பெயரிட்டு வெளியிடலாமெனத் துணிந்தேம். துணிந்து தமிழ்ப்பகுதிகள் அனைத்தையும் சொற்றாற்றொகுத்து வைத்துக் கொண்டுளேம். அன்னணந் தொகை செய்து வைத்துள குறிப்பினின்றும் ஒவ்வொரு பகுதியாகத் தனித்தனி யெடுத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து வருகின்றேம். அவ்வாராய்ச்சியிற் சிலவற்றைத் தமிழுலகம் அறியுமாறு வெளிப்படுத்துகின்றேம்;... நம் மக்கள் இதுகாறுஞ்செல்லுதற்கு அரிதாயிருந்த தமிழ்ச் சொற்காட்டிற் புகுந்து வழியறுத்துச் சென்று ஆராய்ந்து கண்டபொருள்களை நும்முன்னர் அடியுறையாக இடுகின்றேம்.[4]''

---

4. தமிழ்வியாசங்கள் பக். 51சொற்பொருளாராய்ச்சி.

4. 4 இவ்வாராய்ச்சியில் அறு என்னும் முதனிலையடியாகத் தோன்றும் அறம், அறல், அறவு, அறவை, அறுதல், அறுதி, அறுத்தல், அறுப்பு, அறும்பு, அறுகால் அல்லது அறுதாள், அறுவை, அறை, அற்றம், அற்றை, ஆறு முதலிய பல சொற்கள் பிறப்பதைச் சுட்டி விளக்குகின்றார்.

4. 5 மேலும், "அறு என்னும் இப்பகுதியும் தனிப்பகுதியன்று; இதற்கு மூலப்பகுதி பிறிதொன்றுளது என்று கூறினும் கூறலாம். 'அல்' என்னும் எதிர்மறையிடைச் சொல்லொடு துவ்விகுதி சேர்ந்து வினைத்தகைப்பட்டு நின்றதே 'அறு.' இக் கூற்று யாவருக்கும் உடன்பாடாயின் ஆயிரக் கணக்காக விரிகின்ற தமிழ்ப் பகுதிகளெல்லாம் நூற்றுக்கணக்காகச் சுருங்கிவிடும்" என்கிறார்.

4. 6 நிறைவாக, "யாம் இதன்கண் வழியல்வழிச் செல்வ தாகப் பேரறிவாளர் காண்பாராயின் அன்னார் எம்மைத் தெருட்டுவாராக" என்றும் குறிக்கிறார்.[5]

### ஒருபொருள் பன்மொழி

5. 1 அடிகளாரின் சொல்லாய்வு ஒவ்வொரு நூலினும் காணக் கிடப்பினும் சிறுவர்க் கேற்ற செந்தமிழில் செறிந்து கிடக் கின்றதாம். சிறார் நிலையில் கற்கும் ஒன்று, கல்லின்மேல் எழுத்தாகப் பதிவுறும், பின்விளைவும் உண்டாக்கும் என்னும் தெளிவால் அடிகளார் அப்பணியில் தலைப்பட்டிருத்தல் வேண்டும். அவர்தம் இளந்தைப் பருவக் கல்வியின் அடித்தளம் அறிவாரன்றே!

5. 2 இளைஞர்க்கென எழுதும் இனியநூலில் இயறகை தழுவிய சில கட்டுரைகளை அமைத்துள்ளார் அடிகள். அவற்றுள் மலை, கடல், காடு, விளைநிலம் என்னும் நான்கும் சுட்டத் தக்கவையாம். இந்நான்கன் கண்ணும் அடிகளார் சொல்லாய்வு மேற்கொள்கின்றார்.

5. 3 மலை, கடல் முதலியவற்றுக்குப் பல சொற்கள் உண்மை எவரும் அறிவர். அச்சொற்கள் தாமும் ஒருபொருள் குறிக்குமேனும் நுண்ணிய வேறுபாடுண்மையைப் பலரும் அறிந்திலர். அந்நுண்ணிய வேறுபாடு காட்டவேண்டியே பல சொற்கள் அமைந்தது என்னும் உண்மையைப் பலரும் அறிய வேண்டும் என்பது அடிகளார் உட்கிடை. அதன் வெளிப் பாடாகவே அச்சொல்லாய்வு நிகழ்ந்தது.

5. மேற்படி, பக். 56

5. 4 **மலை:** மலை என்னும் சொல்லுக்குப் பொருள் வலிமை யினையுடையது. மல் என்றால் வலிமை. மலைகள் எல்லாம் பெரும்பாலும் வலிவான கருங்கல்லால் ஆக்கப்பட்டிருக் கின்றன. மிகவும் உயரமாக இருக்கும் மலையை 'ஓங்கல்', 'பிறங்கல்', 'பொருப்பு', 'வெற்பு' என்றும்; ஓரிடத்திற் குறுக்கே வளர்ந்து நீண்டுகிடக்கும் மலையை 'விலங்கல்' என்றும்; ஒன்றன்மேல் ஒன்று அடுக்கு அடுக்காய் வளர்ந் திருக்கும் மலையை 'அடுக்கல்' என்றும்; எதிரொலி செய்யும் மலையைச் 'சிலம்பு' என்றும்; மூங்கிற் காடுகள் உள்ள மலையை 'வரை' என்றும்; காடுகள் அடர்ந்த மலையை 'இறும்பு' என்றும்; சிறிய மலையைக் 'குன்று' 'குவடு' 'குறும்பொறை' என்றும்; மண்மிகுந்த மலையைப் 'பொற்றை, 'பொச்சை' என்றும் மலைப்பக்கத்தைச் 'சாரல்' என்றும் பழைய தமிழ் நூல்கள் கூறா நிற்கும்.[6]

5. 5 **கடல்:** கடலானது எந்நேரமும் பேர் இரைச்சல் இடுவது பற்றி 'ஆர்கலி', நரலை', 'குரவை', 'அழுவம்' என்றும்; பரந்திருப்பது பற்றிப் 'பரவை' என்றும், ஆழ்ந்திருப்பது பற்றி 'ஆழி' என்றும்; உப்புநீர் உடைமை பற்றி 'அளக்கர்', 'பௌவம், 'உவரி' என்றும்; மழை முகிலை உண்டாக்குதல் பற்றிக் 'கார்கோள்' என்றும்; மழைநீர் ஆற்றுநீர் ஊற்றுநீர் மூன்றுக்குங் காரணமாதல் பற்றி 'முந்நீர்' என்றும் பல சொற்களால் வழங்கப்படுகின்றது.[7]

5. 6 காடு: மரங்கள் அடர்ந்த நிலப்பகுதியே பெரும்பாலும் 'காடு' என வழங்கப்பட்டு வருகின்றது. காடும் காடு சார்ந்த இடமும் 'முல்லை' யெனப் பெயர் பெறுமென்று தமிழ் நூல்கள் கூறா நிற்கும். பருத்துயர்ந்த மரங்கள் நெருங்கிய காட்டை 'வல்லை' என்றும்' சிறுமரங்கள் மிடைந்த காட்டை 'இறும்பு' 'குறுங்காடு' என்றும்; சிறு தூறுகள் பம்பிய காட்டை 'அரில்' 'அறல்' 'பதுக்கை' என்றும், மிகமுதிர்ந்து முற்றிப்போன மரங்களையுடைய காட்டை 'முதை' என்றும்; மரங்கள் கரிந்துபோன காட்டைப் 'பொச்சை', 'சுரம்', 'பொதி' என்றும்; அரசனது காவலி லுள்ள காட்டைக் 'கணையம்', 'மிளை', 'அரண்' என்றும் பண்டு தொட்டுத் தமிழ் மக்கள் வழங்கி வந்திருக்கின்றனர்.[8]

5. 7 **விளைநிலம் :** முதன் முதல் செயற்கைப் பயிர் செய்தற்கு வெளி நிலங்களே பயன்பட்டமையின் அவை 'வயல்' 'புலம்'

---

6. சிறுவர்க்கான செந்தமிழ். பக். 4-5.
7. ,, ,, 27.
8. சிறுவர்க்கான செந்தமிழ். பக். 44.

என்று பெயர் பெறலாயின. வயல் என்னுஞ் சொல்லுக்கு முதற்பொருள் வெளி என்பதேயாகும். புலம் என்னும் சொல்லும்எவை தம்மாலும் மறைக்கப்படாமற் கண்ணுக்குப் புலப்பட்டுக்கிடக்கும் வெளியிடத்தையே யுணர்த்தும். மேலும், இயற்கையில் வறிதாய்க் கிடந்த வெளிநிலம் அறிவர் சிலரால் முதன்முதற் கிண்டிக்கிளறிப் பயிர் செய்தற்கு ஏற்றபடியாகச் செய்யப் பட்டமையிற், பின்னர் அது 'செய்' என்றும், பண்ணப் பட்டமையிற் 'பண்ணை' 'பணை' என்றுஞ்; செறப்பட்டமையின் அஃதாவது கீறப்பட்டமையிற் 'செறு' என்றும் வழங்கப்படலாயிற்று...

5. 8 கிளறுதலாலும் தண்ணீர் பாய்ச்சுதலாலும் இறுகிய மண் கழன்று நிலம் மென்பதம் அடைதலின் அங்ஙனங் கழன்ற வயல் நிலங் 'கழனி' எனப்பட்டது. அதன்மேற் பண்படுத்தப் பட்ட அக்கழனியில் வித்திய நெல் ஒன்று பல்லாயிரமாய்ப் பயன் தந்த தாகலிற், பின்னர் அது 'பழனம்', 'விளையுள்' எனப் பெயர் பெறலாயிற்று. பயன், பழம், பழன், விளைவு முதலியன வெல்லாம் ஒரே பொருளைத் தருஞ் சொற்களாகும்.

## சொல்லாய்வுக் கூறுகள்

6. 1 அடிகளார் 'படைப்புச் சொற்கள்' ஆக்குதலிலும், மொழியாக்கச் சொற்கள் புத்தாக்கம் புரிதலிலும் நுண்ணிய தேர்ச்சியாளராகத் திகழ்ந்தார். தென்சொல், வடசொல் என்பவற்றை மூலங்கண்டு பகுக்கும் முறைமையிலும் சிறந்திருந்தார். ஆதலால் தனித்தமிழ் ஆய்வில் தலைப்படுவார்க்கு எடுத்துக் காட்டாகவும், முன்னாக்கச் செயன்மையராகவும் திகழ வாய்த்தது.

## படைப்பாக்கப்பகுப்பு

6. 2 அடிகளார் மும்மொழிப் புலமையராகலின் அப்புலமையில் தமிழுக்கு ஆக்கமாம் பணிகள் பல செய்ய வாய்த்தது. சைவ சமய அழுத்தம் மிக்கவர் அவர் ஆகலின் அதனால் சில பணிகள் செய்யவும் வாய்த்தது. அவர்தம் தமிழ்ப் பற்றும் இலக்கிய இலக்கணத் திறமும் சிலவகை பணிகளைச் செய்ய ஏவின: அறிவியல் நாட்டமும் அருமபணிகள் சில செய்தற்கு இடமாயிற்று. வரலாற்று வேட்கையும், கதைப் புனைவுத் திறமும் சிலவழிகளில் பயன்பட்டன.

---

9. மேற்படி, பக். 64-65.

6. 3 அடிகளார் வடமொழிப் புலமை வடமொழிவாணராலும் பாராட்டும் வண்ணம் சாகுந்தலத்தை உருவாக்கிற்று. அதன் ஆராய்ச்சியும் தனிநூலுருக் கொண்டது.

6. 4 அடிகளார் ஆங்கிலப் புலமை அவர்தம் அறிவியலாய்வுப் படைப்புகளுக்கு மூலமாகவும், சிந்தனைக் கட்டுரைகளுக்கு வைப்பாகவும், ஒவ்வொரு நூலின் ஆங்கில முன்னுரைக்கு வாயிலாகவும் இருந்தது, The Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge" "Can Hindi be the Lingua franca of India' என்னும் ஆங்கில நூல்களையும் தந்தது.

6. 5 அடிகளார் சிவநெறிப் பற்றுமை தமிழர் மதம், பழந் தமிழ்க் கொள்கையே சைவ சமயம், கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா, திருவொற்றியூர் முருகர் மும்மணிக் கோவை, சைவ சித்தாந்த ஞான போதம், சிவஞான போத ஆராய்ச்சி, சாதி வேற்றுமையும் போலிச் சைவமும், திருவாசக விரிவுரை முதலியவற்றைத் தந்தது.

6. 6 அடிகளார் அறிவியல் வேட்கை, தொலைவிலுணர்தல், மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி, யோகநித்திரை அல்லது அறிதுயில், பொருந்தும் உணவும் பொருந்தா உணவும், மக்கள் நூற்றாண்டுயிர் வாழ்க்கை என்பவற்றை வழங்கியது.

6.7 அடிகளார் இலக்கியப் பற்றுமையும் மொழிக் காவலும், முற் கால பிற்காலத் தமிழ்ப் புலவோர், முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, சோம சுந்தரக் காஞ்சியாக்கம், இளைஞர்க்கான இன்றமிழ், சிறுவர்க்கான செந்தமிழ், இந்தி பொது மொழியா என்ப வற்றை அருளின. வரலாற்று ஆர்வமும் புதியது புனையும் விருப்பும் சோமசுந்தர நாயகர் வரலாறு, குமுதவல்லி அல்லது நாக நாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள் என்பனவாக உருக்கொண்டன.

அவர்தம், கால ஆய்வுத் திறம் மாணிக்க வாசகர் வரலாறும் காலமும் என வெளிப்பட்டது.

6. 8 இத் தனித்தமிழ்ப் படைப்புகளுடன் அடிகளார் ஆசிரியராக இருந்து வெளிப்பட்ட 'அறிவுக்கடல்' ஆய்வுக் களஞ்சியமே! நூல்கள் பலவற்றுக்கும் முற்பாட்டுக் காட்சி யகமாக இருந்ததும் அதுவே. அடிகளார் கடிதங்களும் பொழிவும் ஆய்வுக் கருக்களே. இவ்வெல்லா வகையையும்

எடுத்துக் கொள்ளாமல் 'மக்கள் நூற்றாண்டுயிர் வாழ்க்கை' இரு பாகங்களுள் இரண்டாம் பாகத்து வரும் 'நோயில்லா நீண்ட வாழ்க்கை' என்னும் ஒரோ ஒரு தலைப்பை மட்டும் (214—332) எடுத்துக் கொண்டு அடிகளார் தனித்தமிழ்ச் செயலாக்கம் எண்ணப்படுகின்றது.

## நோயில்லா நீண்ட வாழ்க்கை

இக்கட்டுரை தனியொரு மருத்துவ நூலாம் தகுதியுடையது. சரியாக 75 ஆண்டுகளின் முன்னரேயே மருத்துவத் துறை நூல்களைத் தமிழில் எழுத முடியும் என்பதை மெய்ப்பித்தவர் அடிகள் என்பதைத் தெளிவிக்கும் சான்று இந்நூற் பகுதியாம். நூற்றுப் பதினெட்டுப் பக்கங்களையுடைய இப்பகுதியில், உச்சி முதல் உள்ளங்கால் வரை ஏற்படும் நோய்களையும் அவற்றை நீக்கும் மருந்து வகைகளையும் சான்றுகளுடனும், செய்ம்முறை நேர்த்தியுடனும் விளக்குகின்றார்.

## சொல்வகை

இவ்வுரைப் பகுதியில் காப்பி, இரத்தம், பீங்கான், புட்டி, கிரியை, சாம்பிராணி, பாட்டிலிவாலா, கர்பூராரிஷ்டம், மோதிரம், தைலம், கும்பம் என்பனவே வேற்று மொழிச் சொற்கள்.

சூக்கும வாக்கு பைசந்திவாக்கு பிராணாயாமம் முதலிய சொற்களை அடிகளார் வழங்கினாலும் அவற்றைத் தமிழாக்கம் காட்டியே விளக்கிச் செல்கின்றார்.

சவர்க்காரம், வலிதீர் மருந்து, ஓமநீர், மணப்பண்டம், குண்டலித்தீ, காளிகோட்டம், காற்றுப் பண்டம், இலட்டுகம், முடிக்காய், தில்லி, வம்பாய், பொதியுடம்பு முதலியவற்றை மொழி பெயர்ப்பாகவும், மொழியாக்கமாகவும் வழங்குகின்றார்.

புழங்குதல், கொறுக்காப்புளி, எருவாய், வயிற்றுளைச்சல், ஓவாது, சடுதி, வேர்க்குரு, வாய்வது, நிறீஇ, சொக்குதல், நந்திவட்டம், அங்கண நீர், மிசைதல், மேனி, அயில்ல், கெண்டைக்கால், மைபோல், நீர்க்கோவை, வளவிய வாழ்க்கை, கரைகின்றார், வெருக்கொள்ளல், வித்துநீர், பிசகாது எனச் சொல்லின் செவ்விய வடிவந் தேர்ந்தே ஆள்கின்றார்.

நச்சு நீர், குடல் மணிகள், நீரேற்றி, பயின் குழாய், குறிப்பேடு, செரித்தல், ஏனம், நீர்த்த உணவு, கழிவு மருந்து, கழிகால் மடை, விழுக்காடு, மூச்சுப் பழக்கம், இகலி, பீச்சாங்குழல், களைகண், கொறுக்கு நோய், விடாய், இசையாமை, கச்சல், கலவை, புளிப்புநஞ்சு, வேது, காய்ச்சற் கட்டி, மூச்சுப்பை, புழுக்கல், சோற்றுணா, பிள்ளைமை, புளிதம் என்பவை கலைச் சொற்களாக அடிகளாரால் ஆளப் படுகின்றன.

பகுத்துணர்வு, வெளிமிளுக்கு, வறட்டி, தீனிப்பை, சிறுகுழல், பெருங்குழல், அலண்டல், நொய்ய உணவு, நமர்ப்பு, ஏட்டுத் தயிர், தெளிவு மோர், வண்டல், மறித்து, விடுக்குதும், இசைவுகள், கிடேச்சு, மோப்பவர், அழலை, அடப்பருப்பு, சிறுகரண்டி, வகிர்ந்து, வான் நீலம், சுவடற, துணிக்கிழி, திரிச்சீலை, சல்லிக்கதவு, கடுவேனில், துவர்த்தல், காய்ச்சல் வீசல், பேரம்மை, பிசறி, என்பவை பெரிதும் புத்தாட்சியாகப் பயன் கொண்டவை.

சாய்ங்காலம், பாழ்ஞ்சொல், மெய்ந் நம்பிக்கை, பொய்ந்நம்பிக்கை, குளிர்ங் காற்று என்பவை மரபறிந எழுத்தாட்சி.

உட்டோல், நாடோறும், கோயில் கடோறும் முதலியன புணர்வு முறை யாட்சி.

முடிக்காய், சீயக்காய், சிகைக்காய் என ஒருசொல் மூவாட்சி பெற்றுள்ளது.

## முடிநிலை

அடிகளார்க்கு அமைந்திருந்த ஆழ்ந்த சிந்தனை, நுண் மாண் நுழை புலம், சொல் வளம், இவ்வெல்லாவற்றுக்கும் மேலான மொழிப்பற்று ஆகியவற்றால் தான், 'தமிழால் முடியுமா?' என இன்றும் வினவுவாரும், 'தமிழால் முடியவே முடியாது' என மறுப்பாரும், 'தமிழால் முடியும்' எனின் குறுகிய நோக்கர் எனக் குறுமையினும் குறுமை நோக்கராய் ஒதுக்குவாரும் ஆகிக் கிடக்கும் இற்றைக்கு முக்கால் நூற்றாண்டின் முன்னரே முடித்துக் காட்ட முடிந்தது! அந்த எரிவினால் 'மறைமலையடிகள் தமிழ் ஒரு தமிழா, என்று எளிதில் பழித்துக் காட்டவும் இந்நாளிலும் முடிகின்றது!

அடிகளாரைப் போல் தமிழை முந்நிலைத் தூய்மையராய்ப் பற்றித் தொண்டாற்ற வல்லார் அருமையினும்

அருமையரே எனினும் அவர் காட்டிய வழியில் செல்லுதலும் செயலாற்றுதலும் அருமையன்றே! ஆர்வம்தானே வேண்டும்!

# 14. குறையும் நிறையும்

## கொள்கை வழிபாடு

1. 1. பழையவை எல்லாமும் நல்லவை என்றோ, புதியவை எல்லாமும் அல்லவை என்றோ முற்றாகத் தழுவப்படுதலும் முற்றாக ஒதுக்கப்படுதலும் ஆகாது என்பது பண்டுதொட்ட செய்தி.

1. 2. ஒன்றை ஆயுங்கால் குணத்தை நாடுக ; குறையையும் நாடுக ; இரண்டனுள் மிகையை நாடுக ; பின்னர் முடிவு கொள்க ; என்பதும் புதுவது அன்று. 'சீர் தூக்குங்கோல்' 'சீரை' என்பவை நடுவுநிலைச் செப்பமாம் சீர்மை வழிப் பட்டனவே.

1. 3 இவற்றைப் பயின்றும், பட்டறிந்தும், தெளிந்தாரும் மயங்கி நிற்றலும், மாறுகொண்டு நிற்றலும் உலகி யற்கையே!

அடிகளார், தனித் தமிழ் இயக்கம் தோற்றுவித்துக் கடைப் பிடித்த நாளில் தமிழ்ப் புலமை வல்லோராலும் ஓர் ஓரப் பார்வை பார்க்க நேர்ந்தது. 'தடையுண்டெனினும், தடந் தோளுண்டு' என்பதால் அடிகளார் கொள்கை நிலைத்தது; வளர்ந்தது; பல கிளையாய்ப் பரந்தது; பூவும் பிஞ்சும் காயும் கனியுமெனப் பலவகை நலங்களும் வழங்கியது. ஆனால், தமிழ்ப் புலமையர் எல்லாரும் புரிந்து கொண்டும் வரிந்து கொண்டும் அடிகளார்க்குத் தோளோடு தோளாகவும், தாளோடு தாளாகவும் இணைந்து கடம்பூண்டிருப்பின் அவர்காலத்திலேயே எத்துணை எத்துணையோ ஆக்கங் களைத் தமிழ் எய்தியிருக்கும். அவர் காலத்திற்குப் பின் னரும் அந்நெறியே செந்நெறியாயும், சென்னெறியாயும் சீர்த்தி எய்திச் செங்கோலாட்சி கொண்டிருக்கும்.

1. 4 "தனித்தனி மனிதனைத் தலைமேல் தூக்கி, வெறிகொண் டாடலே அறமெனக் கொண்ட" பொது நிலையுலகப் போக்கே, புலவர் நிலைப் போக்குமாகாமல், கொள்கை நிலைப் போக்கில் கொஞ்சியிருப்பின் விஞ்சிய பயன்கள்

எய்திபிருக்கும். இனியும் அந்நிலை எய்துதலே மொழியாக் கத்திற்கு வேண்டத்தக்க வேட்பாகும்.

பண்டிதமணி கதிரேசனார் தமிழ்மொழி வடமொழி ஆகிய இருமொழிகளிலும் தேர்ச்சிமிக்க திறவோர். அடிக ளார் சாகுந்தலப் பணிபோலவே, 'மண்ணியல் சிறுதேர்' ஆக்குநராகத் திகழ்ந்தவர். சாணக்கியர் பொருணூற் பெயர்ப்பாளர். தமிழில் அவர்தம் திறத்திற்குத் 'திருவாசக மணி விளக்கமே' சான்றாகக் காட்டப் போதுமானது சிவனெறிச் செல்வமும் சேரப் பெற்றவர் அவர். எனினும் தனித்தமிழ்க் கருத்தில் ஒன்றினார் அல்லர்.

1. 5 பண்டிதமணியார் பெரிதும் தூயதமிழிலேயேஎழுதியவர். தூய தமிழிலேயே பொழிந்தவர்; தூய தமிழுக்குப் பல்லாற் றானும் இயல்பாகவே பணியாற்றி வந்தவர். ஆனால், கொள்கை வழியில் அவர் இசைந்தாரல்லர். ஆகையால், அடிகளாரும் அவரும் எதிர் நிலையில் இருப்பார் போலத் தருக்கமிட்டுக் கொள்ள நேர்ந்தது.

## தனித்தமிழ்ப் போர்க்களம்

2. 1 24.7.1927 இல், கரந்தைத் தமிழ்ச் சங்க விழாத் தலைமை யேற்று அடிகளார் பொழிவாற்றிக் கொண்டிருந்தார். ஆங்கு முன்வரிசையில் பண்டிதமணி, கரந்தைக் கவியரசு, நாவலர் ந. மு. வே; புரவலர் உமாமகேசுவரர் முதலியோர் அமர்ந்திருந்தனர்.

அடிகளார் பொழிவின் இடையே கூறுகின்றார்:

> ஆ என்பது சிலருக்கு விளங்காது. பசு என்றால் விளங் கும். ஆ என்பது தனித்தமிழ்ச் சொல். தண்ணீர் என்று உரையாது நம் மக்களிற் பலர் 'ஜலம்' என்கின்றனர். ஐயகோ! மலையாளிகள் கூட வெள்ளம் எனும் தனித் தமிழை வழங்குகின்றனரே.

பண்டிதமணி : 'சலம்பூவொடு தூப மறந்தறியேன்' என்று அப்பர் கூடக் கூறியிருக்கின்றார்.

அடிகள் : சல சல என்ற ஓசையுடன் ஓடுதலின் 'சலம்' என்பது காரணப் பெயர். அது தமிழ்ச் சொல். இவ்வாறு 'சலசல மும்மதம் பொழியும்' என்று தமிழ்ச் செய்யுள் ஒன்றிலும் கூறப்பட்டுள்ளதே! அது வடமொழிதான் என்று உறுதியா னால் அதை விட்டு 'நீர்' என்னுந் தனித் தமிழ்ச் சொல்லை ஆளலாமே! ஆ! ஆ! என் செய்வது; தனித் தமிழை இழி

வென்று நினைப்பது முறையாகுமா? தமிழிலே கடவுளை வணங்கக் கூடாது என்று கூறும் பார்ப்பனரும் உளர். பெரியோர் தமிழைப் பழித்துப் பாழ் செய்தால் அது குற்ற மில்லையோ! இப்படிப் புலவர் பலர் தனித் தமிழுணர்ச்சி, தகுதியற்றதென்று மொழிந்து தமிழைப் பாழாக்கினால் என் செய்வது?

பண்டிதமணி : பழம் புலவர்களால் தமிழ் பாழாகவா போய் விட்டது?

அடிகளார் : இடைக்காலத்துப் புலவர் பழைய தனித்தமிழ் உணர்வை மறந்து வடசொற்களை மிகுதியும் புகுத்தித் தமிழைக் கெடுத்துத்தான் விட்டனர். அவர்களை நாம் ஏன் பின்பற்ற வேண்டும்? வடசொற்களைக் கலத்தல் குற்ற மில்லையாயின் ஆங்கிலத்தையும் தாராளமாக வழங்கித் தனித்தமிழ் உணர்ச்சியைக் கெடுத்தால் நற்றமிழ் எவ்வாறு உயிர் வாழும்? அந்தோ! குமரகுருபரர் 'சலாம்' எனுஞ் சொல்லை வழங்கினார் என்று நாமும் பல கொடுந் துலுக்குச் சொற்களை வழங்கித் தமிழைப் பாழ்படுத்தலாமா? யானை வழுக்கி விழுந்தால் அஃது அதற்குப் பெருமையாக முடிய லாம். நாங்களோ சிறியோம். எங்களுக்கு இடர் மிகுதியும் உண்டு.''

2. 2 இவ்வாறு கூறிய அடிகளார், அதன்பின் திருவள்ளுவ ரைப் பற்றி உரையாற்றினார். அவர் உரைக்குப்பின் பண்டிதமணியார், 'வள்ளுவரும் பரிமேலழகரும்' என்னும் தலைப்பில் பொழிந்தார். அப்பொழுது திருக்குறளில் ஆரியர் வழக்கு-ஆசாரம் உண்டு என்றும், தொல்காப்பியத் தில் வடசொற் கலப்புக்கு இலக்கணம் உண்டு என்றும், கலித்தொகையில் 'சடை' என்னும் வடசொல் வழங்கப் பட்டுள்ளது என்றும் கூறிப் பற்பல குறள்களை எடுத்து விளக்கினார்.

2. 3 அக்கருத்துகளை அடிகளார் வன்மையாக மறுத்தார். ஆரியர் தமிழர் சச்சரவு இன்னும் நம்மை விட்டபாடில்லை. இப்போதுள்ள பார்ப்பனரில் பலர் தமிழரேயாவர். வடக்கே யிருந்து வந்தவர் ஒருசிலரே என்றும், தமிழர் ரிக்கு வேதத்தில் முக்கால் பங்கு பாடல்களைப் பாடியுள்ளனர் என்றும், சடையன் என்னுஞ் சொல் தமிழே என்றும், தொல்காப் பியத்தில் 2000 சொல்லுக்கு ஒருசொல்லே வடசொல் என்றும் கூறிய அடிகள் உணர்ச்சிவயப்பட்டுப் பேசினார்.

அடிகளார் : இப்பொழுது தமிழுக்குப் பரிந்து பேசுவோர் பலர் இலர். தமிழராய்ப் பிறந்த பாவிகளே தமிழைப் பாழ்படுத்தி விட்டார்கள்; பாழ்படுத்துகிறார்கள்.

பண்டிதமணி : பழம் புலவர்களால் தமிழ் பாழாகவா போய் விட்டது?

அடிகளார் : அவர்களிலும் சிலர் பாழ் செய்ததற்கு இடங் காட்டி விட்டார்கள்.

பண்டிதமணி : தொல் காப்பியர்?

அடிகளார் : அம்முறையில் அவரும் ஓர் இழையளவு வழுவியே விட்டார். அஃது ஒண்ட வந்த பிடாரிக்கு ஊர்ப் பிடாரி இடங்கொடுத்த கதையாகவே முடிந்தது.

2. 4 அன்பர்களே, நாம் தமிழை உயிரோடு வைக்கப் பாடுபட வேண்டும். ஐயகோ! தமிழைக் கொல்ல மடிகட்டி நிற்க லாமா? நூற்றுக்கு எண்பது வடசொல்லும் இருபது தமிழ்ச் சொல்லுமாக எழுதினால்-பேசினால்-தமிழ் எப்படிப் பிழைத்தல் கூடும்? வடமொழி பயில வேண்டாம் என்று யான் கூறவில்லை. மகிழ்வுடன் பயிலுங்கள். நானும் பயில் கிறேன். ஆனால், தமிழ் நன்மங்கையின் அழகிய நன்மேனி யில் அம்மைத் தழும்பு போல் வடசொற்களைப் புகுத்தா தீர்கள். அடியனேன் உங்களைப் பெரிதும் கெஞ்சுகின்றேன். ஆண்டவர்களே, தமிழைக் கெடுக்காதீர்கள்! தனித் தமிழுக்குப் பாடுபடுங்கள்.

2. 5 பண்டைப் புலவராயினும், இக்காலத்தவராயினும் மற்று எவராயினும் தமிழுக்குக் கேடு விளைத்தோரை வீளைப் போரை ஒரு பொருளாகக் கருத மாட்டேன். பழம்பெரும் புலவர் ஒருவர் ஒரு வடசொல் வழங்கியிருந்தால் பிற்காலத் தில் நூறு சொற்களை வழங்குகிறார். நாம் நூறாயிரம் சொற்களை வழங்குகிறோம். பெருங்கடனாளிகளாகின் றோம்.

2. 6 சங்கத் தமிழ் வழக்கை இடைக் காலத்தவர் பின்பற்றி யிருந்தால் அவர்களுக்குப் புகழ் உண்டு. இடையில் வந்து தமிழைக் கெடுத்தவர்களை நான் ஒருநாளும் பொருட்படுத் தேன். தமிழிற் பிறமொழிக்கலப்பை வெறுத்துத் தள்ளுங்கள். தமிழின் சுவையை மாற்றாதீர்கள். வல்லோசைகளைப் பெருக்காதீர்கள்.

தமிழர் ஆரியத்திற்கு அடிமைப்பட்டு சொற்களைத் தமிழிற் கலத்தல் தீங்கே. இவ்வடிமைத்தனத்தினின்றும்

முதலில் விடுபடுங்கள். இது முதலில் பெற வேண்டிய 'சுய ராஜ்யம்', தமிழ்ப் பெயரளவிலேயே விளங்குகிறது. எங்கும் ஆரியமொழி கூத்தாடுகின்றது. உண்மைத் தமிழராயின் உங்களுக்கு உறுதிப்பாடு வேண்டும். தாய்க்குத் தகுந்த பிள்ளைகள் தோன்றல் வேண்டும். தமிழில் அயற் சொற்களைக் கலக்க விரும்புவோரை எவ்வளவு கற்றவராயினும் மதியேன்!

2. 7 பண்டிதமணி : தனித்தமிழ் உணர்ச்சி கூடாதென்று யான் கூறவில்லை.

அடிகளார் : உங்களைப் போன்ற பெருந்தமிழ்ப் புலவர்களின் உதவியில்லாமல் தனித்தமிழ் வளர முடியுமா? தாங்கள் பெரும் புலவர். தாங்கள் அப்படிப் பேசியதால்தான் எனக்குப் பெருவருத்தம் உண்டானது. மற்றவர்கள் தனித்தமிழுக்கு மாறாகச் சொன்னால் எனக்கு இவ்வளவு கவலை ஏற்பட்டிராது[1]

மறுநாட் காலையில் அடிகளாரும் பண்டித மணியாரும் அன்பர்களும் கூடி அளவளாவினர். அப்பொழுது தனித்தமிழ் பற்றிய உரையாடல் மீள்பார்வை பார்க்கப் பட்டது.[2]

2. 8 பண்டிதமணி : நான் ஒன்றும் தனித்தமிழுக்கு மாறானவன் அல்லன். இதனை யான் எழுதியுள்ள நூல்களிலும் கட்டுரைகளிலும் தாங்கள் பார்த்திருக்கலாம். சென்ற விழாவில் யான் தலைமை பூண்ட போதும் தமிழ்ப் பாதுகாப்புப் பற்றிப் பேசியுள்ளேன். அத் தலைமையுரை கூடச் சில வட சொற்கள் தவிரத் தனித் தமிழிலே தான் அமைந்துள்ளது.

அடிகளார் : ஆம்! ஆம்! அதை நான் படித்தேன். மிகவும் அருமையாயுள்ளது. தனித் தமிழாகவே இருக்கின்றது. அப்படியிருக்க வேண்டுமென்று தானே நான் விரும்புகிறேன். பேசுகிறேன். தங்கள் தமிழ்ப் பற்றையும் தொண்டையும் நான் அறியாதவனா? உங்களுக்கில்லாத பற்றா எனக்கு வந்துவிடப் போகிறது? ஏதோ கலப்புத் தமிழை ஏற்றுக் கொள்வது போலப் பேசுகின்றீர்கள். அது கொள்கைக்காக இருக்கலாம். ஆனால், தங்கள் அழகிய உரைநடை எல்லாம் தனித் தமிழாகவன்றோ உள்ளன. தங்கள் தமிழ்ப் பற்றைப் பற்றி யாருக்கும் ஐயமிராது. எனக்குத் தங்கள்

1. மறைமலையடிகள் வரலாறு பக். 522—532
2. ,, ,, ,, 534

பால் அளவில்லாத மதிப்புண்டு. தாங்கள் எவ்வளவோ பெரும் புலவர். தனித்தமிழ்க் கொள்கைக்கு மற்றவர் உதவி கிடைப்பதை விடத் தங்கள் உதவி கிடைப்பது எவ்வளவோ மேலானது. அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி யளிக்கின்றது.

பண்டிதமணி: அடிகள் நேற்றுப் பேசியதிலிருந்து தனித்தமிழைப் பற்றி எனக்கிருந்த அரைகுறையான ஐயங்கள் அடியோடு அகன்று விட்டன. நம் பெரியோர்கள் வடசொற்களைத் தமிழிற் கலந்து விட்டார்களே! நாம் அவற்றை நீக்கின் அவர்கள் செயல் குற்றமென்று கூறப்படுமோ என்றுதான் யான் அஞ்சியிருந்தேன். தனித் தமிழை எதிர்த்தேன். ஆனால் அதற்கு அடிகள் சரியான விடையளித்து விட்டீர்கள்.

தனித்தமிழ்க் கோட்பாடு மட்டுமல்ல. அடிகளின் ஏனைய தமிழ் நெறிக் கொள்கைகளையும் சீர்திருத்தக் கருத்துகளையும் யான் மனமார ஏற்றுக் கொள்கிறேன். ஆம் தமிழ்ப் பகைவர்கள் தமிழர்க்கும் தமிழ் நெறிக்கும் செய்து வரும்கேடுகளைச் சில ஆண்டுகளாகவே யான் உணர்ந்து, கொண்டுவருகின்றேன். அடிகள் மேற்கொண்டு கடைப் பிடித்துவருகின்ற அக்கருத்துகளையெல்லாம் யான் முழு மனத்துடன்ஏற்றுக் கொள்கின்றேன். இனி நமக்குள் கருத்து வேற்றுமைக்கு இடமேயில்லை. இதை மகிழ்வுடன் அடி களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.[3]

பண்டித மணியார் பெரிதும் தனித் தமிழ் நடையர் தனித்தமிழ் இயக்கம் கால் கொள்வதற்கு முன்னரே தனித்தமிழ் நடையர்.அடிகளார் தனித்தமிழ்க்கொள்கையை உருவாக்கிக் கொண்ட பின்னர்த் தம் நடையில் கலப்பின்றிக் காத்தார். ஆனால் பண்டிதமணியார் அடிகளாரைப் போல் திட்டமிட்டுக் கலப்பின்றி எழுதினார் அல்லர். வரவரக் கலப்பை விலக்கியே வந்தார். எழுத்துக் கலப்பை பல்லாற் றானும் தவிர்த்தே வந்தார். அவர்தம் உரைநடையில் எழுத்துக் கலப்பைக் காண்டல் அரிதேயாம்.

**சன்மார்க்கம்**

3. 1 சன்மார்க்கம் என்னும் பொருள் பற்றி மதுரைத் தமிழ்ச் சங்கப் பத்தாம் ஆண்டு விழாவில் பண்டிதமணி பொழிவு செய்தார். அதன் தொடக்கப் பகுதி :

---

3. மறைமலையடிகள் வரலாறு பக். 534-536

தலைவரவர்களுக்கும் இவ்வவைக் கண் விளங்கும் ஆன்றோர்களுக்கும் பணிவுடன் செய்து கொள்ளும் அறிவிப்பு. அன்புமிக்க ஐயன்மீர், பரமகருணாநிதியாகிய சிவபெருமான் திருவருளால் மிக அரிதிற் கிடைக்கப் பெற்ற மக்கள் யாக்கை யுடையாரெல்லாரும் தம் பிறப்பான் எய்தற் பாலன வாகிய உறுதிப் பயன்களை எய்துவதற்கு இன்றியமையாச் சாதனங்களாகவுள்ளவை மொழியறிவும் சமய ஞானமுமே யாம். இவ்விரண்டுள் மொழியறிவு சமய ஞானத்தைத் தருதற்குரிய தாகலின் முதலில் மொழி வளர்ச்சி கருதி அதற்கு வேண்டுவன செய்தல் அவ்வம் மொழியாளர்க்குரிய முக்கிய கடமையாகும்.

3. 2 இவ்வுண்மையுணர்ந்தே செந்தமிழ் வளங்கெழுமிய இம் மதுரை மாநகரின் கண்ணே முன்னர் முதலிடை கடையென் னும் முச்சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்த தெய்வப் பாண்டி யர்கள் அனைவரும் தம் எண்ணத்தின் பயனாக ஓருருக் கொண்டு தோன்றியாங்கு இராமநாதபுரத்தில் தமிழ் மக்கள் செய்த தவப்பயனாக உதித்தவர்களும், கற்றுத் துறை போய நற்றவக் குரிசிலுமாகிய திரு. பொ. பாண்டித் துரை சாமித் தேவரவர்கள் முற்சங்க முறைவழுவாது இச்சங் கத்தை நிறுவினார்கள். இச்சங்கம் தன் நோக்கங்கள் பல வற்றையும் இனிது நிறைவேற்றி வருதலைக் காட்சியிற் கண்டு மகிழாத் தமிழ் மக்கள் சிலரேனுமிருப்பரென்பது சிந்திக்கற்பாலதே.

3. 3 இனி, இச்சங்கத்தின் பத்தாம் ஆண்டு நிறைவேற்றக் கொண்டாட்ட நிமித்தம் கூடிய இப்பேரவையிற் படித்தற் குரியதாக ஒருகட்டுரை எழுதிவரவேண்டு மென்று இதன் தலைவரவர்கள் ஆணைதந்தனர்.''[4]

### ஒருகுறை

3. 4 இப்பகுதியில், 'பரமகருணாநிதி' 'சாதனம்' 'ஞானம்' உதித்தவர், என்னும் நான்கு சொற்களுமே அயற்சொற்கள். அவையும் தமிழ் எழுத்தொடு புணர்ந்தவை.

3. 5 பண்டிதமணியார் பெருங்கலவை நடையர் எனின், தலைவர் 'அக்ராசனர்' ஆகியிருப்பார்; அல்லது 'பிரசிடெண்டு' ஆகியிருப்பார். அவை 'சபை' யாகியிருக்கும் அல்லது சீமான் சீமாட்டியென்றோ பிறவாறோ ஆகியிருக் கும். ஆண்டுவிழா 'வருஷோத்ஸவம்' ஆகியிருக்கும் அல்லது

5. உரைநடைக்கோவை, முதற் பகுதி. பக். 1-2.

'ஜூபிளி' ஆகியிருக்கும். செய்திகளும் பிறபிறவாறே பிறழ்ந் திருக்கும். எனினும் என்ன?

3. 6 அடிகளார் போலவே, அடிகளார் தனித்தமிழ் இயக்கம் தொடங்கு முன்னரே எழுதிய பண்டிதமணியாரும் அடிகளாரும் ஒருநோக்கில் ஒருபோக்கில் சென்றாரல்லர்; அக்குறையே முழுக்குறை! இது காறும் தீராக்குறை.

### ஓர் எதிராட்டு

4. 1 இன்னொரு செய்தியும் இவண் அறியத்தக்கதே. 'தலைச்சொல்' 'ஆக்கச் சொல்' என்பவை தமிழில் வேண்டும் என்பாரும், 'தமிழில் இல்லை' என்பாரும்; ''துறையறி வாளர்க்கு அக்கறையில்லை; '' ஆங்கிலமாட்டுக்கே தீனியை யெல்லாம் போட்டுவிட்டுத் தமிழ்மாட்டிலே பால் கறக்கத் தடவிப்பார்க்கிறார்கள்'' என்பாரும் முரணிக் கொண்டு இக்கால நிலையிலேயே உள்ளனர். அடிகளார் வாழ்ந்த காலத்தில் எப்படி இருந்திருப்பர்?

4. 2 1941-இல் அரசினரால் அமைக்கப் பெற்ற தமிழ்க்கலைச் சொல்லாக்கக் குழுவில் ஓர் உரையாடல்: உறுப்பினர்கள் சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமிக்கவுண்டர் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை.

இரா : சாஸ்திரம் என்ற சொல்லைக் காட்டிலும் நூல் என்ற சொல்லே மிகப் பொருத்தமாக உள்ளது. ஆதலால், நூல் என்ற சொல்லையே ஏற்றுக் கொள்ள உம்மை வேண்டு கிறேன்.

வை : அரிய விஞ்ஞானக் கருத்துக்களைத் தொகுத்தும் விரித்தும் ஒழுங்கு படுத்திச் சிறந்த வகையில் கூறுவது சாஸ்திரம் எனப் படும். ஆனால், நூல் என்பது ஏதேனும் ஒன்றைப் பற்றி எழுதப்பட்ட ஒரு புத்தக வடிவத்தைக் குறிப்பதாகும். ஆதலால் கணித நூல் என்பதைக் காட்டிலும் கணித சாஸ்திரம் என்பதே அதிகப் பொருத்த முடையது.

இரா : தாங்கள் கூறிய இவ்விலக்கணத்திற்கு எடுத்துக்காட்டு உளதா?

வை : எடுத்துக்காட்டு ஒன்றும் இல்லை. யாமே இவ்வாறு வகுத்துக்கொண்டு அதன்படியே பிறவிடங்களிலும் கையாண்டு வருகின்றோம்.

இரா : இது உமது சொந்தக் கற்பனை எனின் சாஸ்திரத் தின் இலக்கணத்தை நூலுக்கும், நூலின் இலக்கணத்தைச்

சாஸ்திரத்துக்குமாக மாற்றி அமைத்துக் கொள்ளலாமே! நூல் என்ற சொல்லுக்குத் தாழ்ந்த பொருளும், சாஸ்திரம் என்ற சொல்லுக்கு உயர்ந்த பொருளும் கற்பிக்கப்படுவதன் நோக்கம் யாது?

வை : அது உலகவழக்கு.

இரா : நூல் என்பதும், சாஸ்திரம் என்பதும் ஒருபொருள் குறிக்கும் இருசொற்களாகவே உலகில் வழங்குகின்றன. வியாகர்ண சாஸ்திரம் என்பதும் இலக்கணநூல் என்பதும் ஒருபொருளையே குறிக்கின்றன. மேலும் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்ட (Tamil Lexicon) தமிழ் அகராதியில் நூல் என்ற சொல்லுக்கு Systematic treatise; Science; சாஸ்திரம் என்று பொருள் குறிக்கப் பட்டுள்ளது. இதை ஏற்றுக் கொள்வதா அல்லது தங்களது புதிய பொருளைக் கொள்வதா?

வை : பல்கலைக்கழக அகராதியிலுள்ள பொருள் சரியன்று; அது அவசரத்தால் நேர்ந்த பிழையாகும்.

இரா : தொல் காப்பியத்தில் நூலுக்கு இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது.

'ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை
வெளிப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
முப்பத் திருவகை யுத்தியொடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்'

என்பது நூலின் இலக்கணமாய் இருக்க உங்கள் விருப்பப்படி யெல்லாம் தமிழர் மரபுக்கு முரண்படப் பொருள் கொள்ளு தல் முறையல்லவே?

வை : நூலும் சாஸ்திரமும் ஒரு பொருள் குறிப்பனவாயின் சாஸ்திரம் என்ற சொல்லை நீங்கள் ஏன் ஆட்சேபிக்கிறீர்கள்?

இரா : சாஸ்திரம் என்பது வடசொல். நூல் என்ற தூய தமிழ்ச் சொல்லிருக்க அதே பொருளுடைய பிற சொல்லைப் புகுத்து தல் நீதியன்று; மேலும், இது தமிழ்ச் சொல்லாக்கக் குழுவே யன்றி; வடசொல்லாக்கக் குழுவல்ல என்பதை உங்களுக்குப் பணிவுடன் நினைப் பூட்டுகிறேன்.

வை : சாஸ்திரம் என்பதும் தமிழ்ச் சொல்லேயாகும். அது தேவாரம், திருவாசகம் முதலிய சமய நூல்களில் ஆளப் பட்டுள்ளது. தமிழில் இரண்டறக் கலந்த சொல்லெல்லாம் தமிழ்ச் சொல் என்பதே எமது துணிபு.

இரா : உங்கள் கொள்கை எனக்கு வியப்பைத் தருகிறது சாஸ்திரம் என்ற சொல் சமய நூல்களில் காணப் படலாம். ஆனால், அதனாலேயே அது தமிழ்ச் சொல்லாகாது. ஒரு சொல் தமிழ்ச் சொல்லா அல்லது ஆரியச் சொல்லா என அறிவதற்குப் பல முறைகள் உண்டு. அவற்றுள் ஒன்றி னாலாவது உங்களது கொள்கையை நிலைநாட்ட முடியாது.

வை : அடிப்படையான கொள்கையிலேயே உமக்கும் எமக்கும் கருத்து வேற்றுமையுண்டு. ஆதலால் விவாதத்தை நிறுத்திக் கொள்வோம். கமிட்டித்தலைவர் (திரு. கே. சாமிநாதன்) தீர்ப்புப்படியே தீர்ப்புச் செய்து கொள்ளட்டும்.

இரா : அப்படியே ஆகட்டும். சாஸ்திரம் என்ற சொல்லே இக் குழுவினரால் ஏற்கப்படும் என்பதை நான் அறிவேன். ஆனால் தமிழருக்கும் தமிழ் நாட்டுக்கும் நீங்கள் பெருந்தீங்கு விளைக்கின்றீர்கள் என்பதையும் பிற்காலத்தில் தமிழர்கள் வீறிட்டெழுந்து சீறுவராயின் அவர்களுக்குச் சமாதானம் கூறும் பொறுப்பு உங்களுடையதாகும் என்பதையும் உங்கட்கு அறிவிக்கிறேன்.''[6]

4. 3 வையாபுரியார் என்ன மொழியறிவு இல்லாதவரா? மொழித்திறம் இல்லாதவரா? அவரைப் போல ஆய்வுத்திறம் வாய்ந்தார் அருமையினும் அருமையரே! அவர்தம் பதிப்புக்கு இணை அவர்தம் பதிப்பே என்பதற்குத் தகவும் அமைந்த பதிப்பாசிரியரே! ஆனால் 'ஒருவட்டத்தைத் தாமே போட்டுக் கொண்டு, அவ்வட்டத்துக்குள் ஆய்வை மடக்கி முடக்கி ஒடுக்கிவிடவேண்டும் என்றும், அதற்காம் சான்றுகளை வகுத்தும் தொகுத்தும் காட்டுதற்கு எத்தகைய மறுநெறியையும் ஏற்பார் என்றும் அவர் ஆய்வுக்களங்களே சான்றாகக் காட்டி நிற்கின்றன.

## முன்னுக்குப் பின்முரண்

4. 4 ''ஐரேனியர் தமதுபாரசீக மொழியினின்றும் துருக்கி அராபியச் சொற்களை விலக்க முற்பட்டு வருகின்றனர். செருமானியர் அந்நியமொழிப் பதங்களைக் கடன் கொள்ளாது அவற்றை மொழிபெயர்த்து வழங்குதலை விரும்புகின்றனர்.''[7]

4. 5 ''நூறாண்டு யுத்தத்திற்குப்பின் அதன்விளைவாய்எழுந்த தேசிய உணர்ச்சியால் இங்கிலாந்தில் பார்லிமெண்டு நடவடிக்கைகள் முதலியன ஆங்கில மொழியில் எழுதப்

6. தமிழ். பக். 110-112
7. அகராதி நினைவுகள். பக். 101.

பட்டன. அக்காலம் வரையினும் அவைகள் நார்மன் பிரஞ்சில் எழுதப்பெற்று வந்தன''[8]

இவ்வாறு கூறுபவர் எவர்? வையாபுரியாரே கூறுகின்றார்.

5. 1 ''ஒரு கூத்து ஒரு கூட்டத்தில் நடைபெற்றது. 'ஒருவர் ஒருமுறை வடமொழிப் பதங்களை யெல்லாம் நிர்த்தாட்சண்யமாய் ஒழித்துவிட்டுத்தான் மறுகாரியம் என்றனர். இவ்வாக்கியத்தில் இருந்தே எவ்வளவு தூரம் வடமொழியை விலக்கமுடியும் என்று தெரிகிறது அல்லவா!'' என்கிறார்.[9]

இவ்வாறு கூறுபவர்? வையாபுரியாரே!

5. 2 தமிழில் சொல்ல முடியாத அத்தகு செய்தியா இது! கூறியவர்க்கு அத்திறம் இல்லையென்றால் இப்படிக் கூறுக எனக் கேட்டவர் திருத்தியிருக்கலாமே! இதில் எவரை எவர் எள்ளுகிறார்! ஒரு தமிழ் மகனை ஒரு தமிழ் மகன் தனித்தமிழ் வேண்டும் என்றதற்காக எள்ளுகிறார்.

5. 3 ''வடமொழிச் சொற்களையெல்லாம் இரக்கமின்றி ஒழித்து விட்டுத்தான் மறுவேலை'' என்றால் என்ன மொழிக் கலப்பு வந்து விட்டது?

5. 4 ''நமது தாய் மொழி தனித் தியங்கக் கூடியது என்ற உணர்ச்சி தவறான அபிமானத்தால் தோன்றி நம்மிற் பலரையும் கூத்தாட வைக்கிறது.''[10]

5. 5 ''தூய தமிழ்க் கிளர்ச்சி பெரும்பாலும் மொழிநூற் பயிற்சி இல்லாதவரால் தொடங்கப்படுகிறது.''[11]

இவ்விணை மணிமொழிகளையும் சிதறியவர் எவர்? மேலவரே!

5. 6 என்ன கொடுமை! நினைந்து கூறும் கருத்துகளா இவை? தமிழ் சிறந்தோங்க-தமிழினம் தழைத்தோங்க-தமிழரே ஒருப்படார்! கட்டாயம் ஒருப்படார்! இகலி இகலி இருப்பதை எல்லாம் இழந்து போதற்கென்றே தோன்றிய இனம் தமிழினமே போலும்!

ஒருநிறை

6. 1 1922ஆம் ஆண்டிலேயே ஒருவர் எழுதுகின்றாரே!
தலைப்பு:

---

8. மேற்படி பக். 103.
9. ,, ,, ,, 18.
10, 11. அகராதிநினைவுகள். பக். 17

"தென்மொழியுள் வடமொழிக் கலப்பு"[12]

முற்காலத்தில் தென்மொழியாகிய நந்தமிழ்மொழியுள் வடசொற்கள் அருகிக்கிடந்தன. இக்காலத்திற் பெருகிக் கிடக்கின்றன. நாள்வழி ஏடு (தினசரிப் பத்திரிகை) கிழமை மும்முறை ஏடு (வாரம் மும்முறைப் பத்திரிகை) திங்கள் வழி ஏடு (மாதப் பத்திரிகை) ஆகிய இவற்றை ஆக்குவோர்கள் எல்லாருமே இன்னும் வடசொற் கலப்பைப் பெருக்கிக் கொண்டு வருகின்றனர். எவ்வாற்றாலெனில் ஒரு பொருளைக் குறிக்கும் தமிழ்ச் சொல் உள்ளவிடத்தும் அப் பொருளைக் குறிக்கும் வடசொல்லைக் கையாண்டும், ஆங்கில மொழியில் உள்ளவற்றைத் தமிழில் மொழிபெயர்க் குங்காற் புதுச்சொற்கள் ஆக்கவேண்டியவிடத்து வடமொழி யில் ஆக்கி அவற்றைப் பயன்படுத்தியும் வரும் இவ்வாற்றால் என்க.

6. 2 இவ்வாறு நம் தமிழ்மொழி இன்னுஞ் சில காலம் நடை பெற்று வருமாயின், அஃதென்னாம் என்பதைச் சிறிது ஆராய்வார்களாயின் அங்ஙனஞ் செய்யத்துணியார். முற்றுந் தமிழ்ச் சொற்களையே கையாளுவர். சொற்கள் கிடைக்கா விடிற் புதுத்தமிழ்ச் சொற்களை ஆக்குவர். இங்ஙனம் இக் காலத்தில் அருட்டிருவாளர் மறைமலையடிகள் தாம் எழுதி வரும் திருவாசக விரிவுரையிற் கூடியவரை வடசொற்களை ஒழித்து எழுதுகின்றார்கள்; முற்றும் ஒழிக்கவில்லை. ஒழிக்க முயல்வார்களென எதிர்பார்க்கின்றாம்.

6. 3 இனி மற்றை ஏடாக்குவோர்களும் (பத்திரிகையாசிரியர் களும்) தமிழ் மொழியிடத்து அன்புள்ளவர்களானால் அவ் வாறே இனிமேல் செய்யத் தொடங்குவர். அங்ஙனஞ் செய்யத் தொடங்காதவர் அம்மொழியிடத்து அன்பில ராவர். அன்பிலார் ஆமாறு எவ்வாற்றால் எனின், அம் மொழியினது அழகும் பெருமையும் கெடுமாறு செய்யுமாற் றாலென்க. என்னை? அன்புடையார் அழகும் பெருமையும் உற்று விளங்குமாறு செய்வர். அஃதிலாரன்றே அவை கெடு மாறு செய்வர் ஆகலான்.

'விநாயகரடிமை' என்னும் பெயரால் இக்கட்டுரை வெளிப் பட்டுளது. அதன் முற்பகுதியே இது.

6. 4 இத்தகைய ஊக்குதல்களும் அடிகளார்க்கு வாய்த்தது நலப்பாடேயாம். அடிகளார், "கூடியவரை வடசொற்

12. ஆனந்தபோதினி. தொகுதி. 7. பக். 374.

களை ஒழித்து எழுதுகின்றார்கள்; முற்றும் ஒழிக்கவில்லை ஒழிக்க முயல்வார்களென எதிர்பார்க்கின்றாம்'' என்பது எத்தகு ஊக்குதல்!

7. 1 இதழின் பெயர் 'ஆனந்த போதினி'; எழுதியவர் விநாயகரடிமை; எனினும் இவர் கட்டுரையில் ஒரு சொல்தானும் வேற்றுச்சொல் இல்லை! இதுவே, இவர் கூறத்தக்க தகவாளர் என்பதைக் காட்டும் சான்றாயிற்றே! 1922ஆம் ஆண்டிலேயே, பத்திரிகை 'ஏடு' ஆகின்றதே! தினசரி, 'நாள் வழி' யாகின்றதே! நாளேடு, கிழமை ஏடு, திங்களேடு என்று நாம் ஆள்வதற்குத் தக்க வழியல்லவோ செய்துள்ளார்!

## அடிகளார் வழிஞர்

7. 2 அடிகளார் மகளார் தனித்தமிழ்த் தொண்டில் தலைப்பட்டு இயன்றவற்றைச் செய்ததை அறிந்தோம்! அவரைப் போலவே அடிகளாரிடம் தனிக் கல்வி பயின்றவர் இளவழகராம் அழகரடிகளாரும் நாகை சொ. தண்டபாணியாரும். முன்னவர் தமிழ்த் தொண்டு இனைத்தென நாடு நன்கறியும். பின்னவர் தமிழ்த் தொண்டு திருக்குறள் அறத்துப்பால் விரிவுரை ஒன்றால் நிலைபெறும்.

7. 3 அடிகளார்க்கு உரிமையாலும் உறவாலும் உழுவலன்புத் தொண்டாலும் தலை நின்றவர் கழக இரட்டையர் திருவரங்கனாரும், தாமரைச் செல்வரும்! அவர்கள் வழியே நடந்த கழகத்தின் தனித்தமிழ்த் தொண்டும், அடிகளாரால் பாராட்டப்பெற்ற மொழி ஞாயிறு பாவாணர் தொண்டும், அவர் வழியே உலகத் தமிழ்க்கழகமென இயக்கமாகிக் கிளர்ந்த தமிழ்த் தொண்டும் பிறர் பிறர் செய்த தமிழ்த் தொண்டுகளும் ''அடிகளார்க்குப் பின்னே தனித்தமிழ்த் தொண்டு'' என்னும் தலைப்பில் ஆயவேண்டிய அவ்வளவு விரிவாக்கமுடையது. ஆகலின் இவ்வளவில் அமைந்து அடிகளாரின் தனித் தமிழியக்க மதிப்பீடு பற்றிய 'மணிமொழி'* ஒன்றனைக் காட்டி நிறைவிப்பாம்:

## நிறைவுரை

7. 4 மறைமலையடிகளின் தனித் தமிழியக்கம் தமிழ்த்தாயின் நெஞ்சு புரையோடாதும் தமிழர் அறைபோகாதும் காத்தது.

---

*. தனித்தமிழ்த் , தொண்டும் எழுத்தாளர் கடமையும், வ. சுப. மாணிக்கனார், மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர் பக். 24.

தமிழின் வயிற்றிலிருந்து முன்பு பல திராவிட மொழிகள் கிளைத்து அதன் பரப்பைச் சுருக்கியது போல, மீண்டும் தமிழகத்துள் ஒரு புதிய திராவிடமொழி பிறந்து தமிழை இன்னும் குன்றிக் குலையாதவாறு தடுத்தது. இன்று பாட நூல்கள் பெரும்பாலும் தமிழ் வடிவாக வருகின்றன. ஒரு சார் இளைஞர் கூட்டம் எழுத்தாளர் கூட்டம் குடிநீரைத் தூய நீராகக் காத்தல் போலத் தமிழைத் தூயதாகக்காத்து வருகின்றன.

7. 5 கலப்பு மிகுதியிருந்தாலும் பல செய்தித் தாள்கள் தமிழ்த் தூய்மையையும் முடிந்த அளவு பேணி வருகின்றன. சொற் பொழிவுகள் நல்லதமிழில் கேட்கப்படுகின்றன. வாழ்த் துக்கள் வரவேற்புக்கள் அழைப்பிதழ்கள் எல்லாம் நல்ல தமிழ்ப் பைங்கூழ் வளரும் பைந்நிலங்களாக மிளிர்கின்றன. இந்நன் மாற்றங்களையெல்லாம் மறைமலையடிகளைப் பெற்றமையால் தமிழ்த்தாய் பெற்றாள். அத்தவமகன் அடிச்சுவட்டை அன்புச் சுவடாகப் போற்றிப் பாலின் தூய்மைப்போலத் தமிழின் தூய்மையைக் கடைப்பிடித்து வாழும் இளைய மறைமலையடிகள் இன்று பல்கி வருப. ஆதலின், தமிழ் தனித் தடத்திற் செல்லும் புகைவண்டி போலப் பழைய புதிய தன் சொற்களைக் கொண்டே விரைந்து இயங்கி முன்னேறும் என்று உறுதிகொள்வோம்!''

# இணைப்பு

*(தேசபக்தன்; ஆசிரிய உரை-திரு. வி. க.)*

## தமிழுஞ் சுய ஆட்சியும் (4-1-1918)

சீருஞ் சிறப்பும் வாய்ந்த தமிழ்நாடு இப்பொழுது எந்நிலை யுற்றிருக்கிறது? எல்லா நாடுகளுக்கும் கல்விப் பொருளையும் செல்வப் பொருளையும் வழங்கி விட்டுத் தான் பட்டினி கிடந்து வருகிறது. தமிழ் நாட்டார் தமிழை மறந்தார்கள். சுதந்திரத்தை இழந்தார்கள். ஆங்கில மயமாகி விளங்குகிறார்கள்.

தமிழ் மக்கள் முன்னேற்றத்துக்கென வெளிக் கிளம்பிய டாக்டர் நாயர் மேல் நாட்டு நாகரிகங்கள் இந்தியாவிற் பரவிய பின்னரே ஜனப் பொறுப்பாட்சி கொடுக்கப்பட வேண்டுமென்று எழுதுகிறார்; பேசுகிறார். அவருக்குத் துணையாக மிஸ்டர் ரெ. கந்தசாமி செட்டியாரும் புறப்பட்டிருக்கின்றார். இவர்கள்

தமிழ் மக்கள் வழக்க ஒழுக்கங்களை மாற்ற முயலுகின்றார்கள். ஒரு பெரு மாறுதல் உண்டானாலும் உண்டாகும். இவர்கள், மேல் நாட்டு நூல்களைப் பயின்று அதனால் தோன்றிய அறிவினால் தமிழ் நாட்டைத் திருத்த வெளி வந்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டைத் திருத்தத் தமிழ் நூல்களே சாலும். இப்பொழுது திருவள்ளுவரைப்படிப்பவர் யார்? தொல் காப்பியத்தைத் தொடுபவர் யார்? புறநானூற்றைப் போற்றுவோர் யார்? சிலப்பதிகாரத்தைச் சிந்திப்பவர் யார்? மணிமேகலையை மதிப்போர் யார்? பத்துப்பாட்டைப் படிப்போர் யார்? பலரில்லையே! இந்நூல்களின் பெயர்களைக் கேட்டுள்ளவர் ஆயிரத்தில் ஒருவரோ? இருவரோ? அறிகிலேம்! அரும் பெரும் நூற்கருத்துக்கள் அழிகின்றனவே! தமிழர் வழக்க ஒழுக்கங்கள் அருகுகின்றனவே! இப்பொழுது தமிழர் செய்ய வேண்டிய கடமை என்ன?

தமிழ்த் தாயைக் கொல்ல முன் வந்துள்ள பெரியோர்களோடு கலந்து உழைப்பதோ? சகோதரர்களே! நடுநிலை வழாது யோசியுங்கள். சிற்சில சகோதரர்கள் ஆங்காங்கே தமிழ்க் கழகங்கள் ஏற்படுத்தி முயற்சி செய்தும் பயன் பெற்றார்களில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கம் எழுச்சி குன்றாது முயன்றாலும் தமிழ்க் கட்டாயப் பாடமாக ஆக்கப்படுமோ? சர்வகலா சாலை நம் பக்கத் துணை செய்யுமோ? இப்பொழுதுள்ள ஆட்சி முறை ஜனவிருப்பப்படி நடைபெறுவதோ? இவ்வாட்சி முறையில் நம் விருப்பம் நிறைவேறாதென்பது திண்ணம்.

**உத்தியோக சாலைகளிலும், சட்ட நிருவாக சபைகளிலும் தமிழே வழங்கப்பட வேண்டும்**[1] என்பது நமது கோரிக்கை. நம் கோரிக்கை ஜன விருப்பப்படி நடைபெறக் கூடிய சுய ஆட்சியால் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை. **தமிழ் மக்கள் சுய ஆட்சி பெற முயல்வது தமிழ்த் தாய்க்கு உயிர் கொடுப்பதாகும்.**

சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல் என்னும் உண்மையை உணர்ந்த தமிழ் மக்களுக்குப் பொருளை விரித்துரைக்க வேண்டுவது அநாவசியம், தமிழ்ச் சகோதரர்களே! விரைவில் சுய ஆட்சி பெற முயற்சி செய்வீர்களாக!

---

1. தடித்த எழுத்தாக அமைக்கப்பட்டவை, பொழிவாளரால் அமைக்கப்பட்டவை.

## தமிழ்ப் புலவர்கள் (21-1-1918)

வரவரத் தமிழ்ப் புலவர்கள் மாண்பிழந்து இயற்கை நுண்ணறிவும் மங்கப் பெற்று வறுமைக்கும் சிறுமைக்கும் ஆளாகி வருகின்றார்கள். பல தமிழ்ப்பண்டிதர்களுக்குப் பண்டைத் தமிழ் நூல்கள் வேறு மொழி நூல்களாகத் தோன்றுகின்றன. அவர்கட்கு இயற்கை இன்பந் தெரியாமல் போய்விட்டது. இதுகாலை ஒரு சிலரே சங்க இலக்கியங்களை ஆராய்ச்சி செய்து வருகின்றனர். அவரையும் வறுமை சிறுமைப்படுத்தி வருகின்றது. என் செய்வர் பாவம்!

இங்ஙனம் தமிழ்ப் புலவர் சிறுமையுற்றதற்குக் காரணமென்ன? பல்வேறு சாதியார் நம்நாட்டில் குடிபுகுந்தமையேயாகும். இற்றைக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் மணம் அருகிக்கொண்டு வந்திருக்கிறது. சில நூற்றாண்டுகளாகத் தமிழ் மாது வேறு மாதாகி மாறிவருகின்றாள். தமிழ்ப் புலவர்கட்குச் சரித ஆராய்ச்சி செய்யப் போதிய அவகாசமின்மையால், அவர்கள் தற்கால நாகரிக உலக உணர்ச்சியின்றி வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் பேசுவனவற்றையும் எழுதுவனவற்றையும் போற்றுவாரில்லை.ஆங்கிலங் கற்றவர்கள் அவர்களை இழிவாகக் கருதுகிறார்கள். தமிழ்ப் புலவர்களும் ஆங்கிலங் கற்றவர்களைத் தேவர்களாக எண்ணி வழிபடுகின்றார்கள்.

இப்பொழுது ஆங்கிலத்தில் உயர்தரப் பட்டம் பெற்றவர்களிற் சிலர் தம்மைத் தமிழ்ப்புலவர்களௌன்று கருதிப் புத்தகங்கள் எழுதுகின்றனர். அவையாவும் தமிழ் எழுத்துக்களால் எழுதப்படினும் அவைகளின் கருத்துக்களும் சொற்றொடர்களும் ஆங்கிலமயமாகவே இருக்கின்றன. அவர்தம் உள்ளத்தில் கருத்துக்கள் ஆங்கிலத்தில் பரிணமித்துப் பின்னர்த் தமிழொலியாகவும் எழுத்துக்களாகவும் வெளியாகின்றன. ஆங்கிலத்தில் உயர்தரப் பட்டம் பெற்றுத் தமிழ்ப் புலவர்களௌனத் தலைக் காட்டுவோருள் ஒரு சிலரே தமிழ் நடையாக எழுதும் ஆற்றலுடையர். இதுகாலை, தமிழ் நாட்டில் ஆங்கிலத் தமிழ் உலவி வருவதைக் காண எமது மனம் புண்படுகிறது... ...

ஆங்கிலப் புலவர்கள் சம்பளத்தையும் தமிழ்ப் புலவர்கள் சம்பளத்தையும் ஆராய்ந்து பார்த்தால் தமிழ் எவ்வாறு அரசாங்கத்தாரால் கவனிக்கப்பட்டு வருகிறது என்பது நன்கு விளங்கும்.........

புலமாநாடுகள் கூடிப் பேரியக்கமும் முழக்கமும் செய்யல் வேண்டும். இம் முயற்சிகளுக்கு இடையூறு நம்மவர்களே செய்வார்கள்

என்பதில் ஐயமில்லை. அவர்களையொரு பொருட்படுத்தாது குறைகளை அரசாங்கத்தாருக்கு முறையிட ஊக்கமும் உறுதியும் நமக்கு வேண்டும். இக்காரியத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர் களும் கலந்து உழைக்கலாம்.

தமிழ்ப் புலவர்களே! ஆங்கிலப் புலவர்கள் பெருமையை உற்று நோக்குங்கள். பொறாமை என்பதைக் களைந்து கடலிலே எறியுங்கள்: 'ஆகுபெயர் அன்மொழித் தொகை' சண்டையை ஒழியுங் கள்; ஓய்ந்த காலத்தில் ஆங்கிலம் பயின்றோரை அடைந்து பூத பௌதிக தத்துவ சாஸ்திரங்களைக் கேட்டுத் தற்காலத்துக் கேற்ற உணர்ச்சி பெற முயலுங்கள். ஜனத் தலைவர்கள் தங்களுக் குள் வேறு வழிகளிலுள்ள வேற்றுமைகளைப் பாராட்டாது உங்கள் முன்னேற்றத்துக்காக உழைப்பார்கள்! மடாதிபதிகளே! தமிழ் வளர்ச் சிக்காயினும் நீங்கள் முயற்சி செய்யலாகாதா?

## 3. தாய்மொழி (26-1-1918)

வடஇந்தியாவில் பெரும்பாலோர் பாஷாபிமானிகளாய் இருக்கின்றனர். திலக மகா ரிஷி செல்லுமிடங்கடோறும் மகாராஷ்டிர பாஷையிலேயே பேசுகின்றார். சர். ரபீந்திரநாத் தாகூர் வங்காள பாஷையை வளர்த்து வருவதை அறியாதார் யார்? தென்னாட்டில் பாஷாபிமானம் குன்றியிருப்பது விசனிக்கத் தக்கது.

தமிழ்த் தாயே பெரிதுஞ் சீர் குலைந்திருக்கிறாள். தமிழ்த் தாயோ தொன்மையும் சிறப்பும் வாய்ந்தவள். தமிழ் நாட்டில் கல்வி என்றால் ஆங்கிலக் கல்வி என்று பொருள் கூறுவோர் பலரி ருக்கின்றனர். கற்றோரெனில் ஆங்கிலங் கற்றோர் எனக் கொள் கின்றனர். தமிழ் வல்லாரைப் போற்றுவார் அரியராயினர். மேடைகளில் தமிழிற் பேசுவதை அகௌரவமாகக் கொண்டிருக் கின்றார் பலர். 'எமக்குத் தமிழ் பேச இயலாது' என்று கூறு வதைப் பெருமிதமாகக் கொண்டுள்ளார் சிலர்.

ஆங்கில ஆட்சியின் சார்பாக ஏற்பட்ட சர்வகலா சாலைகள் தொடக்கத்தில் சுதேச பாஷாபிவிருத்தியில் கண்ணுங் கருத்து மாயிருந்தன. வரவர அவை சுதேச பாஷையை அலட்சியஞ் செய்து வரலாயின.

சென்னைச் சர்வகலா சாலையில் பல ஆண்டுகளாகத் தமிழ் கட்டாய பாடமாக இருந்தது. எம். ஏ. வரை மாணாக்கர் தமிழ் பயின்று வந்தனர்.

எலிமெண்டரி வகுப்பில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, சிற்றிலக்கணம் இவை போதிக்கப்பட்டு வந்தன.

லோயர் செகண்டரி வகுப்புகளுக்கு இனியவை நாற்பது, இன்னா நாற்பது, நன்னெறி, நீதி நெறி விளக்கம், அறநெறிச் சாரம், திரிகடுகம், நான்மணிக் கடிகை, சிறுபஞ்ச மூலம், பழமொழி முதலியன பாடமாகவிருந்தன.

மெட்ரிகுலேஷன் வகுப்பில் பெருந்தேவனார் பாரதம், கம்பராமாயணம் முதலிய அரிய நூல்களும் நன்னூலும் போதிக்கப்பட்டன. எம்.ஏ. பரீட்சைக்கு நாலடியார், வில்லி பாரதம் முதலிய அரிய நூல்கள் பாட புத்தகங்களாக ஏற்பட்டிருந்தன.

பி. ஏ. வகுப்பு மாணாக்கர்கள் புறநானூறு, பத்துப்பாட்டு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய செந்தமிழ் நூல்களைப் பயின்று வந்தார்கள்.

எம். ஏ. பரீட்சைக்குச் செல்வோர் தொல்காப்பியம் முதலிய நூல்களை ஆராய்ச்சி செய்து வந்தனர். அது காலை மாணாக்கர்களிற் பலர் தமிழ் மயமாக விருந்தனர்.

இது காலை பாலர்களுக்கு ஆத்திசூடி கொன்றை வேந்தன் நூல்களின் பெயரே தெரியாது, 'கை வீசம்மா கைவீசு' என்னும் போலிப் பாக்கள் அவர்கட்குப் போதிக்கப்படுகின்றன. கட்டாய பாடமாக இருந்த தமிழ் இஷ்டபாடமாக மாற்றப்பட்டது. இஷ்ட பாடமாக மாற்றப்பட்ட நாள் தொட்டுத் தமிழ் மணங்குன்றத் தலைப்பட்டது.

ஒவ்வொரு கல்லூரியிலும் இன்டர்மிடியேட் வகுப்பு மாணவருள் தமிழ் பயில்வோர் எத்தனை பேர் என்று எண்ணிப் பார்த்தால் உண்மை விளங்கி விடும். சில கல்லூரித் தலைவர்கள் தமிழ் வகுப்பையே ஒழித்திருக்கிறார்கள் இதனால் மாணாக்கர் பலர் தமிழ் நூல் உள்ளுறையை அறியாதவராகின்றனர். அவருக்குப் பாஷாபிமானம் தேசாபிமானம் சமயாபிமானம் எங்ஙனம் உண்டாம்?

போலிப் புலவர்கள் எழுதும் நூல்களே பெரும்பாலும் பாட புத்தகங்களாக ஏற்படுத்தப்படுகின்றன......இச்சிறுமை நூல்களைப் பாட புத்தகங்களாக ஏற்படுத்துவோர் யார், அவரே தமிழ்த் தாயின் சிறுமைக்குக் காரணர் என்று கூறுவோம். பாடப் புத்தகங்களைத் தெரிந்தெடுக்கும் கூட்டாத்தாருள் ஒருவர் இருவரே

தமிழ் ஞான முடையர். ஏனையோர் தமிழ்ப் புலமை இல்லாதார் என்பதைச் செவ்வனே அறிவோம். தமிழ் ஞானமுடைய ஒரு சிலரும் முதியர். அவருக்குப் பின் தமிழ்க் கொலைஞரே அக் கூட்டத் திற் சேர்வரெனக் கருதுகிறோம். தமிழ்நாட்டில் தோன்றியவர்களே தமிழைக் கொலை செய்து வருவது அரசாங்கத்தாருக்குத் தெரி யாது.

அரசாங்கத்தில் உயர்பதவி பெற்றவர்கள் தயவைப் பெற்றுத் தம் போலி நூல்களையே பாட புத்தகங்களாக ஏற் படுத்த முயல்கின்றனர் பலர். இச்செயலை டைரக்டருக்கும் கவர்னருக்கும் அறிவிப்போர் யாவர்? புலிகள் போன்ற உத்தி யோகஸ்தர்கள் முன்னே வயிறு காய்ந்துள்ள பண்டிதர்கள் என் செய்வார்கள் பாவம்! தொல்காப்பியம் படித்தவர் தமிழ்ப் பண்டிதர். அவரைச் சோதிக்க வருகின்ற இன்ஸ்பெக்டர் வல்லினம் இடையினம் தெரியாதவர்! என்ன வேடிக்கை! ஆங்கிலந் தெரியாத தமிழ்ப் பண்டிதர் அவரை ஏற இறங்கப் பார்த்து விழிக்கின்றார்!

இக்குறைகளை யொழிப்பதற்கு வழி தேட வேண்டுவது நம் பெருங்கடமை. இதன் பொருட்டு முயற்சி செய்யவும் உத்தேசித் திருக்கின்றோம். எத்துணை ஜனத் தலைவர்கள் உதவி செய்ய முன்வருவார்கள் என்பது அப்பொழுது வெளியாகும். காங்கிரஸ் மேடையில் பேசி விட்டுச் சென்னை சேர்ந்து வாளா காலங் கழித்து வரும் ஜனத் தலைவர்களை அம்பலத்திலிழுத்து ஆட்ட வேண்டுவது ஊரார் கடமை. நமது வேண்டுகோளுக்கு இணங்கித் தாய்மொழி வளர்ச்சிக்கு உழைக்க முன்வாரா தொழிவராயின் அவர்தஞ் செயலை இந்தியாவிலுள்ள பலருக்கும் அறிவித்தல் வேண்டும். தமிழ் மக்களே! சிறிதுள் அஞ்சாது வேலை செய்யுங்கள் உங்கள் குறைகள் பல அரசாங்கத்துக்குத் தெரியா. அவை களையெடுத்துக் காட்ட முயற்சி செய்யுங்கள். வங்காள முதலிய பாஷைகள் வளர்ந்து வருகின்றன. பழைய மொழியாகிய தமிழ் அருகுவதைப் பார்த்து வருவது தருமமோ? உண்மை, அஞ்சாமை என்னும் இரண்டையும் இருகரங்களில் தாங்கி வெளி வாருங்கள் இறைவன் நமக்குத் துணை செய்வான்.

## 4. பாஷை வளர்வதெப்படி? (9-2-1918)

மனிதர்களுக்கு இருக்க வேண்டிய பொதுக்குணங்கள் பல. அவைகளுள் ஒன்று அபிமானம் என்பது. அபிமானம் பலதிறப் படும். அதனை அறிஞர் முத்திறமாகப் பிரித்திருக்கின்றனர். அவை தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் என்பன.

இம் மூத்திற அபிமானங்களுள் ஒவ்வொருவர் ஒவ்வோர் அபிமான முடையவராயிருப்பர். எவனிடத்தில் பாஷாபிமானம் உரம் பெற்று நிற்கிறதோ அவனிடத்து ஏனைய ஈரபிமானமும் நிலை பெற்று விளங்கும். பாஷை வளர்ச்சியே தேச வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் மூலமாயிருப்பது.

ஆங்கில பாஷை இங்கிலாந்துக்கும் உரியது. அஃது அந் நாட்டிலன்றி ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டுள்ள இந்தியா முதலிய பிற தேசங்களிலும் பரவியிருக்கிறது. அம்மொழி எங் கெங்கே பரவி நிற்கின்றதோ, அங்கங்கே ஆங்கிலேயர் வழக்க ஒழுக்கங்களும் நிலவி வருகின்றன.

பொதுவாக இந்தியர்கள் சிறப்பாகத் தமிழ் நாட்டு மேதாவிகள். உபநயசிக்கும் போது மேல்நாட்டுக் கவிவாணர் உரைகளை மேற்கோளாக எடுத்துக் காட்டுகின்றார்கள். அவர்கள் உள்ளம் ஆங்கில மயமாக மாறியிருக்கிறது. நடை யுடைபாவனையும் அங்ஙனே மாறுகின்றன. ஆங்கிலேயர் முறைப்படிஉணவு கொள்ள எத்தனையோ பேர் முயல்கின்றனர். எத்தனை பேர் முயன்று பயன்பெற்று இன்பம் நுகர்கின்றனர்! மனைவியையும் ஆங்கில மயமாக அழகு செய்து கண்டு களிப்போர் எத்தனை பேர்! சுதேசியம் பேசிக் கொண்டே ஆங்கில முறையான உடைத்தரிப்போர் எத்தனை பேர்! இவைகட்குக் காரணம் யாது? ஆங்கில மொழிப் பயிற்சி யால் அவர்தம் உட்கரணங்கள் யாவும் அம்மொழியில் தோய்ந்து விடு வதேயாம். இதனால் மனிதன் பழக்க வழக்க ஒழுக்கங்களை மாற்றும் ஆற்றல் மொழிகளுக்கு உண்டு என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல நன்கு விளங்கும். இவ்வுண்மை தெரிந்தே. மகாத்மா காந்தி சுதேச பாஷாபிவிருத்திக்காக முயன்று வருகின்றார்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நாகரிகமுற்ற அறிஞர் களால் பேசப்பெற்றுப் பண்பட்ட ஒரு மொழியின் வளங்குன்றிய தற்குக் காரணம் என்ன? அம்மொழியின் மாட்டுப் பலர்க்கும் பற்றின்மையேயாகும்.

நேற்றுத் தோன்றி இன்னும் பண்படாத கலப்புமொழியாகிய ஆங்கிலம் செழித்தோங்குவதற்குக் காரணம் யாது? அம் மொழியாளர் அதன் மாட்டு ஆர்வங் கொண்டுள்ளமையே யாகும்.

இந்தியாவிலும் அன்னார் தம்மொழியை நியாய ஸ்தலத்திலும் சட்ட சபையிலும் பிறவிடங்களிலும் கட்டாயமாகப் பேச வேண்டு மென்னும் நியதி ஏற்படுத்தியிருக்கின்றனர்; சர்வகலாசாலையில்

இவ்விப் பட்டம் பெற்றாரே இவ்வி வேலைக்கு அருகர் என்னும் விதியையும் பிறப்பித்திருக்கின்றனர். வயிற்றின் கொடுமைக்காக ஜனங்கள் எம் மொழியில் விருப்பம் கொள்வார்கள்; அவர்கள் ஆங்கில மொழியைப் பயில வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் தேச வழக்க ஒழுக்கங்களும் தேசாபிமானமும் அற்றுப் போகின்றன.

பண்டைத் தமிழர் வழக்க ஒழுக்கங்கள் நிலவ வேண்டுமாயின் முதலாவது தமிழ் மொழி வளர்ச்சிக்கு உழைத்தல் வேண்டும். ஒருவர் இருவர் சேர்ந்து சங்கங்கள் ஏற்படுத்தி உழைத்து வருதலால் சிறிதும் பயன் விளையாது. அரச காரியம் முழுவதும் தமிழிலேயே நடைபெறுதல் வேண்டும். அப்பொழுது தமிழ் ஆக்க முறும்.

தமிழ் மொழியிலேயே அரசியல் முறைகள் நடைபெற வேண்டிய வழிகளைத் தேடுங்கள். பாஷாபிமான முள்ளவர்களையே சட்டசபை அங்கத்தவர்களாகத் தெரிந்தெடுங்கள். தமிழ்த் தாயின் நலத்தை நாடோறுங் கோரி இறைவனை வழுத்துங்கள்.

## 5. திராவிட மொழிகள் (12-3-1918)

திராவிட மொழிகள் நான்கு. அவை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்பன. பின்மூன்றும் முதலாகிய தமிழினின்றும் பிறந்தவை, தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய இம் மொழிகளைப் பேசுவோர் எண்ணல், எடுத்தல், முகத்தல், முதலிய அளவைகளுக்குத் தமிழ் மொழியையே வழங்கி வருகின்றனர். அம் மூன்று மொழிகளிலுள்ள பண்டை நூல்கள் பெரிதும் தமிழினின்றும் மருவிய சொற்களால் ஆக்கப் பட்டிருக்கின்றன. பின்னர் அம்மொழிகளில் ஏராளமான வட மொழிச் சொற்கள் கலந்துவிட்டன.

பல நூற்றாண்டுகள் கழிந்த பின்னர்த்தெலுங்கர் தம்மொழி வடமொழியினின்றும் பிறந்தது என்னுங் கொள்கையுடையராயினர். இன்னும் பண்டைத் தெலுங்கில் பேரபிமானமுடையார் அங்ஙனங் கூறத் துணிகின்றாரில்லை. இதுகாலை தெலுங்கு பயில்வோர் எளிதில் வடமொழியைப் பயிலுதல் கூடும். காரணம் தெலுங்கில் வடமொழிச் சொற்களும் வடமொழி ஓசையும் பெரிதும் விரவியிருத்தலேயாகும்.

மலையாளத்தாருள்ளும் கன்னடத்தாருள்ளும் சிலர் தம் மொழியின வரலாற்றையுணராது வடமொழிப் பற்றுடையவராய் வாழ்ந்து வருகின்றனர். மலையாளத்திலும், கன்னடத்திலும் இன்னும் தமிழ்ச் சொற்கள் வழங்கப்பட்டு வருதலை மறைக்க எவராலும் இயலாது.

தெலுங்கு மலையாளம் கன்னடம் இம்மூன்று மொழிகளும் தமிழ் மொழியினின்றும் சிதைந்தனவேயாம். இஃது எவரும் ஒப்ப முடிந்த உண்மை.

தமிழ் மொழியானது பிறமொழியினின்றும் பிறவாதது, தனித்தியங்கும் ஆற்றலுடையது. மக்கள் தங்கருத்தைக் கைக்குறி கண்குறி முதலியவற்றான் வெளியிட்டிருந்தார்கள். பிற்றை நாகரிக முதிர்ச்சியால் வாய் திறந்து பேச முயன்றார்கள். அவர்கள் பேச முயன்றபோது முதல் முதல் அவர்கள் வாக்கினின்றும் பிறந்த ஒலித் திரள்களே பின்னர் மொழியாக உருக்கொண்டன.

சிறு குழந்தைகள் பேசப் பழகும்போது அவர்கள் வல்லோசை முதற்கணுள்ள எழுத்தால் ஆக்கப் பெற்ற சொற்களை உச்சரிக்க வியலாது இருத்தல் கண்கூடே. முதன் முதல் வாய் திறந்து பேசிய மக்களும் உச்சரிப்பில் குழந்தைகள் போன்றவர்களாகவேயிருந்திருத்தல் வேண்டும். அம்மக்கள் வாக்கினின்றும் பிறந்த மொழி பெரிதும் முதற்கண் வல்லோசையுடைய எழுத்தால் அமைவுறாத சொற்களைக் கொண்டு நடைபெறுவதாக வேண்டும். அத்தகைய மொழி தமிழ்மொழி ஒன்றே பிற, வல்லோசையுடையனவாம்.

மக்கள் முதன் முதல் பேசிய மொழியாகிய தமிழைத் தனிமொழியெனக் கூறாது வேறென் கூறுவது?

வடமொழியொன்றே பயின்று அம்மொழியின் மாட்டுப் பெரும் பற்றுடையராய் வாழும் ஒருசிலர், 'தமிழ் தனிமொழியன்று; அது வட மொழியினின்றும பிறந்தது' என்று கூறத் துணிந்தனர். அது கண்ட தமிழ் மக்களுள் வடமொழியாராய்ச்சி இல்லாதார் 'வடமொழி தமிழினின்றும் பிறந்தது' என்னுங் கொள்கையை நிறுத்த முயன்றனர். இவ்விரு கூட்டத்தினர் கூற்றையும் இருமொழியிலும் ஆராய்ச்சியுடைய ஒருவர் ஏற்றுக் கொள்ளார். 'வடமொழியும் தனிமொழியே' 'தமிழ் மொழியும் தனி மொழியே' என்பது எமது கொள்கை.

ஐங்குறு நூறு, கலித் தொகை, பதிற்றுப்பத்து முதலிய தொன்னூல்களை ஆய்ந்த அறிஞர்கள் தமிழ் பிற மொழியின் உதவியால் இயங்குவது என்று கூறத் துணிவார்களா? திருவள்ளுவரில் வடசொல் ஒன்றுமிலாக் குறள் வெண்பாக்கள் நூற்றுக் கணக்காக இருக்கின்றன. பலரும் போற்றும் ஆத்திசூடியை வாசிப்பின் உண்மை விளங்கும். அதில் வடமொழிக் கலப்பின்றிச் சிறு சிறு கட்டுரைகள் முத்துப்போல் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்றும் வடமொழிக் கலப்பின்றி எழுதுவோரும் பேசுவோரும் இருக்

-கின்றனர். அன்னார், அந்நடை ஒரு சிலர்க்கே பயன்படுமாகலின் அதை விடுத்துத் தமிழ் மொழியிற் கலந்து ஆட்சி பெற்ற சொற்களை இடையிடைப் பெய்து இப்பொழுது எழுதியும் பேசியும் வருகின்றனர். தமிழ் தனிமொழி என்பதை முற்கால ஆசிரியன்மார்களும் பிற்கால ஆசிரியன்மார்களும் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

தமிழ்ப் புலமை நிரம்பப் பெற்று நூல் பல எழுதியவரும் மகாமகோபாத்தியாயர் சாமிநாத ஐயரவர்களும், இராகவ ஐயங்கார் முதலியோரும் தமிழ் தனி மொழி என்னுங் கூற்றை மறுப்பரோ? ஒருநாளும் மறுக்கத் துணியார். தமிழின் மூலை கண்டறியா ஒரு சிலரே அதைக் குறைக் கூறத் துணிவர்.

காலஞ் சென்ற சூரிய நாராயண சாஸ்திரியார் எழுதிய 'தமிழ் மொழி வரலாறு' என்னும் சிரிய நூலைத் தமிழின் எழுத்திலக்கணமு தெரியாது. 'தமிழ் தனிமொழியன்று', என்று கூறும் அறிஞர்கள் வாசித்து உண்மை உணர்வார்களாக.

சென்னைச் சர்வகலாசாலையில் வித்துவான் பரீட்சை என்று ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்பரீட்சைக்குச் செல்வோர் வடமொழி பயில வேண்டுமாம், தமிழ் மக்களுள் பலர் வடமொழிப் பயிற்சி செய்வதில்லை. சிலர் வடமொழியை உச்சரிக்கவே வருந்துவர். எத்தனையோ தமிழ் மக்கள் வித்துவான் பரீட்சைக்குச் செல்ல விரும்புகின்றார்கள். ஆனால், அவர்கள் தமிழல்லாப் பிறமொழிகளைப் பயிலல் வேண்டும் என்னும் நியதிக்கு அஞ்சித் தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யாமல் இருக்கின்றார்கள். இதைக் குறித்துச் சென்ற வாரம் சர்வகலாசாலையில் பெரும் விவாதம் நடந்தது.

அதுகாலை நீதிபதி சேஷகிரி ஐயரவர்களும் ஸ்ரீமான் சி. பி. இராமசாமி ஐயரவர்களும் தமிழ் உண்மை கண்டு பேசியதற்குப் பெரிதும் நன்றியறிதலுடையோம்.

தெலுங்கு முதலிய திராவிட பாஷைகளைப் பயில்வோர்க்கு வடமொழி ஞானம் அவசியம் வேண்டுமென்பதை மறுப்பாரில்லை. தமிழ்ப் பரீட்சைக்குச் செல்வோர்க்கு வடமொழிப் பாடம் பெருந் தடையாக நிற்கிறது என்பதையே மீண்டு நாம் சர்வகலாசாலையாருக்கு அறிவுறுத்துகிறோம்.

தமிழ் மக்கள் இனி உறங்கலாகாது, வேறுவித வேற்றுமைகளைப் பாஷா விஷயத்தில் பாராட்டலாகாது. ஒற்றுமை உழைப்பிற்கும் பயனுண்டு. தமிழ் தனி மொழி என்பதைச் சர்வகலாசாலையாருக்கு நியாய வரம்புக்கு உட்பட்ட கிளர்ச்சி வாயிலாக அறிவுறுத்த வேண்டுவது நமது பெருங் கடமை. இக்காரியத்தில் பிராமணரும் பிராமணரல்லாதாரும் ஒன்று கூடி உழைப்பாரென நம்புகிறோம்.

# சொல்லடைவு


அடிகளார் படைப்புகள் 116-117
அப்பிள்ளை 43
அழகரடிகள் 132
அறிவுக் கடல் 90
ஆளுடைய பிள்ளையார் 15, 16
ஆனந்த போதினி 132, 95
இராமசாமிக் கவுண்டர் 127-129
இளங்கோ 14, 15
இளம்பூரணர் 38
உ. வே. சா. 11, 81, 82
ஒப்பிலக்கணம் 55
ஒற்றுமை 95
கடுஞ் சறுக்கல் 28
கம்பர் 16
கலித்தொகை 25
கால்டுவெல் 112
கோவிந்தராசர், கா. ரா. 34
சங்ககாலத் தமிழ் 57, 98
சங்கச் சான்றோர் 11, 13
சதாசிவனார், தி. வை. 39
சாய்சு 111
சித்தாந்த தீபிகை 61
சிலம்பு 10, 24, 37
சிறுவர்க்கேற்ற செந்தமிழ் 114
சேனாவரையர் 41
ஞானசாகரம் 86, 112
ஞானப்பிரகாசர் 95, 112
ஞான போதினி 64
தகடூர் யாத்திரை 38, 42
தண்டபாணியார், நாகை,
சொ. 132
தமிழ்நாடு 95
தமிழைப் பற்றிய வினாக்களுக்கு
விடை 96
தமிழில் வடமொழிகலத்தல்
ஆகாது 96
தனித்தமிழ்ப் பாதுகாப்பு 96
தனிப் பாசுரத் தொகை 62
தாமோதரன், சி. வை. 64, 81
திரஞ்சு 111
திராவிடன் 95
திருவடிப் புகழ்ச்சி 30-32
திரு. வி. க. 13
திவாகரம் 10
தேசாபிமானி 95
தொல்காப்பியம் 3-6, 11-13, 21
22. 32, 34, 35, 37, 38, 92
நக்கீர நீர்மையர் 109
நாராயணசாமி 59, 64
நீலலோசினி, 61
பட்டினப்பாலை 85, 90, 92
பண்டித மணி 121-126
பண்டைக் காலத் தமிழரும்
ஆரியரும் 85
பரிதியார் 48
பரிபாடல் 23, 24
பாவாணர் 32, 40, 59, 108, 109
பிங்கலம் 10
பிரதாப சந்திர விலாசம் 29
புறநானூறு 7, 25
பெரியவாச்சான் பிள்ளை 43
பெருந்தேவனார் பாரதம் 38, 42
பேயாழ்வார் 43
பேராசிரியர் 41
பொது நிலைக் கழகம் 90
மணிமேகலை 49
மனோன்மணீயம் 59, 60
மாக்சு மூலர் 111
மாதவதாஸன் 44
முல்லைப்பாட்டு 84, 90, 92
மெய்கண்டார் 17
வள்ளலார் 88
வள்ளுவர் 1, 9, 13, 32, 89, 109
விநாயகரடிமை 113, 132
வையாபுரிப்பிள்ளை 127-129,
130

# துணை நூற்பட்டியல்


1. அகராதி நினைவுகள்
2. அறிவுரைக் கொத்து
3. ஆனந்த போதினி
4. உரைநடைக் கோவை
5. உரைமணிக்கோவை
6. உரையாசிரியர்கள்
7. கம்பராமாயணம்
8. கழக அமைச்சர் திருவரங்கர் வரலாறு
9. கால்டுவெல் ஒப்பிலக்கணம்
10. காலக் குறிப்பு அகராதி
11. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்
12. சிறுவர்க்கான செந்தமிழ்
13. செந்தமிழ்
14. சோமசுந்தர நாயகர் வரலாறு
15. தமிழ்
16. தமிழ் வரலாறு
17. தமிழ் வியாசங்கள்
18. தமிழர் வரலாறு
19. தமிழிலக்கிய வரலாறு
20. தனித் தமிழ்க் கட்டுரைகள்
21. திருக்குறள்
22. தொல்காப்பியம்
23. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை
24. பண்டைக் காலத் தமிழரும் ஆரியரும்
25. பாரதியார் கட்டுரைகள்
26. மகாகவி மலர்
27. மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வரலாறு
28. மறைமலையடிகள் வரலாறு
29. மறைமலை யடிகளார் கடிதங்கள்
30. மறைமலையடிகளார் நூற்றாண்டு விழா மலர்
31. முல்லைப் பாட்டு ஆராய்ச்சியுரை மலர்
32. வடமொழி வரலாறு
33. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரிகள்

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | தமிழில் விடுகதைகள் | ... ரூ. 12.00 |
| 2. | உலகத் தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | ... ரூ. 6.00 |
| 3. | தமிழர் தோற்கருவிகள் | ... ரூ. 10.00 |
| 4. | தமிழும் தமிழரும் | ... ரூ. 5.00 |
| 5. | தமிழர் இசை | ... ரூ. 10.00 |
| 6. | ம. பொ. சி. யின் இலக்கிய நூல்கள்-ஓர் மதிப்பீடு | ... ரூ. 30.00 |
| 7. | இளங்கோவின் இலக்கிய உத்திகள் | ... ரூ. 12.00 |
| 8. | திராவிட மொழி இலக்கியங்கள் | ... ரூ. 25.00 |
| 9. | உ. வே. சா. இலக்கண பதிப்புகள் | ... ரூ. 12-00 |
| 10. | தமிழ் இலக்கியக் கொள்கை - 9 | ... ரூ. 20-00 |
| 11. | தொல்காப்பியம் புணரியல் | ... ரூ. 10-00 |
| 12. | தொல்காப்பியம் வேற்றுமை மயங்கியல் | ... ரூ. 12.00 |
| 13. | தொல்காப்பியம் - விளிமரபு | ... ரூ. 6.00 |
| 14. | தொல்காப்பியம் - பெயரியல் | ... ரூ. 12-00 |
| 15. | தொல்காப்பியம் - வினையியல் | ... ரூ. 20.00 |
| 16. | பிரபந்த தீபிகை | ... ரூ. 12.00 |
| 17. | கண் மருத்துவம் | ... ரூ. 50.00 |
| 18. | வர்ம சூத்திரம் | ... ரூ. 10-00 |
| 19. | தன்வந்திரி குழந்தை வாகடம் | ... ரூ. 14.00 |
| 20. | வெள்ளைக்காரன் கதை | ... ரூ. 7-00 |
| 21. | மெய்க்கீர்த்திகள் | ... ரூ. 20-00 |
| 22. | சிந்து இலக்கியம் | ... ரூ. 8-00 |
| 23. | தமிழ்ச் சுவடிகள் அட்டவணை | ... ரூ. 6.00 |
| 24. | தஞ்சை மாவட்ட ஊர்ப்பெயர்கள் | ... ரூ. 12-00 |
| 25. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 1 | ... ரூ. 12-00 |
| 26. | இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் - 2 | ... ரூ. 22-00 |
| 27. | இஸ்லாம் வளர்த்த தமிழ் | ... ரூ. 15.00 |
| 28. | உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | ... ரூ. 10.00 |
| 29. | டாக்டர் உ. வே. சா. காப்பியப் பதிப்புகள் | ... ரூ. 10-00 |
| 30. | தமிழரின் தாயகம் | ... ரூ. 10-00 |
| 31. | பாவாணரும் தனித்தமிழும் | ... ரூ. 12-00 |
| 32. | தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வு | ... ரூ. 10-00 |
| 33. | செங்கை மாவட்ட ஊர்ப் பெயர்கள் | ... ரூ. 25-00 |
| 34. | மொழி பெயர்ப்பியல் | ... ரூ. 10-00 |
| 35. | தமிழர் திருமணம் | ... ரூ. 25-00 |
| 36. | தமிழ் வாழ்க்கை வரலாற்றிலக்கியம் | ... ரூ. 35-00 |
| 37. | தமிழ் நாவல்கள் (அகர வரிசை) | ... ரூ. 40-00 |
| 38. | எண்பத்திரண்டில் தமிழ் | ... ரூ. 90-00 |
| 39. | மகாமதிப்பாவலர் | ... ரூ. 11-00 |
| 40. | உலக முதன்மொழி தமிழ் | ... ரூ. 12-00 |
| 41. | Siddha Medicine (Heritage of the Tamils) | ... Rs. 45-00 |
| 42. | Cultural Heritage of the Tamils | ... Rs. 20-00 |
| 43. | Literary Heritage of the Tamils | ... Rs. 50-00 |
| 44. | Tamil Drama | ... Rs. 20-00 |
| 45. | Dr Mu. Va. | ... Rs. 20-00 |
| 46. | Thiru Murugan | ... Rs. 5-00 |
| 47. | A Study of the Perunkatai | ... Rs. 12-00 |
| 48. | Tamil Writers Directory | ... Rs. 10-00 |
| 49. | Dissertations on Tamilology | ... Rs. 10-00 |
| 50. | Tamil-Text (An-Auto Instructional Course) | ... Rs. 25-00 |
| 51. | Siddha Medical Manuscripts in Tamil | ... Rs. 8-00 |
| 52. | Karaikkal Ammaiyar | ... Rs. 6-00 |
| 53. | Heritage of the Tamils-Temple Arts | ... Rs. 50-00 |
| 54. | Tolkāppiyam (An English Translation) | ... Rs. 25-00 |
| 55. | Heritage of the Tamils Education & Vocation | ... Rs. 50-00 |